In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நளவெண்பா

மூலமும் உரையும்

அ.ப. பாலையன்

சாரதா பதிப்பகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகழேந்திப் புலவர் இயற்றிய

நளவெண்பா

மூலமும் உரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகழேந்திப் புலவர் இயற்றிய

நளவெண்பா

மூலமும் உரையும்

உரையாசிரியர்
அ.ப. பாலையன்

சாரதா பதிப்பகம்
சென்னை - 600 014.
☎ 044-2811 4402 / 95000 17274

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் கிடைக்குமிடம் :

கௌரா ஏஜென்ஸீஸ்

10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
☎ : 044-2844 3791 / 94440 82232

விலை : ரூ. 120

* முதற் பதிப்பு : மே 2009

* © உரிமை : பதிப்பகத்திற்கே

* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,

* நூலின் பெயர் : நளவெண்பா (மூலமும் உரையும்)

* பக்கங்கள் : 256

* ஒளி அச்சு : ஜெய் ஜீனா

* வெளியீடு : சாரதா பதிப்பகம்
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 14.

* அச்சிட்டோர் **மஞ்சு ஆப்செட் பிரண்டர்ஸ்,**
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

CODE : **753**

ஆலங்காடி / www.thebookstore.in

☎ 044 - 2811 4402 / 95000 17274 / 95000 27274

e-mail : gowra_09@yahoo.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

பேரிலக்கியங்கள் இரண்டு. ஒன்று இராமாயணம்; மற்றொன்று மாபாரதம். இரண்டும் இரண்டு பெருங் குறிக்கோள்களுக்காக இயற்றப் பெற்ற நூல்களாகும்.

இராமாயணம் - தன் மனைவி தனக்கிருக்கப் பிறன் மனைவியை விழைதல் கூடாது என்னும் பெரு நோக்கிற்காக எழுதப் பெற்றது. பிறன் மனை பேணாத பேராண்மையினை வலியுறுத்தவே இராமாயணம் தோன்றியது.

மாபாரதம் - சூதாடுதல் தீமை பயக்கும் என்னுங் கொள்கையினை வற்புறுத்தவே எழுந்த இலக்கியமாகும். அதே காவியத்தில் பல்வேறு நீதிகளைப் புகட்டப் பல்வேறு கிளைக் கதைகளும் புனையப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றுதான் இந்த நளன் - தமயந்தி கதையும்.

இந்த நளன் - தமயந்தி கதையும் சூதாட்டத்தால் விளைந்த வேதனைக் கதையே. சூதாட்டத்தால் விளைந்த பெருந்தீமையை விளக்கும் ஒரு கதையில் - சூதாட்டத்தால் விளைந்த இன்னுமொரு தீமையினை எடுத்துக்காட்டுக்காகக் கூறப் பெற்ற ஒரு துணைக் கதைதான் நளன் - தமயந்தியின் கதையும்.

இந்தக் கதையினை - மாபாரதத்திலிருந்து தனியாக எடுத்து, அர்ஷகவி என்பவர் "நைஷதம்" என்ற பெயரில் வடமொழியாகிய சமற்கிருதத்தில் தனிக் காவியமாக்கினார்.

வான்மீகியின் இராமாயணத்தை வைத்துக் கொண்டே கம்பர் தமது "இராம காதையை"த் தமிழில் இயற்றியதனைப் போன்றும் வியாச முனிவர் சமற்கிருதத்தில் இயற்றிய மாபாரதத்தை வைத்துக் கொண்டு வில்லிபுத்தூரார் தமிழில் "பாரதம்" பாடியதனைப் போன்றும்; வட மொழியில் அர்ஷர் இயற்றிய "நைஷதத்தை வைத்துக் கொண்டு தமிழில் நளவெண்பா" என்னும் பெயரில் ஒரு காவியத்தைப் படைத்தார் புகழேந்திப் புலவர்.

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா என்பவை நான்கு வகையான பாக்கள். அவற்றுள் வெண்பா பாடுவது மிகக் கடிதான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயலாகும். வெண்பா இலக்கணம் கெடுதல் கூடாது; சீரும் தளையும் சிதைதல் கூடா; எதுகையும் மோனையும் உரிய இடத்தில் உரிய வகையில் அமைதல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகக் கதையின் போக்கும் ஆற்று நீரினைப் போன்று அமைந்திருத்தல் வேண்டும். இத்துணைக் கட்டுப்பாட்டுக்குள்ளும் தம்மை உட்படுத்திக்கொண்டு, தமிழ்க் கம்பிமேல் - சாயாமல் - சரியாமல் - வளையாமல் - கீழே வீழாமல் நடந்துள்ளார்.- மிகச் சிறப்பாகக் காவியத்தின் சுவை குன்றாமல் படிக்கப் படிக்கப் பேருவகை தரும் வகையில் இந்த "நளவெண்பா" காவியத்தைப் படைத்தளித்துள்ளார் புகழேந்திப் புலவர்.

புகழேந்தியாரின் புலமைக்குச் சான்றாக ஒருவெண்பா:

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்ணை அரசு".

பெண்களிடமுள்ள நற் பண்புகளையே படைகளாக்கி - அரசின் அணி முரசாக சிலம்பினையே உருவாக்கி - அறிவினையே அமைச்சராக்கி - கண்களையே படைக் கருவிகளாக்கி - முகத்தினையே வெண்கொற்றக் குடையாக்கிப் பெண்மை என்னும் அரசை ஆளவைக்கின்றார் புகழேந்தியார். இதனைப் போன்ற சுவை மிக்க பாடல்கள் ஏராளம்! ஏராளம்!

இந்தச் சுவைமிக்க காவியத்திற்கு அறிஞர் அ.ப. பாலையன் அவர்கள் எளிய - இனிய உரையினை எழுதி வழங்கியுள்ளார். இந்த நூலை எங்களது பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடுவதற்குப் பெருமிதம் கொள்கின்றோம்.

ஓர் அரிய காவியம்; அதற்கு ஓர் எளிய இனிய உரை ஓவியம். பெற்றுப் பயனுறுதல் உங்களது விருப்பம்.

பதிப்பகத்தார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

'வெண்பாவிற்கொரு புகழேந்தி' என்று தமிழுலகில் போற்றப்படுபவர் புகழேந்திப் புலவர் ஒருவரே ஆவார். இவர் பிறந்த ஊர் தொண்டை நாட்டிலுள்ள பொன்விளைந்த களத்தூர் ஆகும். 'மாலார் களந்தைப் புகழேந்தியும் தொண்டை மண்டலமே' என்றும் 'காரார் களந்தைப் புகழேந்தி' என்றும் வருகின்ற தொண்டை மண்டல சதகச் செய்யுள் அடிகளே இதற்குச் சான்றாகும். இவர் இயற்பெயர் தெரிந்திலது. இவர் புலமை கருதி இப்பெயர் இடப்பட்டிருக்கலாம் எனச் சான்றோர் கருதுவர்.

காலம்:

இவரது காலமும் கம்பரின் காலமும் ஒன்றென்பர். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் கம்பர் (கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு) வாழ்ந்தவர். புகழேந்தியின் காலமும் இதுவே ஆகலாம். ஒட்டக் கூத்தரும் இக்காலத்தினரே.

ஆதரித்தவர்:

புகழேந்தியார் பாண்டி நாட்டார். சோழன் பாண்டியன் மகளை மணந்ததால் அவளின் ஆசிரியரான இவரும் சோணாடு போந்தார். பின்னர்ச் சோழநாட்டை விட்டு மள்ளுவ நாட்டுச் சிற்றரசன் சந்திரன் சுவர்க்கி என்பானது நாடு ஏகினார். அவனே இவரை ஆதரித்தவன். அவன் வேண்டுகோளுக்கு இணங்கவே நளவெண்பா எழுதி நானிலம் மகிழக் கொடுத்தார்.

மூல நூல்:

நளன்கதை முதன்முதலாக மகாபாரதம் ஆரணிய பருவத்தில் 'நளோ பாக்கியாநம்' எனும் பெயரில் கிளைக் கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. இக்கதையைப் பின்னர் ஹர்ஷகவி என்பார் 'நைஷதம்' எனும் பெயரில் வடமொழியில் காவியமாக்கினார்.

இவற்றை மூலமாக வைத்தே புகழேந்தியாரும் 'நளவெண்பா' எனும் பெயரில் அருந்தமிழில் தம் நூலைச் செய்தார்.

நளனின் கதையை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் (14: 50 -55) குறிப்பிட்டுள்ளார்.

புகழேந்திக்குப் பிறகு அதிவீரராம பாண்டியன் என்பார் 'நைடதம்' எனும் பெயரில் தமிழில் நூலாக்கியுள்ளார்.

புகழேந்தியார் பெயரால் உலவும் அல்லியரசாணி மாலை முதலிய நூல்கள் இவர் செய்தன அல்ல.

சமயம்:

புகழேந்தியார் திருமால், சிவன், விநாயகர், முருகன் முதலிய கடவுளரைத் தம் நூலில் துதித்திருப்பினும் இவர் வைணவர் ஆவார். ஒவ்வொரு காண்டத்திலும் முதலில் திருமால் வணக்கமே பாடியுள்ளார். 'நாராயணாய நமவென்று அவனடியில் சேராரை வெந்துயரம் சேர்ந்தாற் போல்' (211) என உவமை கூறியிருப்பதும் இதனை உறுதிப்படுத்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உரையாசிரியர்கள்:

அரும்பெரும் சிறப்புகள் நிறைந்த நளவெண்பா எனும் இந் நன்னூலுக்கு அவ்வப்போது நல்லிசைப் புலவர்கள் பலர் உரை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளனர். திருவாளர்கள் டி. சீனிவாசராகவாச்சாரியார், ம. மாணிக்கவாசகம், மே.வீ. வேணுகோபால் பிள்ளை, எல்லைப் போராட்ட வீரர் மங்கலங் கிழார் முதலியோர் அவர்களில் சிலர். நளவெண்பா மூலமும் உரையும் கழகப் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது. இதற்குக் கழகப் புலவர், செல்லூர்க் கிழார் செ.ரெ. இராமசாமிப் பிள்ளையவர்கள் மிகவும் கடினமாக உழைத்துப் பதவுரை, கருத்துரை, விளக்கவுரை என அரியதோர் உரை எழுதியுள்ளார்கள்.

சாதாரண படிப்பாளிகளும் மாணவர்களும் படித்துப் பயன் பெறும் பொருட்டு நல்ல இலக்கியங்களைத் தெளிவுரையுடன் வெளியிட்டு நற்றமிழ்த் தொண்டு புரிந்தவர் புலியூர்க் கேசிகன் அவர்கள். அவர்களும் நளவெண்பாவிற்கு அழகிய தெளிவுரை வரைந்துள்ளார்கள். இவ்விரு சான்றோர்களின் உரைகளை மையமாக வைத்தே நானும் இந்த அரிய நூலுக்குப் பொழிப்புரை எழுதியுள்ளேன். தமிழறிந்தார் அனைவரும் எளிதில் கற்கும் வகையில் உரையை மிகவும் எளிய நடையிலேயே செய்துள்ளேன் என்பதைக் கற்பார் எளிதில் உணர்வர் என்பது ஒருதலை.

நூற் சிறப்பு:

அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே! என்று நம் ஆன்றோர்கள் நூலால் மக்கள் பெறும் பயனைச் சுட்டிச் சென்றுள்ளனர். 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் அம்மா' என்று மகாகவி பாரதியாரும் படைப்பின் வேலையைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

பழுத்த புலமை உடைய புகழேந்தியாரும் தாம் கூறுவது சூதாடிக் கெட்ட ஒரு மன்னனின் கதையே ஆனாலும் அந்நூலில் செய்ந்நன்றி, தமிழ்ப் பற்று, சமய சமரசம், அறநெறிகள் முதலிய மக்கள் வாழ்வாங்கு வாழக் கடைப் பிடிக்க வேண்டிய அரிய நெறிகளை ஆங்காங்கே கூறிச் சென்றுள்ளார். இவற்றையும் கதைப் போக்குக் குன்றாமல் சுவைபடக் கூறியுள்ளார்.

செய்ந்நன்றி:

விருத்தமென்னும் ஒண்பா செய்த உயர்கம்பன் தம்மை ஆதரித்த சடையப்பருக்கு நன்றி காட்டியது போலப் புகழேந்தியாரும் தன்னை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியைக் குறிப்பிட்டு நன்றி காட்டியுள்ளார்.

புகழேந்தியார் தம் நூலில் சுவர்க்கியை ஆறு இடங்களில் (24,64,287,306,381,427) புகழ்ந்து போற்றியுள்ளார்.

இதோ ஒரு பாடல்:

சங்க நிதிபோல் தருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல் (306)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'சங்கு வடிவாய் அமைந்த நிதிபோல வறிஞர்களுக்கும் இரவலர்களுக்கும் புலவர்களுக்கும் இல்லை என்னாமல் பொருள் வழங்கும் சந்திரன் சுவர்க்கி எனும் மன்னன் கொடிய வறுமையிலிருந்து உலக மக்களைக் காப்பாற்றியது போல' என்பது இதன் பொருள்.

இப்பாவில் ஆசிரியர் சுவர்க்கியின் கொடையைப் பலபடப் பாராட்டி உள்ளதைக் காணலாம்.

தமிழ்ப் பற்று:

என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான் என்று கல்வியில் பெரிய கம்பர் செந்தமிழின் சீர்மையைப் போற்றுவார். அவரைப் போலவே புகழேந்தியாரும் செம்மொழியாம் தீந்தமிழின் பெருமையையும் தமிழ்ப் புலவர்களையும் ஏற்றிப் போற்றித் தம் தாய் மொழிப்பற்றைப் புலப்படுத்தியுள்ளார்.

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோல் தீத்தழல்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடிருந்து - பண்டையுள
வாழ்வெல்லாம் தான்நினைந்து மறறமுதாள் மன்னிழைந்த
தாழ்வெல்லாம் தன்தலைமேல் தந்து. (311)

'வண்டமிழ்ப் புலவர்களுக்குக் கேடு செய்த பெருஞ்செல்வர்கள் அதனாலேயே வறுமையுற்று வருந்துதல் போல' என்பது முதலடியின் பொருள். தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் கேடு செய்தார் தம் செல்வம் தேய்ந்து நல்குரவு எய்துவர் என்று புகழேந்தியார் கூறுவதன் மூலம் எதிர்மறையாகச் செல்வர்கள் தமிழையும் புலவர்களையும் புரந்தால் மேலும் செல்வப் பெருக்கெய்துவர் எனத் தம் தமிழ்ப் பற்றை வெளிப்படுத்தியுள்ளமையை உணரலாம்.

இருங்கோவேள் எனும் கொடையாளியிடம், 'உன் முன்னோர்கள் கழாஅத் தலையார் எனும் புலவரை அவமதித்ததால் தம் பெருஞ்செல்வத்தை இழந்தனர்' என்று புறத்தில் (202) கபிலர் கூறியதையும் ஈண்டு நினைவுகூரலாம். இங்ஙனம் பல்வேறு சுவைகளையும் மக்கள் உயர்வதற்குரிய வாழ்க்கை வழிகளையும் சொல்நயம், பொருள் நயம், அணிநயம்படப் புகழேந்தியார் புகன்றுள்ள திறத்தைக் கற்போரே உணர முடியும்.

கௌரா ஏஜென்ஸீஸ் உரிமையாளர் திரு. இராசசேகரன் நல்ல தமிழ் நூல்களை உரையுடன் அச்சிட்டுத் தமிழ் மக்கள் கற்கத் தரவேண்டும் என்னும் இலக்கோடு பணி செய்து வருபவர். அவர் நளவெண்பாவிற்கு எல்லாரும் பயிலும் வண்ணம் உரை எழுதுமாறு என்னிடம் கூறினார். இவ்வுரை எழுதும் அரிய வாய்ப்பை எனக்களித்த அவர் பேருள்ளத்திற்கு நெஞ்சு நிறைந்த நன்றி கூறி அமைகிறேன்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளே...

பாயிரம்	1
சுயம்வர காண்டம்	5
கலிதொடர் காண்டம்	97
கலிநீங்கு காண்டம்	184
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	234

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நளவெண்பா மூலமும் உரையும்

பாயிரம்

கடவுள் வணக்கம்

விநாயகர்

1. நேசர்இதங் கூர நிலவலயம் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையாம் - ஈசன்
கரியான் அனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியான் அனத்தான் கழல்.

பதவுரை:

ஈசன் - சிவனும், கரியான் - திருமாலும், அனத்தான் - அன்ன ஊர்தியுடைய பிரமனும், கருது புகழ் பூண்ட கரியான் - போற்றுகின்ற புகழ் உடையவன் யானைத்தலைஉடைய விநாயகன், நேசர்-விநாயகன்பால் அன்பு உடையவர்கள், இதங்கூர - நன்மைகள் பெறவும், நிலவலயம் தாங்குநளன் - இப்பூவுலகை ஒரு காலத்தே ஆண்ட நளனின் வரலாற்றைச் சொல்லவும், அனத்தான் கழல் வருந்துணையாம் - விநாயகனின் திருவடிகள் துணைபுரிக.

பொழிப்புரை:

சிவனும் திருமாலும் பிரமனும் ஏற்றும் பெருமை உடையவன் விநாயகன். விநாயகனை நேசிப்பவர்கள் நன்மைகள் பெறவும் நளன் வரலாற்றை யாம் சொல்லவும் அவன் திருவடிகள் துணைபுரிக. 1

நம்மாழ்வார் வணக்கம்

2. நேசர்இதங் கூர நிலவலயம் தாங்குநளன்
மாசரிதம் கூற வருந்துணையாம் - பேசரிய
மாமகிழ்மா றன்புகழாம் வண்தமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்தாள் மலர்.

பதவுரை

பேசரிய - பேசுவதற்கு அருமையானதும், மாமகிழ்மாறன்புகழாம் - திருமகள் மகிழும் திருமாலின் பெருமையைச் சொல்லுவதும், வண்தமிழ் வேதம் - வளம்நிறைந்த தமிழ் வேதமாகிய திருவாய்மொழி, விரித்த மாமகிழ்மாறன் - பெருமை மிக்க மகிழ மலர் மாலை அணிந்த நம்மாழ்வாரின், நேசர் இதங்கூர - அடியார்கள் மகிழவும், நிலவலயம் தாங்கு நளன்

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

மாசரிதம் கூற-பண்டு இவ்வுலகை ஆண்ட நளமன்னன் கதை கூறவும், தாள் மலர் வருந்துணையாம் - எமக்கு நம்மாழ்வாரின் திருவடிகள் துணையாகட்டும்.

பொழிப்புரை:

பேசுவதற்கு அரிய திருமாலின் பெருமையைச் சொல்வது தமிழ் வேதமாம் திருவாய் மொழி; மகிழமாலை அணிந்த நம்மாழ்வார் அதனைச் செய்தார். அடியார்கள் மகிழவும் நளனின் கதையை யாம் கூறவும் அவருடைய திருவடிகள் துணையாகட்டும். 2

திருமால் வணக்கம்

3. **ஆதித் தனிக்கோலம் ஆனான்; அடியவற்காச்**
சோதித் திருத்தூணில் தோன்றினான்-வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலேஎன அழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை.

பதவுரை:

எங்கட்கு இறை - எமக்கு இறையாகிய திருமால், ஆதித் தனிக்கோலன் ஆனான் - ஆதிநாளில் பன்றி வடிவத்தை எடுத்தான், அடியவற்காச் சோதித் திருத்தூணில் தோன்றினான் - தன் அடியவன் பிரகலாதனைக் காக்கத் தூணிடையே தோன்றி னான், வேதத்தின் முன்னின்றான் - வேதங்களில் முதன் மைப் பொருளாக இருந்தான், வேழம் முதலே என அழைப்ப என் என்றான் - கசேந்திரன் எனும் யானை, ஆதிமூலமே' என அழைத் தவுடன் உடன்வந்து முதலையிடமிருந்து காப் பாற்றினான்.

பொழிப்புரை:

எம் இறையாகிய திருமால் பன்றி வடிவத்தை எடுத்தான்; தூணில் தோன்றிப் பிரகலாதனைக் காத்தான்; வேதங்களுக்கு முதன்மைப் பொருளாய் இருந்தான்; கசேந்திரன் எனும் யானையைக் காப்பாற்றினான். 3

சிவபெருமான்

4. **கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை**
உலாவு சடைமேல் உறையும் - நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

Public domain Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கலாப மயிலிருந்த பாகத்தார் - தோகை மயில்போன்ற உமையம்மையை இடப்பாகத்தில் உடையவர் சிவபெருமான், கங்கை உலாவு சடைமேல் உறையும் நிலாவை - கங்கை இருக்கும் தன் முடியில் பிறையையும் வைத்திருப்பவர், வழியவார்த் தாலன்ன மாநீற்றார்-நிலவொளிபோன்ற மேனியில் நீறு அணிந்தவர், நாகம் கழிய வார்த்தார்-நல்ல பாம்பையும் அணியாகக் கொண்டவர், நமக்கோர் காப்பு-இத்தகைய சிவன் நமக்கோர் துணை ஆகும்.

பொழிப்புரை:

உமையம்மையை இடப்பாகந்தில் கொண்டவர் சிவெருமான்; அவர் சடை மேல் கங்கையும் நிலவும் இருக்கின்றன; நிலவொளி மேனியில் நீறு அணிந்தவர்; பாம்பையும் அணியாக உடைய சிவபெருமானின் துணை நமக்கு ஆகட்டும். 4

முருகபிரான்

5. நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழல்நாறிக்
காலை இருள்சீக்கும் காய்கதிர்போல் - சோலை
மணித்தோகை மேல்தோன்றி மாக்கடல்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் அரண்.

பதவுரை:

நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழல் நாறி - நீலவண்ண மேகங்களின் உச்சியில் ஒளி பரப்பி, காலை இருள் சீக்கும் காய்கதிர் போல் - காலையில் தோன்றி இருளை விரட்டும் கதிரவன் போன்றவன் முருகன்; சோலை மணித் தோகை மேல்தோன்றி - அவன் சோலையில் உள்ள மயில்மேல் இருந்து, மாக்கடல் சூர்வென்றோன்-பெருங்கடலிடத்தே இருந்த சூரனை வென்றவன், அணிச் சேவடிஎம் அரண் - அவனுடைய அழகிய அடிகள் எம்மைக் காக்கட்டும்.

பொழிப்புரை:

காலையில் தோன்றி இருளைவிரட்டும் கதிரவனைப் போன்ற வன் முருகன்; அவன் மயில்மேல் இருந்து சூரனைக் கொன்றவன்; அத்தகைய முருகன் திருவடிகள் எம்மைக் காப்பதாக. 5

அவையடக்கம்

6. வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினால் கட்டச் சமைவதொக்கும் - பைந்தொடையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேன்பாடும் தார்நளன்தன் தெய்வத் திருக்கதையை
யான்பாடல் உற்ற இது.

பதவுரை:

பைந்தொடையில் தேன்பாடும் தார் நளன் - தேனீக்கள் பாடிக் கொண்டிருக்கும் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்தவன் நளன், தன் தெய்வத் திருக்கதையை யான்பாடல் உற்ற - அவனது பெருமை மிக்க கதையினை யான் பாட முனைந்தது, இது - இச்செயலானது, வேந்தறுகண் வேழத்தை- சினம் மிகுந்த ஒரு யானையை, வேரிக் கமலத்தின் தந்துவினால் கட்டச் சமைவதொக்கும் - மணமுடைய தாமரையின் நூலால் கட்டுவதற்கு நினைத்தல் போலாகும்.

பொழிப்புரை:

மலர் மாலை அணிந்த நள வேந்தனின் திருக்கதையை யான் சொல்ல நினைத்த செயல், கோபமுடைய யானையைத் தாமரையின் நூலால் கட்டுவதுபோல் அறியாமை உடையதாகும். 6

நூலாசிரியர்

7. பாரார் நிடத பதிநளன்சீர் வெண்பாவால்
பேரார் புகழேந்தி பேசினான் - தாரார்
செழியனையும் சென்னியையும் சேரத் திறைகொள்
மொழியின் சுவையே முதிர்ந்து.

பதவுரை:

தார் ஆர் செழியனையும் சென்னியையும்-மாலையணிந்த பாண்டியரையும் சோழனையும், சேர திறைகொள்-ஒருங்கே தமக்கு அடக்கமாக்கிக் கொள்ளும் தகுதி சான்ற, மொழியின் சுவையே முதிர்ந்து-தமிழ்மொழி தன் சொற்களின் இனிமை கனிந்து, வெண்பாவால்-நேரிசை வெண்பாக்களால், பாரார் நிடதபதி நளன் சீர்-பாரை ஆளும் நிடதமன்னனாம் நளனின் சிறப்புகளை, பேர் ஆர் புகழேந்திப் பேசினான்-பெயர் பெற்ற புலவராம் புகழேந்தி பாடினார்.

பொழிப்புரை:

பாண்டியனும் சோழனும் தனக்குத் திறைசெலுத்தும் தகுதி சான்ற தமிழ் மொழி தனது இனிய சொற்கள் கனிந்த நேரிசை வெண்பாக்களால் நிடதமன்னன் நளனது வரலாற்றைப் பேர் பெற்ற புலவர் புகழேந்தி பாடினார். 7

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

1. சுயம்வர காண்டம்

நூல்

தருமன் வாட்டம்

8. பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுவதும் தோற்றொருநாள்
ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி - வேண்ட
மறுத்தான் இருந்தானை மண்ணொடும்போய் மாளப்
பொறுத்தான் இருந்தான் புலர்ந்து.

பதவுரை:

பாண்டவரின் முன்தோன்றல் - பாண்டவர்களில் மூத்தவனான தருமபுத்திரன், பார்முழுதும் தோற்றுஒருநாள் - சூதாடி தன்நாட்டை இழந்தான்; ஆண்டகையே தூதுவனாய்ச் சென்று அவனி வேண்ட மறுத்தான்- கண்ணன் (பாண்டவர்க்கு) தூதுவனாய் சென்று நாட்டைக்கேட்க துரியோதனன் தர மறுத்துவிட்டான்.

இருந்தாளை மண்ணொடுபோய் மாள-துரியோதனனும் அவன் நாடும் அழிய போரிட நினைத்த தருமபுத்திரன், புலர்ந்து இருந்தான் - ஒருநாள் வாட்டமுடன் இருந்தான்.

பொழிப்புரை:

பாண்டவரில் முதல்வனான தரும புத்திரன் சூதாடி நாட்டை இழந்தான். அவனுக்காகக் கண்ணன் தூதுநடந்து துரியனிடம் நாடு கேட்கத் தரமறுத்தான் அவன். துரியோதனன் மீது படையெடுத்து அழிக்க நினைத்த தருமன் வாட்டமுடன் ஒருநாள், இருந்தான். 1

சிற்றரசர் வருகை

9. நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்
ஈட்டங்கள் சூழ இருந்தானைக் - காட்டில்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழில்தோள் வேந்தர்
வருந்தகையர் எல்லாரும் வந்து.

பதவுரை:

பேரெழில்தோள் வேந்தர்-அழகு வாய்ந்த தோள்களை உடைய அரசர்களில், வருந்தகையர் எல்லாரும்-(பாண்டவர்க்கு) வேண்டியவர்கள் அனைவரும், நாட்டின் கண் வாழ்வைத் துறந்து போய் - சூதாடி நாட்டை இழந்து, நான்மறையோர் ஈட்டங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூழ இருந்தானை - நான்கு வேதங்களை ஓதும் முனிவர்கள் சூழ்ந்திருக்க இருந்த தருமபுத்திரனை, காட்டில் வந்து பெருந்தகையைக் கண்டார்கள்-காட்டில் வசித்த தருமனை வந்து கண்டார்கள்.

பொழிப்புரை:

பாண்டவர்களுக்கு வேண்டிய அரசர்கள், நாட்டை இழந்து காட்டில் முனிவர்களோடு வாழ்ந்த தருமபுத்திரனை வந்து கண்டார்கள். 2

வியாசன் வருகை

10. கொற்றவேல் தானைக் குருநாடன் பாலணைந்தான்
எற்றுநீர் ஞாலத் திருள்நீங்க-முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாம் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி.

பதவுரை:

எற்றுநீர் ஞாலத்து இருள் நீங்க - கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் வாழ்வாரின் அறியாமை அகலவும், முற்றும் வழிமுறையே வந்த மறையெல்லாம் தந்தான்-வழிவழியாக ஓதப் பட்டு வந்த வேதங்களைத் தொகுத்தவனும், மொழி முறையே கோத்தமுனி-வேதங்களில் மையமாகத் திகழ்ந்த புராணங்களை முறைப்படுத்தி அமைத்தவனுமாகிய வியாச முனிவன், கொற்ற வேல் தானைக் குருநாடன் பால்அணைந்தான்-வெற்றிவேல் தாங்கிய படையை உடைய தருமனிடம் வந்து சேர்ந்தான்.

பொழிப்புரை:

வேதங்களையும் வேதவழிப்பட்ட புராணங்களையும் ஒழுங்குப் படுத்தித் தொகுத்த வியாச முனிவன் தருமபுத்திரன் இருக்குமிடம் வந்து சேர்ந்தான். 3

தருமனின் வரவேற்பு

11. மறைமுதல்வ நீஇங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயரம் எல்லாம் - அறவே
பிழைத்தேன்யான் என்றான்அப் பேராழி யானை
அழைத்(து)ஏவல் கொண்ட அரசு.

பதவுரை:

பேராழி யானை - சக்கரப் படையினை உடைய கண்ணனை, அழைத்து ஏவல் கொண்ட அரசு-தனக்குத் தூதாகச் செல்ல ஏவல்கொண்டவனான தருமன், மறை முதல்வ - வேதங்களைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொகுத்தவனே, நீ இங்கே வந்து அருளப் பெற்றேன் - நீ என்னிடம் வந்து அருள்செய்யும் பேறு பெற்றேன், பிறவிப் பெருந்துயரம் எல்லாம் அறவே பிழைத்தேன் யான் என்றான் - உன் அருள் பெற்றதால் பிறவித் துயரிலிருந்தும் தப்பித்தேன்' என்று வியாச னிடம் கூறினான்.

பொழிப்புரை:

கண்ணனைத் தூது செல்லவைத்த தருமன் வியாசனிடம்,' வேதங்களைத் தொகுத்தவனே, நீ இங்கே வந்து எனக்கு அருள் கொடுத்ததால் பிறவித் துன்பமும் நீங்கப் பெற்றேன்' எனக்கூறி வரவேற்றான். 4

வருத்தம் ஏன்?

12. மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத்(து) உரவோனே - சித்தம்
வருந்தியவா என்னென்றான் மாமறையால் உள்ளம்
திருந்தியவா மெய்த்தவத்தோன் தேர்ந்து.

பதவுரை:

மாமறையால் உள்ளம் திருந்தியவா மெய்த்தவத்தோன் - வேதங்களால் பண்பட்ட நெஞ்சம் உடைய தவமுனிவனான வியாசன், தேர்ந்து - தருமனின் முகக்குறிப்பை ஆராய்ந்து, மெய்த்திரு வந்துற்றாலும் - நிலைத்திருக்கும் செல்வம் கிடைத்தாலும், வெந்துயர் வந்துற்றாலும் - துயரங்கள் வந்தபோதும், ஒத்திருக்கும் உள்ளத்து உரவோனே - விருப்பு வெறுப்பு இன்றிச் சமமாகவே கருதும் தருமனே, சித்தம் வருந்தியவா என்னென்றான் - இப்போது உன் உள்ளம் கலக்கம் அடையக் காரணம் என்ன, என்று தருமனிடம் வினவினான்.

பொழிப்புரை:

பண்பட்ட நெஞ்சம் உடைய வியாசன் தருமனின் முகக்குறிப்பைப் பார்த்து,' செல்வம் வந்தாலும் துயரம் வந்தாலும் ஒன்றெனவே கருதும் நீ, இபபோது வருத்தம் அடையக் காரணம் என்ன' என்றான். 5

தம்பியைத் தனியே அனுப்பினேன்

13. அம்பொற் கயிலைக்கே ஆகத் தரவணியார்
தம்பொற் படைக்குத் தமியனா-எம்பியைமுன்
போக்கினேன் என்றுரைத்தான் பூதலத்தும் மீதலத்தும்
வாக்கினோர் இல்லாத மன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

பூதலத்தும் மீதலத்தும் - இப்பூமியிலும் தேவர்கள் இருக்கும் மேலுலகத்திலும், வாக்கினேர் இல்லாத மன்-வாய்மை உரைப்பதில் தனக்கு எவரும் நிகர் இல்லாத மன்னனாகிய தருமன், ஆகத்து அரவுஅணிவார் அம்பொற் கயிலைக்கே-பாம்பை அணிந்த சிவபெருமான் வாழும் கயிலைமலைக்கு, எம்பியைமுன் - என் தம்பி அருச்சுனனை, தம்பொற் படைக்குத் தமியனா - பொன்னொளி வீசும் பாசுபதாஸ்திரமாகிய கருவியைப் பெற்றுவர தனியனாக, போக்கினேன் என்றுரைத்தான் - அனுப்பி வைத்துவிட்டேன் என்று வருத்தத்துடன் வியாசனிடம் கூறினான்.

பொழிப்புரை:

இவ்வுலகிலும் மேலுலகிலும் உண்மை பேசுவதில் நிகரற்ற தருமன் வியாசனிடம்,' கயிலை மலையில் வாழும் சிவபெருமானிடம் பாசு பதாஸ்திரமாகிய கருவியைப் பெற என் தம்பி அருச்சுனனைத் தனியனாக அனுப்பிவிட்டேன்' என்று கூறிவருந்தினான். 6

அருச்சுனன் தோள் வலிமை

14. காண்டா வனந்தீக் கடவுள்உணக் கைக்கணையால்
நீண்ட முகில்தடுத்து நின்றாற்கு - மீண்டமரர்
தாளிரண்டும் நோவத் தனித்தனியே ஓடியநாள்
தோளிரண்டும் அன்றோ துணை.

பதவுரை:

காண்டா வனம்தீக் கடவுள் உண - காண்டாவனம் எனும் நாடு தீக்கடவுளால் அழிந்தபோது, கைக்கணையால் நீண்ட முகில் தடுத்து நின்றாற்கு - தன் கையில் உள்ள அம்புகளால் படர்ந்த மேகத்தைத் தடுத்து (மழை பெய்யாமல்) நின்றவன் அர்ச்சுனன், மீண்டமரர் தாளிரண்டும் நோவத் தனித்தனியே ஓடியநாள்-அவன் ஆற்றலுக்கு எதிர்நிற்க முடியாமல் தேவர்கள் தம் கால்கள் நோவதால் தனித்தனியே ஓடினர், தோளிரண்டும் அன்றோ துணை - அப்போது அவன் தோள்கள்தாமே அவனுக்குத் துணையாக இருந்தன.

பொழிப்புரை:

காண்டாவனம் தீப்பிடித்து எரிய அர்ச்சுனன் படர்ந்த மேகங்களை (மழை பெய்யாமல்) அம்புகளால் தடுத்தான். அவனுக்கு எதிர் நிற்க முடியாத தேவர்கள் கால்கடுக்க ஓட்டம் பிடித்தனர். அத்தகைய தோளாற்றல் உடையவன் அர்ச்சுனன். 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துயரம் அடைய காரணம் யாது?

15. பேரரசும் எங்கள் பெருந்திருவும் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானம் சேர்தற்குக் - காரணம்தான்
யாதோவப் பாஎன்றான் என்றும்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய்.

பதவுரை:

என்றும் தன் வெண்குடைக் கீழ்த் தீது ஒவப் பார்காத்த சேய்- எப்போதும் தன் ஆட்சியில் குடிமக்கள் துன்பம் நீக்கிக் காத்த தருமன், அப்பா - என் மரியாதைக்குரிய வியாசனே, பேரரசும் எங்கள் பெருந்திருவும் கைவிட்டுச் -எங்கள் ஆட்சி, செல்வம் இரண்டையும் இழந்து, சேர்வரிய வெம்கானம் சேர்தற்குக் - (மக்கள் வந்து) பார்ப்பதற்கும் அரிய காட்டை அடைந்ததற்கு, காரணம்தான் யாதோ என்றான் - என்ன காரணம் என வியாசனிடம் வினவினான்.

பொழிப்புரை:

குடிமக்கள் நலிவு உறாமல் காத்த நல்ல அரசனான தருமன் 'நாங்கள் ஆட்சியும் செல்வமும் இழந்து எம் குடிமக்கள் வரவும் அரியதான காட்டிற்கு வந்தமைக்குக் காரணம் யாது' என வியாசனிடம் கேட்டான். 8

சூதாடுதல் அரசர்க்கு இயல்பே

16. கேடில் விழுச்செல்வம் கேடெய்து சூதாடல்.
ஏ(டு)அவிழ்தார் மன்னர்க்(கு) இயல்பேகாண்-வாடிக்
கலங்கலைநீ என்றுரைத்தான் காமருவு நாடற்கு
இலங்கலைநூல் மார்பன் எடுத்து.

பதவுரை:

இலங்கு அலைநூல் மார்பன் - பூணூல் அணிந்த வியாசன், காமருவு நாடற்கு - சோலைகள் சூழ்ந்த நாடனான தருமனுக்கு, கேடில் விழுச்செல்வம் கேடெய்து சூதாடல்- அழிவற்ற செல்வமும் அழிந்துபோக சூதாடுதல், ஏடு அவிழ்தார் மன்னர்க்கு இயல்பேகாண்-மலர்மாலை அணிந்த மன்னர்களுக்கு இயல்பு தான், வாடிக் கலங்கலைநீ-(ஆதலால்) நீ கலங்காதே, எடுத்து என்றுரைத்தான் - என்று காரணம் காட்டிக் கூறினான்.

பொழிப்புரை:

வியாசன் தருமனிடம், 'அரசர்கள் சூதாடிச் செல்வத்தை இழத்தல் இயல்புதான். அதனால், அதற்காக நீ கலங்காதே' என்று உரைத்தான். 9.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னைப் போல்வார் உண்டா?

17. கண்ணிழந்து மாயக் கவ(று)ஆடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனம்நண்ணி-விண்ணிழந்த
மின்போலும் நூல்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போல் உழந்தார் இடர்.

பதவுரை:

விண்ணிழந்த மின்போலும் நூல்மார்ப - மின்னலைப் போன்ற பூணூல் அணிந்த மார்பனே, கண்ணிழந்து மாயக் கவறு ஆடி- அறிவுக் கண்ணை இழந்து வஞ்சகச் சூதாடி, காவலர்தாம் மண்ணிழந்து போந்து வனம்நண்ணி-நாட்டை இழந்து காடு ஏகிய அரசர்கள், என்போல் இடர் உழந்தார் - என்னைப் போன்றே இடர் உற்றவர், மேதினியில் வேறுண்டோ - இவ்வுலகில் வேறு எவரும் உண்டோ எனத் தருமன் வினவினான்.

பொழிப்புரை:

பூணூல் அணிந்த வியாசனே, சூதாடி நாட்டை இழந்து காடு ஏகிய அரசர்கள் என்னைப் போல் இடர் உற்றது உண்டோ எனக் கேட்டான் தருமன். *10*

நளமன்னன்

18. சேமவேல் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோல்
நாமவேல் காளை நள(ன்) என்பான்-யாமத்து
ஒலிஆழி வையம் ஒருங்கிழப்பப் பண்டு
கலியான் விளைந்த கதை.

பதவுரை:

தனி செங்கோல் நாமவேல் காளை நளன் என்பான் - நல்ல செங்கோலையும் அச்சம்தரும் வேலையும் உடைய காளை போன்ற நளவேந்தன், யாமத்து ஒலி ஆழி வையம் ஒருங்கு இழப்ப - நள்ளிரவிலும் அலைகள் ஆர்ப்பரிக்கும் தன் நாட்டை இழக்க, பண்டு கலியான் விளைந்த கதை - முன் காலத்தில் சனியனால் நிகழ்ந்த வரலாற்றை, சேமவேல் மன்னனுக்குச் செப்புவான்- குடிகளைக் காக்கும் தருமனுக்கு வியாசன் கூறத் தொடங்கினான்.

பொழிப்புரை:

செங்கோல் மன்னனாகிய நளன் கடலால் சூழப்பட்ட தன் நாட்டைச் சனிபகவானால் இழக்க நேரிட்ட நிகழ்வை வியாசன் தருமனிடம் கூறத் தொடங்கினான். *11*

Public domain Digitization Muthulakshmi Research Academy

நளனின் வரலாறு

நாட்டுச் சிறப்பு.

19. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளைஅவிழப் - பூமடந்தை
தன்நாட்டம் போலும் தகைமைத்தே சாகரம் சூழ்
நன்நாட்டின் முன்நாட்டும் நாடு.

பதவுரை:

சாகரம் சூழ் நல்நாட்டின் முன் நாட்டும் நாடு-கடல்சூழ்ந்த நாடுகளில் முதன்மையாக விளங்கும் நிடத நாடு, காமர் கயல்புரள - அழகிய கெண்டை மீன்கள் பிறழ்ந்து வருதலாலும், காவி முகை நெகிழ - கருங்குவளை மலர்களின் அரும்புகள் விரிதலாலும், தாமரையின் செந்தேன் தளை அவிழ-தேன் நிறைந்த தாமரை அரும்புகள் மலர்தலாலும், பூமடந்தைதன் நாட்டம் போலும் தகைமைத்து - நிலமகளின் கண்களை ஒத்திருக்கிறது.

பொழிப்புரை:

கெண்டை மீன்கள் பிறழ்ச்சி, குவளை, தாமரை அரும்புகள் மலர்ச்சி ஆகியவை நிறைந்த நிடதநாடு நிலமகளின் கண்களை ஒத்திருக்கிறது. 12

மாவிந்த நகரம்

20. கோதை மடவார்தம் கொங்கை மிசைத்திமிர்ந்த
சீதக் களபச் செழுஞ்சேற்றால் - வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்தம் என்(று)உளதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

பதவுரை:

கோதை மடவார்தம் கொங்கைமிசைத் திமிர்ந்த - மாலை அணிந்த மங்கையர்தம் மார்பில் பூசப்பெற்ற, சீதக் களப செழுஞ் சேற்றால் - குளிர்ந்த சந்தனக் கலவையால், வீதிவாய் மானக் கரிவழுக்கும் - வீதிகளில் செல்லும் யானைகளின் கால் வழுக்கும், மாவிந்தம் என்று உளது -மாவிந்தம் எனும் நகர் உளது, ஞானக்கலைவாழ் ஓர் நகர் - அந்நகரில் ஞான நூல் வல்லார் நிறைந்திருக்கின் றனர்.

பொழிப்புரை:

அறிவுடையார் நிறைந்து வாழும் மாவிந்தம் எனும் நகரில் மாலையணிந்த மங்கையர் மார்பில் பூசிய சந்தனக் கலவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீதியில் உதிர அதில் தெருவில் செல்லும் யானைகளின் கால் வழுக்கிவிழும். 13

மாடங்கள்

21. நின்றுபுயல் வானம் பொழிந்த நெடுந்தாரை
என்றும் அகில்கமழும் என்பரால் - தென்றல்
அலர்த்தும் கொடிமாடத் தாயிழையார் ஐம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.

பதவுரை:

தென்றல் அலர்த்தும் கொடிமாடத்து - தென்றல் வீசுவதால் கொடிகள் அசையும் மாளிகைகளில், ஆய் இழையார் ஐம்பால் புலர்த்தும் புகை வான் புகுந்து - நல்ல அணிகளை அணிந்த அணங்குகள் தம் கூந்தலின் ஈரத்தைப் போக்கும் நறும்புகை வானமெல்லாம் நிரம்பி இருப்பதால், வானம் நின்று புயல் பொழிந்த நெடும் தாரை - வானத்திலிருந்து பொழியும் மழைத்தாரைகள், என்றும் அகில் கமழும் என்பர் - எக்காலத்தும் அகில் மணம் வீசும் என்பார்கள்.

பொழிப்புரை:

மாடமாளிகைகளில் மகளிர் தம் கூந்தலில் ஈரத்தைப் போக்கும் நறும் புகை வானமெல்லாம் பரவி இருப்பதால், மேகத்திலிருந்து பொழியும் மழைத்தாரைகள் அகில் மணம் வீசுகின்றன. 14

மக்களின் பெருமை

22. வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன-கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு

பதவுரை:

கோடுவன-வளைந்து இருப்பவை விற்களே, சோருவன மென்குழலே-தளர்ந்திருப்பவை மங்கையரின் கூந்தலே, வாய்விட்டு அரற்றுவன அஞ்சிலம்பே-வாய் திறந்து கதறுவன சிலம்பில் உள்ள பரல்களே, கஞ்சம் கலங்குவன-கலக்கம் அடைவது தண்ணீரே, மெய்ந்நெறியை விட்டு விலகுவன காரிகையார் கண்ணே-உண்மை வழியிலிருந்து விலகுவன மகளிர் கண்கள் மட்டுமே ஆகும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

மனக்கோணலும் சோர்தலும் துன்பம் காரணமாக அழுதலும் நெஞ்சம் கலங்குதலும் உண்மை நெறியிலிருந்து பிறழ்தலும் நிடதநாட்டு மக்களிடத்து இல்லை. (இதனை வெளிப்படையாகக் கூறாமல் வில், குழல், சிலம்பு, நீர், கண் முதலிய பொருள்களின் மூலம் புகழேந்தி நயம்படக் கூறியுள்ளமை அறிந்து இன்புறத் தக்கது) *15*

நகர மக்கள் நிலை

23. தெரிவனநூல் என்றும் தெரியா தனவும்
வரிவளையார் தங்கள் மருங்கே-ஒருபொழுதும்
இல்லா தனவும் இரவே இகழ்ந்துஎவரும்
கல்லா தனவும் கரவு.

பதவுரை:

என்றும் தெரிவன - (அந்நகர மக்கள்) எப்போதும் அறிந்திருப்பவை, நூல்-அறிவைப் புகட்டும் நல்ல நூல்களே ஆகும், வரிவளையார் தங்கள் மருங்கே தெரியாதன- அம்மக்களுக்குத் தெரியாதவை வளையல் அணிந்த வனிதை யரின் இடுப்புகளே ஆகும், ஒருபொழுதும் இல்லாதனவும் இரவே - நிடதநாட்டில் இரந்து வாழும் மக்களே இலர், எவரும் இகழ்ந்து கல்லாதனவும் கரவு - (அங்கு) எல்லா மக்களும் கற்றுக் கொள்ளாத தொழில் பிறரை வஞ்சிக்கும் தொழிலே ஆகும்.

பொழிப்புரை:

மாவிந்த நகர மக்கள் நல்ல நூற்பயிற்சி உடையவர்கள்; மகளிரின் இடைகளைத் தெரியாதவர்கள், பிச்சையெடுத்தலை அறியாதவர்கள்; வஞ்சகக் குணமும் இல்லாதவர்கள். *16*

மாவிந்தம் முரணை நகரை ஒத்தல்

24. மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான் - காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

பதவுரை:

பாராளும் வேந்தன் பதி - நிடத நாட்டை ஆளும் நளமன்னனின் மாவிந்த நகரை, தாமரையாள் வைகும் தடந்தோளான்-திருமகள் வாழும் பெரும் தோள்களை உடையவனும், காமருபூந்தாரான் - அழகிய மலர்மாலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்தவனும், மாமனுநூல் வாழவருசந்திரன் சுவர்க்கி - மனுநெறிப்படி ஆட்சி செய்பவனாகிய சந்திரன் சுவர்க்கி என்பானது, முரணைநகர் தானென்று சாற்றலாம் - தலைநகர் முரணை நகருக்கு ஒப்பாகக் கூறலாம்.

பொழிப்புரை:

நிடத மன்னன் நளனின் தலை நகரைத், திருமகள் தங்கும் தடந்தோள்களைப் பெற்று மலர்மாலை அணிந்து மனுநூல்படி ஆட்சி செய்யும் சந்திரன் சுவர்க்கியின் முரணை நகருக்கு ஒப்பாகக் கூறலாம். *17*

நள மன்னன்

25. ஓடாத தானை நளன்என்(று) உளன்ஒருவன்
பீடாரும் செல்வப் பெடைவண்டோ(டு)-ஊடா
முருகுடைய மாதர் முலைநனைக்கும் தண்தார்
அருகுடையான் வெண்குடையான் ஆங்கு.

பதவுரை:

ஆங்கு - (மாவிந்தம் எனும்) நகரில், பீடு ஆரும் செல்வப் பெடை வண்டோடு ஊடா - பெருமை பொருந்திய பெண் வண்டு ஆண் வண்டோடு ஊடல் கொண்டதனால், முருகு உடைய - (மலரிலிருந்த) தேன் தானாக வழிய, அருகு மாதர் முலை நனைக்கும் தண்தார் உடையான் - அருகிலுள்ள மாதர் களின் மார்புகளை நனைக்கும் குளிர்ந்த மாலைகளைச் சூடிய வனும், வெண்குடையான்-வெண்கொற்றக் குடையை உடைய வனும் ஆன, ஓடாத தானை நளன் என்று ஒருவன் உளன்-பகை வர்க்கு அஞ்சி ஓடாத படைகளை உடையவன் நளன் ஆவான்.

பொழிப்புரை:

வண்டுகள் மது அருந்தாமையால் மலர்களில் தேன் வழிந்தன. அம்மலர்களால் ஆன மாலை அணிந்து நளன் மாதர்களைக் கூடியதால் அவர்கள் மார்புகள் நனைந்தன. வெண்கொற்றக் குடையை உடைய அவன் பகைவர்க்கு அஞ்சி ஓடாத படைகளையும் உடையவன் ஆவான். *18*

கிளியும் பருந்தும்

26. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

தாது அவிழ் பூந்தாரான் - மகரந்தப் பொடி உதிரும் மலர் மாலையானாகிய நளன், மாதர் அருகு ஊட்டும் பைங்கிளியும் - பெண்கள் பாலும் பழமும் ஊட்டி வளர்க்கும் கிளியும், ஆடல் பருந்தும் - அதனோடு போராட நினைக்கும் பருந்தும், ஒரு கூட்டில் வாழ - (பகைமை) நீங்கி ஒரே கூட்டில் வாழுமாறு, சீத மதிக்குடைக்கீழ்-குளிர்ந்த நிலவுபோன்ற வெண்கொற்றக் குடையின் கீழ், செம்மை அறம் கிடப்பத் - நாட்டில் அறச் செயல்கள் தழைக்க, உலகு தனி காத்தான் - தன் நாட்டைச் சிறப்பாக ஆட்சி புரிந்தான்.

பொழிப்புரை:

நள மன்னன், மகளிர் வளர்க்கும் பச்சைக்கிளியும் பருந்தும் பகைமை நீங்கி வாழுமாறு நிலவு போன்ற வெண்கொற்றக் குடையின்கீழ், அறச்செயல்கள் தழைப்பத் தன்நாட்டைச் சிறப்பாக ஆண்டான். *19*

சோலை சென்றான் நளன்

27. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்-தேங்குவளைத்
தேன்ஆடி வண்டு சிற(கு)உலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

பதவுரை:

தேம் குவளை தேன் ஆடி வண்டு சிறகு உலர்த்தும் நீர்நாடன் - தேன் நிறைந்த குவளை மலர்களில் தேன் குடித்து வண்டுகள் சிறகுகளை உலர்த்தும் வளநாடனாகிய நளன், பூநாடி சோலை புக-பூக்களைப் பறித்து வர சோலைக்குச் செல்லும் போது, வாங்குவளை கையார் வதனமதி பூத்த - வளைவான வளையலை அணிந்த பெண்களின் முகநிலவில் பூத்துள்ள, குவளை பூகாடு இடையே போயினான் - (கண்கள் எனும்) குவளை மலர்க் கூட்டத்தின் நடுவே சென்றான்.

பொழிப்புரை:

தேனைக் குடித்த வண்டுகள் சிறகுகளை உலர்த்தும் வளநாடனாகிய நளன் பூக்களைப் பறிக்கச் சோலைக்குச் செல்லுங்கால், பெண்களின் முகநிலவில் பூத்துள்ள குவளை மலர்க்கூட்டத்திடையே செல்லலானான். *20*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இளவேனில் வரவு

28. வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெலாம்
தென்றல் மதுநீர் தெளித்துவர-நின்ற
தள(வு)ஏனல் மீ(து)அலரும் தாழ்வரைசூழ் நாடற்(கு)
இளவேனில் வந்த(து) எதிர்.

பதவுரை:

நின்ற தளவு ஏனல் மீது அலகும் - (முல்லை நிலத்தில்) வளர்ந்த முல்லைக்கொடி (குறிஞ்சி நிலத்தில்) இருக்கும் தினையின் மீது படர்ந்து பூ பூக்கும், தாழ் வரை சூழ் நாடற்கு எதிர்-மலைப்பக்கம் சூழ்ந்த நிடத அரசன் நளனுக்கு எதிரில், வென்றி மதவேள் தன் வில் எடுப்ப - மன்மதன் தன் கரும்புவில்லைத் தாங்கி வரவும், தென்றல் வீதியெலாம் மதுநீர் தெளித்து வர - தென்றற் காற்று தெருக்களில் தேனாகிய நீரைத் தெளித்து வரவும், இளவேனில் வந்தது - இளவேனிற் பருவம் வந்தது.

பொழிப்புரை:

முல்லைக்கொடி தினையின்மீது படர்ந்து பூத்துள்ள மலைப் பக்கத்திற்குத் தலைவனான நளன் முன்னே, மன்மதன் தன் வில்லை ஏந்திவரவும் தென்றல் தேனைத் தெருக்களில் சிதறவும் இளவேனில் வருகை தந்தது. 21

நளன் பூங்கா புகல்

29. தேரின் துகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரின் புனல்நனைப்ப வேயடைந்தான் - கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தால் அன்ன பொழில்.

பதவுரை:

தூங்கு இருள் வெய்யோற்கு ஒதுங்கி-செறிந்த இருட்டு சூரியனுக்கு அஞ்சி விலகி, புக்கு இருந்தால் அன்ன - ஒளிந்து கொண்டு இருந்தது போன்ற, கார்வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் பொழில் - கருநிற வண்டுகள் ஒன்றுகூடி ஒலித்துத் திரியும் சோலையை, தேரின் துகளை - தன்னுடைய தேர் உருளைகளில் படிந்த புழுதி மண்ணை, திருந்து இழையார் பூ குழலின் - அணிகள் அணிந்த பெண்கள் பூச்சூடிய கூந்தலி லிருந்து வழிகின்ற, வேரி புனல் நனைப்ப அடைந்தான்-தேனாகிய நீர் நனைத்துக் கரைக்க நளன் பூங்கா அடைந்தான்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

இருட்டு கதிரோனுக்கு அஞ்சி இருந்ததுபோலக் கருநிற வண்டுகள் ஒலித்துக் கொண்டு சுழலும் சோலையைத் தன் தேர் உருளைகளில் படிந்த புழுதி மகளிர் சூடிய மாலைகளிலிருந்து வழியும் தேனால் கரைய நளன் சோலையை அடைந்தான். 22

அன்னம் தோன்றல்

30. நீள்நிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்
தாள்நிறத்தால் பொய்கைத் தலம்சிவப்ப-மாண்நிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

பதவுரை:

ஆங்கு - அச்சோலை இடத்தே, மாண்நிறத்தான் முன் - அழகு படைத்த நளனின் முன்னே, அப்பு உள் தோன்றும் - தண்ணீரில் முளைத் தெழுகின்ற, முளரித் தலைவைகும் - தாமரை மலரில் வாழ்கின்ற, அன்னப்புள் - அன்னப்பறவை ஒன்று, தன் நீள்நிறத் தால் சோலைநிறம் பெயர-தனது வெண்மை நிறத்தால் சோலை யும் வெண்மை அடைய, நீடிய தாள் நிறத்தால் பொய்கைத் தலம் சிவப்ப - தன் கால்களின் சிவப்பு நிறத்தால் குளமும் செம்மைநிறம் அடைய, தோன்றிற்று - அங்குத் தோன்றியது.

பொழிப்புரை:

சோலையில் அழகுநிறைந்த நளனின் முன்னே, நீரில் முளைக்கும் தாமரை மலரில் வசிக்கின்ற அன்னப்பறவை ஒன்று தனது வெண்மை நிறத்தால் சோலையே வெண்மை அடையவும் தன் கால்களின் சிவப்பு வண்ணத்தால் குளம் செம்மைநிறம் அடையவும் தோன்றிற்று. 23

அன்னத்தைப் பிடி!

31. பேதை மடஅன்னம் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலம்ஏறி மென்கரும்பைக்-கோதிக்
கடித்துத்தான் முத்(து)இமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து.

பதவுரை:

மேதிக்குலம் ஏறி - எருமை மந்தை (தோட்டங்களில்) நுழைந்து, மென் கரும்பைக் கோதி கடித்து - மெல்லிய கரும் புகளைக் கடித்து, முத்து உமிழும் - (அவைகளுக்குள்) இருக்கின்ற முத்துகளைக் கக்குகின்ற, கங்கைநீர் நாடன் - வளமான நாட்டுத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைவனாகிய நளன், பேதை பெயர்ந்து (பணிப் பெண்ணைப் பார்த்து) - ஏ, பெண்ணே, மடஅன்னம் தன்னைப் பிழையாமல் பிடித்துத் தா என்றான்-(நீ போய்) இந்த இளம் அன்னத்தைத் தப்பாமல் பிடித்துத் தா' என்றான்.

பொழிப்புரை:

எருமைகள் கரும்பைத் தின்று முத்துகளை உதிர்க்கும் வளமான நாட்டுக்குத் தலைவனாகிய நளன் பணிப்பெண் ணிடம், 'நீபோய் அந்த இளம் அன்னத்தைத் தப்பாமல் பிடித்து வா' என்றான். 24

அன்னம் பிடிபட்டது

32. நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற(து) ஒப்பவே - நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

பதவுரை:

நீடிய நல் பைங்கூந்தல் வில்லியர்கள் - செழித்து நீண்டு வளர்ந்த கூந்தலைப் பெற்ற பணிப்பெண்கள், நாடி - (அன்னத்தை)ப் பிடிக்க விருப்பமுற்று, மட அன்னத்தை நல்ல மயிற்குழாம் ஓடி வளைக்கின்றது ஒப்ப - இளம் அன்னத்தை மயில்கள் சுற்றி வளைத்தது போல் வளைத்து, பற்றிக் கொடு போந்து - பிடித்து வந்து, தம் கோவின் முன் தாழ்ந்து வைத்தார் - தம் அரசன் முன் தாழ்ந்து கொடுத்தார்கள்.

பொழிப்புரை:

பணிப் பெண்கள் அன்னத்தைப் பிடிக்க விருப்பமுற்று, அன்னத்தை மயில் கூட்டம் வளைத்ததுபோல வளைத்துப் பிடித்து நளன்முன் பணிவுடன் கொடுத்தார்கள். 25

அன்னத்தின் கலக்கம்

33. அன்னம் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே - அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

பதவுரை:

ஆயிழையார் - தேர்ந்தெடுத்த அணிகளை அணிந்த பணிப்பெண்கள், அன்னம் தனைப் பிடித்து அங்கு கொண்டுபோய்-அன்னத்தைப் பிடித்துப் போய், மன்னன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுன்னர் வைத்தலுமே - அரசனின் முன்னே விட்டவுடன், அன்னம் தன்னுடைய வான் கிளையைத் தேடி மலங்கிற்று - (அந்த) அன்னப் பறவை தன் சுற்றத்தைத் தேடி வருந்திற்று, மன்னவனைக் கண்டு கலங்கிற்று-அரசனைப் பார்த்து அஞ்சிக் கலக்கமடைந்தது.

பொழிப்புரை:

பணிப்பெண்கள் அன்னத்தைப் பிடித்துப் போய் அரசன்முன் விட்டனர். அன்னம் தன் உறவைக் காணோமே என வருந்திற்று; அரசனைக் கண்டு மனம் கலங்கிற்று. *26*

அணிநடையும் மணிநடையும்

34. அஞ்சல் மடஅனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும் - விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

பதவுரை:

களிவண்டு மாணப் பிடித்ததார் மன் - வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை அணிந்த நளன், மடஅனமே அஞ்சல் - இளம் அன்னமே அஞ்சற்க, உன்றன் அணிநடையும் - உன்னுடைய அழகிய நடை, வஞ்சி அனையார் மணிநடையும் - பெண்களின் சிறந்த நடை, விஞ்சியதுகாணப் பிடித்ததுகாண் என்றான்-இந்த இரண்டு நடைகளில் சிறந்தது எதுவெனக் காணவே உன்னைப் பிடித்தோம் என்றான்.

பொழிப்புரை:

மலர்மாலை அணிந்த நளன் 'அன்னமே, அஞ்சாதே. உன் அழகிய நடை, மங்கையரின் சிறந்த நடை இவ்விரண்டனுள் எது தலைசிறந்த நடை எனக் காணவே உன்னைப் பிடித்தோம்' என அன்னத்திடம் கூறினான். *27*

அச்சம் நீங்கியது

35. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்-வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொல் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான்.

பதவுரை:

வெய்ய அடுமாற்றம் இல்லா அரசன் சொல் கேட்டு - கொடிய கொலை செய்யும் எண்ணம் இல்லை என்ற நள

In Public domain. Digitization by Muthulakshmi Research Academy

மன்னனின் சொல்லை நம்பி, செய்ய கமலத் திருவை நிகரான - தாமரையில் இருக்கும் திருமகளை ஒத்த, தையல் பிடித்த தனியன்னம் - பணிப்பெண் பிடித்துவந்த அன்னப்பறவை, தான் தடுமாற்றம் தீர்ந்தது - தன் மனக்கலக்கம் விட்டது.

பொழிப்புரை:

நளமன்னனின் இனிய சொற்களைக் கேட்டுப் பணிப்பெண் பிடித்துக் கொணர்ந்த அன்னப் பறவை தன் மனக்கலக்கம் தீர்ந்தது. 28

தமயந்தி

36. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே உன்றன்
இசைமுகந்த தோளுக்(கு) இசைவாள் - வசையில்
தமையந்தி என்(று) ஓதும் தையலாள் மென்தோள்
அமையந்தி என்றோர் அணங்கு.

பதவுரை:

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே-எல்லாத் திசைகளிலும் வெண்கொற்றக் குடையின் புகழை நிறுத்திய தேர் வேந்தே, உன்றன் இசைமுகந்த தோளுக்கு - உன்னுடைய புகழ்நிறைந்த தோள்களுக்கு, அமை மென்தோள் அந்தி என்றோர் அணங்கு - மூங்கிலை ஒத்த குளிர்ந்த தோள்களை உடைய தேவமகளைப் போன்ற அழகியும் வசைஇல் தமையந்தி என்று ஓதும் தையலாள் - குற்றமற்ற தமயந்தி என்னும் பெயரை உடையவளும், இசைவாள் - பொருத்தமானவள் ஆவாள்.

பொழிப்புரை:

எல்லாத் திசையிலும் ஆட்சிசெலுத்தும் நளனே, உன் தோள்களுக்கு, மூங்கில் போன்ற தோள்களை உடைய அழகியும் தமயந்தி எனும் பெயரை உடையவளும் நல்ல பொருத்தம் ஆவாள். 29.

யார் அவள்?

37. அன்னம் மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச் - சொன்னமயில்
ஆர்மடந்தை என்றான் அனங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

பதவுரை:

அன்னம் மொழிந்த மொழிபுகா முன் - அன்னம் கூறிய சொற்கள் தன் செவியில் புகுதலுக்கு முன்பே, மனக்கோயில்

In Public Domain Digitization Muthulakshmi Research Academy

கன்னிபுக்கு கைக்கொள்ள - தன் மனக்கோயிலுக்குள் தமயந்தி புகுந்து தனதாக்கிக் கொள்ள, அனங்கன் சிலைவளைப்ப- மன்மதன் தன் கரும்பு வில்லை வளைத்து மலர் அம்புகளைத் தொடுக்க, பார்மடந்தை கோமான் பதைத்து - பாராளும் நளன் நெஞ்சு பதைத்து, சொன்ன மயில் ஆர் மடந்தை என்றான் - நீ சொன்ன பெண் யார் மகள் எனக்கேட்டான்.

பொழிப்புரை:

அன்னம் சொன்னவை தன் செவியில் புகுதலுக்கு முன்னே நளன் மனக் கோயிலுக்குள் தமயந்தி புகுந்து விட்டாள். மன்மதன் தன் வில்லை வளைக்கவும் அவன் நெஞ்சம் பதைத்துக் காதல் மயக்குற்று 'அன்னமே, நீ சொன்ன பெண் யார்மகள்?' எனக்கேட்டான். 30.

வீமராசன் மகள்

38. எழுவடுதோள் மன்னா இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியில் சாய்ந்த குவளை - உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மா(டு)ஒலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

பதவுரை:

எழு அடு தோள் மன்னா - தூணை வென்ற தோள்களை உடைய அரசே, இலங்குஇழை - (நான் சொன்ன) அழகிய பெண், உழவர் ஏர் தூண்ட - உழவர்கள் ஏரில் பூட்டி மாடுகளைத் தூண்டி நடத்த, கொழுநுதியில் சாய்ந்த குவளை - ஏரின் கொழுமுனையால் சாய்க்கப்பட்டு வயலில் விழுந்த குவளை மலர்களில், மடை மிதிப்ப தேன்பாயும் - நீர்வரும் மடைகளில் அவர்கள் மிதிக்கும் போது தேன் வழிந்து பாய்தலும், மாடு ஒலி நீர் நாடன் - நீர் பாயும் ஒலிகேட்கும் வள வயல்களை உடையவனும், கொடை விதர்ப்பன் பெற்றது ஓர் கொம்பு - வள்ளல் தன்மை உடையவனுமாகிய வீமராசன் பெற்ற பூங்கொம்பு போன்றவள் அவள்.

பொழிப்புரை:

வலிமையான தோள்களை உடைய மன்னனே, நான் சொன்ன அழகி, உழவர்கள் ஏரினைப் பூட்டி உழும்போது குவளை மலர்கள் சாய்ந்து, அவர்கள் மடையை மிதிக்கும்போது தேன்வடியவும் நீர் பாயும் ஒலி கேட்கும் வயல்நாட்டிற்கு உரிய வனும் வள்ளலுமாகிய வீமன் பெற்று எடுத்த குலக்கொம்பு ஆவாள். 31.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்மை அரசு

39. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

பதவுரை:

நால்குணமும் நால்படையா - (அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, எனும் நான்குவகைக் குணங்களும் நான்குவகைப் (தேர், யானை, குதிரை, காலாள்) படைகளாகவும், ஐம்புலனும் நல்அமைச்சா - மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறி வழிச் செல்லும் அறிவே அமைச்சர்களாகவும், ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - காலில் ஒலிக்கும் சிலம்பு பேரிகையாகவும், வேல்படையும் வாளுமே கண்ணா - வேல் படை, வாள்படை இரண்டும் இரண்டு கண்களாகவும், வதன மதிக்குடைக்கீழ் - முகமாகிய நிலவுக் குடையின் கீழாக, பெண்மை அரசு ஆளும் - தமயந்தி, பெண் இயல்பாகிய அரசை ஆளுகிறாள்.

பொழிப்புரை:

நான்கு குணங்களும் நான்குபடை களாகவும் ஐம்பொறிகளும் அமைச்சர்களாகவும் காற்சிலம்பே முரசாகவும் இரண்டு கண்களும் வேல்படை, வாள்படையாகவும் கொண்டு தமயந்தி முகமாகிய நிலவுக் குடையின்கீழ் பெண்மை அரசை ஆளுகிறாள்.
32

தமயந்தி இடை

40. மோட்டினங் கொங்கை முடியச் சுமந்(து)ஏற
மாட்டா(து) இடைஎன்று வாய்விட்டு - நாள்தேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு.

பதவுரை:

இடை - தயந்தியின் இடுப்பு, மோடு இளம் கொங்கை - உயர்ந்து வளர்ந்துள்ள முலைகளை, முடிய சுமந்து ஏறமாட்டாது என்று - அவள் வாழும் நாள்வரை சுமக்க முடியாது என, நூபுரங்கள், - காலில் அணிந்துள்ள சிலம்புகள், நாள்தேன் அலம்புவார் கோதை - தேன்நிறைந்த மலர் சூடிய கூந்தலை உடையவளின், அடி இணையில் வீழ்ந்து - இரண்டு பாதங்களிலும் விழுந்து, பூண்டு புலம்பும் - வாய் திறந்து புலம்பும்.

Public Domain Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

உயர்ந்து வளர்ந்துள்ள முலைகளின் பாரத்தை இடுப்பு தாங்காது எனத் தமயந்தியின் காலில் அணிந்துள்ள சிலம்புகள் வாய்விட்டு அரற்றும். *33*

மெல்லிய இடை

41. என்றும் நுடங்கும் இடைஎன்ப ஏ(ழு) உலகும்
நின்ற கவிகை நிழல்வேந்தே - ஒன்றி
அறுகால் சிறுபறவை அஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக்(கு) ஆற்றாது தேய்ந்து.

பதவுரை:

ஏழு உலகும் நின்ற கவிகை நிழல் வேந்தே - பரந்த இந்நிலவுலகு முழுமையும் ஒரு குடைக்கீழ் ஆளும் அரசே, அறுகால் சிறு பறவை - ஆறு கால்களை உடைய வண்டு இனங்கள், ஒன்றி அம்சிறகால் வீசும் - கூடிய அழகிய சிறகுகளால் உண்டாக்கும், சிறு காற்றுக்கு ஆற்றாது - மெல்லிய காற்றையும் தாங்காமல், தேய்ந்து என்றும் நுடங்கும் இடை என்ப - தளர்ந்து எப்போதும் தமயந்தி இடை துவளும் என்பர்.

பொழிப்புரை:

உலகம் முழுமையும் ஆளும் அரசே, வண்டுகள் தம் சிறகசைப்பால் உண்டாக்கும் காற்றையும் தாங்கமாட்டாமல் தமயந்தியின் மெல்லிடை துவளும் என்பர். *34.*

மன்மதன் அம்பு தீட்டுமிடம்

34. செந்தேன் மொழியாள் செறிஅளக பந்தியின்கீழ்
இந்து முறியென்(று) இயம்புவார் - வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டும் இடம்.

பதவுரை:

பூவாளி வேந்தன் - மலர்களை அம்பாகச் செலுத்தும் மன்மதன், என்றும் வந்து - எக்காலத்தும் வருகை தந்து, பொருவெம் சிலை சார்த்தி - போரிடத் தக்க கரும்பு வில்லைச் சார்த்தி விட்டு, ஏ ஆளி தீட்டும் இடம் - அம்பின் வரிசைகளைத் தீட்டிக் கூராக்கும் இடம், செந்தேன் மொழியாள் - இன்சொற் களைப் பேசும் தமயந்தியின், செறி அளக பந்தியின் கீழ் - செறிவாக முன்னுள்ள கூந்தல் பகுதியின் பக்கமுள்ள, இந்து முறி என்று இயம்புவார் - பிறைத் துண்டாகிய நெற்றியெனக் கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

மன்மதன் தன்வில்லை வைத்துவிட்டு மலரம்புகளைத் தீட்டிக் கூராக்கும்இடம், இனிய சொற்களைப் பேசும் தமயந்தியின் செறிவாக அடர்ந்துள்ள கூந்தலின் முன்னுள்ள பிறைத் துண்டாகிய நெற்றியெனக் கூறுவர். 35

அன்னம் தமயந்தி தொடர்பு

43. அன்னமே நீஉரைத்த அன்னத்தை என்ஆவி
உன்னவே சோரும் உனக்(கு)அவளோ(டு) - என்ன
அடைவென்றான் மற்(று)அந்த அன்னத்தை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து.

பதவுரை:

அந்த அன்னத்தை - அந்த அன்னப் பறவையை, முன்னே நடைவென்றாள் தன்பால் நயந்து - இளமையிலேயே நடையழகால் வென்ற தமயந்திபால் ஈடுபாடு கொண்டு, அன்னமே - அன்னப் பறவையே, நீ உரைத்த அன்னத்தை - நீ கூறிய அன்னத்தை ஒத்த தமயந்தியை, என் ஆவி உன்னவே சோரும் - நினைக்கும்போதே என் உயிர் வாடுகிறது. உனக்கு அவளோடு என்ன அடைவு என்றான் - உனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பு என்ன என்றான் நளன்.

பொழிப்புரை:

அன்னத்தின் நடையைவிட சிறந்த நடைபெற்ற தமயந்திபால் ஈடுபாடு கொண்ட நளன் அன்னத்திடம்,' தமயந்தியிடத்து என் அவா மிகுகின்றது. உனக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு?' என்றான். 36.

நடை கற்க வரல்

44. பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவள்தன்
மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள் - காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தோம் யாம்.

பதவுரை:

காமன் படைகற்பான் வந்து அடைந்தான் - மன்மதன் (தமயந்தியின் கண்ணாகிய அம்புகொண்டு) அம்பெய்து பழகும் வித்தையைக்கற்க வந்தான், யாம் - நாங்கள், பைந்தொடியாள் பாதநடைகற்பான் வந்து அடைந்தோம் - வளையல் அணிந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவளின் நடையழகைக் கற்றுக் கொள்ள வந்தோம், பூமனைவாய் வாழ்கின்ற புள்குலங்கள் - பூக்களில் வாழும் பறவைகள் நாங்கள், அவள்தன் மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள் - அவளுடைய மாளிகையில் வாழும் மயிலை ஒத்த சாயலை உடைய சேடியர்கள் போல நெருக்கம் கொண்டுள்ளோம்.

பொழிப்புரை:

மன்மதன் தமயந்தியிடம் அம்பு எய்யும் தொழில் கற்கவும் நாங்கள் அவளிடம் நடையழகு கற்கவும் வந்தோம். மலர்களில் வாழும் பறவைகளாகிய நாங்கள் மயில் சாயலுடைய பணிப் பெண்களைப் போல அவளோடு நெருக்கமாக உள்ளோம். *37.*

நளனது காதல் மொழி

45. இற்றது நெஞ்சம் எழுந்த(து) இருங்காதல்
அற்றது மானம் அழிந்ததுநாண் - மற்றினிஉன்
வாயுடைய(து) என்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து.

பதவுரை:

நெஞ்சம் இற்றது (அன்னம் கூறியவற்றைக் கேட்ட நளனின்) மனம் தடுமாறியது, இருங்காதல் எழுந்தது - காதல் உணர்வு மேலும் மேலும் மிகுந்தது, மானம் அற்றது - பெருமை அகன்றது, நாண் அழிந்தது - வெட்கம் நீங்கியது, வெங்காமத் தீயுடைய நெஞ்சடையான் தேர்ந்து - காமத்தீயால் வாடியவன் தெளிந்து, மற்று இனி என்னுடைய வாழ்வு - இனிமேல் என் வாழ்க்கை, உன் வாய் உடையது என்றான் - நீ உன் வாயால் சொல்லப்போகும் சொல்லில்தான் உள்ளது என்றான்.

பொழிப்புரை:

நளனின் மனம் தடுமாறியது; காதல் மேலோங்கியது; பெருமை அகன்றது; வெட்கம் நீங்கியது. பின் ஒருவாறு தெளிந்து அன்னத்தை நோக்கி, 'உன் வாய்ச் சொல்லில் தான் என் வாழ்க்கை இருக்கிறது' என்றான். *38*

அன்னம் தமயந்தியை நாடல்

46. வீமன் திருமடந்தை மென்முலையை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் - சேம
நெடுங்குடையாய் என்(று)உரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

சேம நெடுங்குடையாய் - நாட்டு மக்களுக்குக் காப்பளிக்கும் வெண்கொற்றக் குடைவேந்தனே, வீமன் திருமடந்தை. மென்முலையை - வீமராசன் மகளின் மார்பம், உன்னுடைய வாம நெடும்புயததே வைகுவிப்பேன் - உன்னுடைய அழகிய தோள் களைச் சேரவைப்பேன், என்று அன்னம் உரைத்து - என்று அன்னப்பறவை நளனிடம் சொல்லி, ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து நீங்கியதே - தமயந்தியிடம் பறந்து சென்றது.

பொழிப்புரை:

நளனே, தமயந்தியை உன் தோள்களைத் தழுவச் செய்வேன்' என்று அன்னம் கூறித் தமயந்தியிடத்துப் பறந்து சென்றது. *39*

நளன் எதிர்பார்ப்பு

47. இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல் - இவ்வளவில்
மீளுங்கொல் என்(று) உரையா விம்மினான் மும்மதம்நின்(று)
ஆளுங்கொல் யானை அரசு.

பதவுரை:

மும்மதம் நின்று - மூன்று வகை (கன்னம், கபோலம், பீசம்) மதங்களும் மிகுந்து, ஆளும் கொல் யானை அரசு- கொலைத் தொழில் உடைய யானைப்படையைப் பெற்ற நளமன்னன், இவ்வளவில் செல்லுங்கொல் - இந்நேரம் அன்னம் தமயந் தியிடம் சென்று இருக்கமோ, இவ்வளவில் காணுங்கொல் - சென்ற அன்னம் அவளைக் கண்டு இருக்குமோ, இவ்வளவில் காதல் இயம்புங்கொல் - அவளிடம் யான் உற்ற காதலைச் சொல்லியிருக்குமோ, இவ்வளவில் மீளுங்கொல் - சொன்ன பிறகு உடனே திரும்புமோ, என்று உரையா விம்மினான் - என்று சொல்லிச் சொல்லி மனம் ஏங்கினான்.

பொழிப்புரை:

யானைப்படை கொண்ட நளமன்னன் (தனக்குள்) இந்நேரம் அன்னம் தமயந்தியிடம் சென்று இருக்கமோ? அவளைக் கண்டு இருக்குமோ? என் காதலைப் பேசி இருக்குமோ? பேசியபின் என்னிடம் திரும்பி வருமோ?' என்று பலவாறு உரைத்து ஏங்கினான். *40*

நளன் ஏக்கம்

48. சேவல் குயிற்பெடைக்குப் பேசும் சிறுகுரல்கேட்(டு)
ஆவி உருகி அழிந்திட்டான் - பூவின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடைஅன்னம் செங்கால் இளஅன்னம் சொன்ன
நடைஅன்னம் தன்பால் நயந்து.

பதவுரை:

பூவின் இடைஅன்னம் செங்கால் இளஅன்னம் - தாமர மலரில் வாழ்கின்ற சிவந்த கால்களை உடைய அன்னப் பறவை, சொன்ன நடைஅன்னம் தன்பால் நயந்து - சொன்ன நடையழகால் சிறந்த தமயந்திபால் காதல் கொண்டு, சேவல் குயில் - ஆண் குயில், பெடைக்குப் பேசும் சிறு குரல் கேட்டு - தன் பெட்டையோடு பேசும் இன்குரல் கேட்டு, ஆவி உருகி அழிந்திட்டான் - தன் உயிர் தளர்ந்து வருந்தினான் நளன்.

பொழிப்புரை:

மலரில் வாழும் அன்னம் சொன்ன தமயந்தியின் அழகில் சொக்கிய நளன், ஆண்குயில் பெண்குயிலோடு கொஞ்சுவதைக் கேட்டு மனம் தளர்ந்தான். 41

மயில் ஆடுதல்

49. அன்னம் உரைத்த குயிலுக்கு அலசுவான்
மென்மயில்தன் தோகை விரித்தாட - முன்னதனைக்
கண்(டு)ஆற்றா(து) உள்ளம் கலங்கினான் காமநோய்
கொண்டார்க்(கு)இ(து) அன்றோ குணம்.

பதவுரை:

அன்னம் உரைத்த குயிலுக்கு அலசுவான் - அன்னம் சொன்ன குயில் குரலால் அன்னத்திற்காக தளர்ந்த நளன், மென்மயில் தோகை விரித்தாட - மயில் தன் தோகைவிரித்து ஆட, அதனை முன் கண்டு - முன்னே நின்று அவ் வாடலைப் பார்த்து, ஆற்றாது உள்ளம் கலங்கினான் - பொறுக்க முடியாமல் மனம் கலங்கினான், காமநோய் கொண்டார்க்கு இது அன்றோ குணம் - காம வயப்பட்டவர் இயல்பு இதுதானே?

பொழிப்புரை:

அன்னத்தை நினைத்து மனம் தளர்ந்த நளன் மயிலாடலைக் கண்டு மிகவும் கலங்கினான். காமவயப்பட்டவர் குணம் இதுதானே ஆகும். 42

நளன் கொடியைக் கும்பிடல்

50. வார்அணியும் கொங்கை மடவாள் நுடங்(கு) இடைக்குப்
பேருவமை ஆகப் பிறந்(து) உடையீர் - வாரீர்
கொடியார் எனச்செங்கை கூப்பினான் நெஞ்சம்
துடியா நெடி(து) உயிராச் சோர்ந்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

நெஞ்சம் துடியா - மனம் பதைத்து, நெடிது உயிரா - பெருமூச்சு விட்டு, கொடியார் - கொடிகளே, மடவாள் நுடங்கு இடைக்கு - தமயந்தியின் குறுகிய இடுப்புக்கு, பேருவுவமை ஆக- சிறந்த ஒப்புமையாக, பிறந்து உடையீர் - பிறந்து உள்ளீர்கள், வாரீர் - உம்மையும் அவள் இடையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் வருக, எனச் சோர்ந்து - எனக் கூறி மெலிந்து, செங்கை கூப்பினான் - தன் கைகளால் வணங்கினான் நளவேந்தன்.

பொழிப்புரை:

நளன் நெஞ்சம் பதைத்துப் பெரு மூச்சுவிட்டுக் காட்டுக் கொடிகளிடம், 'நீங்கள் தமயந்தி இடைபோல் உள்ளீர்கள். வருக. ஒப்பிட்டுப் பார்ப்பேன்' எனக் கூறிக் கைகூப்பினான். 43

51. கொங்கை இளநீரால் குளிர்ந்தஇளஞ் சொல்கரும்பால்
பொங்குசுழி என்னும் பூந்தடத்தில் - மங்கைநறும்
கொய்தாம வாசக் குழல்நிழற்கீழ் ஆறேனோ
வெய்தாமக் காம விடாய்.

பதவுரை:

மங்கை - தமயந்தியினுடைய, கொங்கை நீரால்- கொங்கையாகிய இளநீராலும், குளிர்ந்த இளம்சொல் கரும்பால் - குளிர்ச்சியான கரும்புச் சொல்லாலும், பொங்கு சுழி என்னும் - அழகான கொப்பூழ் ஆகிய, பூந்தடத்தில் - பூக்கள் நிறைந்த குளத்தில், நறும் கொய்தாமம் - மணம்மிக்க மலர் மாலை அணிந்த, வாச குழல் நிழல் கீழ் - மணமுள்ள கூந்தல் நிழலில், வெய்தாமக் காம விடாய் ஆறேனோ? - சுட்டெரிக்கும் என் காமவேட்கையைத் தணித்துக் கொள்ள மாட்டேனோ?

பொழிப்புரை:

தமயந்தியின் கொங்கை இளநீர், இனிக்கும் கரும்புச் சொல், கொப்பூழாகிய குளத்தில் பறித்த மலர்மாலை அணிந்த மணமுள்ள கூந்தல் நிழல் ஆகிய இவற்றின் மூலம் என் காம நோயைத் தணித்துக் கொள்ள மாட்டேனோ என நளன் வருந்தினான். 44

தமயந்தியும் அன்னமும்

52. மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அரு(கு)அணைய - நன்னுதலும்
தன்ஆடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந்(து) ஆங்(கு)அதனை
என்நாடல் சொல்என்றாள் ஈங்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற - நளவேந்தனால் விடுக்கப்பட்ட அழகில் சிறந்துள்ள, அன்னம்போய்க் கன்னி அருகு அணைய - அன்னப்பறவை தமயந்தியிடம் போய்ச் சேரவும், நல்நுதலும் - அழகிய நெற்றி உடைய தமயந்தி, தன் ஆடல் விட்டுத் தனியிடம்சேர்ந்து - ஆடலை நிறுத்திவிட்டுத் தனியான இடம் சேர்ந்து, ஆங்கு அதனை - அன்னத்தைப் பார்த்து, ஈங்கு என்நாடல் சொல் என்றாள் - இவ்விடம் என்னை நாடிவந்த காரணம் சொல்' என்றாள்.

பொழிப்புரை:

அன்னம் தமயந்தியின் அருகில் சென்றவுடன் அவள் தன் விளையாடல்களை நிறுத்திவிட்டுத் தனியிடத்திற்குப் போய்,' அன்னமே, என்னை நீ நாடி வந்த காரணம் யாது?' என்றாள். 45

உன் கணவன்

53. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான் - மெய்ம்மை
நளன்என்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளன்என்பான் வேந்தன் உனக்கு.

பதவுரை:

செம்மனத்தான் தண் அளியான் செங்கோலான் - நற்குணம், நல்இரக்கம், குறையற்ற ஆட்சி ஆகியவற்றில் சிறந்து விளங்கு பவனும், மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான் - இளம்பெண்களால் விரும்பப்படும் தோள்களை உடையவனும் ஆகிய, மெய்ம்மை நளன் என்பான் - உண்மைத் தன்மை நிறைந்த நளன் என்பவன், மேல்நிலத்தும் நானிலத்தும் மிக்கான் - விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வாழ்பவர்களில் மேன்மை யானவன், உனக்கு வேந்தன் உளன் - அவனே உனக்குத் தகுதியான காதலன் ஆவான்.

பொழிப்புரை:

நற்குணம், அருள்தன்மை, மங்கையரால் கவரப்படும் தோள்வன்மை, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வாழ்வாரில் மேம்பட்டதன்மை ஆகியவை நிரம்பிய நளனே உனக்குக் கணவனாக வருவான். 46

ஒப்புமை அற்றவன்

54. அறம்கிடந்த நெஞ்சும் அருள்ஒழுகு கண்ணும்
மறம்கிடந்த திண்தோள் வலியும் - திறம்கிடந்த

In Public domain. Digitization: Muthu Ezhil Research Academy

செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத்(து) அவற்கு.

பதவுரை:

அறம்கிடந்த நெஞ்சும் - அறம் நிறைந்த நெஞ்சமும், அருள் ஒழுகு கண்ணும் - இரக்கம் நிரம்பிய கண்களும், மறம் கிடந்த திண்தோள் வலியும் - வீரஞ் செறிந்த தோளாற்றலும் உடைய, அம்கண்மா ஞாலத்து அவற்கு - அழகிய இந்நிலவுலகில் வாழும் நளனுக்கு, செம்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ - சிவந்த கண்களை உடைய திருமாலே ஒப்புமை ஆகான் என்றால் பிற மண்ணுலக வேந்தர்கள் சமம் ஆவரோ? ஆக மாட்டார்.

பொழிப்புரை:

நன்னெஞ்சம், அருள் கண்கள், தோள்வலிமை நிறைந்த நளவனுக்குத் திருமாலே ஒப்புமை ஆகான் எனில், பிற வேந்தர் ஒப்பு அவரோ? ஆகார். 47

தமயந்தி காதல் வயப்படல்

55. புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளம் கவர ஒளியிழந்த - வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்ந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன்.

பதவுரை:

வண்டின் பொதியிருந்த மெல்ஓதிப் பொன் - வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய தமயந்தி, புள்ளின் மொழியினொடு - அன்னத்தின் சொல்லோடு, பூவாளி தன்னுடைய உள்ளம் கவர - மலரம்புகளைக் கொண்ட மன்மதன் அம்புகளால் நெஞ்சம் காதல் வயப்பட்டு, ஒளியிழந்த வெள்ளை மதியிருந்த தாமென்ன வாய்ந்திருந்தாள் - உடல் வெளுத்துப் பகலில் காணும் ஒளியற்ற வெள்ளைநிலா போல் இருந்தாள்.

பொழிப்புரை:

வண்டுகள் நிறைந்த கூந்தல் அழகி தமயந்தி அன்னத்தின் சொற்களாலும் மன்மதன் அம்புகளாலும் காதல் வயப்பட்டு ஒளியிழந்த நிலாபோல உடல் வெளுத்துக் காணப்பட்டாள். 48

தமயந்தி மயக்கம்

56. மன்னன் மனத்(து)எழுந்த மையல்நோய் அத்தனையும்
அன்னம் உரைக்க அகம்உருகி - முன்னம்
முயங்கினாள் போல்தன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினாள் என்செய்வாள் மற்று.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

மன்னன் மனத்து எழுந்த - நளமன்னன் நெஞ்சத்தில் எழுந்த, மையல்நோய் அத்தனையும் - காதல் நோய் முழுமையும், அன்னம் உரைக்க அகம் உருகி - அன்னம் உரைக்கக் கேட்ட தமயந்தி தன் நெஞ்சம் உருகி, முன்னம் முயங்கினாள் போல் - முன்பே அவனைக் கூடியவளைப் போல, முலை முகத்தைப் பாரா மயங்கினாள் - தன் மார்பைப் பார்த்து அவன்மீது காதல்மிக மயங்கினாள், மற்று என்செய்வாள் - வேறு அவள் யாது செய்வாள்?

பொழிப்புரை:

நளன் தமயந்திபால் கொண்ட காதல் வேட்கையை முழுமையாக அன்னம் அவளிடம் உரைத்தது. அதனைக் கேட்ட அவள் நெஞ்சு உருகி, முன்னரே அவனோடு கூடினாள்போல் நினைந்து மயங்கினாள். 49

என் நிலையைக் கூறு

57. **வாவி உறையும் மடஅனமே என்னுடைய**
ஆவி உவந்(து)அளித்தாய் ஆதியால் - காவினிடைத்
தேர்வேந்தற்(கு) என்னிலைமை சென்(று)உரைத்தி
என்(று)உரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

பதவுரை:

பார்வேந்தன் பாவை பதைத்து - வீமராசன் மகள் மனம் பதைப்புற்று வாவி உறையும் மடஅனமே - பொய்கையில் வாழும் இளம் அன்னமே, சென்று - நீ இங்கிருந்து போகி, காவின் இடை தேர்வேந்தற்கு - சோலையில் இருக்கும் நளமன்னனுக்கு, என்னிலைமை உரைத்தி - என்னுடைய நிலைமையைக் கூறு, என்னுடைய ஆவி உவந்து அளித்தாய் ஆதி - (அவ்வாறு கூறினால்) என் உயிரையே உவந்து அளித்தவள் ஆகின்றாய், என்று உரைத்தாள் - என்று கூறினாள் தமயந்தி.

பொழிப்புரை:

தமயந்தி மனம் பதைத்து 'அன்னமே, நீ இங்கிருந்து சென்று நள மன்னனிடம் நான் அவனிடம் கொண்ட காதலைக் கூறுக. அவ்வாறு கூறினால் என் உயிரைக் காப்பாற்றிய பெருமை உன்னைச் சேரும்' என்றாள். 50

அன்னம் திரும்பல்

58. **மன்னன் புயநின் வனமுலைக்குக் கச்சாகும்**
என்ன முயங்குவிப்பேன் என்(று)அன்னம் - பின்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருந்தவன்பால் ஓதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பால் போன(து) எழுந்து.

பதவுரை:

மன்னன் புயம் - நளனின் தோள்கள், நின்வன முலைக்குக் கச்சாகும் என்ன - உன்னுடைய பெரிய மார்புக்குக் கச்சாக ஆகும் வண்ணம், முயங்குவிப்பேன் - தழுவும்படி செய்வேன், என்று அன்னம் - என்று சொன்ன அன்னம், பின்னும் பொருந்த - மறுபடியும் தமயந்தி மனங்கொள்ளுமாறு, அன்பால் ஓதி - அன்புடன் பேசி, பூங்கணைகள் பாய இருந்தவன் பால் - மலர் அம்புகள் தைக்கும்படி இருந்தவனிடத்து, எழுந்து போனது - பறந்து சென்றது.

பொழிப்புரை:

நளனின் தோள்கள் உன் மார்புக்குக் கச்சு ஆகும்படி அவன் உன்னைத் தழுவச் செய்வேன். மேலும் தமயந்தியிடம் அன்பாகப் பேசிவிட்டு அன்னம் நளனிடம் பறந்து சென்றது. 51

தமயந்தி தாய் அறிதல்

59. கொற்றவன்தன் தேவிக்குக் கோமகள்தன் தோழியர்கள்
உற்ற(து) அறியா உளநடுங்கிப் - பொற்றொடிக்கு
வேறுபா(டு) உண்(டு)என்றார் வேந்தனுக்கு மற்(று) அதனைக்
கூறினாள் பெற்ற கொடி.

பதவுரை:

கோமள்தன் தோழியர்கள் - தமயந்தியின் தோழியர்கள், உற்றது அறியா உளம்நடுங்கி - தமயந்தி காதல் வயப்பட்டதை அறிந்து நடுக்கமுற்று, கொற்றவன்தன் தேவிக்கு - வீமராசன் மனைவியிடம், பொற்றொடிக்கு வேறுபாடு உண்டு என்றார் - தமயந்திக்குப் பல வேறுபாடுகள் தோன்றி உள்ளன என்றார்கள், பெற்ற கொடி மற்றுஅதனை வேந்தனுக்கு கூறினாள் - தமயந்தியைப் பெற்றவள் தோழிகள் கூறியதை வேந்தனுக்கு உரைத்தாள்.

பொழிப்புரை:

தமயந்தியின் பணிப்பெண்கள் அவள் உற்ற காதல் நிலையை அரசியிடம் கூற, அரசியும் அதனை அரசனிடம் கூறினாள். 52

வீமன் தமயந்திபால் செல்லல்

60. கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால்
மருங்(கு)உலவ வார்முரசம் ஆர்ப்ப - நெருங்கு

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

புரிவளை நின்(று) ஓங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாள் மனை.

பதவுரை:

கருங்குழலார் செங்கையினால் - கரிந்த கூந்தலைஉடைய பெண்கள் கையால், வெண்கவரிப் பைங்கால் மருங்கு உலவ - வெண் சாமரை வீசுவதால் வரும் காற்று பக்கத்தே சுழலவும், வார் முரசம் ஆர்ப்ப - முரசுகள் ஒலிக்கவும், நெருங்கு புரிவளை நின்று ஓங்க - சங்குகள் நெருக்கமாக முழங்கவும், பெற்ற வரிவளைக்கை நல்லாள் மனை - பெற்றெடுத்த தமயந்தி வாழும் மாளிகையை, போய்ப்புக்கான் - (வீமராசன்) போய்ச் சேர்ந்தான்.

பொழிப்புரை:

சாமரை வீசலால் வரும் காற்று தன்னைச் சுற்றிச் சுழலவும், முரசுகள் ஒலிக்கவும் சுழிந்த சங்குகள் முழங்கவும் வீமராசன் தமயந்தியின் மாளிகையை அடைந்தான். *53*

தமயந்தி தந்தையை வணங்கல்

61. கோதை சுமந்த கொடிபோல் இடைநுடங்கத்
தாதை திருவடிமேல் தான்வீழ்ந்தாள் - மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்(று)அரற்றும்
பூந்தாரம் மெல்ஓதிப் பொன்.

பதவுரை:

களிவண்டு காந்தாரம் பாடி - மதுவுண்ட மதுகரங்கள் காந்தாரம் என்னும் பண்ணை இசைத்து, மீதெல்லாம் நின்று அரற்றும் - மேல்எல்லாம் தங்கி முரலுகின்ற, பூந்தார் அம் மெல்ஓதிப் பொன் - பூமாலையும் மெல்லிய கூந்தலும் உடைய திருமகள் போன்ற தமயந்தி, கோதை சுமந்த கொடிபோல் - கூந்தலைச் சுமந்த பூங்கொடிபோல், இடை நுடங்க - இடுப்பு துவள, தாதை திருவடிமேல் தான்வீழ்ந்தாள் - தன் தந்தையின் திருவடிகளில் தமயந்தி விழுந்தாள்.

பொழிப்புரை:

தேனுண்ட வண்டுகள் இசை பாடி ஆரவாரிக்கும் பூமாலையை அணிந்த திருமகள் போன்ற தமயந்தி கூந்தல் பாரம் தாங்காமல் இடுப்புத் துவள, தந்தையின் காலடியில் விழுந்தாள். *54.*

பேரழகி தமயந்தி

62. பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீர்அரும்பத் தன்பேதை நின்றாளைப் - பாராக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம்.

பதவுரை:

பேரழகு சோர்கின்ற தென்ன - நிரம்ப அழகு நிறைந்திருப்பது போன்ற, பிறை நுதல்மேல் - பிறை ஒத்த நெற்றியில், நீர் அரும்பத் தன்பேதை நின்றாளை - வியர்வை மிகத் தன் எதிரே நின்ற தமயந்தியை, குலவேந்தன் பாரா - வீமராசன் பார்த்தான், கோவேந்தர் தம்மை - பெருநில மன்னர்களை, மலர்வேய்ந்து கொள்ளும் மணம் - மலர்மாலை சூட்டி மணக்கும் முறையைப் பற்றி, சிந்தித்தான் - எண்ணலானான்.

பொழிப்புரை:

அழகு நிறைந்த நெற்றியில் வியர்வை அரும்ப நின்ற மகளை வீமன் கண்டான். மலர் மாலை சூட்டி வேந்தரை மணக்கும் முறைபற்றிச் சிந்திக்கலானான். *55*

சுயம்வரம் அறிவிப்பு

63. மங்கை சுயவரம்நாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென்(று) இயம்பினான் - பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூ(து)ஓட விட்டு.

பதவுரை:

பைங்கமுகின் கூந்தல்மேல் - பசுமையான பாக்குமரப் பாளைகளில், கங்கை கொழுந்தோடும் நன்னாடன் - கங்கை நீர் ஒழுகும் வளநாடனாகிய வீமன், வேந்தர் மேல் தூது ஓட விட்டு - பிற மன்னர்களுக்குத் (தன்மகளின் மணம் குறித்து) தூதர்களை அனுப்பி, மங்கை சுயவரம் நாள் ஏழு என்று - தமயந்திக்கு இன்றிலிருந்து எழாம் நாள் சுயம்வரம் என்று, வார் முரசம் எங்கும் அறைக - பேரிகை மூலம் எங்கும் அறிவித்திடுக, என்று இயம்பினான் - எனக் கட்டளையிட்டான்

பொழிப்புரை:

தமயந்தியின் சுயவரம் இன்றிலிருந்து ஏழாம் நாள் நடக்கும் என்று வீமன் பேரிகை மூலம் அறிவிக்கும்படிக் கூறி மன்னர் களுக்குத் தூதர்களையும் விட்டான். *56*

சுயம்வரத்திற்கு அரசர் வருகை

64. மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்(டு) இசைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி - நாமத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாவேய்ந்த செந்தமிழாம் என்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்.

பதவுரை:

மாமுத்த வெண்குடையான் - முத்துப்போல் வெண்கொற்றக் குடையை உடையவனும், மால் களிற்றான் - பெரிய யானைப் படையை உடையவனும் ஆகிய, வண்டுஇசைக்கும் தாமத்து அரிச் சந்திரன் சுவர்க்கி - மலர் மாலை அணிந்த சிங்கஏறு போன்ற சந்திரன் சுவர்க்கியின், நாமத்தால் - பெயரால், பாவேய்ந்த செந்தமிழாம் என்ன - பாடப்பட்ட தமிழ்ப் பாடல்கள் (எங்கும் பரவுதல்) போல், கோவேந்தர் செல்வக்குழாம் பரந்ததே -(சுயம்வரத்திற்கு வருகைதரும்) மன்னர் கூட்டம் நிறைந்து பரவியது.

பொழிப்புரை:

வெண்கொற்றக்குடையும் யானைப் படையும் உடைய சிங்கஏறு போன்ற சந்திரன்சுவர்க்கி பெயரால் பாடப்படும் தமிழ்ப்பாக்கள் நாலாத் திசையிலும் பரவுதல் போலச் சுயம்வரத்திற்குப் பல திசைகளிலிருந்தும் மன்னர்கள் திரண்டு வந்தனர். 57

நகரெங்கும் அரசர்கள்

65. செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய் - வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரில் ஈண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து.

பதவுரை:

செந்தடையும் - பூந்துகள்களில் மொய்க்கின்ற, வண்டு உறை தார் - வண்டுகள் தங்கும் மலர் மாலை அணிந்த, செய்யாள் வளர்மார்பன் - திருமகள் வாழும் மார்பினன் ஆகிய வீமராசனின், கந்து அடையும் - கட்டுத்தறியைச் சார்ந்து இருக்கின்ற, வேழக் கடைத்தலைவாய் - யானைகள் நிற்கும் தலைவாசலில், கோவேந்தன் மாதைக் குறித்து - வீமராசன் மகளின் நினைவுடன், வந்து அடைந்த - வருகை தந்த, பூவேந்தர் தங்கள்கிளை - நாடாளும் மன்னர்கூட்டம், பொன்னகரில் ஈண்டிற்றே - (வீமன் தலைநகர்) குண்டினபுரத்தில் நிறைந்தது.

பொழிப்புரை:

மலர்மாலை அணிந்த வீமராசனின் யானைகள் நிற்கும் தலைவாசலில் தமயந்தியின் சுயம்வரத்திறகு வருகை தந்த வேந்தர்கள் நிறைந்து இருந்தனர். 58

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னர்கள் இருந்த இடங்கள்

66. புள்உறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனி(து) உறைந்தார் - தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்தன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

பதவுரை:

தெள் அரிக்கண் பூமகளை -செவ்வரி படர்ந்த கண்களையுடைய திருமகளைப் போன்றவளும், பொன்னை - பொன்மேனி யாளும், பொருவேல் விதர்ப்பன்தன் கோமகளை - வேற்படை தாங்கிய வீமன்திரு மகளாகிய தமயந்தியை, தம்மனத்தே வைத்து - (பல நாட்டு மன்னர்களும்) சுயம்வரத்தில் மணக்க எண்ணி, புள்ளுறையும் சோலைகளும் - பறவைகள் வாழும் சோலைகளிலும், பூங்கமல வாவிகளும் - தாமரைப் பூக்கள் நிறைந்த குளக்கரைகளிலும், உள்ளும் புறமும் இனிது உறைந்தார் - உள்ளிடங்களிலும் வெளியிடங்களிலும் தங்கினார்கள்.

பொழிப்புரை:

வீமன் திருமகளாகிய தமயந்தியை சுயம்வரத்தில் அடைதலுக்காக வந்த இளவரசர்கள் சோலைகளிலும் குளக்கரைகளிலும் தங்கினார்கள். 59

நளன் அன்னத்தைக் காண்டல்

67. வழிமேல் விழிவைத்து வாள்நுதலாள் நாம
மொழிமேல் செவிவைத்து மோகச் - சுழிமேல்தன்
நெஞ்(சு)ஓட வைத்(து)அயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்(சு)ஓட அன்னம் வர.

பதவுரை:

வழிமேல் விழிவைத்து - அன்னம் சென்ற திசையில் தன் பார்வையை நிறுத்தி, வாள்நுதலாள் நாம மொழிமேல் செவி வைத்து - ஒளி பொருந்திய நெற்றியினளாகிய தமயந்தியின் சொல்மீது தன்செவியை வைத்து, மோகச் சுழிமேல் - அவள் மீது கொண்ட காதலெனும் நீர்ச் சுழியில், நெஞ்சுஓட வைத்து அயர்வான் - நெஞ்சம் நினைக்க வருந்திய வனாகிய நளன், நெடுவானில் - வானத் தில், மஞ்சோட அன்னம் வர கண்டான் - மேகங்கள் அன்னத்தின் சிறகசைப்பால் சிதறிஓட வருவதைப் பார்த்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

தமயந்தி சொன்னதைக் கேட்க ஆவலுற்று அன்னம் சென்ற திசையில் விழி வைத்து, அவள் மீது கொண்ட மோகத்தால் மெலிந்தவனாகிய நளன் அன்னம் வருவதைக் கண்டான். 60

அன்னத்தின் கூற்று

68. முகம்பார்த்(து) அருள்நோக்கி முன்இரந்து செல்வர்
அகம்பார்க்கும் அற்றோரைப் போல - மிகுங்காதல்
கேளா இருந்திட்டான் அன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன்.

பதவுரை:

கேளாரை - தன்னை எதிர்த்த பகைவர்களை, வாளால் விருந்திட்ட மன் - வாளால் வெட்டிப் பறவைகள், நாய், நரிகளுக்கு விருந்திட்ட நளவேந்தன், செல்வர் முகம் பார்த்து - செல்வரின் முகக் குறிப்பை அறிந்து, அருள் நோக்கி - அருள்பார்வையை எதிர் நோக்கி, முன் இரந்து - முன்சென்று யாசித்து, அகம்பார்க்கும் - அவர்களின் உள்ளக்கருத்தை எதிர்பார்த்து இருக்கும், அற்றோரைப் போல - வறியவரைப் போல, மிகும்காதல் - தன்மேல் தமயந்திக்கு உண்டான காதலை, அன்னத்தைக் கேளா இருந்திட்டான் - அன்னத்தின் வாயிலாகக் கேட்டான்.

பொழிப்புரை:

பகைவரைக் கொன்று பறவைகளுக்கு விருந்துவைத்த நளன், செல்வரின் முகக்குறிப்பை அறிந்து அருள் பார்வையை எதிர்பார்த்து நெஞ்சக்கருத்தை அறிய எதிர்நோக்கியிருக்கும் வறிஞரைப் போல, தமயந்தி தன்மீது கொண்ட காதலை அன்னம் வாயிலாகக் கேட்டான். 61

நலந்தானா?

69. அன்னக் குலத்தின் அரசே அழிகின்ற
என்னுயிரை மீள எனக்(கு)அளித்தாய் - முன்உரைத்த
தேமொழிக்குத் தீ(து)இலவே என்றான் திருந்தாரை
ஏமொழிக்கும் வேலான் எடுத்து.

பதவுரை:

திருந்தாரை ஏம் ஒழிக்கும் - பகைவரின் களிப்பை அழிக்கும், வேலான் - வேற்படையை உடைய நளன், அன்னக் குலத்தின் அரசே - அன்னப் பறவைகளில் தலைமையாக விளங்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னமே, அழிகின்ற என்னுயிரை மீள எனக்கு அளித்தாய் - தமயந்தி ஏக்கத்தால் வாடிய என் உயிரைக் காத்தாய், முன் உரைத்த தேமொழிக்குத் தீது இலவே - நீ சொன்ன தமயந்திக்கு ஒன்றும் கெடுதல் இல்லையே (என்று), எடுத்து என்றான் - உயர்குரலில் வினவினான்.

பொழிப்புரை:

பகைவரின் மகிழ்ச்சியை அழிக்கும் நளன் அன்னத்திடம், "அன்னமே, தமயந்தியால் வருந்திய என்னை நல்ல சொல் சொல்லிக் காத்தாய். அவள் நலத்தில் ஒன்றும் குறை இல்லையே" என வினவினான். 62

நளன் அறிவு அழிதல்

70. கொற்றவன்தன் ஏவலினால் போய்அக் குலக்கொடிபால்
உற்றதுவும் ஆங்(கு)அவள்தான் உற்றதுவும் - முற்றும்
மொழிந்ததே அன்னம் மொழிகேட்(டு) அரசற்(கு)
அழிந்ததே உள்ள அறிவு.

பதவுரை:

அன்னம் - அன்னப் பறவை, கொற்றவன் ஏவலினால் - நளனின் கட்டளையால், போய் அக்குலக் கொடிபால் உற்றதுவும் - தமயத்திடம் சென்று செய்தியைச் சொன்னதும், ஆங்கு அவள் உற்றதுவும் - அன்னம் சொன்னதைக் கேட்ட தமயந்தி நளனிடத்துக் கொண்ட காதலையும், முற்றும் மொழிந்ததே - முழுமையாக நளனிடம் கூறியது, மொழி கேட்டு - அன்னம் கூறியவற்றைக் கேட்ட, அரசற்கு உள்ள அறிவு அழிந்ததே - நளனுக்கு இருந்த அறிவும் தடுமாற்றம் அடைந்தது.

பொழிப்புரை:

அன்னப்பறவை தமயந்திக்கு நளன் காதலை உரைத்தவுடன், அவள் கொண்ட காதல் மயக்கத்தை நளனிடம் நவின்றது. அதனைக் கேட்ட நளன் அறிவிலும் தடுமாற்றம் ஏற்பட்டது. 63

அறிவு அழிந்த நளன்நிலை

71. கேட்ட செவிவழியே கேளா(து) உணர்(வு)ஓட
ஓட்டை மனத்தோ(டு) உயிர்தாங்கி - மீட்டும்
குழியில் படுகரிபோல் கோமான் கிடந்தான்
தழலில் படுதளிர்போல் சாய்ந்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கேட்ட செவிவழியே - தமயந்திபற்றிய செய்திகளைச் செவியில் கேட்டவுடன், கேளாது உணர்வு ஓட - (அவனையும்) அறியாமல் அறிவு மயங்க, ஓட்டை மனத்தோடு - உடைந்த நெஞ்சத்தோடு, உயிர்தாங்கி - உயிரைத் தாங்கிக் கொண்டு, மீட்டும் - பின்னரும், கோமான் - அரசனாகிய நளன், குழியில் படுகரிபோல் - வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்த யானைபோலவும், தழலில் படுதளிர்போல் - நெருப்பில்பட்ட இளந்தளிரைப் போலவும், சாய்ந்து கிடந்தான் - வீழ்ந்து இருந்தான்.

பொழிப்புரை:

தமயந்தி பற்றிய செய்திகளைக்கேட்டு அறிவு மயங்கி நெஞ்சு உடைந்து உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தான் நளன். மேலும் அவன் படுகுழியில் பட்ட யானை போலவும் நெருப்பில் வாடிய தளிர்போலவும் வீழ்ந்து கிடந்தான். *64*

சுயம்வரச் செய்தி

72. கோதை சுயம்வரநாள் கொற்றவனுக்(கு) உற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந்(து) எய்தினார் - போதில்
பெடையோடு வண்(டு)உறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயில் அகம்.

பதவுரை:

கோதை சுயம்வரநாள் - தமயந்தியின் சுயம்வரநாளை, கொற்றவனுக்கு உற்று உரைப்ப - நளனுக்கு அறிவிக்க, ஏதமிலாக் காட்சியர் - குறையற்ற தூதர்கள், போதில் பெடையொடு வண்டு உறங்கும் - வண்டுகள் (தேனுண்டு மயங்கி) உறக்கம் கொள்ளும் மலர்கள் நிறைந்த, பேரொலிநீர் நாடன் - நீர் நிலைகளை உடைய நளனுடைய, அடையாத வாயில் அகம் வந்து எய்தினர் - அடைக்கப்படாத அரண்மனை வாயிலை வந்து சேர்ந்தார்கள்.

பொழிப்புரை:

தமயந்தியின் சுயம்வர நாளை அறிவிக்கும்பொருட்டு வீமன் நாட்டுத் தூதர்கள் நிடதமன்னனின் அரண்மனையின் அடைக்கப்படாத வாயிலை அடைந்தனர். *65*

நளன் புறப்பாடு

73. காவலன்தன் தூதர் கடைக்கா வலர்க்(கு)அறிவித்(து)
ஏவலிற்போய் ஈதென்(று) இயம்புதலும் - மாவில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொலிந்ததேர் பூட்(டு)என்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து.

பதவுரை:

காவலன்தன் தூதர் - வீமராசனின் தூதர்கள், கடைக்காவலர்க்கு அறிவித்து - (நளனைக் காண வந்த செய்தியை) வாயில் காவலர்க்குச் சொல்லி, ஏவலின் போய் - நளனின் கட்டளையால் (சென்று அவனைக் கண்டு) ஈதென்று இயம்புதலும் - தாம் வந்த காரணத்தைச் சொன்னதும், பூவாளிபாய மெலிந்ததோள் வேந்தன் - மன்மதன் மலரம்புகள் பாய்தலால் வாடியதோளை உடைய நளன், விரைந்து மாவில் பொலிந்ததேர் பூட்டு என்றான் - வேகமாகக் குதிரைகள் பூட்டிய தேரை ஆயத்தம் செய்க என ஆணையிட்டான்.

பொழிப்புரை:

வீமனின் தூதர்கள் தமயந்தியின் சுயம்வரச் செய்தியைச் சொன்னவுடன் தமயந்தியின் காதலால் மெலிந்த நளன் உடனே தேரைப் பூட்டுக எனப் பாகர்க்குக் கட்டளை இட்டான். 66

தேரை விரைந்து செலுத்து

74. கெட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை ஏர்அடித்த - கட்டி
கரையத்தேன் ஊறும் கடல்நாடன் ஊர்க்கு
விரையத்தேர் ஊர்என்றான் வேந்து.

பதவுரை:

வேந்து - நளமன்னன், கெட்ட சிறுமருங்குல் - இளைத்த இடையை உடைய, கீழ்மகளிர் - உழத்தியர்கள், நீள்வரம்பில் இட்ட பசுங்குவளை - வயல் வரப்பில் போட்ட குவளை மலர்களிலிருந்து, தேன் ஊறும் - கசிகின்ற தேனால், ஏர் அடித்த கட்டி கரைய - ஏரால் உழப்பட்ட மண்கட்டிகள் கரைந்து போகும் வளம் உடைய, கடல் நாடன் ஊர்க்கு - நெய்தல் நிலத் தலைவன் வீமன் நகர்க்கு, விரையத் தேர் ஊர் என்றான் - விரை வாகத் தேரைச் செலுத்து என்றான்.

பொழிப்புரை:

உழத்தியர்கள் எடுத்துப் போட்ட குவளை மலரிலிருந்து ஒழுகும் தேனால் மண்கட்டிகள் கரையும் வள நாட்டை உடைய வீமன் நகர்க்குத் தேரை விரைவாகச் செலுத்து என்றான் நளன். 67

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நளன் வீமன் நாடு சேரல்

75. சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தன்நாடு பின்னாக்
கடல்தானை முன்னாகக் கண்டான் - அடற்கமைந்த
வில்லியரும் பொன்தாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர்.

பதவுரை:

செந்நெல் சடை பொன்விளைக்கும் - சடை சடையாக விளைந்துள்ள செந்நெல் பொன்மணிகள் போல் இருக்கும், தன்நாடு பின்னாக் - வயல்நிறைந்த தன் நாடு பின்னே போக, கடல்தாளை முன்னாக - கடல்போலும் படை முன்னே செல்ல, அடற்கு அமைந்த வில்லியரும் -போரிடும் ஆற்றலுடைய விற்படையினரும், பொன்தாம வீமன் திருமகள் ஆம் - அழகு ஒளிரும் பூமாலை அணிந்த திருமகள் ஆகிய, நல்உயிரும் வாழும் - தமயந்தி வாழும், நகர் கண்டான் - வீமன் தலைநகரைப் பார்த்தான்.

பொழிப்புரை:

பொன்மணிபோல் விளைந்த செந்நெல் வயல்கள் பின்னே போக, பெரும்படை முன்னே போக, விற்படையினரும் நளனும் திருமகளாம் தமயந்தி வாழும் நகரைக் கண்டனர். *68*

நாரதர் தேவலோகம் அடைதல்

76. நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவன் - உற்(று) அடைந்தான்
தேன்நாடும் தெய்வத் தருவும் திருமணியும்
வான்நாடும் காத்தான் மருங்கு.

பதவுரை:

தேன்நாடும் தெய்வத் தருவும் - வண்டுகள் நாடிச்செல்லும் சிறந்த கற்பகமரங்களையும், திருமணியும் - சிந்தாமணியையும், வான் நாடும் - வான் உலகத்தையும், காத்தான் மருங்கு - காக்கும் ஆற்றலுடைய இந்திரனிடத்து, நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும் - சிவபெருமானின் நெற்றிக்கண் உமிழும் நெருப்பையே குளிர்விக்கும், கொற்றத் தனியாழ்க் குல முனிவன் - இசையில் வெல்லும் ஒப்பற்ற மகதி எனும் யாழைஉடைய நாரத முனிவன், உற்று அடைந்தான் - சென்று சேர்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

பல்வகைப் பெருமைகளும் உடைய வானகத்தை ஆளும் இந்திரனிடத்து மகதி எனும் ஒப்பற்ற யாழை உடைய நாரத முனிவன் சென்று சேர்ந்தான். *69.*

தேவேந்திரனும் நாரதரும்

77. வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரும் இலரால்என்(று) ஐயுற்று - நாரதனார்
நன்முகமே நோக்கினான் நாகம் சிற(கு)அரிந்த
மின்முகவேல் கையான் விரைந்து.

பதவுரை:

நாகம் சிறகுஅரிந்த - மலைகளின் சிறகுகளை வெட்டி வீழ்த்திய, மின்முகவேல் கையான் - வச்சிராயுதம் எனும் கருவியைத் தாங்கிய இந்திரன், வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார் - போர் வீரர்களோ படைவேந்தர்களோ இந்திரலோகம் வருபவர்கள், ஆரும் இலரால் என்று ஐயுற்று - யாரும் இல்லையே என அய்யம் அடைந்து, விரைந்து நாரதனார் நன்முகமே நோக்கினான் - விரைவாக நாரதர் முகத்தை நோக்கினான்.

பொழிப்புரை:

மலைகளின் சிறகுகளை அரிந்த இந்திரன் இந்திரலோகத்திற்கு வீரரோ மன்னரோ வரமாட்டார்களே என ஐயுற்று நாரதரே வருவதைக் கண்ணுற்றான். *70*

சுயம்வரம்பற்றி நாரதர் கூறல்

78. வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து - மாமன்னர்
போயினார் என்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன்.

பதவுரை:

பொய்யாத வாயினான் - பொய்யே உரைக்காதவரும், மாதவத்தோர் மன் - முனிவர்களுக்குத் தலைவரும் ஆன நாரதர், புரந்தரற்கு - இந்திரனிடம், வீமன் மடந்தை மணத்தின் - தமயந்தியின் மணவிழாவுக்கு, விரை தொடுத்த தாமம் புனைவான் சயம் வரத்து - மிகுந்த மணத்தோடு கட்டப்பட்ட மலர்மாலையைச் சுயம்வரத்தில் அணிவதற்காக, மாமன்னர் போயினார் என்றான் - அரசர்கள் அனைவரும் போய்விட்டார்கள் என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

நாரத முனிவர் இந்திரனிடம் 'தமயந்தியின் சுயம்வரத்தில் அவள் சூட்டும் மலர்மாலையை அணிய மன்னர்கள் அணி திரண்டனர்' என்றார். 71

தமயந்தியின் அழகு

79. அழகு சுமந்(து) இளைத்த ஆகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தல் பாவை - மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம் மற்(று)அவளே
காமன் திருவுக்கோர் காப்பு.

பதவுரை:

அழகு சுமந்து இளைத்த ஆகத்தாள் - தமயந்தி அழகையே சுமப்பதால் இளைத்த உடலினை உடையாள், வண்டு பழகு கருங் கூந்தல் பாவை - வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய பாவை போன்றவள், மழகளிற்று வீமன் குலத்துக்கோர் மெய்த் தீபம் - ஆண்யானைகளை உடைய வீமன் குடும்பத்தின் குலவிளக்கு, மற்று காமன் திருவுக்கோர் காப்பு அவள் - மேலும் அவள் மன் மதனால் உண்டாகும் காதல் செல்வத்திற்கும் காப்பும் ஆவாள்.

பொழிப்புரை:

தமயந்தி அழகிய உடலினள்; வண்டுகள் மொய்க்கும் கூந்தலாள்; வீமன் குடியின் ஒளிவிளக்கு, காமனின் காதல் செல்வத்திற்குக் காப்பும் அவளே ஆவாள். 72

தேவர்களும் சென்றனர்

80. மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்(து) எழுந்தார் - சால்புடைய
விண்நாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்நாடு நோக்கி மகிழ்ந்து.

பதவுரை:

சால்புடைய விண்ணாடு நீங்கி - பெருமை பொருந்திய வானுலகத்தை விட்டு, மண்நாடு மகிழ்ந்து நோக்கி - நிலவுலகத் தை மகிழ்ச்சியோடு பார்த்து, விதர்ப்பன் திரு நகர்க்கு - மண்ணுல கில் சிறப்புடன் விளங்கும் வீமன் தலைநகர்க்கு, மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் - பெரிய மலைகளின் சிறகை வச்சிராயுதத்தால் வெட்டிய இந்திரனும், வானவரும் - பிற தேவர்களும், கோல்வளை தன் மாலை குறித்து - தமயந்தியிடம் சுயம்வர மாலையைப் பெறுவதற்கு, எழுந்தார் - புறப்பட்டார்கள்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வானகம் விட்டு மண்ணகத்தில் உள்ள வீமன் நகருக்கு இந்திரனும் ஏனைய தேவர்களும் தமயந்தியின் சுயம்வர மாலையை அடையப் புறப்பட்டனர். 73

நளனைத் தேவர்கள் காணல்

81. பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபால் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான் - முந்தி
வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானின் தேவர் பெரிது.

பதவுரை:

பைந்தெரியல் வேல்வேந்தன் - பசிய மாலையணிந்த நளன், பாவைபால் போயினதன் சிந்தை கெடுத்து - தமயந்தியிடத்துப் பறிகொடுத்த தன் மனத்தை விட்டுவிட்டு, அதனைத் தேடுவான் முந்தி வருவான் போல் - அதனைத் தேடிக்கொண்டு முன்பே வருவதுபோல, தேர்மேல் வருவானை - தேர்மேல் வருவதை, பெருவானின் தேவர் பெரிது கண்டார் - வானகத் தேவர்கள் இடையில் கண்டார்கள்.

பொழிப்புரை:

தமயந்தியிடத்துப் பறிகொடுத்த தன் மனதைத் தேடிச் செல்வதுபோல, நளன் தேர் மேல் வருவதை வானவர் இடையில் கண்டனர். 74

நளனே தூதுவன் ஆதல்

82. காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
ஏவல் தொழிலுக்(கு) இசைஎன்றான் - ஏவற்கு
மன்னவனும் நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென ஓரா(து) இசைந்து.

பதவுரை:

விண்ணவர்கோன் - இந்திரன், காவல் குடை வேந்தைக் கண்ணுற்று - (இடைவழியில்) நளவேந்தனைப் பார்த்து, ஏவல் தொழிலுக்கு - என் ஏவலுக்கு, இசைகஎன்றான் - ஒப்புக்கொள் என்றான், மனத்தினான் மற்றுஅதனை இன்னதென ஓராது- நளனும் நெஞ்சத்தால் இந்திரனின் வேண்டுகோளைச் சரியாக ஆராயாமல், ஏவற்கு இசைந்து மன்னவனும் நேர்ந்தான் - அவன் கட்டளைக்கு உடன்பட்டான்.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

இந்திரன் நளனைக் கண்டு தன் ஏவலைச் செய்க' என வேண்டினான். நளனும் அவ்வேண்டுகோளை ஆராயாமல் ஏற்றுக் கொண்டான். 75

நளன் வெல்லல்

83. செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன் - மங்கைபால்
தூதாக என்றான்அத் தோகையைத்தன் ஆகத்தால்
கோதாக வென்றான்அக் கோ.

பதவுரை:

செங்கண் மதயானைத் தேர்வேந்தே - மதயானைப் படையை உடைய நளனே, தேமாலை எங்களிலே சூட்ட - சுயம்வர மாலை நாங்கள் அணிய, இயல்வீமன் மங்கைபால் - வீமன் மகளிடத்து, தூதாக என்றான் - தூது செல்க என்றான் இந்திரன், அக்கோ (இதனைக் கேட்ட) நளமன்னன், அத்தோகையை - தமயந்தியை, தன் ஆகத்தால் - தன் மனத்தால், கோதாக வென்றான் - வெறும் சக்கையாக நினைத்து வென்றான்.

பொழிப்புரை:

வீமன் திருமகளைச் சுயம்வரத்தில் மாலை சூடவைக்கத் தூதாகச் செல்க என நளனிடம் இந்திரன் உரைத்தான். நளனும் தன் மனத்தில் அவளைச் சக்கையாக நினைத்து வென்றான். 76

நளன் மனநிலை

84. தேவர் பணிதலைமேல் செல்லும் திரிந்(து)ஒருகால்
மேவும்இளங் கன்னிபால் மீண்(டு)ஏகும் - பாவில்
குழல்போல நின்(று)உழலும் கொள்கைத்தே பூவின்
நிழல்போலும் தண்குடையான் நெஞ்சு.

பதவுரை:

பூவின் நிழல்போலும் தண்குடையான் நெஞ்சு - பூக்களின் நிழல்போல் குளிர்ந்த குடையை உடைய நளனின் நெஞ்சம், தேவர் பணிதலைமேல் செல்லும் - வானவர் இட்ட பணியைச் செய்ய நினைக்கும், திரிந்து ஒருகால் மேவும் - மறுபடியும் திரும்ப நினைக்கும், இளங்கன்னிபால் மீண்டுஏகும் - தமயந்திடமே மீளச் செல்லும், பாவில் குழல்போல் நின்று உழலும் கொள்கைத்தே - நெசவு செய்பவன் பாவுகுழல் சென்று சென்று திரும்புதல் போல அவன் நெஞ்சமும் வருந்தியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

குளிர்ந்த குடையை உடைய நளனின் நெஞ்சம் வானவர் கட்டளையை நிறைவேற்றச் செல்லும்; சென்றது மீண்டும் அலையும்; தமயந்தியிடத்தே மறுபடியும் போகும். நெசவாளியின் பாவுகுழல் சென்று சென்று திரும்புதல்போல அவன் நெஞ்சமும் திரிந்து வருந்தும். 77

காவலை எவ்வாறு கடப்பேன்?

85. ஆவ(து) உரைத்தாய் அதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேஅத் திருநகரில் - காவல்
கடக்கும்ஆ(று) என்என்றான் காமநீர் ஆழி
அடக்கும் ஆ(று) உள்ளத் தவன்.

பதவுரை:

காமநீர் ஆழி கடக்கும் ஆறு உள்ளத் தவன் - காமம் ஆகிய கடலைக் கடக்கும் வழி தெரிந்த நளன், தேவர்கோனே - தேவர்களின் தலைவனே, ஆவது உரைத்தாய் - உனக்கு (நான் செய்ய வேண்டியதை) சொன்னாய், அதுவே தலைநின்றேன் - அதனை முடிக்க ஆயத்தம் ஆனேன், அத்திருநகரில் - வீமன் தலைநகரில், காவல் கடக்கும்ஆறு என்என்றான் - இருக்கும் காவலைக் கடந்து எங்ஙனம் செல்வேன் என்றான்.

பொழிப்புரை:

காமம் ஆகிய கடலைக் கடக்கும் வழி தெரிந்த நளன் இந்திரனிடம்,' உனக்குச் செய்யவேண்டியதைச் செய்யத் துணிந்தேன்; வீமன் நகரக் காவலைக் கடப்பது எங்ஙனம்?' என்றான். 78

இந்திரன் பதில்

86. வார்வெஞ் சிலைஒழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிற(கு)அறுத்த பொன்தோளான் - யாரும்உனைக்
காணார்போய் மற்(று)அவளைக் காண்என்றான் கார்வண்டின்
பாண்நாறும் தாரானைப் பார்த்து.

பதவுரை:

வார்வெஞ் சிலைஒழிய - மைந்நாகம் எனும் மலையை மட்டும் நீக்கி, வச்சிரத்தான் மால்வரையைப் போர்வெஞ் சிறகுஅறுத்த - தன் வச்சிரப் படையால் போரிட்டு மலைகளின் சிறகை அறுத்த, பொன் தோளான் - அழகிய தோள்களை உடைய இந்திரன், கார்வண்டின் பாண்நாறும் - கருவண்டுகள் முரலும், தாரானைப் பார்த்து - மாலை

அணிந்த நளனைப் பார்த்து, உனையாரும் காணார் - உன்னை யாரும் பார்க்க மாட்டார்கள், போய் மற்றுஅவளைக் காண் என்றான் - போய் அவளைக் கண்டு வா' என்றான்.

பொழிப்புரை:

மலைகளின் சிறகு அரிந்த இந்திரன், மலர்மாலை அணிந்த நளனிடம், 'உன்னை யாரும் காண முடியாது. தமயந்தியைக் கண்டு வா' என்றான். 79

குண்டினபுரம்

87. இசைமுகந்த வாயும் இயல்தெரிந்த நாவும்
திசைமுகந்தால் அன்ன தெருவும் - வசையிறந்த
பொன்நாடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்நாடர் கோமான் நகர்.

பதவுரை:

போர் விதர்ப்ப நன்நாடர் கோமான் நகர் - போராற்றல் உடைய விதர்ப்ப நாடன் வீமனின் தலைநகர், இசைமுகந்த வாயும் - புகழ் பேசும் வாயில்களையும், இயல்தெரிந்த நாவும் - நல்ல பேச்சைப் பேசும் நாவுடைய மக்களையும், திசைமுகந்தால் அன்ன தெருவும் - திசைகளை ஒத்த பரந்த தெருக்களையும், (பெற்று) வசை இறந்த பொன்னாடு - குற்றங்குறையற்ற தேவர் உலகம், போந்திருந்தால் போன்றதே - நிலவுலகம் இறங்கி வந்தது போல் இருந்ததை நளன் கண்டான்.

பொழிப்புரை:

வீமனின் தலைநகர் புகழ்பேசும் வாயில்களையும் நல்ல பேச்சைப் பேசும் மக்களையும் திசைகளைப் போல அகன்ற, தெருக்களையும் பெற்று, தேவர் உலகமே பூமிக்கு வந்ததுபோலக் காட்சி அளித்ததை நளன் கண்டான். 80

கன்னிமாடம்

88. தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே - ஆங்கு
மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்
பொதுநோக்(கு) எதிர்நோக்கும் போது.

பதவுரை:

ஆங்கு - தமயந்தியின் கன்னிமாடத்தில், மதுநோக்கும் தாரானும் - வண்டுகள் நிறைந்த மாலை அணிந்த நளனும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாள்நுதலும் - ஒளிமிகுந்த நெற்றியை உடையாளும், பொது நோக்கு எதிர்நோக்கும்போது - ஒருவருக் கொருவர் இயல்பான பார்வையுடன் நோக்கும்போது, தேங்குவளை தன்னிலே செந்தாமரை மலர - தமயந்தியின் கண்களாகிய குவளை மலர்களிலே நளனின் கண்களாகிய தாமரை மலர்கள் பூக்கவும், தாமரைக்கே பூத்ததே பூங்குவளை - நளன் கண்களாகிய தாமரை மலரில் தமயந்தியின் கண்களாம் குவளை மலர்கள் பூத்தன.

பொழிப்புரை:

நளனும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் பொதுநோக்கால் பார்த்துக் கொண்டனர். நளனின் தாமரை போன்ற கண்களும் தமயந்தியின் குவளை மலர்போன்ற கண்களும் பூத்தன. 81

கதவு திறந்தது.

89. நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டும் அளவில் திறந்ததே - பூண்டதோர்
அற்பின்தாழ் கூந்தலாள் வேட்கை அகத்(து)அடக்கிக்
கற்பின்தாழ் வீழ்த்த கதவு.

பதவுரை:

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று தீண்டும் அளவில் - நளனுடைய தாமரைக் கண்களைத் தமயந்தியின் நெய்தல்மலர்கண்கள் தீண்டிய நேரத்தில், தாழ் கூந்தலாள் வேட்கை அகத்து அடக்கி - நீண்ட கூந்தலை உடைய அவள் தன் ஆசையை உள்ளேயே அடக்கி, கற்பின் தாழ் வீழ்த்த கதவு - கற்பென்னும் தாழிடப்பட்ட கதவு, பூண்டது ஓர் அன்பின் திறந்தது - முன்பே அவள் கொண்டிருந்த பேரன்பால் திறந்து கொண்டது.

பொழிப்புரை:

நளன் கண்களும் தமயந்தி கண்களும் ஒன்றையொன்று சந்தித்த நேரத்தில், தமயந்தி தன் ஆசையை உள்ளேயே அடக்கி கற்பெனும் தாழிட்டு வைத்த நிறையெனும் அறையின் கதவு அன்பின் வேகத்தால் திறந்து கொண்டது. 82

தமயந்தியும் நளனும்

90. உய்ஞ்சு கரையேற ஒட்டுங்கொல் ஒண்தொடியாள்
நெஞ்சு தடவும் நெடுங்கண்கள் - விஞ்சவே
நீண்டதோ அங்ஙனே இங்ஙனே நீள்மலராள்
ஆண்டதோள் மன்ன அழகு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

ஒண்தொடியாள் நெடுங்கண்கள் - தமயந்தியின் நீண்ட கண்கள், நெஞ்சு தடவும் - நளனின் மார்பைத் தடவி, அங்ஙனே விஞ்சவே நீண்டதோ - அம்மார்பில் மிகுதியாக நீண்டு விட்டவோ, நீள் மலராள் ஆண்டதோள் மன்னன் அழகு - திருமகள் குடியிருக்கும் தோள்களைப் பெற்ற நளனது அழகாகிய கடல், இங்ஙனே உய்ஞ்சு கரையேற ஒட்டுங்கொல் - தமயந்தியைத் தப்பிக் கரை சேர்க்குமோ?

பொழிப்புரை:

தமயந்தியின் கண்கள் நளன் மார்பழகில் திளைத்தது. தோளழகு நிறைந்த நளனின் அழகுகடலில் தமயந்தி கரை சேருவாளோ? *83*

தமயந்தியின் ஆசை

91. மன்ஆகத்(து) உள்அழுந்தி வார்அணிந்த மென்முலையும்
பொன்நாணும் புக்(கு)ஒளிப்பப் புல்லுவனென்(று) - உன்னா
எடுத்தபே ரன்பை இடையே புகுந்து
தடுத்ததே நாணாம் தறி.

பதவுரை:

வார்அணிந்த மென்முலையும் - கச்சால் கட்டப்பட்ட இளம் முலைகளும், பொன் நாணும் - தங்கச் சங்கிலியும், மன்ஆகத்து உள் அழுந்தி புக்கு ஒளிப்ப - மன்னவனின் மார்பில் அழுந்திப் புதைய, புல்லுவன் என்று உன்னா - அவனை ஆரத் தழுவுவேன் என்று நினைத்த, எடுத்த பேரன்பை - அளவு கடந்த ஆசையை, இடையே புகுந்து நாணாம் தறி தடுத்ததே - இடையில் நாணம் எனும் கட்டுத்தறி நுழைந்து தடுத்துவிட்டது என்றாள் தமயந்தி.

பொழிப்புரை:

'நளனது மார்பில் என் இள முலைகளும் கழுத்துச் சங்கிலியும் ஆழப் பதிய அவனைத் தழுவ ஆசைப்பட்டேன்; ஆனால் வெட்கமென்னும் கட்டுத்தறி இடைபுகுந்து அவ்வாசையைத் தடுத்து விட்டது' என்றாள் தமயந்தி. *84*

நீ யார்?

92. காவல் கடந்(து)எங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக்(கு) இறைவனோ - தேவனோ
உள்ளவா சொல்என்றாள் ஊசற் குழைமீது
வெள்ளவாள் நீர்சோர விட்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

ஊசற் குழைமீது - தன் காதுகளில் ஊசலாடும் குழை எனும் அணி மீது, வாள்வெள்ள நீர்சோர விட்டு - கண்களிலிருந்து வெள்ளம்போல் பெருகும் கண்ணீரை ஒழுகவிட்டு, காவல் கடந்து எங்கள் கன்னிமாடம் புகுந்தாய் - கட்டுக்கடங்காக் காவலைக் கடந்து கன்னிமாடத்தில் புகுந்தவரே, யாவனோ - நீ யார்? விஞ்சைக்கு இறைவனோ - வித்தைகளைக் கற்றவனோ? தேவனோ - தேவர் உலகைச் சேர்ந்தவனோ? உள்ளவாறு சொல் என்றாள் - உண்மையைக் கூறு' என்று நளனிடம் கேட்டாள் தமயந்தி.

பொழிப்புரை:

தன் கண்ணில் நீர் வழிய 'நீ காவலைக் கடந்து கன்னிமாடம் வந்துள்ளாய். நீ யார்? வித்தை கற்றவனா? தேவனா? உண்மையைக் கூறு' என்றாள் தமயந்தி. 85

நளன் விடை கூறல்

93. தீராத காமத்(து) அழலைத்தன் செம்மையெனும்
நீரால் அவித்துக் கொடுநின்று - வாராத
பொன்நாடர் ஏவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்நாடு சொன்னான் நளன்.

பதவுரை:

நளன் -நளமன்னன், தீராத காமத்து அழலை - தான் தமயந்தி மீது கொண்ட தீராத அன்பை, செம்மை எனும் நீரால் - தன் செம்மைக் குணம் எனும் நன்னீரை, அவித்துக் கொடு நின்று - ஊற்றி மறைத்து அவள் எதிரே, வாராத பொன்நாடர் ஏவலுடன் - மண்ணுலகம் வராத பெருமைஉடைய தேவலோகத்து இந்திரன் கட்டளையால், போந்தவாறு சொல்லி - வந்த விதத்தை முறையாகச் சொல்லி, தன்நாடு சொன்னான் - தான் நிடதநாட்டு அரசன் எனவும் சொன்னான்.

பொழிப்புரை:

நளன் தமயந்திமீது கொண்ட காதல் நெருப்பை நற்குணம் எனும் நீரால் மறைத்து, 'இந்திரலோகம் ஆளும் இந்திரன் ஏவலால் வந்தேன். என்நாடு நிடத நாடு' என்றான். 86

இந்திரனுக்கு மாலை சூட்டு

94. என்னுரையை யா(து)என்(று) இகழா(து) இமையவர்வாழ்
பொன்னுலகம் காக்கும் புரவலனை - மென்மாலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூட்டுவாய் என்றான் தொடையில்தேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லாம் உரைத்து.

பதவுரை:

தொடையில்தேன் தும்பிக்கே ஊட்டுவான் - தன் மாலையில் ஒழுகும் தேனை வண்டுகளுக்குக் கொடுக்கும் நளவேந்தன், எல்லாம் உரைத்து - தான் வந்த நோக்கத்தையெல்லாம் சொல்லி, என்னுரையை யாது என்று இகழாது - நான் சொல்வதை என்னவோ என்று புறக்கணித்து விடாமல், இமையவர் வாழ் - தேவர்கள் வாழும், பொன்னுலகம் காக்கும் புரவலனை - இந்திரலோகத்தை ஆளும் இந்திரனுக்கு, மென்மாலை சூட்டுவாய் என்றான் - சுயம்வர மாலையைச் சூட்டுக' என்றான்.

பொழிப்புரை:

நளன் தமயந்தியிடம் தான் வந்த விவரத்தையெல்லாம் எடுத்துக் கூறிச் சுயம்வரத்தில் இந்திரனுக்கே மாலை சூட்டுக' என்றான். 87

'உனக்காகவே சுயம்வரம்'

95. இயமரம்நின்(று) ஆர்ப்ப இனவளைநின்(று) ஏங்க
வயமருதோள் மன்னா வகுத்த - சுயம்வரம்தான்
நின்பொருட்டால் என்று நினைகென்றாள் நீள்குடையான்
தன்பொருட்டால் நைவாள் தளர்ந்து.

பதவுரை:

நீள்குடையான் தன்பொருட்டால் - நல்ல ஆட்சி செய்யும் நளனின் காரணமாகவே, தளர்ந்து நைவாள் - மனம் தளர்ந்து வருந்துபவளாகிய தமயந்தி, வயமருதோள் மன்னா - வெற்றிபொருந்திய தோள்களை உடைய மன்னனே, இயமரம் நின்று ஆர்ப்ப - மரத்தால் செய்யப்பட்ட ஊதுகருவிகள் ஒரு பக்கம் இசைக்கவும், இனவளை நின்று ஏங்க - சங்குகள் இன்னொரு பக்கம் முழங்கவும், சுயம்வரம்தான் நின் பொருட்டால் என்று நினைக என்றாள் - (ஏற்பாடு செய்யப் பட்ட என்) சுயம்வரம் உனக்காகத்தான் என்றாள்.

பொழிப்புரை:

நளனை நினைத்தே மனம் தளர்ந்த தமயந்தி, மன்னா, என் நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட சுயம்வரம் உனக்காகத்தான் என்பதை உணர்க' என்றாள். 88

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாரும் வருக!

96. போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ(டு) அவையகத்தே - சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களும் நீயும்
எழுந்தருள்க என்றாள் எடுத்து.

பதவுரை:

போதரிக்கண் மாதராள் - தாமரை மலர்போன்ற கண்களை உடைய மாதரசியாகிய தமயந்தி, சோதி செழுந்தரள வெண்குடையாய் - ஒளி வீசும் குளிர்ந்த குடையை உடைய நளனே, பொன்மாலை சூட்டத்தான் - சுயம்வர மண்டபத்தில் (நான் விரும்பியோர்க்கு) மாலையைச் சூட்ட, ஆதரித்தார் தம்மோடு அவையகத்தே - அவைக்குவர விரும்பியவர்கள் தம்மோடு, தேவர்களும் நீயும் எழுந்தருள்க என்றாள் எடுத்து - தேவர்களுடனே நீயும் வருக என்று விவரமாகச் சொன்னாள்.

பொழிப்புரை:

தமயந்தி நளவேந்தனிடம், 'நான் விரும்பியோர்க்கு மாலை சூட்ட சுயம்வர மண்டபத்துக்குத் தேவர்களுடன் நீயும் வருக' என்று கூறினாள். *89*

நளன் இந்திரனிடம் வரல்

97. வானவர்கோன் ஏவல் வழிச்சென்று வாள்நுதலைத்
தான்அணுகி மீண்டபடி சாற்றவே - தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தன்தொழுதான்
கண்டார் உவப்பக் கலந்து.

பதவுரை:

தேன்முரலும் வண்டார் நளன் - தேன் எடுக்கும் வண்டுகள் நிறைந்த மாலை அணிந்த நளன், வானவர் கோன் ஏவல் வழிச் சென்று - இந்திரன் ஏவலால் தமயந்தி நகர்க்குப் போய், வாள்நுதலைதான் அணுகி - அழகிய நெற்றியை உடைய அவளைச் சார்ந்து, மீண்டபடி சாற்றவே - கண்டு பேசிய விவரத்தைக் கூறுவதற்கு, போந்து - திரும்பி வந்து, கண்டார் உவப்பக் கலந்து - தன்னைக் கண்ட தேவர்கள் மகிழும்படி பேசி, வச்சிராயுதன் தொழுதான் - வச்சிரப் படை ஏந்திய இந்திரனை வணங்கினான்.

பொழிப்புரை:

நளன் தயயந்தியைக் கண்டு பேசிய விவரத்தை மீண்டும் திரும்பி வ.ந்து தேவர்களைப் பார்த்து மகிழ்ந்து உரையாடி இந்திரனைக் கண்டு தொழுதான். *90*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேசியதை உரைத்தல்

98. விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த - பெண்அணங்கின்
வன்மொழியும் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியும் சென்(று)உரைத்தான் மீண்டு.

பதவுரை:

விண்ணவர்தம் ஏவலுடன் - தேவர் குலத் தலைவன் இந்திரன் ஏவலால், வீமன் திருமகள் பால் - வீமன் மகள் தமயந்தியிடத்து, நண்ணுபுகழ் நளனும் - பெரும்புகழ் மிக்க நளவேந்தன், தான் மொழிந்த மென்மொழியும் - தேவர்களுக்காகத் தான் பேசிய மென்மையான பேச்சையும், பெண் அணங்கின் நன்கு உரைத்த வன்மொழியும் - (அதற்கு மறுமொழியாக) தமயந்தி உரைத்த கடுமையான சொற்களையும், தேவர் மனமகிழ - தேவர்கள் நெஞ்சு உவக்கும்படி பக்குவமாக, மீண்டு சென்று உரைத்தான் - திரும்பி வந்து கூறினான்.

பொழிப்புரை:

இந்திரன் ஏவலில் சென்ற நளன் தமயந்தியைக் கண்டு தான் பேசிய இனிய உரையையும் அதற்கு அவள் கூறிய மறுமொழியை யும் தேவர்கள் நெஞ்சம் மகிழ நளன் விளக்கமாக உரைத்தான். 91

நளனுக்கு வரம் அளித்தல்

99. அங்கி அமுதம்நீர் அம்பூ அணிஆடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே - சங்கையறப்
பெற்றாய் எனவருணன் ஆகண் டலன்தருமன்
மற்றோனும் ஈந்தார் வரம்.

பதவுரை:

வருணன் ஆகண்டலன் தருமன் மற்றோனும் - வருணன், இந்திரன், கூற்றுவன், தீக்கடவுள் ஆகிய நால்வரும், அங்கி அமுதம் நீர் அம்பூ அணி ஆடை - நெருப்பு, சோறு, நீர், மலர், நகை, ஆடை ஆகியவற்றை, எங்கு நீ வேண்டினை - எங்குப் பெறவேண்டும் என்று நீ விரும்பினாலும், மற்று அவ்விடத்தே - அவ்விடத்தேயே, சங்கையப் பெற்றாய் என வரம் ஈந்தார் - ஐயம் இன்றிப் பெறுவாய் என்று வரம் கொடுத்தனர்.

பொழிப்புரை:

வருணன், இந்திரன், கூற்றுவன், தீக்கடவுள் ஆகிய நால்வரும் நளனிடம், நெருப்பு, சோறு, நீர், மலர், நகை, ஆடை ஆகியவற்றை நீ விரும்பும் இடத்திலேயே பெறவரம் அளித்தோம்' என்றனர். 92

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுயம்வர மண்டபம் சேர்தல்

100. அங்(கு)அவர்கள் வேண்டும் வரம்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடும் தார்வேந்தன் சார்ந்தனன்மேல் - மங்கை
வயமருவு கின்ற மணக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு.

பதவுரை:

அங்கு அவர்கள் வேண்டும் வரம் கொடுக்கப் பெற்று - தேவர்கள் கொடுத்த வரத்தைப் பெற்றுக் கொண்டு, தார்வேந்தன் - நளவேந்தன், மேல் அவர்கள் தங்களொடும் - தேவர்களுடன், மங்கை வயமரு வுகின்ற - தமயந்திபால் ஆசை கொண்டு, மணக் காவலர்க்கு - மணத்திற்கு வந்துள்ள அரசர்கள், சயமரந்தான் கண்டதோர் சார்பு - சுயம்வரம் நடக்கவுள்ள இடத்தைச் சார, சார்ந்தனன் - இவனும் போய்ச் சேர்ந்தான்.

பொழிப்புரை:

நளன், தேவர்கள் தந்த வரத்தைப் பெற்றுக்கொண்டு தேவர்களுடன் சுயம்வரத்திற்கு வந்துள்ள அரசர்கள் உள்ள இடத்தை அடைந்தான். *93*

தமயந்தி வருந்தல்

101. தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்நெஞ்சால் - யாதும்
அயிர்த்தாள் உயிர்த்தாள் அணிவதனம் எல்லாம்
வியர்த்தாள் உரைமறந்தாள் வீழ்ந்து.

பதவுரை:

தூது வந்த காதலனை - தன்னிடம் தூதாக வந்த நளமன்னனை, சொல்லிச் செலவிடுத்த மாது - தன் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லிப் போகவிட்ட தமயந்தி, உவந்து பின் போன வன்நெஞ்சால் - நளனிடத்துக் காதல் கொண்டு விரும்பிச் சென்ற தன் கொடும் மனத்தால், யாதும் அயிர்த்தாள் - அவன் குணம் செயல்மீது ஐயம் கொண்டாள், உயிர்த்தாள் - பெருமூச்சு விட்டாள், அணிவதனம் எல்லாம் வியர்த்தாள் - அழகிய அவள் முக மெல்லம் வியர்த்தது, வீழ்ந்து உரை மறந்தாள் - கீழே சாய்ந்து பேச்சற்றவள் ஆனாள்.

பொழிப்புரை:

தூதாக வந்த நளன் அவளை விட்டு நீங்கியபின், தன் நெஞ்சமே அவனிடம் பறிபோனதை உணர்ந்தாள் தமயந்தி;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் குணம் செயல்களில் ஐயப்பட்டாள்; பெருமூச்சு விட்டாள்; அழகிய முகம் வியர்த்தது; பேச்சற்று மயங்கித் தரையில் சாய்ந்தாள். 94

தமயந்தி பறி கொடுத்தவை

102. உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெ்ள்ளம்போய் வேகின்ற மென்தளிர்போல் - பிள்ளைமீன்
புள்அரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்அரிக்கச் சோர்ந்தாள் உயிர்.

பதவுரை:

பிள்ளைமீன் புள் அரிக்கும் நாடன் திருமடந்தை - மீன்குஞ்சுகளைப் பறவைகள் கவரும் வளநாடனின் திருமகளாகிய தமயந்தி, பூவாளி உள்அரிக்க - மன்மதனின் மலர் அம்புகளால் நெஞ்சு துளைக்கப்பட்டு, உள்ளம்போய் நாண்போய் உரைபோய் - தன் மனம் தளர்ந்து வெட்கத்தை விட்டுப் பேச்சையும் மறந்து, வரிநெடுங்கண் வெள்ளம்போய் - அழகிய கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமெனக்கசிய, வேகின்ற மென்தளிர்போல் உயிர் சோர்ந்தாள் - தீயில் வதங்கிய இளம் தளிர்போல உயிர் சோர்ந்தவள் ஆனாள்.

பொழிப்புரை:

வீமனின் மகளாகிய தமயந்தி காதல் வயப்பட்டுத் தன் மனத்தைப் பறிகொடுத்தாள்; வெட்கத்தைக்கை விட்டாள்; பேச்சை இழந்தாள்; கண்களிலிருந்து வெள்ளம் எனக் கண்ணீர் வடிய, தீயில் பட்ட இளம் கொடியென உயிர் வாடினாள். 95

ஆசை மட்டும் அழியாது

103. பூவின்வாய் வாளி புகுந்த வழியேஎன்
ஆவியார் போனாலும் அவ்வழியே - பாவியேன்
ஆசைபோ கா(து)என்(று) அழிந்தாள் அணியாழின்
ஓசைபோல் சொல்லாள் உயிர்த்து.

பதவுரை:

அணியாழின் ஓசைபோல் சொல்லாள் - அழகிய யாழினது இன்னோசை போன்ற சொற்களைப் பேசும் தமயந்தியானவள், பூவின்வாய் வாளி - மன்மதனின் மலர் அம்புகள், புகுந்த வழியே என் ஆவியார் போனாலும் - நுழைந்த வழியில் என் உயிரே பிரிந்தாலும், அவ்வழியே பாவியேன் ஆசைபோகாது - உயிர்போன அவ்வழியே நளன்மீது நான் கொண்ட ஆசை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகலாது, என்று உயிர்த்து அழிந்தாள் - என்று சொல்லிப் பெரு மூச்சுவிட்டு மயங்கினாள்.

பொழிப்புரை:

இன்சொற்கள் பேசும் தமயந்தி, மன்மதனின் மலரம்புகள் துளைத்த வழியில் தன் உயிரே போனாலும் தான் நளன்மீது கொண்ட காதல் மட்டும் அழியாது எனக்கூறிப் பெருமூச்சு விட்டாள்; அறிவு மயங்கினாள். 96

பொழுது போனது

104. வையம் பகல்இழப்ப வானம் ஒளிஇழப்ப
பொய்கையும் நீள்கழியும் புள்இழப்ப - பையவே
செவ்வாய அன்றில் துணைஇழப்பச் சென்(று) அடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

பதவுரை:

வையம் பகல்இழப்ப - பூமி பகற் பொழுதை இழக்கவும், வானம் ஒளிஇழப்ப - வானம் வெளிச்சத்தை நீங்கவும், பொய்கையும் நீள்கழியும் புள் இழப்ப - குளமும் உப்பங்கழிகளும் தம்மிடமிருக்கும் பறவைகளை இழக்கவும், செவ்வாய் அன்றில் துணைஇழப்ப - அன்றில் பறவைகள் தத்தம் துணையை நீங்கவும், பையவே - மெல்ல, வெவ்வாய் விரி கதிரோன் - வெப்பக் கதிர்களை உடைய சூரியன், வெற்பு சென்று அடைந்தான் - மலையிடத்துச் சென்று மறைந்தான்.

பொழிப்புரை:

பூமியும் வானமும் வெளிச்சத்தை இழக்கவும் குளமும் கழிகளும் பறவைகளை இழக்கவும் அன்றில்பறவை தன் துணையை இழக்கவும் மெல்லக் கதிரவன் மேலைத்திசையில் மலையில் மறைந்தான். 97

ஞாயிறே கூத்தன்

105. மாயிரு ஞாலத்(து) உயிர்காண வான்அரங்கில்
பாயிருள் என்னும் படாம்வாங்கிச் - சேய்நின்று
அறைந்(து)ஆ ரணம்பாட ஆடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை.

பதவுரை:

வெய்யோன் - சூரியன், மாயிரு ஞாலத்து - இவ்வுலகில் இருக்கின்ற, உயிர் காண - அனைத்து உயிர்களும் மகிழ, வான் அரங்கில் பாயிருள் என்னும் படாம் வாங்கி - வானமாகிய

Public Domain Digitization Muthulakshmi Research Academy

அரங்கத்தில் இருளென்னும் திரையை விலக்கி, சேய் நின்று - தொலைவில் இருந்து, அறைந்து ஆரணம் பாட - பாடுபவர்கள் உரத்த குரலில் மறைமொழிப் பாடல் களைப் பாட, ஆடிப்போய் - கூத்தாடிய பிறகு, குடபால் வரை மறைந்தான் - மேலைத் திசையிலுள்ள மலையில் மறைந்தான்.

பொழிப்புரை:

சூரியன், உலக உயிர்கள் மகிழ இருள்திரையை விலக்கிப் பாடுபவர்கள் மறைமொழிப் பாடல்களைப் பாடக் கூத்தாடிய பின் மேற்குத் திசை மலையில் மறைந்தான். *98*

அந்தியின் வரவு

106. மல்லிகையே வெண்சங்கா வண்(டு)ஊத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையெனும்
மென்மாலை தோள்அசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.

பதவுரை:

மல்லிகையே வெண்சங்கா வண்டு ஊத - மல்லிமலரை வெண்சங்காக நினைத்து வண்டுகள் முழங்கவும், வான் கருப்பு வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - கருப்பு வில்லை உடைய மன்மதன் மலரம்புகளால் உடலைப் பாதுகாக்கவும், முல்லையெனும் மென்மாலை தோள் அசைய - முல்லைமலர் மாலை தோள்களில் அசையவும், புன்மாலை அந்திப் பொழுது மெல்ல நடந்ததே - மாலைக் காலமாகிய அந்தியெனும் அரசு மெல்ல நடந்து வந்தது.

பொழிப்புரை:

மல்லிகையைச் சங்காக்கி வண்டுகள் ஊதவும் மன்மதன் மலரம்புகளால் உடலைப் பாதுகாத்து வரவும் முல்லைமலர் மாலை தோள்களில் அசையவும் மாலை நேரமாகிய அந்தியெனும் அரசு மெல்ல நடந்தது. *99*

அந்திக் காலம்

107. புற்கென்றார் அந்தி புனைமலர்க்கண் நீர்அரும்ப
நிற்கின்ற(து) அந்தோ நிலங்காப்பான் - முற்கொண்டு
அடைகின்ற வேந்தர்க்கும் ஆண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போல் இன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

அந்தி - அந்திநேரமானது, புற்கு என்றார் - காதலால் உடல் நிறம் மாறியவருடைய, புனைமலர்க்கண் நீர் அரும்ப - மலர்போன்ற கண்களிலிருந்து கண்ணீர் பெருக, நிலம் காப்பான் - (பிறர்) மண்ணைத் தத்தம் ஆளுகையில் கொணர, முற்கொண்டு - முன்னேறிச் சென்று, ஆண்டு அடைகின்ற வேந்தர்க்கும் - ஆங்குச் சேர்கின்ற அரசருக்கும், அஞ்சினோர்க்கும் முன்னேவருபவரைக் கண்டு அச்சமடைந்த அரசர்க்கும், இடைநின்ற காலம் போல் இன்று நிற்கின்றது - இடைப்பட்ட காலம் மன்னர்கட்குக் கலக்கம் செய்வது போல இருந்தது, அந்தோ - ஐயோ!

பொழிப்புரை:

அந்தி நேரம், காதலால் நிறம் மாறியவருடைய கண்கள் கண்ணீர் சிந்தவும் மண்ணை விரும்பியோர் தத்தம் வசப்படுத்த முன்னே செல்லும் அரசர்க்கும், அவருக்கு அஞ்சியவருக்கும் கலக்கம் தருவது போல காதலர்க்கும் தந்தது. 100

நிலவு தோன்றல்

108. பைந்தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன - வந்ததால்
மையார்வேல் கண்ணாள் வனமுலைமேல் ஆர்அழலைப்
பெய்வான் அமைந்த பிறை.

பதவுரை:

மையார்வேல் கண்ணாள் - மைதீட்டிய வேலைஒத்த கண்களை உடைய தமயந்தியின், வனமுலைமேல் - அழகிய முலைகளாகிய முற்றத்தில், ஆர்அழலைப் பெய்வான் அமைந்த பிறை - நில ஒளியாகிய நெருப்பைச் சொரிகின்ற நிலவு, பைந்தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற - அவளது உயிரை எடுக்க நிற்கின்ற, அந்தி முறுவலித்த தாமென்ன - அந்திப் பொழுது நகைத்ததுபோல, வந்தது - (வானில்) தோன்றிற்று.

பொழிப்புரை:

தமயந்தியின் மார்பகத்தில் நெருப்பைச் சொரிகின்ற நிலவு, அவளது உயிரை எடுக்க நிற்கின்ற அந்திப் பொழுது நகைத்ததுபோல, வானில் தோன்றிற்று. 101

நிலவு நெருப்பைக் கொட்டுதல்

109. கூட்டுமை போல்சிறந்த கூர்இருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள் - ஈட்டுமணிப்

Public Domain Digitization Muthulakshmi Research Academy

பூணிலா மென்முலைமேல் போதச் சொரிந்ததே
நீணிலா எனும் நெருப்பு.

பதவுரை:

கூட்டுமை போல் சிறந்த கூர் இருளை - கண்ணுக்கு இடும் மைபோல் கருமை நிறைந்த இருளை, கூன்கோட்டால் கோட்டுமன் கொண்ட குளிர்திங்கள் - வளைந்த தன் கொம்பினால் பெயர்த்து எடுத்த மண்போல் அதன் நுனியில் (களங்கமாக) ஒட்டிக் கொண்டிருக்கிற குளிர்ந்த நிலவு, ஈட்டு மணி பூண்நிலாம் மென்முலைமேல் - பல்வகை மணிக்கற்களால் ஆன நகைககள் அணிந்துள்ள தமயந்தியின் இள முலைகளின் மீது, நீள்நிலா எனும் நெருப்பு போதச் சொரிந்தது - நெடிதான தீயை வேண்டுமட்டும் சொரிந்தது.

பொழிப்புரை:

கருமையாகிய இருளைத் தன் கொம்பினால் பெயர்த்து எடுத்த மண்போல் நுனியில் ஒட்டவைத்துக் கொண்டுள்ள நிலவு தமயந்தியின் நகை அணிந்த முலைகள்மேல் தீயை வேண்டும் மட்டும் சொரிந்தது. 102

தமயந்தி வருத்தம்

110. அன்னங்காள் நீங்களும்அவ் வாதித்தன் தானும்போய்
மன்னும் படியகலா வல்இரவில் - மின்னும்
மழைத்தாரை வல்இருட்கும் வாடைக்கும் நாங்கள்
பிழைத்தால்வந் தேன்என்னும் பேர்.

பதவுரை:

அன்னங்காள் - அன்னப் பறவைகளே, நீங்களும்அவ் வாதித்தன் தானும் போய் - நீங்களும் சூரியனும் போன பின், மன்னும் படியகலா வல்இரவில் - நிலைத்திருப்பது போன்ற கடுமையான இரவில், மின்னும் மழைத்தாரை வல் இருட்கும் வாடைக்கும் - மின்னலுடன் கூடிய மழைபொழியும் இரவுக்கும் வாடைக் காற்றுக்கும், நாங்கள் பிழைத்தால் - நாங்கள் தப்பி உயிருடன் இருந்தால், பேர் வந்தேன் என்னும் - எம் பெயரும் நானும் பிழைத்தேம் என்னும்.

பொழிப்புரை:

அன்னங்களே, நீங்களும் சூரியனும் மறைந்தபின், கொடிய இரவில் பெய்யும் மழைக்கும் வாடைக் காற்றுக்கும் நாங்கள் பிழைத்திருந்தால் பார்த்துக் கொள்ளுங்கள். 103

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விண்மீன் கொப்புளம்

111. செப்புஇளம் கொங்கைமீர் திங்கள் சுடர்ப்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை - இப்பொழுதும்
மீன்பொதிந்து நின்ற விசும்(பு) என்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயால் தெரிந்து.

பதவுரை:

செப்புஇளம் கொங்கைமீர் - குங்குமச் சிமிழ் போன்று இளம் முலைகளை உடையவர்களே, திங்கள் சுடர்ப்பட்டுக் கொப்புளம் கொண்ட குளிர்வானை - நிலவாகிய வெப்பம் தாக்கியதால் கொப்புளம் பட்டுள்ள குளிர்ந்த வானத்தை, தெரிந்து இப்பொழுதும் - அறிந்து கொண்டுள்ள இவ்வேளையிலும், தேன் பொதிந்த வாயால் - தேன்போன்று இனிய சொற்கள் நிரம்பிய வாயால், மீன்பொதிந்து நின்ற - விண்மீன்கள் நிரம்பி இருக்கின்ற, விசும்பு என்பது என்கொலோ? - வானம் என்று கூறுவது யாது காரணமோ?

பொழிப்புரை:

தோழிமார்களே, நிலவெனும் வெப்பம் தாக்கியதால் வானத்தில் ஏற்பட்டுள்ள கொப்புளங்களை உங்கள் வாயால் விண்மீன்கள் என்று கூறுவதற்கு யாது காரணமோ? *104*

மன்மதன் இன்னும் இருக்கின்றான்

112. கானும் தடங்காவும் காமன் படைவீடு
வானும்தேர் வீதி மறிகடலும் - மீனக்
கொடியாடை வையமெல்லாம் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய்.

பதவுரை:

கானும் தடங்காவும் காமன் படைவீடு - காடுகளும் சோலைகளும் காமனுக்கு ஆயுதசாலைகள், வானும்தேர் வீதி - வானம் அவன் தேர்செல்லும் வீதியாகும், மறிகடலும் மீனக் கொடியாடை - அலைகளை உடைய கடல் அவன் மீன்வடிவம் பொறித்த துணிக்கொடி, வையமெல்லாம் கோதண்ட சாலை - இப்பூமி முழுவதும் அவன் வில்லாற்றலைக் காட்டும் இடமாகும், பொடியாடி கொன்றதெல்லாம் பொய் - (மன்மதனின் படைக்கருவிகள் நிலைத்திருக்கும்போது) அவனைச் சிவன் கொன்றார் என்பது பொய்யே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

காடுகளும் சோலைகளும் மன்மதனுக்குப் பாசறையாகவும் வானவெளி அவன் தேர் செல்லும் வீதியாகவும் கடல் அவன் கொடியாகவும் பூமி முழுமையும் வில்லாற்றல் காட்டும் இடமாகவும் இருக்கையில் சிவன் மன்மதனைக் கொன்றான் என்றல் பொய்யே ஆகும். 105

இரவு கொடியது

113. கொள்ளைபோ கின்ற(து) உயிர்என்னும் கோள்அரவின்
முள்எயிறோ மூரி நிலாவென்னும் - உள்ளம்
கொடிதிரா என்னும் குழையும் தழல்போல்
நெடிதிரா வாய்புலரா நின்று.

பதவுரை:

உயிர் கொள்ளை போகின்றது என்னும் - என் உயிர் கொள்ளை போகிறதே என்பாள் தமயந்தி, மூரி நிலா கோள் அரவின் முள்எயிறோ என்னும் - பிறைநிலா பாம்பின் நச்சுப் பல்லோ என்பாள், இரா உள்ளம் கொடிது என்னும் - இரவின் மனம் கொடுமை என்பாள், தழல்போல் நெடிது இரா - நெருப்புப் போல் சுடுகின்ற இருட் போதில், வாய்புலரா நின்று குழையும் - வாய்புலர்ந்து உள்ளம் சோர்ந்து புலம்பினாள்.

பொழிப்புரை:

என் உயிர் கொள்ளை போகின்றது, 'பிறைநிலா நச்சுப் பாம்பின் பல்லோ' 'இரவுப்பொழுது கொடிது' என்றெல்லாம் தமயந்தி வாய்புலர்ந்து காதல் மயக்கத்தால் புலம்பினாள். 106

இரவும் சுடுகிறது

114. வெங்கதிரோன் தன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை அனலில் கொளுந்தியோ - திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ இரா.

பதவுரை:

இரா - இரவுப் பொழுது, எரிகின்றது என்னோ - என்னைச் சுடுகிறதே என்ன காரணமோ?, வெங்கதிரோன் தன்னை விழுங்கிப் புழுங்கியோ - சூரியனை விழுங்கிய காரணத்தாலோ, கொங்கை அனலில் கொழுந்தியோ - கொங்கைகள் முற்றத்தில் எழுந்த வெப்பத்தைத் தாங்கியதாலோ, திங்கள் விரிகின்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்ணிலவால் - நிலவின் வெளிச்சத்தாலோ, வேகின்றது - என்னைச் சுடுகிறதே.

பொழிப்புரை:

இரவுப்பொழுது என்னைச் சுடுகிறது; என்ன காரணமோ? சூரியனை விழுங்கிய காரணத்தாலா? என் முலைகளிடத்து எழுந்த வெப்பத்தாலா? குளிர்நிலவு பாய்ச்சிய ஒளியாலா? என்னைச் சுடக் காரணம்தான் என்ன எனத் தமயந்தி வருந்தினாள். 107

ஓர் இரவு பல்லூழி

115. ஊழி பலவோர் இரவாயிற் றோஎன்னும்
கோழி குரல்அடைத்த தோஎன்னும் - ஆழி
துயிலாதோ என்னும் சுடர்மதியம் கான்ற
வெயிலால் உடல்உருகா வீழ்ந்து.

பதவுரை:

சுடர்மதியம் கான்ற வெயிலால் உடல்உருகா வீழ்ந்து - நிலவு உமிழ்ந்த நிலவொளியால் உடல் உருகித் தமயந்தி தரையில் வீழ்ந்து, ஊழிபல ஓர் இரவாயிற்றோ என்னும் - பல ஊழிக் காலம் சேர்ந்து ஒரே இரவாக மாறி விட்டதோ என்பாள், கோழி குரல் அடைத்ததோ என்னும் - (விடியற்காலம்) கூவும் சேவலும் குரல் அடைத்துப் போனதோ என்பாள், ஆழி துயிலாதோ என்னும் - இரவும் பகலும் ஓயாமல் ஒலிக்கும் கடல் துயிலாதோ என்பாள்.

பொழிப்புரை:

தமயந்தி நிலவு உமிழ்ந்த ஒளியால் உடல்உருகி வீழ்ந்து, பல ஊழிகள் ஒரே இரவானதோ எனவும் கோழியும் விடியற்காலம் கூவவில்லையே எனவும் கடலும் ஓய்வாகத் துயிலாதோ எனவும் கூறி வருந்தினாள். 108

காதல் வருத்தம்

116. ஆடி வரிவண்(டு) அருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல் - ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோகத்
துறைவாய் அடங்காத் துயர்.

பதவுரை:

வரிவண்டு ஆடி அருகே பறக்கவே - புள்ளிகளை உடைய வண்டுகள் பூந்தாதில் திளைத்துத் தமயந்தியின் பக்கமாகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பறக்க, வாடி மெலிவாள் - வாடி வருந்தியவளாகிய தமயந்தி, வனமுலைமேல் ஓடிப் பொறையாகச் சோர்வாள் - அழகிய முலைகள் விம்மிப் பாரமாக உடல் தளர்ந்தாள், மோகத் துறைவாய் அடங்காத் துயர் பொறுக்குமோ - காதல் என்னும் வழியில் பொறுக்க முடியாத துன்பத்தைப் பொறுப்பாளோ தமயந்தி?

பொழிப்புரை:

தேன் வண்டுகள் தமயந்தியின் அருகே பறக்க, உடல் மெலிந்தாள்; அவள் முலைகள் விம்மிப் பாரமாகச் சுமக்க முடியாமல் உடல் தளர்ந்தாள்; காதல்வழித் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் தவித்தாள் அவள். 109

நிலவே, நல்லை அல்லை!

117. ஈர மதியே! இளநிலவே! இங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவ(து) எவன் - மாரன்
பொரஅளித்தான் கண்ணி உனக்குப் புலரா
இர(வு)அளித்தான் அல்லனோ இன்று.

பதவுரை:

ஈரமதியே - குளிர்ந்த நிலவே, மாரன் உனக்கு இன்று கண்ணிபொர அளித்தான் - மன்மதன் உனக்கு இன்று போர் செய்ய மாலை (தும்பைமாலை) அளித்தான், புலரா இரவு அளித்தான் அல்லனோ? - விடியாத இரவுப் பொழுதையும் அளித்துள்ளான் அன்றோ? இங்ஙனே சோர்குழலின் மீதே இளநிலவு சொரிவது எவன்? - இங்ஙனம் இருப்பவும் என் அவிழ்ந்த கூந்தலின்மீது உன் கதிர்களை உமிழ்வது ஏன்?

பொழிப்புரை:

நிலவே, மன்மதன் உனக்குப் போர் செய்ய மாலை தந்துள்ளான்; விடியாத நெடும் இரவையும் அளித்துள்ளான். இங்ஙனம் இருந்தும் அவிழ்ந்த என் கூந்தல்மீது உன் கதிர்களை வீசுவது ஏன்? 110

மாலை கருகல்

118. தாங்கு நிலவின் தழல்போய்த் தலைக்கொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப - ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக இன்று.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

பதவுரை:

தாங்கு நிலவின் தழல்போய்த் தலைக் கொள்ளத் - நிலவின் கதிர்களாகிய நெருப்பு தமயந்தியின் தலைமேற் சென்று தாக்குவதால், தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப - மணம் நிறைந்த கூந்தலில் உள்ள வண்டுகளின் இறகுகள் தீயவும், ஓங்கு உயிர்ப்பின் - நீண்ட பெருமூச்சால், தாமங் கரியா - மாலைகள் கரிந்துபோக, இன்று யாமம் கரியாக தனியே தளர்கின்றாள - இந்த நாளில் இரவே சாட்சியாகத் தனியே வருந்துகின்றாள்.

பொழிப்புரை:

நிலவின் கதிராகிய நெருப்புத் தமயந்தியின் தலையில் சென்று தாக்கியதால் கூந்தலில் மொய்த்த வண்டுகளின் சிறகுகள் கரிந்தன; அவள் விட்ட பெருமூச்சால் மாலைகளும் கருகின; இரவு நேரத்தில் தனியே இருந்து வருந்துகின்றாள். 111

தவம் செய்பவள்!

119. மையிட்ட கண்ணருவி வார வளைசோரக்
கையில் கபோலத் தலம்வைத்து - மெய்வருந்தித்
தேன்இருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தான்இருந்து செய்வாள் தவம்.

பதவுரை:

தேமொழியாள் - தேன் போன்ற சொற்களைப் பேசும் தமயந்தி, மையிட்ட கண்ணருவி வார - மையிட்ட கண்ணிலிருந்து கண்ணீர் வரவும், வளைசோரக் - உடல் மெலிவால் வளையல்கள் கழன்றுவிழ, கையில் கபோலத் தலம்வைத்து - கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு, தேன்இருந்த பூங்கணையே தீயாக - தேன் நிறைந்த மலரம்புகளைத் தீயாக நினைத்து, தான் மெய்வருந்தி இருந்து தவம் செய்வாள் - தன் உடலை வருத்தித் தவம் செய்பவள் போல் ஆனாள்.

பொழிப்புரை:

தமயந்தியின் கண்களில் நீர்சோரவும் கைகளில் வளையல்கள் கழலவும் கன்னத்தில் கைவைத்துக்கொண்டு மலர்களே நெருப்பாக நினைத்து உடலை வருத்தித் தவம் செய்பவள் ஆனாள். 112

இரவுப் பொழுதே விலைமகள்

120. அள்ளிக் கொளலாய் அடையத் திரண்(டு)ஒன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூர்இருளாய் - உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதையமே போன்ற(து) இரா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

இரா - இரவுப் பொழுது, அள்ளிக் கொளலாய் அடைய ஒன்றாய் திரண்டு - கைகளால் அள்ளிக்கொள்ளும் படியாக இருளெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, கொள்ளிக்கும் விள்ளாத கூர் இருளாய் - நெருப்புக்கும் பெயராத கடுமையான இருளாய், உள்ளம் புதைய வைத்த - உள்ளத்துள் வஞ்சகத்தை மறைத்து வைத்த, பொதுமகளிர் தங்கள் இதையமே போன்றது - விலைமகளிர்தம் நெஞ்சத்தையே போன்றது.

பொழிப்புரை:

இரவுப் பொழுது கைகளால் அள்ளிக் கொள்ளும்படி இருளெல்லாம் ஒன்று சேர்ந்து நெருப்புக்கும் பெயராத கடுமையான இருட்டாகி உள்ளத்தில் வஞ்சகத்தை மறைத்து வைத்த விலைமகள் போன்றதாய் இருந்தது. *113*

ஊர்க்காவலர் இருள்போலானார்

121. ஊக்கிய சொல்லர் ஒலிக்கும் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர் - காக்க
இடையாமம் காவலர்கள் போந்தார் இருளின்
புடைவாய் இருள்புடைத்தாற் போன்று.

பதவுரை:

இருளின் புடைவாய் - இரவுப் போதில், இடையாமம் - நள்ளிரவில், காவலர்கள் - ஊரைக்காக்கும் காவலர்கள், ஊக்கிய சொல்லர் - உரத்த ஒலியுடன் கூடிய பேச்சினராய், ஒலிக்குத் துடிகுரலர் - பறையை அடிப் பவராய், வீக்கிய கச்சையர் - இடையில் கச்சினைக் கட்டியவராய், வேல்வாளர் - வேலையும் வாளையும் தாங்கியவராய், இருள்புடைத்தாற் போன்று - இருளே வடிவம் எடுத்தாற் போல, காக்க போந்தார் - ஊர்க் காவல் செய்யச் சென்றனர்.

பொழிப்புரை:

நள்ளிரவில் ஊரைக்காக்கும் காவலர்கள் உரத்த பேச்சோடு பறையோசையை உண்டாக்கிக்கொண்டு இடையில் கச்சினை அணிந்து வேலையும் வாளையும் தாங்கிக் கொண்டு காவல் செய்தனர். *114*

உலகத்தார் உறக்கம்

122. சேமம் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளுறைபுகுதத் தார்வண்டு - காமன்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவாளி ஐந்தில் புகத்துயில் புக்கதே
ஓவாது முந்நீர் உலகு.

பதவுரை:

களிறு சேமம்புக - ஆண்யானைகள் தத்தம் கட்டுத்தறிக்குச் சென்றன, தீம்பாலின் செவ்வரியாழ் - இனிய இசையைத் தரும் யாழ்கள், உறையுள் புகுத - உறை களுக்குள் அடங்கின, தார்வண்டு - மாலைகளில் மொய்க்கும் வண்டுகள், காமன்தன் பூவாளி ஐந்தில் புக - காமனுடைய அம்புகளாகிய பூக்களில் புகுந்தன, முந்நீர் உலகு ஓவாது துயில் புக்கது - கடலால் சூழப்பட்ட இவ்வுலகமும் துயிலத் தொடங்கியது.

பொழிப்புரை:

யானைகள் தறிகளிடத்துத் துயின்றன; இன்னோசை தரும் யாழ்கள் உறைகளில் முடங்கின; வண்டுகள் அம்புகளாகிய மலர்களில் உறங்கின; கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்து உயிர்களும் உறங்கின. 115

பேய்களும் உறங்கின

123. ஊன்தின்(று) உவகையால் உள்ள உயிர்புறம்பே
தோன்றும் கழுதும் துயின்றதே - தான்தன்
உரைசோரச் சோர உடல்சோர வாயின்
இரைசோரச் கைசோர நின்று.

பதவுரை:

ஊன்தின்று உவகையால் - தசையைத் தின்ற மகிழ்ச்சியால், உள்ள உயிர்புறம்பே தோன்றும் - உள்ளிடத்துள்ள மூச்சும் வெளிப்படையாகத் தோன்றும், கழுதும் - பேய்களும், தான்தன் உரை சோரச் சோர - தன்னுடைய பேச்சும் குழறக் குழறவும் உடல் சோர - உடல் தளரவும், வாயின் இரை சோர - வாயிலே உள்ள இரையும் நழுவவும், கைசோர - கைகளும் நடுங்கவும், நின்று துயின்றதே - நின்ற வண்ணமே துயின்றன.

பொழிப்புரை:

ஊனைத் தின்ற களிப்பில் உள்ள பேய்கள் தம் பேச்சுக் குழறவும் உடல் தளரவும் வாயில் உள்ள இரை நழுவவும் கைகள் நடுங்கவும் நின்ற வண்ணம் உறங்கின. 116

அன்றில் பறவைகள்

124. அன்றில் ஒருகண் துயின்(று)ஒருகண் ஆர்வத்தால்
இன்துணைமேல் வைத்(து)உறங்கும் என்னுஞ்சொல் - இன்று

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

தவிர்ந்ததே போல்அரற்றிச் சாம்புகின்ற போதே
அவிழ்ந்ததே கண்ணீர் அவட்கு.

பதவுரை:

அன்றில் ஒருகண் துயின்று - ஆண்அன்றில் ஒரு கண்ணால் தூங்கி, ஒருகண் ஆர்வத்தால் (தன் பேடைமேல்) கொண்ட ஆசையால் மற்றொரு கண்ணை, இன்துணைமேல் வைத்து உறங்கும் என்னுஞ்சொல் - தன் அன்புமிக்க துணை அன்றிலின் மேல் வைத்து உறங்கும் எனும் மொழி, இன்று தவிர்ந்தது - இப்போது பொய் ஆகியதே என்று நினைத்து, அரற்றிச் சாம்புகின்ற போது - (ஆண்துணை கிடைக்காத பெடை அன்றில்) கூவி வருந்துகின்ற நேரத்தில், அவட்குக் கண்ணீர் அவிழ்ந்ததே - தமயந்திக்குக் கண்ணீர் பெருகியது.

பொழிப்புரை:

ஆண் அன்றில் பெண் அன்றிலின் மேல் அன்போடு ஒருகண் வைத்து உறங்கும் என்பது பொய்யானதால் பெண் அன்றில் கூவி வருந்துவதைக் கேட்ட தமயந்திக்குக் கண்ணீர் வழிந்தது. 117

இரவுக்கு இரை

125. ஏழுலகும் சூழிருளாய் என்பொருட்டால் வேகின்ற
ஆழ்துயரம் ஏதென்(று) அறிகிலேன் - பாழி
வரையோ எனும்நெடுந்தோள் மன்னாவோ தின்னும்
இரையோ இரவுக்கு யான்.

பதவுரை:

பாழி வரையோ எனும் நெடுந் தோள் மன்னாவோ - வலிய மலை போன்ற தோள்களை உடைய மன்னவனே, ஏழு உலகும் சூழ் இருளாய் - ஏழு உலகத்தையும் சூழ்ந்திருக்கும் இருளாக, என்பொருட்டால் வேகின்ற ஆழ்துயரம் - எனக்கு ஏற்பட்டுள்ள மிகுந்த துயரத்திற்குக் காரணம், ஏது என்று அறிகிலேன் - எதுவென நான் அறியமுடியவில்லை, யான் இரவுக்குத் தின்னும் இரையோ - (அதனால்) இரவுப்போதால் தின்னப்படும் இரையா நான்?

பொழிப்புரை:

மன்னவனே, ஏழ்உலகும் சூழ்ந்திருக்கும் இருளாக எனக்கு ஏற்பட்டுள்ள துயரத்திற்குக் காரணம் அறியேன். இரவால் தின்னப்படும் இரையாநான்' எனத் தமயந்தி வருந்தினாள். 118

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊதைக் காற்று

126. கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததால் ஊதை - பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போல் மருள்மாலை
உண்டுபோ கட்ட உயிர்க்கு.

பதவுரை:

கருவிக்கு நீங்காத கார்இருள்வாய் - ஆயுதங்களால் அகற்ற முடியாத இருளிடத்து, கங்குல் உருவிப் புகுந்தது ஊதை - அவ்விருளையே ஊடுருவிக் கொண்டு வாடைக்காற்று புகுந்தது, கார்வண்டு பருகிப் போகட்ட மலர்போல் - வண்டுகள் தேனைப் பருகி போட்ட மலர் போல, மருள்மாலை உண்டு போகட்ட உயிர்க்கு - மாலைப் பொழுது உடல் வலிமையை உண்டுவிட்ட என் உயிரையும் உண்பதற்கு.

பொழிப்புரை:

தேனைப் பருகிவிட்டு வண்டு போட்ட மலர்போல, மாலைக் காலம் என் உடல் வலிமையை உண்டு விட்டது. வலிமை குன்றிய என் உயிரையும் உண்ண இருளைக் கிழித்துக் கொண்டு வாடைக்காற்று வந்தது. 119

தமயந்தி தூணை அணைத்தல்

127. எழுந்திருக்கும் ஏமாந்து பூமாந் தவிசின்
விழுந்திருக்கும் தன்னுடம்பை மீளச் - செழுந்தரளத்
தூணோடு சேர்க்கும் துணையேதும் இல்லாதே
நாணோடு நின்றழியும் நைந்து.

பதவுரை:

பூமாந் தவிசின் எழுந்திருக்கும் - மாந்தளிர் பரப்பப்பட்ட படுக்கையிலிருந்து (நளனை உருவெளியில் கண்டு) தமயந்தி மயங்கி எழுவாள், விழுந்திருக்கும் - (உண்மையில் அவனைக் காணாமல்) கீழே விழுவாள், தன்னுடம்பை மீளச் செழுந்தரளத் தூணோடு சேர்க்கும் - விழுந்தவள் எழுந்து தூணைக் கட்டி அணைப்பாள், ஏதும் துணை இல்லாது நாணோடு நின்று - அவளுக்கு யாரும் துணை இல்லாததை நினைத்து வெட்கத்தோடு, நைந்து அழியும் - வருந்தித் தளர்வாள்.

பொழிப்புரை:

(நளனை உருவெளியில் கண்ட) தமயந்தி படுக்கையிலிருந்து எழுவாள்; மயங்கி விழுவாள்; மீண்டும் எழுந்து தூணைக்

In Public domain Digitization Muthulakshmi Research Academy

கட்டியணைப்பாள்; துணையாக யாரும் இல்லாகிப் போக வெட்கமுற்று உடல் வருந்துவாள். 120

தமயந்தி பெருமூச்சு விடுதல்

128. விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சொரிகின்ற கார்இருள்போல் சோரும் - புரிகுழலைத்
தாங்கும் தளரும் தழலே நெடி(து)உயிர்க்கும்
ஏங்கும் துயரோ(டு) இருந்து.

பதவுரை:

வெள்நிலவின் மீதே சொரிகின்ற கார் இருள்போல் - வெண்ணிலாவின் மீது படிகின்ற செரிந்த இருட்டைப் போல, விரிகின்ற மெல்அமளி சோரும் புரிகுழலைத் தாங்கும் - பரந்து விரிந்த படுக்கைமேல் அவிழ்ந்து கிடக்கும் கூந்தலைத் தன் கையால் தாங்குவாள், தளரும் -காதலால் உடல் தளர்வாள், தழலே நெடிது உயிர்க்கும் - நெருப்புபோல் பெருமூச்சு விடுவாள், துயரோடு இருந்து ஏங்கும் - துயரத்தோடு இருந்து ஏங்கினாள் தமயந்தி.

பொழிப்புரை:

வெண்ணிலவின் மீது படிகின்ற இருட்டைப் போல - படுக்கையில் அவிழ்ந்து கிடந்த கூந்தலைக் கையால் தாங்கினாள்; உடல் தளர்ந்தாள்; பெருமூச்சு விட்டாள்; துயரம் மிக ஏங்கினாள் தமயந்தி. 121

நகராத இரவு

129. உடைய மிடுக்கெல்லாம் என்மேலே ஓச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ - கொடியன்மேல்
மாகாதல் வைத்ததோ மன்னவர்தம் இன்னருளோ
ஏகாத(து) என்னோ இரா.

பதவுரை:

உடைய மிடுக்கெல்லாம் - தனது ஆற்றலை எல்லாம், என் மேலே ஓச்சி - என்மீது செலுத்தியதால், விடிய மிடுக்கின்மை யாலோ-விடிவதற்கு ஆற்றல் இல்லாமல் போயிற்றோ, கொடியன் மேல் மாகாதல் வைத்ததோ - மன்மதன் மேல் அளவுகடந்த அன்பு வைத்தமையாலோ, மன்னவர்தம் இன்னருளோ - நளமன்னன் மீது வைத்த பேரருளோ, இரா ஏகாதது என்னோ - (இவற்றில் யாது காரணத்தாலோ) இரவுப் பொழுது விடியாமலே இருக்கிறதே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாள்அரசர் முன்னே - வாளேந்திய இளவரசர்களின் முன்பு, வில்லிகணை இழப்ப - மன்மதன் தன் அம்புகளை இழக்கவும், வெண்மதியம் சீர் இழப்ப - நிலவு தன் ஒளியை இழக்கவும், தொல்லை இருள்கிழிய - துன்பம் தந்த இருள்நீங்கவும், குணவாயில் குன்று - கிழக்குப் பக்கமுள்ள மலையில், செங்கதிரோன் தோன்றினான் - சூரியன் தோன்றினான்.

பொழிப்புரை:

தமயந்தியின் மணமாலையை விரும்பி வந்துள்ள இளவரசர்களின் முன் மன்மதன் தன் அம்புகளை இழக்கவும் வெண்ணிலவு தன் ஒளி இழந்து போகவும் துன்பம் தந்த இருள் விலகவும் கிழக்கு மலையில் கதிரவன் தோன்றினான். 126

சுயம்வர மண்டபம் வந்தனர்

134. முரை(சு)எறிந்த நாள்ஏழும் முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோள்மன்னர் வந்தார் - விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசும் கலந்து.

பதவுரை:

முரைசு எறிந்த நாள்ஏழும் முற்றியபின் - சுயம்வர நாளுக்கு என்று முரசு அறைந்த ஏழுநாளும் முடிந்தபின்னே, கொற்றவரை செறிந்த தோள்மன்னர் - வெற்றிபொருந்திய வலிய மலைபோலும் தோளுடைய மன்னர்கள், விரைசெறிந்த மாலை துவள - மணம் மிக்க மாலைகள் தோளிலே புரளவும், முடிதயங்க - தலையில் சூடிய கிரீடம் ஒளி வீசவும், வால்வளையும் காலை முரசும் கலந்து வந்தார் - சங்குகள் முழங்கவும் முரசுகள் ஒலிக்கவும் வந்து சேர்ந்தனர்.

பொழிப்புரை:

சுயம்வரத்திற்குக் குறித்தநாள் முடிந்தபின், வெற்றிபொருந்திய மன்னர்கள் தோளில் மாலை புரளவும் தலையில் உள்ள முடி ஒளி வீசவும் சங்குகள் முழங்கவும் முரசுகள் ஒலிக்கவும் சுயம்வர மண்டபத்திற்கு வந்தனர். 127

நளனும் வந்தான்

135. மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம் - முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கன்று குதட்டிய கார்நீலம் - கன்று குட்டிகள் தின்று போட்ட கருங்குவளை மலர்கள், முன்றில் குறுவிழிக்கு நேர் நாடன் - மகளிரின் கண்களைப் போல வீட்டு முற்றத்தில் கிடக்கும் வள நாட்டை உடையவனும், கோதைபெருங்கண்ணின் - தமயந்தியின் கண்களின், சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய் - அருட்பார்வைக்கு ஏங்கியிருந்தவனுமாகிய நளவேந்தன், மன்றலந்தார் மன்னர் - அவளது சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களின், நடுவணைய வந்திருந்தான் - நடுவில் ஒருவனாகத் தானும் வந்திருந்தான்.

பொழிப்புரை:

குவளை மலரை ஒத்த கண்களை உடைய மகளிர் வாழும் நாடனும் தமயந்தியின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கிய வனுமாகிய நளன், சுயம்வரத்திற்கு வருகை தந்த மன்னர் களுக்கிடையில் ஒருவனாக வந்து சேர்ந்தான். 128

தமயந்தியும் வந்தாள்!

136. நித்திலத்தின் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர் - சித்தம்
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தாள்
அருங்கேழ் மணிப்பூண் அணங்கு.

பதவுரை:

அருங்கேழ் மணிப்பூண் அணங்கு - அரிய மணிகளாகிய அணி அணிந்த தமயந்தியின், நித்திலத்தின் பொற்றோடு - முத்துகள் பதிக்கப்பட்ட பொன்தோடு, நீலமணித்தோடாக - நீலக்கல் பதித்த குண்டலமாக விளங்க, மைத்தடங்கண் செல்ல - மைத்தீட்டப் பெற்ற கண்கள் அங்கும் இங்கும் சுழல, வயவேந்தர் சித்தம் வண்டின் மருங்கேவர - வெற்றி வேந்தர்களின் மனம் வண்டைப்போல அவளின் அருகே வர, பந்தர்க்கீழ் வந்தாள் - சுயம்வரப் பந்தலின் கீழ்வந்தாள்.

பொழிப்புரை:

அழகிய உயரிய அணிகளை அணிந்திருக்கிற தமயந்தியின் கண்கள் சுற்றிச் சுழலவும் வெற்றி வேந்தர்கள் வண்டைப்போல அவளருகே வரவும் அவள் சுயம்வரப் பந்தலைச் சேர்ந்தாள்.129

மன்னர்கள் பார்த்தனர்

137. பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த - மாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேல்மேல் நிறைந்து.

பதவுரை:

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல் - கபடமற்ற இளைய மயிலைச் சூழ்ந்து வரும் பெண் மான்களைப் போல, கோதை மடமானைக் கொண்டணைந்த மாதர் - தமயந்தியை அழைத்துவந்த தோழியர்களின், மருங்கின் வெளிவழியே - இடுப்பினது இடைவெளியின் வழியாக, மன்னவர்கண் புக்கு - அரசர்களின் கண்கள் நுழைந்து, மேல்மேல் நிறைந்து நெருங்கின - மேலும்மேலும் ஒவ்வொருவரின் பார்வையும் எங்கும் நிறைந்து கிடந்தன.

பொழிப்புரை:

மயிலைச் சூழ்ந்து வரும் பெண்மான்களைப் போலத் தமயந்தியைச் சுற்றிப் பணிப் பெண்கள் அழைத்துவர, அப்பணிப் பெண்களிள் இடுப்பு வழியே மன்னர்கள்தம் பார்வை புகுந்து மேலும் மேலும் நிறைந்து கிடந்தன. 130

அன்னம்போல வந்தாள் தமயந்தி

138. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

பதவுரை:

மின்னிறத்துச் செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் - மின்னலை ஒத்த சிவந்த கால்களையும் வெள்ளைச் சிறகுகளையும் உடைய அன்னப் பறவை, செங்கமலப் பொய்கைவாய்ப் போவதே போன்று - செந்தாமரை மலர்கள் நிறைந்த குளத்தில் செல்வதைப்போல, மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே - அரசர்களின் கண்களாகிய தாமரை பூத்த மண்டபத்தில், பொன்னின் மடப்பாவை போய்ப் புக்காள் - பொன்னிறமாயுள்ள தமயந்தி சென்று புகுந்தாள்.

பொழிப்புரை:

அன்னப் பறவை தாமரை பூத்த தடாகத்தில் செல்வதைப் போல, மன்னர்களின் விழியாகிய தாமரை பூத்த சுயம்வர மண்டபத்தில் தமயந்தி சென்று புகுந்தாள். 131

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமயந்தியின் பார்வை யார் மீது?

139. வடங்கொள் வனமுலையாள் வார்குழைமேல் ஓடும்
நெடுங்கண் கடைபார்த்து நின்றான் - இடங்கண்டு
பூவாளி வேந்தன்தன் பொன்ஆவம் பின்னேயிட்(டு)
ஏவாளி நாணின்மேல் இட்டு.

பதவுரை:

பூவாளி வேந்தன் - மலரம்புகளை உடைய மன்மதன், தன்பொன் ஆவம் பின்னே இட்டு - தன்னுடைய அம்புக்கூட்டை முதுகில் தொங்கவிட்டு, ஏவாளி நாணின்மேல் இட்டு - அம்புகளை வில் நாணில் வைத்துத் தொகுத்து, இடம் கண்டு - எய்வதற்கு ஏற்ற இடத்தைத் தெரிந்து கொண்டு, வடங்கொள் வனமுலை யாள் - முத்து மாலை அணிந்த தமயந்தி யின், வார்குழைமேல் ஓடும் - நீண்ட காதுகளில் செல்லுகின்ற, நெடுங்கடைக் கண் பார்த்து நின்றான் - காதளவு நீண்ட கண்களைப் பார்த்து நின்றான்.

பொழிப்புரை:

மன்மதன் தன் அம்புக்கூட்டை முதுகில் தொங்கவிட்டு, ஓரம்பை எடுத்து வில் நாணில் பூட்டி எய்வதற்குரிய இடம் பார்த்துக் கொண்டு பெரிய முலைகளை உடைய தமயந்தியின் கடைக்கண்களை நோக்கி நின்றான். *132*

தோழி அரசர்களைக் காட்டுதல்

140. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரி(சு)என்(று) இயல்அணங்கு - முன்நின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து

பதவுரை:

இயல் அணங்கு - நல்ல சாயலை உடைய சேடிப்பெண் ஒருத்தி, தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்கு - வீமராசனின் திருமகளாம் தமயந்திக்கு, முன்நின்று - முன்னே நின்று, தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து - சுயம்வரத்திற்கு வருகை தந்த வேந்தர்களின் விவரங்களைத் தெரிந்து கொண்டு, மன்னர் குலமும் பெயரும் வளநாடும் - அவர்களின் குடிப்பெருமையும் பெயரும் உரிமையான நாடும், இன்ன பரிசு என்று காட்டினாள் - இத்தன் மையன எனக் காட்டிக் கொண்டே சென்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

பணிப்பெண் ஒருத்தி வீமன் மகள் தமயந்திக்குச்சுயம் வரத்திற்கு வந்திருந்த அரசர்களின் குடிப்பெருமையும் பெயரும் உரிய நாட்டின்பெயரும் இத்தன்மை வாய்ந்தவை எனக் காட்டிக் கொண்டே நடந்தாள். 133

சோழன்

141. பொன்னி அமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவும் திருநாடன் - பொன்னின்
சுணங்(கு)அவிழ்ந்த பூண்முலையாய் சூழ்அமரில் துன்னார்
கணங்கவிழ்ந்த வேலன்இவன் காண்.

பதவுரை:

பொன்னின் சுணங்கு அவிழ்ந்த பூண் முலையாய் - பொன்னிற தேமல் படர்ந்த அணிகளை அணிந்த தமயந்தியே, - பொன்னி அமுதப் புதுக்கொழுந்து - காவிரி ஆற்றின் புதுவெள்ளத்தில் எழுகின்ற அலைகளின் முனை, பூங்கமுகின் சென்னி தடவும் - செழித்த பாக்குமரத்தின் உச்சியைத் தொடும், திரு நாடன் - நாட்டுக்கு உரியவனான இச்சோழன், சூழ் அமரில் - நடைபெறுகின்ற போரில், துன்னார் கணங்கவிழ்ந்த - பகைவரின் தலைகளைக் கவிழுமாறு செய்த, வேலன்இவன் காண் - வேலை உடையவன்; இவனைப் பார்.

பொழிப்புரை:

நல்ல அணிகளையுடைய தமயந்தியே, காவிரியில் பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தில் தோன்றும் அலைகளின் முனைபாக்கு மரத்தின் உச்சியைத் தடவும் வளநாடனாகிய சோழன் போரில் எதிரிகளைக் கவிழச் செய்பவன்; அவன் இவன் காண். 134

பாண்டியன்

142. போர்வாய் வடிவேலால் போழப் படாதோரும்
சூர்வாய் மதர்அரிக்கண் தோகாய்கேள்- பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகால் செண்டால்
திரித்தகோ இங்கிருந்த சேய்.

பதவுரை:

போர்வாய் வடிவேலால் - போரில் கூர்மையான வேலால், போழப் படாதோரும் - பிளக்க முடியாத வலிமையுடைய வீரர்களும், சூர்வாய் மதர்அரிக் கண் - அச்சங்கொள்ளுமாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செவ்வரி ஓடிய கண்களை உடைய, தோகையே - மயில் போன்ற சாயலை உடைய தமயந்தியே, கேள் - நான் சொல்வதைக் கேட்க, பருத்ததோர் மால்வரையை - மிகவும் பெரிய இமயமலையை, பண்டொருகால் செண்டால் - முன்னொரு காலத்தில் செண்டு எனும் ஆயுதத்தால் திரித்தகோ இங்கிருந்தசேய் - பெயரச் செய்தவனின் வழிவந்தவன் இங்கிருக்கும் பாண்டிய இளவரசன்.

பொழிப்புரை:

வீரர்களையும் கதிகலங்கச் செய்யும் மயிலைஒத்த தமயந்தியே, இமயமலையைச் செண்டு எனும் ஆயுதத்தால் நிலைபெயரச் செய்த வனின் வழித் தோன்றல் இப்பாண்டிய இளவரசன் காண். *135*

சேரன்

143. வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்துகில்போல்
குன்(று)அருவி பாயும் குடநாடன் - நின்றபுகழ்
மாதே இவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலைஉயர்த்த வேந்து.

பதவுரை:

நின்ற புகழ் மாதே - நிலைபெற்ற புகழுக்கு உரியவளே, இவன் - இம்மன்னன், வென்றி நிலமடந்தை மென்முலை மேல் - வெற்றிபொருந்திய நிலமாகிய பெண்ணின் மார்பகத்தின்மேல், வெண் துகில் போல் - மேல் கிடக்கும் வெண்மையான துணியைப் போல, குன்று அருவி பாயும் குடநாடன் - மலைகளிலிருந்து அருவிகள் பாயும் மேற்குநாடன், மானத்தனிக் கொடியின் மீதே - சிறப்புடைய தன் கொடியாகிய துணியின் மீது, சிலை உயர்த்த வேந்து - வில்லைப் பொறித்தவன், கண்டாய் - இவனைக் காண்பாயாக.

பொழிப்புரை:

புகழுக்குரியவளே, நிலமாகிய பெண்ணின் மார்பகத்தில் இருக்கும் வெண் துகில்போல், மலைகளிலிருந்து அருவிகள் பாயும் குடநாடன் இவன். இவன் விற்கொடி எழுதிய வேந்தனும் ஆவான். *136*

யதுகுல மன்னன்

144. ஆழிவடி அம்(பு)அலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசைநூல் சங்கத் திருந்தானும் - நீள்விசும்பின்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய்இச் சேய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

ஆழிவடி அம்பு அலம்ப நின்றானும் - கூர்மையான அம்புகளைக் கடலில் கழுவியவனும், அன்றொருகால் ஏழிசை நூல் சங்கத் திருந்தானும் - முன்பொருகால் இசைச் சங்கத்தில் இருந்தவனும், நீள்விசும்பின் நல்தேவர் தூது நடந்தானும் - பாரதப் போரில் பாண்டவர்பொருட்டுத் தூது சென்றவனும், பாரதப் போர் செற்றானும் இச்சேய் கண்டாய் - அப்போரில் பாண்டவர் வெற்றிபெறக் காரணமானவனும் இச்சேயாம் கண்ணனே ஆவான்.

பொழிப்புரை:

அம்பைக் கடலில் கழுவியவன், ஏழிசைச் சங்கத்தில் இருந்தவன், பாண்டவர்க்குத் தூது நடந்தவன், பாரதப் போர் வெற்றிக்குக் காரணன் - ஆகிய எல்லாச் செயல்களுக்கும் மூலமானவன் இக்கண்ணனே, காண்க. *137*

குறுநில மன்னன்

145. தெரியில் இவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென்(று) அஞ்சி - இரவெல்லாம்
பிள்ளைக் குரு(கு)இரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.

பதவுரை:

தெரியில் இவன் - நீ தெரிந்து கொள்ள விரும்பினால் இவன், செம்கழுநீர் மொட்டை - குவளை மலர்களின் அரும்புகளை, அரவின் பசுந்தலை யென்று அஞ்சி - பாம்பின் தலை தான் என்று நினைத்துப் பயந்து, பிள்ளைக் குருகு இரவெல்லாம் இரங்க - நாரைக்குகுஞ்சுகள் இரவு முழுமையும் கதற, பேதைப்புள் தாலாட்டும் - அக்குஞ்சுகளுக்கு ஆறுதலாகத் தாய்ப் பறவைகள் தாலாட்டுப் பாடும், வள்ளைக் குருநாடர் மன் - வளமான மருத நிலத் தலைவன் குருநில அரசன், கண்டாய் - காண்க.

பொழிப்புரை:

குவளை அரும்புகளைப் பாம்புத் தலையென நாரைக்குஞ்சுகள் அஞ்சும். அதனைப் போக்கத் தாய்ப்பறவைகள் தாலாட்டுப் பாடும் வளமான மருத நிலத்தலைவன் இக்குருநில மன்னன். இவனைப் பார். *138*

மந்திர நாட்டு மன்னன்

146. தேமருதார்க் காளை இவன்கண்டாய் செம்மலர்மேல்
காமருசங்(கு) ஈன்ற கதிர்முத்தைத் - தாமரைதன்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பத்திரத்தால் ஏற்கும் படுநகர்ப் பழனஞ்சூழ்
மந்திரத்தார் கோமான் மகன்.

பதவுரை:

தேமருதார்க் காளை இவன் - தேன் நிறைந்த மலர்மாலை அணிந்த இக்காளை போன்றவன், செம்மலர்மேல் காமருசங்கு ஈன்ற - தாமரை மலர்மீது அழகிய சங்கால் ஈனப்பட்ட, கதிர்முத்தைத் தாமரைதன் பத்திரத்தால் ஏற்கும் - முத்துகளை நீரில் விழாமல் தன் கைகளாம் இலைகளால் தாமரை தாங்கும், படுநகர்ப் பழனஞ்சூழ் - பள்ளமான வயல்கள் நிறைந்துள்ள, மந்திரத்தார் கோமான் மகன் மந்திர நாட்டுத் தலைவன் மகன், கண்டாய் - காண்பாயாக.

பொழிப்புரை:

தாமரை மலர்மீது சங்குகள் ஈன்ற முத்துகளை நீரில் விழாமல் தன் கைகளாம் இலைகளால் தாமரை தாங்கும் பள்ள வயல்கள் சூழ்ந்த மந்திரநாட்டு மன்னன் மகன் இக்காளையாவான். காண்க. 139

மச்ச நாட்டு மன்னன்

147. அஞ்சாயல் மானே இவன்கண்டாய் ஆலைவாய்
வெஞ்சாறு பாய விளைந்(து) எழுந்த - செஞ்சாலிப்
பச்சைத்தாள் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன்.

பதவுரை:

அம்சாயல் மானே - அழகிய சாயலை உடைய மான்போன்றவளே, இவன் - இம்மன்னன், ஆலைவாய் வெஞ்சாறுபாய - கரும்பு ஆலைகளில் பிழியப்பட்ட கருப்பஞ்சாறு பாய்வதால், விளைந்து எழுந்த செஞ்சாலி - செழிப்பாக விளைந்துள்ள நெல்லின், பச்சைத் தாள் - பசுமையான தண்டுகளை, மேதி வாயிற்கடை பாலொழுகும் - (மேய்ந்து) எருமைகளின் கடைவாயில் பால் ஒழுகும் வளமான, மச்சத்தார் கோமான் மகன் - மச்சநாட்டு மன்னன் மைந்தன், கண்டாய் - காண்பாயாக.

பொழிப்புரை:

தமயந்தியே, ஆலைகளில் பிழியப்பட்ட கருப்பஞ்சாறு பெருகி ஓடுவதால் நெற்பயிர் செழிப்பாக வளர்ந்துள்ளது. அப்பயிரின் பசிய தண்டுகளை மேய்வதால் எருமைகளின் கடைவாயில் பாலொழுகும் வளநாடு மச்சநாடு. அந்நாட்டு இளவரசன் இவனே காண். 140

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவந்தி அரசன்

148. வண்ணக் குவளை மலர்வெளவி வண்(டு)எடுத்த
பண்ணிற் செவிவைத்தப் பைங்குவளை - உண்ணாது
அருங்கடா நிற்கும் அவந்திநா டாளும்
இருங்கடா யானை இவன்.

பதவுரை:

இவன் - இந்த இளவரசன், அருங்கடா வண்ணக் குவளை மலர் வெளவி - எருமைகள் வண்ணமயமான குவளை மலர்களைக் கௌவி, வண்டு எடுத்த பண்ணில் செவி வைத்து - அம்மலர்களில் வண்டுகள் பாடும் இனிய பாடலைக் காதாரக் கேட்டு, பைங்குவளை உண்ணாது நிற்கும் - இசையில் மயங்கிய அவ்வெருமைகள் பூக்களை உண்ணாமல் இருக்கும், அவந்தி நாடாளும் - வளமான அவந்தி நாட்டை ஆளும், இருங்கடா யானை இவன் - ஆண்யானையை ஒத்தவன், காண்பாய்.

பொழிப்புரை:

குவளை மலர்களைக் கௌவிய எருமைகள், அம்மலர்களில் வண்டுகள் பாடும் இனிய பாடலைக் கேட்டு மயங்கி மலர்களை உண்ணாமல் இருக்கும் வளநாடு அவந்தி நாடு. அந்நாட்டு இந்த இளவரசன் ஆண்யானையை நிகர்த்தவன். காண்பாயாக. 141.

பாஞ்சால மன்னன்

149. விடக்கதிர்வேல் காளை இவன்கண்டாய் மீனின்
தொடக்(கு) ஒழியப் போய்நிமிர்ந்த தூண்டில் - மடற்கமுகின்
செந்தோடு பீறித்தேன் செந்நெல் பசுந்தோட்டில்
வந்தோடும் பாஞ்சாலர் மன்.

பதவுரை:

விடக்கதிர்வேல் காளை இவன் - நஞ்சு உள்ள ஒளிபொருந்திய வேலை ஏந்திய இக்காளை போல்வான், மீனின் தொடக்குப் போய் ஒழிய - தூண்டிலில் கோக்கப்பட்ட இரையானது நழுவிப் போக, போய் நிமிர்ந்த தூண்டில் - மேல் எழுந்த தூண்டில் முள், மடற்கமுகின் செந்தோடு பீறி - உயர்ந்துள்ள பாக்குமரத்தின் தோடுகளைப் பிளக்கவும், தேன் செந்நெல் பசுந்தோட்டில் வந்து ஓடும் - (அதிலிருந்து ஒழுகிய) தேனானது நெற்பயிரின் மடலில்பட்டு வழியும், பாஞ்சாலர் மன் - பாஞ்சால நாட்டு மன்னன், கண்டாய் - காண்க.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

நஞ்சு உள்ள வேலை ஏந்திய இவன், தூண்டிலில் கோக்கப்பட்ட இரை நழுவியவுடன் மேலே எழுந்த தூண்டில் முள் பாக்குமரத்தின் மடலைக் கீற அதிலிருந்து வழிந்த தேன் நெற்பயிரின் மீது விழுந்து பாயும் நாடு பாஞ்சால நாடு. அந்நாட்டு மன்னன் இவன் காண்பாயாக. *142*

கோசல மன்னன்

150. அன்னம் துயில்எழுப்ப அந்தா மரைவயலில்
செந்நெல் அரிவார் சினையாமை - வன்முதுகில்
கூன்இரும்பு தீட்டும் குலக்கோ சலநாடன்
தேன்இருந்த சொல்லாய்இச் சேய்.

பதவுரை:

தேன் இருந்த சொல்லாய் - தேன் போல் இன்சொற்களைப் பேசுபவளே, இச்சேய் - இந்த இளவரசன், அன்னம் துயில் எழுப்ப - விடியற்காலத்தே அன்னப் பறவைகள் (உழவர்களைத்) தூக்கத்திலிருந்து எழுப்ப, அந்தாமரை வயலில் செந்நெல் அரிவார் - எழுந்தவர்கள் தாமரை பூத்த வயலில் நெல்லை அறுப்பர், சினையாமை வன் முதுகில் கூன் இரும்பும் தீட்டும் - அவர்கள்சூல்கொண்ட ஆமை முதுகில் தம் கருக்கு அரிவாளைத் தீட்டும், குலக் கோசல நாடன் - வளமான கோசல நாடன் ஆவான்.

பொழிப்புரை:

தமயந்தியே, அன்னம் எழுப்ப எழுந்த உழவர்கள் தாமரை வயலில் நெல்லை அறுத்தனர். அவர்கள் தம் கருக்கரிவாளை ஆமை முதுகில் தீட்டும் நீர்வளம் நிலவளம் உடையநாடு கோசல நாடு. அந்நாட்டு இளவரசன் இவன், காண்க. *143*

மகத அரசன்

151. புண்டரிகம் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்(டு)இரியும் தெண்ணீர் மகதர்கோன் - எண் திசையில்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்ஆவம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாய்இச் சேய்.

பதவுரை:

தீயெரிவபோல் புண்டரிகம் விரிய - நெருப்பு எரிவது போலச் செந்தாமரை மலர்கள் விரியவும், பூம்புகைபோல் வண்டு இரியும் - (அந்நெருப்பிலிருந்து எழும்) புகையைப் போல வண்டினங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொய்க்கவும், தெண்ணீர் மகதர்கோன் - நீர்வளமுடைய மகதநாட்டு மன்னன் இவன், எண்டிசையில் போர் வேந்தர் கண்டறியா - எட்டுத் திக்கு களில் உள்ள வேந்தர்களும் காணாத, பொன்ஆவம் பின்னுடைய - அம்புக்கூட்டைத் தன் முதுகில் வைத்துள்ள, தேர் வேந்தன் இச்சேய் கண்டாய் - தேரைச் செலுத்தும் மன்னன் இவன், காண்க.

பொழிப்புரை:

தீஎரிவதுபோலச் செந்தாமரைகள் மலர்ந்துள்ளன; தீயிலிருந்து எழும் புகைபோல வண்டுகள் மலர்களை மொய்க்கின்றன; நீர்வளம் உடைய நாடன் மகதவேந்தன்; வேற்று அரசர்களும் காணாத அம்புக்கூட்டைத் தாங்கியவன் அவன்; தேரைச் செலுத்துவதில் வல்லவனான அவனைக் காண்க. *144*

அங்கத நாட்டு மன்னன்

152. கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோ(டு)இடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால் - வான்கடல் வந்(து)
அந்தோ எனவெடுக்கும் அங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாய்இச் சேய்.

பதவுரை:

செந்தேன் மொழியாய் - தேன் போன்று இனிய மொழிகளைப் பேசுபவளே, கூன்சங்கின் பிள்ளை - வளைந்த சங்கு ஈன்ற குஞ்சுகள், பவளக் கொடி கோடு இடறி - ப்வளக் கொடியின் கொம்பினால் தடுக்கப்பெற்று, தேன்கழியில் வீழ - தேன்நிறைந்த கழிகளில் விழவும், அந்தோ என வான்கடல் வந்து எடுக்கும் - 'அந்தோ' எனப் பதறிக் கடல்தன் அலைகளால் ஓடிவந்து அணைத்துக் கரைசேர்க்கின்றன, அங்கத நாடாளுடையான் - அங்கத நாட்டு மன்னன், இச்சேய் - இவ்விளவரசன்.

பொழிப்புரை:

இன்சொல்லை இயம்புபவளே, சங்கு ஈன்ற சங்குக் குஞ்சுகள் பவளக் கொடி கொம்பில் தடுமாறிக் கழியில் விழுந்தன; அதனைக் கண்ட கடல் 'ஐயோ' என அலறி வந்து தன் அலைக் கைகளால் அவற்றைக் கரை சேர்க்கும் நெய்தல் வளநாடு அங்கத நாடு. இவன் அந்நாட்டு இளவரசன், காண். *145*

கலிங்க மன்னன்

153. வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலம்எழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் கா(டு)உழக்கிப் - புள்ளோடு

Public domain Digitization Muthulakshmi Research Academy

வண்(டு)இரியச் செல்லும் மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்தெரியல் தேர்வேந்தன் தான்.

பதவுரை:

வெள்வாளைக் காளைமீன் - வெண்மை நிறமுடைய இளம் வாளை மீன்களை, மேதிக்குலம் எழுப்ப - எருமைக் கூட்டம் கலக்கவும், கள்வார்ந்த தாமரையின் காடு உழக்கி - அம்மீன்கள் தேன்நிறைந்த தாமரைப் பூக்கள் நிறைந்துள்ள நீர்நிலைகளில் பாயவும், புள்ளோடு வண்டு இரியச் செல்லும் - அதிலுள்ள பறவைகளும் வண்டுகளும் விலகிச் செல்லும், மணிநீர்க் கலிங்கர்கோன் - நீர்வளமுடைய கலிங்க மன்னன், தண்தெரியல் தேர்வேந்தன் தான் - குளிர்ந்த மலர்மாலை அணிந்தவனும் தேரைச் செலுத்துபவனும் ஆவான்.

பொழிப்புரை:

எருமைமாடுகள் நீர்நிலைகளில் புகுந்து கலக்க, வாளை மீன்கள் துள்ளிக் குதித்துத் தாமரைப் பூக்களை உழக்கவே, நீர்நிலைகளில் உள்ள பறவைகளும் வண்டுகளும் இடம் பெயரும் வளநாட்டு மன்னன் கலிங்கர் கோன். *146*

கேகய மன்னன்

154. அங்கை வரிவளையாய் ஆழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க் - கங்கையிடைச்
சேல்குளிக்கும் கேகயர்கோன் தெவ்வாடற் கைவரைமேல்
வேல்குளிக்க நின்றான்இவ் வேந்து.

பதவுரை:

அங்கை வரிவளையாய் - அழகிய வளையலை அணிந்தவளே, ஆழித் திரை கொணர்ந்த செங்கண் மகரத்தை - கடல் அலைகளால் கரைக்குக் கொணரப்பட்ட மகரமீனை, தீண்டிப் போய் சேல் கங்கையிடைக் குளிக்கும் - உரசிய கெண்டை மீன்கள் கங்கை நீரில் குளிக்கின்ற நாட்டுக்குத் தலைவன் கேகயர்கோன், தெவ் ஆடல் கை வரைமேல் இவ்வேந்து வேல்குளிக்க நின்றான் - பகைவரின் யானைகளின் மீது வேலைச் செலுத்தி நின்றவனும் இவனே காண்.

பொழிப்புரை:

வளையலை அணிந்தவளே, கடல்அலைகளால் தள்ளப்பட்ட மகர மீனை உரசிக் கெண்டை மீன்கள் கங்கையில் குளிக்கும் நாடன் கேகயர் கோன். அவன் வேல்கள் பகைவர் யானைகளைக் குத்த நின்றான் அவன். *147*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காந்தார மன்னன்

155. மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தான்ஏகும் அன்னம் தனிக்கயிற்றில் - போம்நீள்
கழைக்கோ தையரேய்க்கும் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்.

பதவுரை:

மழைக் கோதை மானே - கரிய மேகத்தைப் போலக் கூந்தலை உடைய மானே, மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது - நீர்நிறைந்த குளங்களில் உள்ள வள்ளைக் கொடிகளின் மேல், தான் ஏகும் அன்னம் - அன்னம் நடந்து செல்லும் காட்சி, தனிக்கயிற்றில் போம்நீள் கழைக் கோதையர் ஏய்க்கும் - கயிற்றின்மீது நடந்து செல்லும் கழைக் கூத்தாடும் பெண்கள் போல் இருக்கும், காந்தார நாடன் மன் - வளநாட்டு மன்னன் காந்தார மன்னன் ஆவான்.

பொழிப்புரை:

மேகம் போன்ற கூந்தலை உடையவளே, குளங்களில் மண்டியுள்ள வள்ளைக் கொடிகளின் மேல் அன்னப் பறவைகள் நடக்கும் காட்சி, கழைக்கூத் தாடும் கன்னியர் கயிற்றின் மேல் நடப்பதை ஒத்திருக்கும் வளநாட்டு மன்னன் காந்தார மன்னன் ஆவான். *148*

சிந்து நாட்டு மன்னன்

156. அங்கை நெடுவேற்கண் ஆயிழையாய் வாவியின் வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச் - செங்கமலப்
பூச்சிந்து நாள்தேறல் பொன்விளைக்கும் தண்பணைசூழ்
மாச்சிந்து நாட்டான்இம் மன்.

பதவுரை:

அங்கை நெடுவேற்கண் ஆயிழையாய் - அழகிய உள்ளங்கையும் வேல்போன்ற கண்களும் அணிகளும் உடையவளே, வாவியின்வாய்ச் சங்கம் புடைபெயர - குளத்தில் உள்ள சங்குகள் இடம்பெயர, செங்கமலப் பூ தான்கலங்கி சிந்து நாள் தேறல் - தாமரைப்பூக்கள் கலங்கிச் சிந்துகின்ற தேனானது, பொன்விளைக்கும் தண்பணைசூழ் - பொன்னிற முள்ள நெல்லை விளைவிக்கும் குளிர்ந்த வயல்கள் நிறைந்த, மாச்சிந்து நாட்டான் இம்மன் - பெருமையுடைய சிந்து நாட்டுக்குத் தலைவன் இம்மன்னன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

தமயந்தியே, சங்குகள் இடம் பெயர்வதால் தாமரைப் பூக்கள் கலங்கிச் சிந்துகின்ற தேன் வழிந்தோடி நெற்பயிரை விளையவைக்கும் நல்ல வயல்கள் நாடு சிந்துநாடு. இவன் அந்நாட்டு மன்னன் ஆவான். *149*

நளன் உருவில் தேவர்கள்

157. காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார் - பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்(று)
ஊசலா(டு) உற்றாள் உளம்.

பதவுரை:

பூவரைந்த மாசுஇலாப் பூங்குழலாள் - பூக்களை அணிந்த அழகிய கூந்தலை உடைய தமயந்தி, தன்சேடி காவலரைக் காட்டக் கண்டு - தன்தோழி வந்த அரசர்களை இன்னார் எனக் காட்டுவதைக் கண்டு, மற்று நளன் உருவாச் சென்று இருந்தார் - நளன் உருவத்தில் இருந்தவராகிய, ஈரிருவர் தேவர் அவரைக் காணா நின்று - தேவர் நால்வரில் இன்னார் இன்னார் என அறிய முடியாமல், உளம் ஊசலாடு உற்றாள் - மனம் கலங்கித் தவித்தாள்.

பொழிப்புரை:

தமயந்திக்குத் தோழியானவள் வந்திருந்தோர் இன்னார் என அடையாளம் காட்டினாள். நளன் உருவத்திலேயே இந்திரன் முதலிய நான்கு தேவர்களும் இருந்ததால் தமயந்தி நளன் யாரென அறியாமல் மனம் தடுமாறினாள். *150*

தேவர்களும் வந்தனர்

158. பூணுக்(கு) அழ(கு)அளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் - நீள்நிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளன்உருவாய்ப் போந்து.

பதவுரை:

பூணுக்கு அழகுஅளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால் - நகைகளுக்கு அழகைத் தருகின்ற தமயந்தியைக் கண்ட போது, நாண்உக்கு நெஞ்சுஉடைய நீள்நிலத்து நல்வேந்தர் - சுயம்வரத்துக்கு வந்த அரசர்களின் நாணம் அழிய நெஞ்சும் உடைந்தது எனின், மற்று எவர் வாராதார் - வேறு எவர்தாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாராது இருந்தார்கள், பொற்றேர் நளன்உருவாய்ப் போந்து - தேரைச் செலுத்தும் நளன் உருவில், வானவரும் வந்திருந்தார் - தேவர்களும் வந்திருந்தனர்.

பொழிப்புரை:

அழகுக்கு அழகு சேர்த்த தமயந்தியைக் கண்ட அரசர்களின் வெட்கம் கெட்டது; நெஞ்சங்கள் உடைந்தன; சுயம்வரத்துக்கு வாராதார் எவரும் இலர். தேவர்களும் நளன் உருவில் ஆங்கு வந்திருந்தனர். *151.*

தமயந்தி தெய்வத்தை வேண்டல்

159. மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியான் ஆகில் கடிமாலை - அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே கொண்டு.

பதவுரை:

சூழ்விதியின் மன்னவனைத் தன் மனத்தே கொண்டு - ஊழ் வினையின் காரணமாகத் தமயந்தி நளனைத் தன் நெஞ்சில் நினைத்து, மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் - அழகிய மாலை அணிந்த வீமன் மரபில், செம்மைசேர் கன்னியான் ஆகில் - பிறந்த கற்புடைய கன்னிப் பெண் யான் ஆனால், அன்னம்தான் சொன்னவனை - அன்னப்பறவை சொன்ன நளவேந்தனுக்கு, கடிமாலை சூட்ட அருள் என்றாள் - மணமாலை சூட்ட அருள்செய் எனத் தெய்வத்திடம் வேண்டினாள்.

பொழிப்புரை:

தமயந்தி நளவேந்தனைத் தன் நெஞ்சில் நிறுத்தி, வீமவேந்தன் குலத்தில் உதித்த கற்புடைய கன்னி நான் ஆனால், அன்னம் சுட்டிய நளனுக்கு மாலை சூட்ட அருள் புரிக எனத் தெய்வத்திடம் வேண்டினாள். *152.*

நளனை அறிதல்

160. கண்இமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

பதவுரை:

நறுந்தாமரை விரும்பு நன்னுதலே அன்னாள் - அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளை ஒத்த தமயந்தி, ஆங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- சுயம்வர மண்டபத்தில், கண் இமைத்தலால் அடிகள் காசினியில் தோய்தலால் - கண்கள் இமைத்தலாலும் அடிகள் பூமியில் படுவதாலும், வண்ண மலர்மாலை வாடுதலால் - கழுத்தில் அணிந்துள்ள மலர்மாலைகள் வாடுதலாலும், எண்ணி நளன்தன்னை அறிந்தாள் - சிந்தித்துப் பார்த்து நளனை அடையாளம் கண்டாள்.

பொழிப்புரை:

திருமகள் போன்ற தமயந்தி மண்டபத்தில் கண்இமைத்தல், கால்கள் பூமியில் படுதல், மலர்மாலை வாடுதல் போன்ற செயல்களால் நளன்தன்னை அடையாளம் கண்டாள். 153

நளனுக்கு மாலை சூட்டல்

161. விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர - மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சுட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

பதவுரை:

விண்ணரசர் எல்லாரும் வெள்கிமனஞ் சுளிக்க - விண்ணிலுள்ள தேவர்கள் வெட்கி மனம் வருந்தவும், கண்ணகன் ஞாலம் களிகூர - பரந்த இவ்வுலகில் உள்ளவர்கள் உள்ளம் களிப்படையவும், மண்ணரசர் வன்மாலை தம்மனத்தே சுட - பூமியில் உள்ள அரசர்கள் தம் நெஞ்சம் கவலவும், பொன் வயவேந்தைப் பொன்மாலை சூட்டினாள் - திருமகள் போன்ற தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டினாள்.

பொழிப்புரை:

தேவர்கள் வெட்கி மனம் வாடவும் மண்ணிலுள்ளார் மனம் களிக்கவும் ஏமாற்றமடைந்த மன்னர்கள் உளம் வருந்தவும் தமயந்தி தான் நினைத்த நளனுக்கு மண மாலை சூட்டினாள். 154

வெளுத்த முகங்கள்

162. திண்தோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்தா மரையாய் வெளுத்தவே - ஒண்தாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேல்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது.

பதவுரை:

ஒண்தாரைக் கோமாலை வேலான் - ஒளிமிக்க மாலைஅணிந்த வேலைத்தாங்கிய நளன், குலமாலை வேல்கண்ணாள் பூமாலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றிருந்தபோது - நல்ல குடிப்பிறப்பும் பெருமையும் உடைய சிறந்த வேலைப் போன்ற கண்களை உடைய தமயந்தியின் பூமாலையைப் பெற்று வீற்றிருந்தபோது, திண்தோள் வயவேந்தர் - வலிமையான தோள்களை உடைய அரசர்களின், செந்தாமரை முகம்போய் - அன்றலர்ந்த செந்தாமரை போன்ற முகம் மாறி, வெண் தாமரையாய் வெளுத்தவே - வெள்ளைத் தாமரைபோல வெளிறிப் போயின.

பொழிப்புரை:

ஒளிமிகுந்த மாலை அணிந்து வேலைத் தாங்கிய நளன், நற்குடிப் பிறந்த வேல்போன்ற கண்ணாளின் மணமாலை பெற்று வீற்றிருந்தபோது வலிய தோள்களை உடைய மாமன்னர்களின் செந்தாமரை முகங்கள் வெண்தாமரை போல் வெளுத்து விட்டன. 155

செம்மாந்து நடந்தான்

163. மல்லல் மறுகின் மடநா(கு) உடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து - மெல்இயலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்.

பதவுரை:

நன்மாலை வேலான் நளன் - நல்ல மாலையும் வேலையும் உடைய நளன், மல்லல் மறுகின் - வளப்பமான தெருக்களில், மடநாகு உடனாகச் செல்லும் மழவிடைபோல் - இளமையான பசு உடன்வரச் செல்லும் இளம் காளைபோல, செம்மாந்து - விம்மிதமடைந்து, பொன்மாலை பெற்றதோளோடும் புறப் பட்டான் - தமயந்தியால் பெற்ற மணமாலை அணிந்து புறப்பட்டான்.

பொழிப்புரை:

மாலையும் வேலும் உடைய நளன், வளமான தெருக்களில் இளம்பசுவுடன் சேர்ந்து நடக்கும் இளம்காளைபோல விம்மிதத்துடன் தமயந்தி அளித்த மாலையை அணிந்து கொண்டு அவளோடு புறப்பட்டான். 156

கலி வருகை

164. வேலை பெறாஅமுதம் வீமன் திருமடந்தை
மாலை பெறா(து)அகலும் வான்நாடர் - வேலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்நெறியில் ஆக்கும்
இருங்கலியைக் கண்டார் எதிர்.

பதவுரை:

வேலை பெறாஅமுதம் வீமன் திருமடந்தை - கடலிடத்தே பிறவாத அமுதம் போன்ற வீமன் திருமகளாம் தமயந்தியின், மாலை பெறாது அகலும் வான்நாடர் - மணமாலையைப் பெறாமல் அகலும் இந்திரன் முதலிய தேவர்கள், வேலை பொருங்கலிநீர் ஞாலத்தை - கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகினரை, புன்நெறியில் ஆக்கும் - அழிவுப் பாதைக்குச் செலுத்தும், இருங்கலியை எதிர் கண்டார் - கலிபுருடனை எதிரே கண்டனர்.

பொழிப்புரை:

அமுதம் போன்ற வீமன் மகளாகிய தமயந்தியின் மணமாலை பெறாமல் திரும்பிச் செல்லும் தேவர்கள் இவ்வுலகினரைத் துன்பத்துக்கு ஆளாக்கும் கலிபுருடனை எதிரில் கண்டனர். 157

இந்திரனும் கலியும்

165. ஈங்குவர(வு) என்என்(று) இமையவர்தம் கோன்வினவத்
தீங்கு தருகலியும் செப்பினான் - நீங்கள்
விருப்பான வீமன் திருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான்.

பதவுரை:

இமையவர்தம் கோன் - தேவர்குலத் தலைவனான இந்திரன், ஈங்கு வரவு என் என்று வினவ - (கலிபுருடனிடம்) இங்கு வந்ததன் காரணம் என்ன என வினவவும், நீங்கள் விருப்பான வீமன் திருமடந்தை யோடும் - நீங்கள் விரும்பிய வீமன் மகளோடு, இருப்பான் யான் வருகின்றேன் - மணம்புரிந்து கூடியிருக்க வருகின்றேன் என, தீங்கு தருகலியும் செப்பினான் - பிறருக்குத் தொல்லைதரும் கலிபுருடன் சொன்னான்.

பொழிப்புரை:

கலிபுருடனிடம் இந்திரன் ‘இங்கு வந்த காரணம் யாது’ என வினவினான். அதற்குக் கலிபுருடன் ‘நீங்கள் விரும்பிய தமயந்தியை மணந்துவாழ வருகின்றேன்’ எனக் கூறினான். 158

உன் கருத்தை விட்டுவிடு

166. மன்னவரில் வைவேல் நளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான் - உன்னுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளக் கருத்தை ஒழித்தே குதிஎன்றான்
வெள்ளைத் தனியானை வேந்து.

பதவுரை:

வெள்ளைத் தனியானை வேந்து - வெள்ளை யானையை ஊர்தியாக உடைய இந்திரன், மன்னவரில் வைவேல் நளனே - (சுயம்வரத்திற்கு வந்த) மன்னர்களில் வேலை ஏந்திய நளனே, மதிவதனக் கன்னி மணமாலை கைக்கொண்டான் - நிலவை ஒத்த முகத்தை உடைய தமயந்தியின் மணமாலையைச் சூடிக்கொண் டான், உன்னுடைய உள்ளக் கருத்தை ஒழித்தே குதிஎன்றான் - (ஆதலால்) உன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு ஒதுங்கிவிடு என்றான் கலியிடம்.

பொழிப்புரை:

இந்திரன் கலியிடம், 'நளனுக்குத் தான் தமயந்தி மாலை சூட்டிவிட்டாள். ஆதலால் உன் எண்ணத்தைக் கைவிட்டு ஒதுங்கி விடு' என்றான். *159*

கெடுத்தலும் கொடுத்தலும்

167. விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின் - எண்ணம்
கெடுக்கிறேன் மற்றவள்தன் கேள்வற்கும் கீழ்மை
கொடுக்கின்றேன் என்றான் கொதித்து.

பதவுரை:

விண்ணரசர் நிற்க - வானுலகத் தேவர்களைப் புறக்கணித்து, மணமாலை மண்ணரசர்க்கு ஈந்த மடமாதின் - சுயம்வர மாலையை மண்ணுலக நளனுக்குப் போட்ட தமயந்தியின், எண்ணம் கெடுக்கின்றேன் - ஆசைக்குக் கெடுதல் செய்வேன், மற்றவள்தன் கேள்வற்கும் - அவளுடைய கணவனுக்கும், கீழ்மை கொடுக்கிறேன் - தாழ்வு நிலையை உண்டாக்குவேன், கொதித்து என்றான் - (என்று) மனம் கொதித்துக் கூறினான் கலி.

பொழிப்புரை:

'தமயந்தி தேவர்களைப் புறக்கணித்து நளனுக்கு மாலை சூட்டி யமைக்காக அவளுக்குக் கெடுதல் செய்வேன்; அவள் கணவனுக்கும் தாழ்வை உண்டாக்குவேன்' என்று கலி கொதித்துக் கூறினான். *160*

நளனது சிறப்பு

168. வாய்மையும் செங்கோல் வளனும் மனத்தின்கண்
தூய்மையும் மற்(று)அவன் தோள்வலியும் - பூமான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெடுங்கற்பும் மற்(று)அவர்க்கு நின்(று)உரைத்துப் போனான்.
அடுங்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு.

பதவுரை:

அடுங்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு நின்று - எதிரிகளைக் கொல்லும் வச்சிராயுதம் உடைய இந்திரன் ஆங்கு நின்று, வாய்மையும் செங்கோல் வளனும் - நளமன்னனின் வாய்மையும் செங்கோல் சிறப்பும், மனத்தின்கண் தூய்மையும் - அவனது உள்ளத் தூய்மையும், மற்றுஅவன்தோள் வலியும் - தோள் வலிமையும், பூமான் நெடுங்கற்பும் - தமயந்தியின் கற்பின் பெருமையும், அவர்க்கு உரைத்துப் போனான் - கலியிடம் உரைத்தபின் அங்கிருந்து புறப்பட்டான்.

பொழிப்புரை:

வலிமை சான்ற இந்திரன் கலியிடம், 'நளனது வாய்மை, செங்கோல் சிறப்பு, மனத்தூய்மை, தோள்வலிமை, தமயந்தியின் கற்புச் சிறப்பு' ஆகியவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு ஆங்கிருந்து புறப்பட்டான். *161*

விடநாகம் கலி

169. செருக்கதிர்வேல் கண்ணியுடன் தேர்வேந்தன் கூட
இருக்கத் தரியேன் இவரைப் - பிரிக்க
உடன்ஆக என்றான் உடனே பிறந்த
விடநாகம் அன்னான் வெகுண்டு.

பதவுரை:

உடனே பிறந்த விடநாகம் அன்னான் வெகுண்டு - நஞ்சோடு பிறந்த நல்ல பாம்பைப் போன்ற கலி மிகவும் கோபமடைந்து, செருக்கதிர்வேல் கண்ணியுடன் - போரில் வெல்லும் ஒளியுடைய வேல் போன்ற கண்ணாள் தமயந்தியுடன், தேர்வேந்தன் கூட இருக்கத் தரியேன் - நளவேந்தன் சேர்ந்து இருக்க விடமாட்டேன், இவரைப் பிரிக்க உடன்ஆக என்றான் - இவர்கள் இருவரையும் பிரிக்க நீங்களும் உதவ வேண்டும்' என்றான்.

பொழிப்புரை:

நஞ்சோடு பிறந்த நாகம் போன்ற கலி கோபப்பட்டுத் 'தமயந்தியும் நளனும் இணைந்து வாழ ஒரு போதும் ஒருப்படேன்; அவர்களைப் பிரிக்க நீங்களும் உதவுக' எனத் தேவர்களிடம் வேண்டினான். *162*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்கலநாள் காணவந்த கதிரோன்

170. செங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போல் - செங்குமுதம்
வாய்அடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நன்னெஞ்சில்
தீஅடங்க ஏறினான் தேர்.

பதவுரை:

வெங்கதிரோன் தானும் - வெப்பமான கதிர்களை உடைய கதிரவன், விதர்ப்பன் திருமடந்தை மங்கலநாள் காண வருவான் போல் - வீமராசன் திருமகளாம் தமயந்தியின் மணவிழாவைக் காணவருபவள் போல, செங்குமுதம் வாய் அடங்க - அல்லி மலர்கள் கூம்பவும், மன்னற்கும் வஞ்சிக்கும் நன்நெஞ்சில் தீஅடங்க - நளன், தமயந்தி நெஞ்சில் கிளம்பிய காதல்தீ அடங்கவும், தேர் ஏறினான் - பயணம் செய்ய தன் தேரில் புறப்பட்டான்.

பொழிப்புரை:

கதிரவன், வீமன் மகள் தமயந்தியின் திருமண விழாவைக் காண வருபவன்போல அல்லிமலர்கள் கூம்பவும் நளன் தமயந்தி நெஞ்சில் ஏற்பட்ட காமத்தீ அடங்கவும் தன்தேரில் ஏறிப் புறப்பட்டான். *163*

தமயந்திக்குப் பூட்டினார்

171. இன்னுயிர்க்கு நேரே இளமுறுவல் என்கிற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல் - மென்மலரும்
சூட்டினார் சூட்டித் துடிசேர் இடையாளைப்
பூட்டினார் மின்இமைக்கும் பூண்.

பதவுரை:

இன்னுயிர்க்கு நேரே இளமுறுவல் என்கிற - ஆண்களின் இனிய உயிர்க்கு சமமானது தமயந்தியின் புன்னகை ஒன்றே எனக் கூறுகிற, பொன் அழகைத் தாமே புதைப்பார்போல் - திருமகளை ஒத்த அவளின் அழகைச் சேடியரே மறைப்பதுபோல, மென்மலரும் சூட்டினார் - மலர்மாலைகளை அணிவித்தனர், சூட்டி - சூட்டியபின், துடிசேர் இடையாளை - துடி எனும் கருவியின் நடுவிடம்போல இடைசிறுத்த அவளுக்கு, மின் இமைக்கும் பூண் சூட்டினார் - மின்னல்போல் ஒளிவிடும் அணிகளைச் சூட்டினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

ஆண்கள் உயிர்க்குச் சமமான புன்னகை உடைய தமயந்தியின் உடல் அழகை அவள் சேடியரே மறைத்தாற்போல மென்மலர்மாலைகளைச் சூட்டினர்; துடி இடையாளாகிய அவளுக்கு அழகிய அணிகளைப் பூட்டினர். 164

திருமணம் நடந்தது

172. கணிமொழிந்த நாளில் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ணல் அவற்கும் - பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார்
மற்(று)எவரும் ஒவ்வார் மகிழ்ந்து

பதவுரை:

அணிமொழிக்கும் அண்ணல் அவற்கும் - தமயந்திக்கும் நளனுக்கும், கணிமொழிந்த நாளில் - சோதிடன் குறித்துக் கொடுத்த நாளில், கடிமணமும் செய்தார் - திருமணம் செய்வித்தார்கள், மற்று எவரும் ஒவ்வார் - தமயந்திக்கும் நளனுக்கும் வேறு எவரும் ஒப்பாக மாட்டார்கள், பணிமொழியார் குற்றேவல் செய்ய - சேடிப் பெண்கள் மணமக்களுக்கு வேண்டிய உதவிகள் செய்துதர, மகிழ்ந்து கொழும்பொன் அறைபுக்கார் - மனநிறைவுடன் தடாக்கென அமைக்கப்பட்ட பள்ளி அறைக்குள் புகுந்தார்கள்.

பொழிப்புரை:

தமயந்திக்கும் நளனுக்கும் சோதிடன் கணக்குப்படி மணம்செய்வித்தார்கள். ஒப்புயர்வற்ற அவர்கள் இருவருக்கும் சேடியர்கள் குற்றேவல் செய்ய, மனம் மகிழ்ந்து பள்ளியறைக்குள் புகுந்தார்கள். 165

மன்மதன் விளையாட்டு

173. செந்திருவின் கொங்கையினும் தேர்வேந்தன் ஆகத்தும்
வந்(து)உருவ வார்சிலையைக் கால்வளைத்து வெந்தீயும்
நஞ்சும் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சும் தொடுத்தான் அவன்.

பதவுரை:

செந்திருவின் கொங்கையினும் - திருமகளை ஒத்த தமயந்தியின் கொங்கையிடத்தும், தேர்வேந்தன் ஆகத்தும் - நளவேந்தன் மார்பிடத்தும், வந்து உருவ - உள்ளே நுழைந்து ஊடுருவ, வார்சிலையைக் கால் வளைத்து - கரும்புவில்லை வளைத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊன்றி, வெந்தீயும் நஞ்சும் தொடுத்த அனைய - தீயையும் நஞ்சையும் கலந்தது போல, நாம மலர்வாளி - மலரம்புகள், அவன் அஞ்சும் தொடுத்தான் - மன்மதன் ஐந்தையும் தொடுத்தான்.

பொழிப்புரை:

மன்மதன் தன் வில்லை வளைத்து ஊன்றி மலரம்புகள் ஐந்தையும் தமயந்தியின் கொங்கையும் நளனின் மார்பையும் ஊடுருவும் வண்ணம் தொடுத்தான். *166*

புனலும் புனலும் கலந்ததுபோல

174. ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி
இருவர்எனும் தோற்றம் இன்றி - பொருவெங்
கனற்கேயும் வேலானும் காரிகையும் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று.

பதவுரை:

பொருவெம்கனற்கு ஏயும் வேலானும் - போரிடும் வெப்பமான கனலை ஒத்த வேலை உடைய நளனும், காரிகையும் - தமயந்தியும், புனற்கே புனல் கலந்தாற்போன்று - நீரோடு நீர் கலந்தாற் போல, ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி - இருவர் உடலும் ஒன்றாக இணைந்து, இருவர் எனும் தோற்றம் இன்றி - இருவர் என்னும் தோற்றம் தோன்றாமல், சேர்ந்தார் - இரண்டறக் கலந்து திளைத்தார்.

பொழிப்புரை:

நளனும் தமயந்தியும் நீரோடு நீர் கலந்தாற்போல, இருவர் உடலும் ஒன்றாக இணைந்து, இருவர் எனும் தோற்றம் வெளிப்படாமல் கூடித் திளைத்தார்கள். *167*

கலவிப் போர்

175. குழைமேலும் கோமான் உயிர்மேலும் கூந்தல்
மழைமேலும் வாள்ஓடி மீள - விழைமேலே
அல்லோடும் வேலான் அகலத்தோ டும்பொருதாள்
வல்லோடும் கொங்கை மடுத்து

பதவுரை:

குழைமேலும் கோமான் உயிர்மேலும் - காதிலுள்ள குழையிடத்தும் நளன் உயிரிடத்தும், கூந்தல் மழைமேலும் வாள் ஓடிமீள - மேகம் போன்ற கூந்தலிடத்தும் வாள் போன்ற கண்கள் ஓடி மீளவும், விழைமேலே - மேலும் ஆசைகொண்டு, அல்ஓடும்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

வேலான் அகலத் தோடும் - இருளை ஓட்டும் ஒளிமிக்க வேல் தாங்கிய நளனின் மார்போடு, வல்ஓடும் கொங்கை மடுத்து - சொக்கட்டான் காய்போன்ற கொங்கைகளோடு நெருக்கி, பொருதாள் - கலவிப்போர் செய்தாள் தமயந்தி.

பொழிப்புரை:

தன் காதிலுள்ள குழை, நளன் உயிர், மேகம் போன்ற கூந்தல் முதலிய இடங்களில் தமயந்தியின் கண்கள் ஓடி மீளவும் மேலும் ஆசை கொண்டு இருளை, விரட்டும் ஒளிமிக்க நளன் மார்பைத் தன் கொங்கைகள் நெருக்கக் கலவிப் போரிட்டாள். 168

குங்கும வண்டல்

176. வீரன்அக லச்செறுவின் மீ(து)ஓடிக் குங்குமத்தின்
ஈர இளவண்டல் இட்டதே - நேர்பொருத
கார்ஆரும் மெல்ஓதிக் கன்னியவள் காதல்எனும்
ஓராறு பாய உடைந்து.

பதவுரை:

நேர்பொருத - நுணுக்கமாகக் கலவிப்போர் செய்த, கார்ஆரும் மெல் ஓதிக் கன்னியவள் - மேகத்தை ஒத்த கூந்தலை உடைய தமயந்தியின், காதல் எனும் ஓராறு பாய - காதல் என்னும் ஆறு பாய்ந்தோடுவதால், உடைந்து வீரன் அகலச் செறுவின் மீது ஓடி - மடைதிறந்து நளனின் மார்பாகிய வயலில் பாய்ந்து, குங்குமத்தின் ஈர இளவண்டல் இட்டதே - குங்குமக் கலவையின் குளிர்ந்த வண்டலை உண்டாக்கிற்று.

பொழிப்புரை:

கலவிப் போர் செய்த தமயந்தியின் காதல் எனும் ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால், நளனின் மார்பாகிய வயலில் மடைதிறந்து வெள்ளம் பாய்ந்து குங்குமக் கலவையின் குளிர்ந்த வண்டலை உண்டாக்கிற்று. 169

நளன் கூடல்

177. கொங்கை முகங்குழையக் கூந்தல் மழைகுலையச்
செங்கயற்கண் ஓடிச் செவிதடவ - அங்கை
வளைபூசல் ஆட மடந்தையுடன் சேர்ந்தான்
விளைபூசல் கொல்யானை வேந்து.

பதவுரை:

விளைபூசல் கொல்யானை வேந்து - பகைவரைக் கொல்லும் யானைப் படையை உடைய நளன், கொங்கை முகம் குழைய -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொங்கைகளின் முகம் குழையவும், கூந்தல் மழைகுலைய - மேகம் போன்ற கூந்தல் அவிழ்ந்து கலையவும், செங்கயற்கண் ஓடிச் செவிதடவ - சிவந்த கயல்கண்கள் செவியளவு ஓடித்தடவவும், அங்கை வளைபூசல் ஆட - கைவளையல் ஒன்றோடொன்று மோதி ஒலிக்கவும், மடந்தையுடன் சேர்ந்தான் - மங்கையாகிய தமயந்தியுடன் கூடினான்.

பொழிப்புரை:

யானைப் படையை உடையநளன் தமயந்தியின் கொங்கைகள் குழையவும் கூந்தல் அவிழவும் கண்கள் ஓடிக் காதுகளைத் தடவவும் கைகளில் உள்ள வளையல் உராய்ந்து ஒலி எழுப்பவும் அவளைக் கூடிமகிழ்ந்தான். 170

குண்டினபுரத்தில்

178. தையல் தளிர்க்கரங்கள் தன்தடக்கை யால்பற்றி
வையம் முழுதும் மகிழ்தூங்கத் - துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாள்நுதலும் தானும்
புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு.

பதவுரை:

தையல் தளிர்க்கரங்கள் தன்தடக்கையால் பற்றி - தமயந்தியின் தளிர்க் கைகளை நளன் தன்கைகளால் சேர்த்து, வையம் முழுதும் மகிழ்தூங்க - பூமியிலுள்ளார் அனைவரும் மனம் மகிழ, துய்ய மணந்தான் முடித்ததற்பின் - மணந்து கொண்ட பின்னர், வாள்நுதலும் தானும் - அவளும் அவனும், புக்கு நெடுங்காலம் புணர்ந்தான் - குண்டின புரத்திலேயே நெடுங்காலம் சேர்ந்து வாழ்ந்தான்.

பொழிப்புரை:

தமயந்தியின் கைகளை நளன்தன் கைகளால் இணைத்துப் புவியில் உள்ளவர்கள் மகிழ மணந்தான். மணந்தபின் குண்டினபுரத்தில் அவளும் அவனும் நெடுங்காலம் கூடி வாழ்ந்தார்கள். 171

சுயம்வர காண்டம் முற்றும்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ. கலிதொடர் காண்டம்

திருமால்

179. முந்தை மறைநூல் முடிஎனலாம் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரம்எனலாம் - நந்தும்
புழைக்கைக்கும் நேயப் பொதுவர்மக ளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல் அடி.

பதவுரை:

நந்தும் புழைக்கைக்கும் - (முதலையிடம் அகப்பட்டு) வருந்திய யானைக்கும், நேயப் பொதுவர் மகளிர்க்கும் - (திருமாலிடம்) அன்புடைய இடைக்குலப் பெண்களுக்கும், அழைக்கைக்கு முன்செல் அடி - அழைத்தபோது முன்னே சென்ற திருமாலின் திருவடிகள், முந்தை மறை நூல் முடிஎனலாம் - தொன்மையான வேதநூல்களுக்குத் தலைமை எனலாம், தண்குருகூர்ச் செந்தமிழ் வேத சிரம் எனலாம் - குருகூரார் நம்மாழ்வார் மொழிந்த திருவாய்மொழி வேதத்தின் முடி எனவும் கூறலாம்.

பொழிப்புரை:

முதலையிடம் சிக்கிய யானையைக் காத்தவர் திருமால்;இடைக் குலப் பெண்களின் அழைப்புக்குச் சென்றவர் அவர்; வேதநூல் களுக்குத் தலைமை ஆனவர்; நம்மாழ்வாரின் திருவாய்மொழி வேதத்தின் முடிஆனது. ஆதலால் அவரைத் தொழுவோம். 1

சிவன்

180. செக்கர் நெடுவானில் திங்கள் நிலாத்துளும்பி
உக்க தெனச்சடைமேல் உம்பர்நீர் - மிக்(கு)ஒழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தான் எங்கட்(கு) உளன்.

பதவுரை:

செக்கர் நெடுவானில் - சிவந்த நெடுவானத்தில், திங்கள் நிலாத் துளும்பி உக்க தென - நிலவின் ஒளி நிரம்பித் ததும்பியதுபோல, சடைமேல் உம்பர்மிக்கு ஒழுகும் வெள்ளத்தானும் - சடைமேல் கங்கைநீர் மிகுந்து ஓடும் தன்மையுடையானும், வெள்ளி நெடுங் கிரியான் - வெள்ளி மலைக்கு (இமயமலை) உரியவனும், மெய்யன்பர் உள்ளத்தான் - மெய்யன்பர் நெஞ்சத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடியிருப்பவனுமாகிய சிவபெருமான், எங்கட்கு உளன் - எமக்கும் காப்பாக உள்ளான்.

பொழிப்புரை:

நெடுவானத்தில் நிலவின் ஒளிததும்பி வழிவதுபோலச் சடையில் கங்கைநீர் ஒழுகுபவனும் வெள்ளிமலைக்கு உரியவனும் மெய்யன்பர் உள்ளத்தில் வாழ்பவனும் ஆன சிவபெருமான் எமக்கும் காப்பாக இருக்கின்றான். 2

நளன் தன் நகர் அடைதல்

181. தவளத் தனிக்குடையின் வெண்ணிழலும் தையல்
குவளைக் கருநிழலும் கொள்ளப் - பவளக்
கொழுந்தேறிச் செந்நெல் குலைசாய்க்கும் நாடன்
செழுந்தேரில் ஏறினான் சென்று.

பதவுரை:

பவளக் கொழுந்துஏறிச் செந்நெல் குலை சாய்க்கும் நாடன் - பவளக்கொடிகள் ஏறிப் படர்வதால் நெற்பயிர் சாயும் வளநாடனாகிய நளன், தவளத் தனிக்குடையின் வெண்ணிழலும் - தன் வெண்கொற்றக் குடையின் வெள்ளிய நிழலும், தையல் குவளைக் கருநிழலும் கொள்ள - தமயந்தியின் குவளைமலரை ஒத்த கண்களின் நிழலும் கவிந்துவர, சென்று செழுந்தேரில் ஏறினான் - தன் நகர்க்குச் செல்லத் தேரில் புறப்பட்டான்.

பொழிப்புரை:

பவளக் கொடிகள் ஏறிப்படர்வதால் தலைசாய்ந்த நெற்பயிர் நிறைந்த நாடனாகிய நளன் தன் வெண்கொற்றக் குடையின் நிழலும் தமயந்தியின் கருநிறக் கண்களின் நிழலும் கவிந்துவரத் தேர் ஏறித்தன் நாட்டுக்குப் புறப்பட்டான். 3

வாழ்த்தும் வண்டுகள்

182. மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்(து)அணையப்
பொங்கி எழுந்த பொறிவண்டு - கொங்கோடு
எதிர்கொண்(டு) அணைவனபோல் ஏங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண்.

பதவுரை:

முத்தின் கதிர்கொண்ட பூண் முலையாய் - முத்துகளின் ஒளிவீச பல அணிகளை அணிந்தவளே, மங்கையர்கள் வாச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர்கொய்வான் வந்து அணைய - பெண்கள் மண முள்ள மலர்களைப் பறிக்க வந்தபோது, பொங்கி எழுந்த பொறிவண்டு - அஞ்சிப் பறந்த வண்டுகள், கொங்கோடு எதிர்கொண்டு - தேனினைக் கொண்டு மகளிரை வரவேற்பதற்கு, அணைவன போல் ஏங்குவ - சேர்வனபோல ஆரவாரித்தன, காண் - காண்பாயாக.

பொழிப்புரை:

பல அணிகளை அணிந்தவளே, மங்கையர்கள் மலர் கொய்ய வருவதைக் கண்டு அஞ்சிப் பறந்த வண்டுகள், அவர்களுக்குத் தேனைத் தந்து வரவேற்பதற்குச் சேர்ந்தனபோல ஆரவாரித்தன, பாராய். 4

பூங்கொடிகள் தாழ்ந்தன

183. பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலும்அப் பூங்கொம்பு - மேவியவர்
பொன்னடியில் தாழ்ந்தனவே பூங்குழலாய்! காண்என்றான்
மின்னெடுவேல் கையான் விரைந்து.

பதவுரை:

மின்னெடுவேல் கையான் - மின்னல் போன்ற நெடிய வேலைத் தாங்கிய நளன், பூங்குழலாய் - பூக்கள் நிறைந்த குழலை உடையவளே, பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே - பெண்களுடைய கைத் தீண்டலுக்குத் தாழாதார் யார் உளர்?, அப்பூங்கொம்பு - பூக்கள் நிறைந்த கிளைகளில், பூவையர்கை தீண்டலும் - பெண்களின் கைப்பட்டதும், விரைந்து மேவியவர் பொன்னடியில் தாழ்ந்தனவே - வேகமாகக் கைப்பட்டவரின் அடிகளில் தாழ்ந்தன, காண் - இதனையும் காண்க.

பொழிப்புரை:

நளன் தமயந்தியிடம், 'அழகிய கூந்தலை உடையவளே, பெண்களின் கைத்தீண்டலுக்குப் பணியாதார் யார்? அவர்களின் கைகள் பூம்கொம்புகளில் பட்டவுடன் அவை விரைந்து அவர்கள் அடிகளில் தாழ்ந்தன, பார். 5

தாமரையும் காந்தளும்

184. மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வாள்முகத்தைப்
பங்கயம் என்(று) எண்ணிப் படிவண்டைச் - செங்கையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காத்தாள்அக் கைம்மலரைக் காந்தள்எனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காண்என்றான் வேந்து.

பதவுரை:

மலர் கொய்வாள் - மலரைக் கொய்கின்ற, மங்கை ஒருத்தி வாள் முகத்தை - மங்கை ஒருத்தியின் ஒளிபொருந்திய முகத்தை, பங்கயம் என்று எண்ணிப் படிவண்டை - தாமரைப் பூ என்று நினைத்துப் படிகிற வண்டை, செங்கையால் காத்தாள் - தன் செங்கையால் தடுத்தாள், அக்கைம்மலரைக் காந்தள் எனப் பாய்தலுமே - தடுத்த அக்கையைக் காந்தள் மலர் என நினைத்து வண்டு படிந்தவுடன், வேர்த்தாளை - உடல் முழுதும் வேர்த்தாளை, காண் என்றான் - பார் என்றான், வேந்து - நளமன்னன்.

பொழிப்புரை:

மலர் கொய்பவளின் முகத்தைத் தாமரை என வணடுகள் படியக் கைகளால் தடுத்தாள்; தடுத்த கைகளைக் காந்தளாக எண்ணி மீண்டும் வண்டுகள் மொய்த்தன. அஞ்சிய அவள் உடல் வியர்த்தது; இதனைப் பார் என்றான் நளன். 6

மலர் சூட்டுமிடம்

186. கொய்த மலரைக் கொடுங்கையி னால்அணைத்து
மொய்குழலில் சூட்டுவான் முன்வந்து - தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினான் பாவையிடைக்(கு)
ஆதாரம் இல்லாத(து) அறிந்து.

பதவுரை:

கொடுங்கையினால் அணைத்து - (ஒருவன் தன்காதலியை) கொடுங்கையில் அணைத்துக்கொண்டு, கொய்த மலரை - பறித்த பூக்களை, மொய்குழலில் சூட்டுவான் முன்வந்து - அவள் கூந்தலில் சூட்டமுன் வந்தான், பாவையிடைக்கு ஆதாரம் இல்லாதது அறிந்து - காதலியின் இடை இருப்பதற்கு ஆதாரம் இல்லாதது அறிந்து, தையலாள் பாதார விந்தத்தே சூட்டினான் - அவளுடைய திருவடிகளிலேயே சூட்டிவிட்டான்.

பொழிப்புரை:

காதலன் ஒருவன் தன் காதலியை அணைத்துக் கொண்டு தான் பறித்த மலர்களை அவள் கூந்தலில் சூட்ட முன்வந்தான். அவளுக்கு இடை இருப்பதற்கு ஆதாரம் இல்லாதது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிந்தவுடனே பறித்த மலர்களை அவள் காலடிகளில் சூட்டிவிட்டான். 7

கலவிப் படுக்கை

187. ஏற்ற முலையார்க்(கு) இளைஞர் இடும்புலவித்
தோற்ற அமளியெனத் தோற்றுமால் - காற்(று) அசைப்ப
உக்க மலரோ(டு) உகுத்தவளை முத்தமே
எக்கர் மணல்மேல் இசைந்து.

பதவுரை:

காற்று அசைப்ப உக்க மலரோடு - காற்று உதிர்த்த மலர்களோடு, வளைஉகுத்த முத்தமே - சங்குகள் ஈன்ற முத்துகளும், எக்கர் மணல்மேல் இசைந்து - கடற்கரை மணல்மேல் சேர்ந்து, ஏற்ற முலையார்க்கு - உயர்ந்த முலைகளை உடையார்க்கு, இளைஞர் இடும்புலவித் தோற்ற அமளியெனத் தோற்றுமால் - அவர்கள் காதலர்கள் ஊடல் காலத்தில் அமைத்த மலர்ப்படுக்கைபோலத் தோன்றுகிறது.

பொழிப்புரை:

காற்று உதிர்த்த மலர்களும் சங்கு ஈன்ற முத்துகளும் கடற்கரை மணல் மேல் கிடப்பது, உயர்ச்சி உடைய மார்பை உடையவர்களுக்கு அவர்கள் காதலர்கள் ஊடற்காலத்தில் அமைத்த மலர்ப்படுக்கைபோல் காட்சி அளிக்கின்றன. 8

சோலை அழகு

188. அலர்ந்த மலர்சிந்தி அம்மலர்மேல் கொம்பு
புலர்ந்(து) அசைந்து பூவணைமேல் புல்லிக் - கலந்(து) ஒசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
அல்லென்ற சோலை அழகு.

பதவுரை:

அல்லென்ற சோலை அழகு - சூரியஒளி புகமுடியாத இருள் நிறைந்த சோலையில், அலர்ந்த மலர்சிந்தி - மலர்ந்த மலர்கள் தரையில் சிதற, அம்மலர்மேல் கொம்பு புலர்ந்து அசைந்து - அம்மலர்களின் மீது கொடி வாடி அசையும் காட்சி, பூவணை மேல் புல்லிக்கலந்து ஒசிந்த - மலர்ப்படுக்கையில் காதலனைத் தழுவி அயர்ந்த, புல்லென்ற கோலத்துப் பூவை யரைப் போன்றதே - புல்லிய கோலத்தில் இருக்கின்ற பெண்களைப் போல இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

இருட்டாக இருக்கிற சோலையில் மலர்களைச் சிந்திய கொம்புகள் வாடி அசையும் காட்சி, மலர்ப்படுக்கையில் காதலனைத் தழுவிய பெண்கள் சோர்ந்து இருக்கும் கோலம்போல் இருக்கிறது. 9

ஆம்பல் பூ

189. கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையால்
அங்(கு)அணைக்க வாய்நெகிழ்ந்த ஆம்பல்பூ - கொங்(கு)
அவிழ்தேன்
வார்க்கின்ற கூந்தல் முகத்தை மதியென்று
பார்க்கின்ற(து) என்னலாம் பார்.

பதவுரை:

கொடுங்கையால் - (மலர் கொய்யும் மகளிர்) தம் கொடுங்கையால், கொங்கை முகத்தணையக் கூட்டி - முலைகளில் பொருந்துமாறு சேர்ந்து, அங்கு அணைக்க ஆம்பல் பூ வாய்நெகிழ்ந்து - கட்டி அணைத்தலின் காரணமாக அல்லி மலர்கள் வாய் அவிழ்ந்தன, கொங்கு அவிழ்தேன் வார்க்கின்ற கூந்தல் முகத்தை - மணமுடைய தேனைச் சொரியும் அல்லிப்பூ கூந்தலையுடைய அப்பெண்ணின் முகத்தை, மதிஎன்று பார்க்கின்றது என்னலாம் - நிலவாக எண்ணிப் பார்க்கிறது போலும், பார் - பார்ப்பாயாக.

பொழிப்புரை:

மகளிர் தம் மார்பில் கட்டி அணைத்த அல்லிமலர்கள் அலர்ந்தன. தேனைச் சொரியும் அம்மலர்கள் கூந்தலை உடைய பெண்களின் முகத்தை நிலவென்று பார்க்கின்றது போலும்! 10

முக்கண்ணனை ஒத்தவள்!

190. கொய்த குவளை கிழித்துக் குறுநுதல்மேல்
எய்தத் தனிவைத்த ஏந்திழையாள் - வையத்தார்
உண்ணாக் கடுவிடத்தை உண்ட ஒருமூன்று
கண்ணானைப் போன்றனளே காண்.

பதவுரை:

கொய்த குவளை கிழித்து - குவளை மலரைக் கொய்து ஓரிதழைக் கிழித்தெடுத்து, குறுநுதல்மேல் எய்தத் தனிவைத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏந்திழையாள் - தன் நெற்றியின் மீது ஒரு பெண் வைத்துக் கொண்டாள், வையத்தார் உண்ணாக் கடுவிடத்தை - மற்றவர் உண்ணப்பயந்த நஞ்சை, உண்ட ஒருமூன்று கண்ணானைப் போன்றனளே - தானே உண்ட மூன்று கண்ணை உடைய சிவனைப் போல இருக்கிறாள் அவள், காண் - காண்க.

பொழிப்புரை:

குவளை மலரில் ஓரிதழைக் கிழித்து நெற்றியில் வைத்துக் கொண்ட பெண், பிறர் உண்ணத் தயங்கிய நஞ்சை உண்ட மூன்று கண்ணை உடைய சிவனைப் போல் இருக்கிறாள். 11

நீர் விளையாட்டு

191. கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள் - கெழுமியவக்
கோமகற்குத் தான்நினைந்த குற்றங்கள் அத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல்.

பதவுரை:

கெழுமிய அக்கோமகற்கு - தன்மீது பேரன்பு கொண்ட கணவனின், தான் நினைந்த குறறங்கள் அத்தனையும் பூமகட்குச் சொல்லுவாள் போல் - தான் கண்ட குறைகள் எல்லாவற்றையும் திருமகளிடம் சொல்ல நினைத்தவள் போல, கொழுநன் கொழுந்தாரை நீர்வீச - அவள் கணவன் அவள் மீது துருத்தியால் நீரைப்பீச்சி யடிக்கவும், கூசிச் செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தினாள் - வெட்கமடைந்து தன் முகத்தைத் தாமரையோடு சேர்த்துக் கொண்டாள்.

பொழிப்புரை:

அன்பான தன் கணவனின் குறைகளைத் திருமகளிடம் சொல்ல நினைத்தவள்போல, அவள் கணவன் அவள் மீது நீர்த்திவலைகளைப் பீச்சியடிக்க நாணப்பட்ட அவள் தன் முகத்தைத் தாமரைமலரோடு சேர்த்துக் கொண்டாள். 12

மூன்று முகம்

192. பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டில்
பெய்து முகம்மூன்று பெற்றாள்போல் - எய்த
வருவாளைப் பார்என்றான் மாற்றாரை வென்று
செருவாளைப் பார்த்(து)உவக்கும் சேய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

பதவுரை:

மாற்றாரை வென்று - எதிரிகளைக் கொன்ற, சேய் செருவாளைப் பார்த்து உவக்கும் - முருகனைப் போன்ற நளன் தன் வாளைப் பார்த்து மகிழ்வான், பொய்தல் கமலத்தின் போது இரண்டை - பெண்கள் விளையாட்டாகத் தாமரை மலர்களில் இரண்டைப் பறித்து, காது இரண்டில் பெய்து முகம் மூன்று பெற்றாள்போல் - இரண்டு காதுகளிலும் செருகி மூன்று முகம் உடையாள் போல, எய்த வருவாளைப் பார் என்றான் - நெருங்கி வருவாளைப் பார் என்று நளன் தமயந்தியிடம் கூறினான்.

பொழிப்புரை:

எதிரிகளைக் கொன்று குவித்த தன் வாளைப் பார்த்து மகிழ்ந்தான் நளன். ஒரு பெண் தாமரை மலர்கள் இரண்டைப் பறித்துத் தன் காதுகளில் செருகியிருக்கும் காட்சி மூன்று முகம் உடையாள்போல் தோன்றுகிறது. அவள் நம்மிடம் நெருங்கி வருவதைப் பார் என்றான் நளன் தமயந்தியிடம். *13*

காதலியைக் காணாதான்

193. பொன்னுடைய வாசப் பொகுட்டு மலர்அலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்(து) எழுந்த - மின்னுடைய
பூணாள் திருமுகத்தைப் புண்டரிகம் என்(று)அயிர்த்துக்
காணா(து) அயர்வானைக் காண்.

பதவுரை:

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலர் அலையத் - பொன்னிறமும் மணமும் உடைய தாமரை மலர்கள் கலக்கமடைய, தன்னுடனே மூழ்கித் தனித்து எழுந்த - தானும் நீரில் மூழ்கி எழுந்த, மின்னுடைய பூணாள் திருமுகத்தை - அழகிய அணிகள் அணிந்த தன் காதலியின் முகத்தை, புண்டரிகம் என்று அயிர்த்து - தாமரை மலரே என ஐயுற்று, காணாது அயர்வானைக் காண் - தன் காதலியைக் காணாது சோர்பவனைக் காண்பாயாக்.

பொழிப்புரை:

தாமரை மலர்கள் நிறைந்த குளத்தில் தாமரை மலர்கள் கலங்க மூழ்கி எழும் தன் காதலியின் முகத்தையும் தாமரை மலரே என நினைத்து அவளைக் காணாது கலக்கமடைபவனையும் காண்க. *14*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலவும் பாம்பும்

194. சிறுக்கின்ற வாள்முகமும் செங்காந்தள் கையால்
முறுக்குநெடு மூரிக்குழலும் - குறிக்கின்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
அரும்பாம் பணைமுலையாய் ஆம்.

பதவுரை:

அரும்பு ஆம் பணைமுலையாய் - அரும்புபோலப் பெருத்த முலைகளைப் பெற்ற தமயந்தியே, சிறுக்கின்ற வாள் முகமும் - சிறுத்து ஒளியுடைய முகமும், செங்காந்தள் கையால் முறுக்கு நெடு மூரிக் குழலும் - காந்தள் கையால் முறுக்கிப் பிழியப்படுகின்ற சிறந்த கூந்தலும், குறிக்கின் - ஆராய்ந்து பார்த்தால், கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி ஆம் - கரிய பாம்பு வெண்நிலவைக் கவ்விய காட்சி போன்றது.

பொழிப்புரை:

தமயந்தியின், சிறுத்து ஒளி பொருந்திய முகமும் கையால் முறுக்கிப் பிழிப்படும் கூந்தலும் கரும்பாம்பு நிலவைக் கவ்விய காட்சிபோல இருக்கிறது. 15

மேகத்திடையே பிறை

195. சோர்புனலின் மூழ்கி எழுவாள் சுடர்நுதல்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம் - பாராய்
விரைகொண்(டு) எழுந்தபிறை மேகத்(து) இடையே
புரைகின்ற(து) என்னலாம் பொற்பு.

பதவுரை:

சோர்புனலின் மூழ்கி எழுவாள் சுடர் நுதல் மேல் - நீரில் மூழ்கி எழுபவளின் ஒளிமிகுந்த நெற்றியின்மேல், வார்குழலை நீக்கி வருந்தோற்றம் - படிந்த கூந்தலை விலக்கிய தோற்றம், மேகத்து இடையே விரைகொண்டு எழுந்த பிறை பொற்பு - மேகத்தை விலக்கி எழுகின்ற பிறையின் அழகை, புரைகின்றது எனலாம், பாராய் - ஒத்திருக்கிறது, அதனைப் பார்.

பொழிப்புரை:

நீரில் மூழ்கி எழுந்தவள் தன் நெற்றியில் விழுந்த கூந்தலை விலக்கிய காட்சி, மேகத்திடையே எழுந்த பிறைநிலாவின் அழகை ஒத்தது, பாராய். 16

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீலமலரும் குவளை மலரும்

196. செழுநீலம் நோக்(கு)எறிப்பச் செங்குவளை கொய்வாள்
முழுநீலம் என்(று)அயிர்த்து முன்னர்க் - கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேல்தடக்கை மன்.

பதவுரை:

வைஆரும் வேல்தடக்கை மன் - கூர்மை உடைய வேலை ஏந்திய நளவேந்தன், செங்குவளை கொய்வாள் - சிவந்த குவளை மலரைப் பறிப்பவள், செழுநீலம் நோக்கு எறிப்ப - தனது நீலமலர் போன்ற கண்ணொளி மலர்மேல்படிய, முழுநீலம் என்று அயிர்த்து - குவளை மலரையும் நீலமலர் என ஐயுற்று, முன்னர்க் கழு நீரைக் கொய்யாது போவாளை - முன்னர் பறிக்கப்போன குவளை மலரைக் கொய்யாது போகின்றவளை, கோல் வளைக்குக் காட்டினான் - வளையலை அணிந்த தமயந்திக்குக் காட்டினான்.

பொழிப்புரை:

வேலைத் தாங்கிய நளன், குவளை மலர் பறிப்பவளின் நீலமலர் போன்ற கண்ணொளி படவே, குவளை மலரயையும் நீலமலர் என ஐயுற்றுப் பறிக்காது விட்டவளைத் தமயந்திக்குக் காட்டினான். 17

வாவியும் ஆறும் ஆடினர்

197. காவி பொருநெடுங்கண் காதலியும் காதலனும்
வாவியும் ஆறும் குடைந்(து) ஆடித் - தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கை நதிஆடி
ஒழியா(து) உறைந்தார் உவந்து.

பதவுரை:

காவி பொருநெடுங்கண் காதலியும் - கருங்குவளை மலரை ஒத்த தமயந்தியும், காதலனும் - நளனும், வாவியும் ஆறும் குடைந்து ஆடி - குளத்திலும் ஆற்றிலும் நீர் விளையாட்டு விளையாடி, தேவின் கழியாத சிந்தையுடன் - தெய்வ சிந்தனை நீங்காமல், கங்கை நதியாடி - கங்கையிலும் நீராடிக் களித்துவிட்டு, உவந்து ஒழியாது உறைந்தார் - பூம் (பொழிலில்) மகிழ்ந்து இருந்தார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

குவளை மலர் போன்ற கண்களை உடைய தமயந்தியும் நளனும் குளத்திலும் ஆற்றிலும் மகிழ்ந்து நீராடினர். தெய்வ சிந்தனை நீங்காதவராய்க் கங்கையிலும் நீராடியபின் ஆங்குள்ள இளமரக்காவில் மகிழ்ந்து தங்கி இருந்தார். *18*

பொழில்

198. நறைஒழுக வண்டுறையும் நன்னகர்வாய் நாங்கள்
உறையும் இளமரக்கா ஒக்கும் - இறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குல் தேமொழியாய் மென்முறுவல்
பொற்றொடியாய் மற்(று)இப் பொழில்.

பதவுரை:

இறை வளைக்கைச் சிற்றிடையாய் - வளையலை அணிந்த சிறிய இடையை உடையவளே, பேரல்குல் தேமொழியாய் - பெரிய அல்குலையும் தேன்போலும் பேச்சைப் பேசுபவளே, மென்முறுவல் பொற்றொடியாய் - மெல்லிய முறுவலளே, இப்பொழில் - இச்சோலையானது, நறைஒழுக வண்டு உறையும் நன்னகர்வாய் - தேன் ஒழுகும் வண்டுகள் வாழும் மாவிந்த நகரத்தில், நாங்கள் உறையும் இளமரக்கா ஒக்கும் - நாங்கள் வாழும் சோலையை ஒக்கும்.

பொழிப்புரை:

சிற்றிடையையும் பெரிய அல்குலையும் உடைய தமயந்தியே, இப்பொழில் மாவிந்த நகரத்தில் நாங்கள் தங்கி விளையாடும் அழகிய சோலையை ஒக்கும். *19*

அதுவோ இது!

199. கன்னியர்தம் வேட்கையே போலும் களிமழலை
தன்மணிவாய் உள்ளே தடுமாற - மன்னவனே
இக்கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா
ஒக்குமதோ என்றாள் உயிர்த்து.

பதவுரை:

கன்னியர்தம் வேட்கையே போலும் - கன்னியர்களின் உள்ளத்தே எழும் காதல் ஆசையைப் போல, களிமழலை தன் மணிவாய் உள்ளே தடுமாற - களிப்பூட்டும் மழலைச் சொற்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன் வாய்க்குள்ளே கிடந்து தடுமாற்றம் அடைய தமயந்தி, மன்னவனே இக்கடிகா - அரசே, இச்சோலையானது, நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ - நீங்கள் விளையாடும் பொழிலை ஒக்குமோ, என்றாள் உயிர்த்து - என்று பெருமூச்சுடன் கேட்டாள்.

பொழிப்புரை:

கன்னிப் பெண்களின் உள்ளத்தே எழும் ஆசையைப் போல மழலைச் சொற்கள் தன் வாய்க்குள்ளே கிடந்து தடுமாற தமயந்தி நளனிடம், 'மன்னவனே, இச்சோலை பண்டுநீங்கள் விளையாடும் சோலையைப் போன்றதோ' எனக் கேட்டுப் பெருமூச்சு விட்டாள். 20

தமயந்தியின் ஊடல்

200. தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதல்மேல்
வெண்தரளம் என்ன வியர்அரும்பக் - கெண்டைக்
கடைசிவப்ப நின்றாள் கழல்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றான் கொடி.

பதவுரை:

கழல் மன்னர் வெள்ளைக் குடைசிவப்ப - வீரக் கழலை அணிந்த மன்னர்களின் வெண்கொற்றக் குடை அவர்கள் தோற்றதால் கீழே விழுந்து இரத்தக் கறைபடிய, நின்றான் கொடி - வீழ்த்திய வீமன் மகளாகிய தமயந்தியின், தொண்டைக் கனிவாய் துடிப்ப - கொவ்வைப் பழம் போன்ற உதடுகள் துடிக்கவும், சுடர் நுதல்மேல் வெண்தரளம் என்ன ஒளிபொருந்திய நெற்றி மேல் வெண்முத்து போல, வியர் அரும்ப - வேர்வைத் துளிகள் தோன்றவும், கெண்டைக் கடைசிவப்ப நின்றாள் - கெண்டைமீன்போன்ற கண்கள் சிவக்கவும் நின்றாள்.

பொழிப்புரை:

எதிரிகளின் வெண்கொற்றக் குடைகளைப் பூமியில் சாய்த்த வீமராசனின் மகளாம் தமயந்தியின் கொவ்வை உதடுகள் துடித்தன; நெறறியில் வியர்வை அ;ரும்பியது; கெண்டையை ஒத்த கண்கள் சிவந்தன நளன்மீது கொண்ட ஊடலால். 21

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புருவ நடனம்

201. தங்கள் புலவித் தலையில் தனித்திருந்த
மங்கை வதன மணிஅரங்கில் - அங்கண்
வடிவாள்மேல் கால்வளைத்து வார்புருவம் என்னும்
கொடியாடக் கண்டானோர் கூத்து.

பதவுரை:

தங்கள் புலவித் தலையில் - நளனுக்கும் தமயந்திக்கும் ஏற்பட்ட ஊடலில், தனித்திருந்த மங்கை வதன மணிஅரங்கில் - தனியாக இருந்த தமயந்தியின் முகமாகிய நடன அரங்கத்தில், அங்கண் வடிவாள்மேல் - அழகிய கண்களாகிய கூர்மையான வாளின்மீது, வார்புருவம் என்னும் கொடி - நீண்ட புருவமாகிய நடனக்காரி, கால் வளைத்து - காலைச் சுழற்றி, ஓர் கூத்து ஆடக் கண்டான் - ஒரு நடனம் நடப்பதைப் பார்த்தான் நளன்.

பொழிப்புரை:

நளனுக்கும் தமயந்திக்கும் ஏற்பட்ட ஊடலில் தனியாக இருந்த தமயந்தியின் முகமாகிய நடன அரங்கில் கண்ணாகிய கூரிய வாளின்மேல் நீண்ட புருவமெனும் நடனப் பெண் தன் கால்களைச் சுழற்றி நடனம் ஆடுவதைப் பார்த்தான் நளன். 22

மலரடி முடிமேலே

202. சில்லரிக் கிண்கிணிமென் தெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேல் சூட்டினான் - வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீலம் மாறாச் சிவப்பு.

பதவுரை:

சில்லரிக் கிண்கிணிமென் தெய்வமலர்ச் சீறடியை - சில சில பரல்கற்களால் ஆன சதங்கையை அணிந்துள்ள தமயந்தியின் மலர்போன்ற சீறடிகளை, தொல்லை மணிமுடிமேல் சூட்டினான் - தனது மணிகள் பதித்த முடிமேல் நளன் சூட்டினான், (அதனால்) முழு நீலக் கோதை - நீல மலர்களால் ஆன மாலை அணிந்த தமயந்தியின், முகத்தே மலர்ந்த செழுநீலம் - முகத்தில் இருக்கின்ற நீலமலர்க் கண்களில், வல்லை சிவப்பு மாறா மலர்ந்த - இருந்த சினம் விரைவில் மாறிச் சிறந்தன.

பொழிப்புரை:

சதங்கை ஒலிக்கும் தமயந்தியின் மலரடிகளை நளன் தனது மணிகள் பதித்த முடிமேல் சூட்டினான். அதனால் நீலமலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலை அணிந்த அவளது சினத்தால் சிவந்த நீலமலர்க் கண்களில் நிறம் மாறிச் சினம் தணிந்தாள். 23

ஊடல் நீங்கிய கூடல்

203. அங்கைவேல் மன்னன் அகலம் எனும்செறுவில்
கொங்கைஏர் பூட்டிக் குறுவியர்நீர் - அங்(கு)அடைத்துக்
காதல் வரம்(பு)ஒழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு.

பதவுரை:

கோதையரின் மேலான கொம்பு - பெண்களிலேயே சிறந்த பெண்ணான தமயந்தி, அங்கைவேல் மன்னன் அகலம் எனும் செறுவில் - அழகிய கைகளில் வேலைத் தாங்கிய நளனின் மார்பாகிய வயலில், கொங்கை ஏர் பூட்டி - தனது மார்பால் உழுது, குறுவியர்நீர் அங்கு அடைத்து - வியர்வை நீரைப் பாய்ச்சி அடைத்து, காதல் வரம்பு ஒழுக்கி - காதலெனும் வரப்பினை அண்டைபோட்டுச் சீராக்கி, காமப் பயிர்விளைத் தாள் - காமமாகிய நெற்பயிரை விளைவித்தாள்.

பொழிப்புரை:

மகளிரில் ஒப்பற்றவளாகத் திகழும் தமயந்தி நளனது மார்பாகிய கழனியில் தனது முலைகளாம் ஏரினைப் பூட்டி அழுந்த உழுது வியர்வை நீரைப் பாய்ச்சி நிறுத்திக் காதல் எனும் வரப்பைச் செப்பனிட்டுக் காமமாகிய பயிரை விளைவித்தாள். 24

கங்கை ஆற்றங்கரை

204. வேரி மழைதுளிக்கும் மேகக் கருங்கூந்தல்
காரிகையும் தானும்போய்க் கண்ணுற்றான் - மூரித்
திரையேற மென்கிடங்கில் சேல்ஏற வாளை
கரையேறும் கங்கைக் கரை.

பதவுரை:

மூரி திரைஏற - வலிய அலைகள் மேலே வரவும், மென்கிடங்கில் சேல்ஏற - சேறு நிறை பள்ளங்களில் கெண்டை மீன்கள் குதிக்கவும், வாளை கரைஏறும் - வாளை மீன்கள் கரைகளில் விழுந்து துள்ளவும் ஆன, கங்கைக் கரை - கங்கையாற்றின் கரையினை, வேரி மழைதுளிக்கும் - தேனாகிய மழை வழிந்தோடும், மேகக் கருங்கூந்தல் காரிகையும் - மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய தமயந்தியும், தானும் - நளனும், போய்க் கண்ணுற்றான் - சென்று பார்த்தான்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

கங்கை ஆற்றில் அலைகள் மேலே வர, பள்ளங்களில் மீன்கள் குதித்துவிழ, வாளை மீன்கள் கரையில் விழுந்து துள்ளுகின்றன. அந்த ஆற்றின் அழகிய கரையைத் தமயந்தியும் நளனும் சென்று பார்த்தனர். *25*

சோலை சார்தல்!

205. சூதக் கனிஊறல் ஏற்ற சுருள்வாழை
கோதில் நறவேற்கும் குப்பியென - மாதரார்
ஐயுற்று நோக்கும் அகன்பொழில்சென்(று) எய்தினான்
வைஉற்ற வேல்தானை மன்.

பதவுரை:

வைஉற்ற வேல்தானை மன் - கூர்மையான வேலை ஏந்திய நளவேந்தன், சூதக் கனிஊறல் ஏற்ற சுருள்வாழை - மாங்கனிச் சாற்றைத் தாங்கியிருக்கும் வாழைக் குருத்துகள், கோதில் நறவு ஏற்கும் குப்பியென - நல்ல தேனை நிரப்பியிருக்கும் குடுவை என்று, மாதரார் ஐயுற்று நோக்கும் அகன் பொழில் - மாதர்கள் ஐயப்பட்டுப் பார்க்கும் அகன்ற சோலையை, சென்று எய்தினான் - சென்று சேர்ந்தான்.

பொழிப்புரை:

வேலை ஏந்தியவன் நளன். மாங்கனிச் சாற்றை ஏற்று இருக்கும் வாழைக் குருத்துகளைத் தேன் நிரப்பப்பட்ட குடுவையென மாதர்கள் ஐயங்கொள்ளுவர். அத்தகைய விரிந்து பரந்த சோலையினை அவன் சார்ந்தான். *26*

மாவிந்த மாநகர்

206. வான்தோய நீண்(டு)உயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்தோன்றும் மற்(று)இத் தடம்பதிதான் - வான்தோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையான்
நல்விளக்கே எங்கள் ஊர்.

பதவுரை:

வான் தோன்றி வில்விளக்கே பூக்கும் - நல்ல காந்தள் மலர்கள் ஒளியுடைய விளக்குப் போல மலரும், விதர்ப்ப நாடு ஆளுடையான் நல்விளக்கே - வளமான விதர்ப்ப நாட்டு அரசனின் நல்ல விளக்காகிய தமயந்தியே, வான்தோய நீண்டு உயர்ந்த - வானத்தைத் தொடும் அளவுக்கு உயர்ந்து இருக்கின்ற, மாடக் கொடி நுடங்க - மாடங்களில் கொடி அசையவும்,

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

தான்தோன்றும் மற்றுஇத் தடம் பதிதான் - தோன்றும் இந்த அழகிய ஊர்தான், எங்கள் ஊர் - எங்களது நகராகிய மாவிந்த நகராகும்.

பொழிப்புரை:

காந்தள் மலர்கள் விளக்குப் போல மலரும் விதர்ப்ப நாட்டு மன்னன் விளக்காகிய தமயந்தியே, வான் அளவு உயர்ந்து இருக்கிற மாடங்களில் கொடிகள் அசையும் பழம் நகர்தான் எங்கள் மாவிந்தநகர். 27

பன்னிரண்டு ஆண்டுகள்

207. பொய்கையும் வாசப் பொழிலும் எழில்அருவிச்
செய்குன்றும் ஆறும் திரிந்(து) ஆடித் - தையலுடன்
ஆறிரண்டாண்(டு) எல்லை கழித்தான் அடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ.

பதவுரை:

அடையலரை - பகைவரை, கூறு இரண்டாக் கொல்யானைக் கோ - இரண்டு கூறாகப் பிளக்கும் யானைகளை உடைய நளன், பொய்கையும் வாசப் பொழிலும் - குளங்களிலும் மணம் நிறைந்த சோலைகளிலும், எழில் அருவிச் செய்குன்றும் ஆறும் - அழகுடைய செயற்கையான குன்றுகளில் உள்ள அருவிகளிலும் ஆறுகளிலும், திரிந்து ஆடித் தையலுடன் - தமயந்தியோடு திரிந்தும் திளைத்தும் ஆடி, ஆறிரண்டாண்டு எல்லை கழித்தான் - பன்னிரண்டு ஆண்டுகளைப் போக்கினான்.

பொழிப்புரை:

எதிரிகளை இரண்டாகப் பிளக்கும் யானைப்படையை உடைய நளன் தமயந்தியோடு குளங்கள், சோலைகள், அருவிகள், ஆறுகள் ஆகிய இடங்களில் எல்லாம் திரிந்தும் திளைத்தும் ஆடிப் பன்னிரண்டு ஆண்டுகளைக் கடந்தான். 28

தமயந்தி தாயானாள்

208. கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகம்கருக,
நீல நிறமயிர்க்கால் நின்(று) எறிப்ப - நூல்என்னத்
தோன்றாத நுண்மருங்குல் தோன்றச் சுரிகுழலாள்
ஈன்றாள் குழவி இரண்டு.

பதவுரை:

கோல நிறம் விளர்ப்ப - மேனியின் நிறம் வெளுக்கவும், கொங்கை முகம் கருக - முலைகளின் முனை கருக்கவும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிர்க்கால் நீல நிற நின்று எறிப்ப - மயிர்க்கால்கள் நீல நிறமாக மாறவும், நூல் என்னத் தோன்றாத நுண்மருங்குல் - நூல் போன்று வெளிப்படத் தெரியாத இடுப்பு, தோன்ற - பெருத்துத் (கருவுற்றதால்) தோன்றவும், சுரிகுழலாள் - சுரிந்த குழலை உடைய தமயந்தி, குழவி இரண்டு ஈன்றாள் - இரண்டு குழந்தை களுக்குத் தாய் ஆனாள்.

பொழிப்புரை:

தமயந்தியின் மேனி வெளுத்தது; முலைக் காம்புகள் கருத்தன; மயிர்க்கால்கள் நீல நிறமாக ஒளி வீசின; நூல் போன்று கண்ணுக்குத் தோன்றாத இடை பெருத்தது; நெளி கூந்தலை உடைய அவள் இரண்டு குழந்தைகளைப் பெற்று எடுத்தாள்.29

கலிமகனின் காத்திருப்பு

209. ஆண்(டு)இரண்(டு)ஆ(று) எல்லை அளவும் திரிந்தேயும்
காண்தகைய வெங்கலியும் காண்(கு) இலான் - நீண்டபுகழ்ச்
செந்நெறியால் பார்காத்த செங்கோல் நிலவேந்தன்
தன்நெறியால் வே(று)ஓர் தவறு.

பதவுரை:

வெங்கலியும் - பிறரைத் துன்புறுத்திப் பார்க்கும் கலிமகனும், காண்தகைய - காண்பதற்கு ஏற்ற, ஆண்டு இரண்டு ஆறு எல்லை அளவும் திரிந்தேயும் - பன்னிரண்டு ஆண்டுகள் அலைந்து திரிந்தும், நீண்ட புகழ்ச் செல்நெறியால் - நிலைத்த புகழோடும் செம்மை நெறியோடும் பார்காத்த செங்கோல் நில வேந்தன் - நிடதநாட்டைச் செங்கோல் தவறாமல் ஆண்ட நளனிடம், தன்நெறியால் வேறு ஓர் தவறு காண்கிலான் - நெறிமுறை தவறாப் பண்பால் வேறு எந்தக் குற்றத்தையும் காணாதவன் ஆனான்.

பொழிப்புரை:

கலிமகன் நளன்மீது குற்றம் காண்பதற்காகப் பன்னிரண்டு ஆண்டுகள் அலைந்து திரிந்தான். நளன் நிலைத்த புகழோடும் செம்மை நெறியோடும் செங்கோல் தவறாமலும் நிடத நாட்டை ஆண்டு வந்தான். ஆதலால் அவனிடம் ஒரு குற்றத்தையும் காண முடியாதவன் ஆனான். 30

கலி நளனைச் சேர்தல்

210. சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்திமகிழப் புகுந்துகலி - சிந்தையெலாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்வயமே ஆக்கித் தமையன் உடன்இருந்தான்
பொன்அசல மார்பன் புகைந்து.

பதவுரை:

சந்திசெயத் தாள்விளக்க - நளன் வழிபாடு செய்யத் தன் கால்களைக் கழுவும் போது, தாளின்மறுத் தான்கண்டு - காலின் ஒருபகுதி கழுவப்படாமல் அழுக்காய் இருப்பதைப் பார்த்து, கலிபுந்தி மகிழப் புகுந்து - கலியானவன் மனம் மகிழ்ந்து நளனிடம் சேர்ந்து, சிந்தையெலாம் தன்வயமே ஆக்கி - அவன் எண்ணங்களை எல்லாம் தன்வயப்படுத்திக் கொண்டான், பொன் அசல மார்பன் புகைந்து - இமயமலை போன்ற பரந்த மார்பை உடைய அவனைச் சினந்து, தமையன் உடன் இருந்தான் - நளனின்தமையனான புட்கரனுடன் இருந்தான் கலி.

பொழிப்புரை:

நளன் வழிபாடு செய்யத் தன் கால்களை நீரில் கழுவும்போது ஒருபகுதி நீரில் நனையாமல் அழுக்காய் இருப்பதைப் பார்த்துக் கலி மகிழ்ந்து அவனைச் சேர்ந்து அவன் எண்ணமெலாம் தன்வயமாக்கிக் கொண்டான். மலைபோன்ற மார்பை உடைய நளனைச் சினந்து அவன் தமையன் புட்கரனுடன் இருந்தான். 31

நளனைச் சேர்ந்த கலி

211. நாராய ணாய நமவென்(று) அவன்அடியில்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல் - பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

பதவுரை:

நாராயணாய நமவென்று அவன் அடியில் சேராரை - நாராயணாய என்று சொல்லி அவன் திருவடியை நினையாதாரை, வெந்துயரம் சேர்ந்தாற்போல் - (தொடர்ந்து) கொடுந்துன்பங்கள் சேர்வது போல, பாராளும் கொற்றவனை - நாடாளும் அரசனும், பார்மடந்தை கோமானை - நிலமகளுக்குத் தலைவனும், வாய்மை நெறி கற்றவனை - வாய்மை வழுவா அரசனுமாகிய நளனை, கலி சேர்ந்தான் - கலி சேர்ந்துவிட்டான்.

பொழிப்புரை:

நாராயணாய என்று சொல்லித் திருமாலைத் தொழாதவர்களைத் துன்பங்கள் தொடர்வது போல் - நாடாளும் அரசனும் நிலமகளுக்குத் தலைவனும் வாய்மை வழுவாதவனுமாகிய நளனைக் கலி பற்றினான். 32

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

சூதாட அழைத்தல்

212. நன்னெறியில் சூதால் நளனைக் கள(வு)இயற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன் - மன்னவனே!
போதுவாய் என்னுடனே என்றான் புலைநரகுக்(கு)
ஏதுவாய் நின்றான் எடுத்து.

பதவுரை:

புலை நரகுக்கு ஏதுவாய் நின்றான் - இழிந்த நரகத்திற்குக் காரணனாக விளங்கும் கலி, மன்னவனே - புட்கரனே, நல்நெறிஇல் சூதால் - நல்ல நெறியல்லாத சூதாட்டத்தால், நளனைக் களவு இயற்றி - நளனை வஞ்சித்து, தன்னரசு வாங்கித் தருகின்றேன் - அவனுடைய அரசை உனக்கு வாங்கித் தருவேன், என்னுடனே போதுவாய் என்றான் எடுத்து - என்னுடன் வருக என்று அழைத்தான்.

பொழிப்புரை:

இழிந்த நரகத்திற்குக் காரணனாகிய கலி புட்கரனிடம், 'மன்னவா சூதாட்டத்தால் நளனை வஞ்சித்து அவன் அரசை உனக்குத் தருவேன். என்னுடன் வா' என அழைத்தான். 33

புட்கரன் சூதாடப் போதல்

213. புன்னை நறுமலரின் பூந்தா(து) இடைஉறங்கும்
கன்னி இளமேதிக் காற்குளம்பு - பொன் உரைத்த
கல்ஏய்க்கும் நாடன் கவ(று)ஆடப் போயினான்
கொல்ஏற்றின் மேல்ஏறிக் கொண்டு.

பதவுரை:

புன்னை நறுமலரின் பூந்தாது இடை உறங்கும் - புன்னை மலர்களிலிருந்து உதிர்ந்த மகரந்தப் பொடியின் மீது உறங்கும், கன்னி இளமேதிக் கால் குளம்பு - இளமையான எருமைகளின் (மகரந்தபொடி படிந்த) காற்குளம்புகள், பொன் உரைத்த கல் ஏய்க்கும் நாடன் - பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல் போல் இருக்கும் வளமான நாடனான புட்கரன், கொல்ஏற்றின் மேல் ஏறிக் கொண்டு - கொல்லும் காளைமேல் ஏறி, கவறு ஆடப் போயினான் - (நளனுடன்) சூதாடச் சென்றான்.

பொழிப்புரை:

புன்னை மலரின் மகரந்தப் பொடி இளமையான எருமைகளின் குளம்புகளில் படிந்திருப்பது பொன்னை உரைத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கட்டளைக்கல்போல் தோன்றும் வளமான நாட்டுத் தலைவன் புட்கரன் காளைமேல் ஏறி நளனுடன் சூதாடப் போனான். 34

நிடதநாடு புகுதல்

214. வெங்கண் சினவிடையின் மேல்ஏறிக் கால்ஏறிக்
கங்கைத் திரைநீர் கரைஏறிச் - செங்கதிர்ப்பைம்
பொன்ஒழியப் போதும் புறம்பணைசூழ் நல்நாடு
பின்ஒழியப் போந்தான் பெயர்ந்து.

பதவுரை:

வெங்கண் சினவிடையின் மேல் ஏறி - கடுமையான கண்களை யுடைய காளை மீது ஏறிக்கொண்டு, கங்கைத் திரைநீர் கால் ஏறி - கங்கை நதியின் நீர் கால்வாய்களில் பாய்ந்து, கரைஏறி - கரைகள் தளும்ப மேலேறி, செங்கதிர்ப் பைம்பொன் ஒழியப் போதும் - பொன்நிறக் கதிர்களைச் சாய்த்துஓடும், பணைபுறம்சூழ் நல்நாடு - நெல்வயல்கள் சூழ்ந்த தன்நாடு, பின்ஒழிய - பின்னே செல்ல, பெயர்ந்து போந்தான் - புட்கரன் புறப்பட்டு நிடதநாடு புகுந்தான்.

பொழிப்புரை:

கங்கைநதியின் நீர் கால்வாய்களின் கரையேறித் தளும்பிப் பொன்நிற நெற்கதிர்க்குலைகளைச் சாய்த்து ஓடும் நெல்வயல் கள் சூழ்ந்த நல்ல தன் நாட்டிலிருந்து புறப்பட்டுச் சினமுடைய காளைமேல் ஏறிப்புட்கரன் நிடதநாடு புகுந்தான். 35

என்ன கொடி இது?

215. அடற்கதிர்வேல் மன்னன் அவன்ஏற்றின் முன்போய்
எடுத்தகொடி என்னகொடி என்ன - மிடல்சூது
வெல்லும் கொடிஎன்றான் வெங்கலியால் அங்(கு)அவன்மேல்
செல்லும் கொடியோன் தெரிந்து.

பதவுரை:

அடற்கதிர்வேல் மன்னன் - ஒளிநிறை வேலை ஏந்திய நளமன்னன், அவன்ஏற்றின் முன்போய் - காளைமேல் வந்த புட்கரன் முன்சென்று, எடுத்தகொடி என்ன கொடிஎன்ன - நீ தாங்கியிருக்கும் கொடி என்ன கொடி என வினவினான், வெங்கலியால் அங்கு அவன்மேல் செல்லும் கொடியோன் - கலியின் தூண்டலால் நளனிடம் வந்த கொடியவனான புட்கரன், மிடல்சூது வெல்லும் கொடிஎன்றான் தெரிந்து - (நளன் கருத்தை) அறிந்த அவன் சூதாட்டத்தில் வெல்லும் கொடி இது என்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வேலைத் தாங்கிய நளன் புட்கரன் முன்னே போய், 'நீ தாங்கியிருக்கும் கொடி என்ன கொடி' என வினவினான். கலியின் தூண்டலால் நளனிடம் வந்த கொடியவன் புட்கரன் நளனிடம், 'சூதாட்டத்தில் வெல்வோன் கொடி இது' என்றான். 36

நளனும் சூதாட அழைத்தான்

216. ஏன்றோம் இதுவாயின் மெய்ம்மையே எம்மோடு
வான்தோய் மடல்தெங்கின் வான்தேறல் - தான்தேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்(து)உழக்கும் நன்நாடன்
சூதாட என்றான் துணிந்து.

பதவுரை:

வாளை - வாளை மீன்கள், வான்தோய் தெங்கின் - வானளவு உயர்ந்துள்ள தென்னை மரங்களின், மடல் வான்தேறல் - மடலில் உள்ள மதுவை, தான் தேக்கி மீதாடி - தான் நிரம்பக் குடித்துக் குதித்தாடி, வயல் வீழ்ந்து உழக்கும் - (பின்) வயல்களில் குதித்துக் கலக்கும், நல்நாடன் - நல்ல நாட்டின் தலைவனாகிய நளன், மெய்ம்மையே இதுவாயின் ஏன்றோம் - நீ கூறியது உண்மையெனின் ஏற்றுக் கொண்டோம், துணிந்து எம்மோடு சூதாட என்றான் - துணிச்சலடன் எம்மோடு சூதாட வா என்றான்.

பொழிப்புரை:

வாளை மீன்கள் உயர்ந்த தென்னை மரங்களில் உள்ள மடலில் மதுவைக் குடித்து கீழே உள்ள வயல்களில் குதித்துக் கலக்கும் நிடதநாட்டின் தலைவனான நளன் புட்கரனிடம்,' நீ கூறியது உண்மையெனின் எம்மோடு சூதாட வா' என்றான். 37

சூதினால் வரும் தீமை

217. காதல் கவ(று)ஆடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய் - போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

பதவுரை:

போதில் சினையாமை வைகும் திருநாடா - தாமரை முதலிய மலர்களில் சூல்கொண்ட ஆமை தங்கும் நாட்டிற்குத் தலைவனாகிய நளனே, செம்மை நினையாமை பூண்டார் நெறி - அறநெறிகளை நினையாதவர் கொள்ளும் நெறிகளே, காதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவறு ஆடல் கள்ளுண்டல் - பிறர் மனைவிமேல் காதல் கொள்ளல், சூதாடல், கள்உண்டல், பொய்ம்மொழிதல் ஈதல் மறுத்தல் இவை கண்டாய் - பொய் பேசுதல், பிறர்க்குக் கொடுப்பதைத் தடுத்தல் ஆகியவை என உணர்வாயாக என அமைச்சர் எடுத்துக் கூறினர்.

பொழிப்புரை:

மலர்களில் சூல்கொண்ட ஆமைகள் தங்கும் நாடனாகிய நளனே, பிறர் மனையாளை விரும்புதல், சூதாடல், கள்உண்டல், பொய்புகலல், கொடுப்பதைத் தடுத்தல் ஆகியவை அறநெறி வழுவியோர் செயல் என அறிக என அமைச்சர் முதலியோர் எடுத்துரைத்தனர். *38*

மேலோர் சூதை விரும்பார்

218. அறத்தைவேர் கல்லும் அருநரகில் சேர்க்கும்
திறத்தையே கொண்(டு) அருளைத் தேய்க்கும் - மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றார் தெரிந்து.

பதவுரை:

அறத்தைவேர் கல்லும் - அறத்தின் வேர்களைத் தகர்த்துவிடும், அருநரகில் சேர்க்கும் - பொருந்தாத நரகில் சேர்த்துவிடும், திறத்தையே கொண்டு அருளைத் தேய்க்கும் - வலிமையாக இரக்க வுணர்வைக் குறைத்துவிடும், மறத்தையே பூண்டு விரோதஞ் செய்யும் - தீய செயல்களால் பகைமையை உண்டாக்கும், பொய்ச்சூதை - கெடுதலையே செய்யும் சூதாடலை, மிக்கோர்கள் தெரிந்து தீண்டுவரோ என்றார் - சான்றோர்கள் அறிந்தும் ஆடுவார்களோ என அமைச்சர்கள் நளனிடம் நவின்றனர்.

பொழிப்புரை:

சூதாட்டமானது அறநெறியை அழிக்கும்; நரக உலகில் சேர்க்கும்; இரக்கத்தை நீக்கும்; விரோதத்தை உண்டு பண்ணும்; (அதனால்) அதனைச் சான்றோர்கள் ஆடுவார்களோ? என அமைச்சர்கள் நளனிடம் கூறினர். *39*

நல்லோர் விரும்பார்

219. உரு(வு)அழிக்கும் உண்மை உயர்(வு)அழிக்கும் வண்மைத்
திருஅழிக்கும் மானம் சிதைக்கும் - மருவும்

In Public Domain Digitization Muthulakshmi Research Academy

ஒருவரோ(டு) அன்(பு)அழிக்கும் ஒன்(று)அல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

பதவுரை:

உருவு அழிக்கும் - (சூது) ஒருவரின் அழகைக் கெடுக்கும், உண்மை உயர்வு அழிக்கும் - உண்மைபேசுதலின் மேன்மையை அழிக்கும், வண்மைத் திரு அழிக்கும் - வாரி வழங்கும் செல்வத்தைத் தேய்க்கும், மானம் சிதைக்கும் - மானவுணர்வைப் போக்கும், மருவும் ஒருவரோடு அன்பு அழிக்கும் - கூடியிருப்பவரின் அன்பைத் தகர்க்கும், ஒன்றுஅல்ல - அதனால் வரும் தீமை ஒன்று அல்ல, பலப்பல, தக்கோர் புரிந்து சூது பொருவரோ - (இதனை உணர்ந்த) நல்லவர்கள் சூதை விரும்புவார்களோ?

பொழிப்புரை:

சூதாடல் ஒருவரின் அழகைக் குறைக்கும்; உண்மைபேசுதலை நீக்கும்; செல்வத்தை அழிக்கும்; மானத்தைப் போக்கும்; நெருங்கியவரின் அன்பைக் கெடுக்கும்; அதனால் வரும் தீமைகள் ஒன்றல்ல, பல; ஆதலால் நல்லவர்கள் சூதை விரும்புவரோ? மாட்டார்கள். 40

நூலோர் கூற்று

220. ஆயம் பிடித்தாரும் அல்லல் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரும் நெஞ்சிடையே - மாயம்
பிடித்தாரின் வே(று)அல்லர் என்(று)உரைத்த(து) அன்றே
வடித்தாரின் நூலோர் வழக்கு.

பதவுரை:

ஆயம் பிடித்தாரும் - சூதாடும் கருவியைக் கைக்கொண்டவரும், அல்லல் பொதுமகளிர் நேயம் பிடித்தாரும் - துன்பமே தரும் விலை மகளிரிடத்து மையல் கொண்டவரும், நெஞ்சிடையே மாயம் பிடித்தாரின் வேறுஅல்லர் - நெஞ்சில் வஞ்சகம் உடையவர்கள்போலவே வஞ்சகம் உடையவரே ஆவார், என்று வடித்தாரின் நூலோர் வழக்கு உரைத்தது அன்றே - என்று நல்லநூல்களை ஆராய்ந்தோர் உரைத்தனர் அல்லவா?

பொழிப்புரை:

சூதாடும் கருவியைப் பிடித்தவரும் விலை மகளிரிடத்து ஆசை வைத்தவரும் நெஞ்சில் வஞ்சனை உடையவர்கள்போல வஞ்சகர்களே ஆவர் என்று சான்றோர்கள் ஆராய்ந்து நூல்களில் கூறியுள்ளார்கள். 41

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நளன் மறுப்புரை

221. தீது வருக நலம்வருக சிந்தையால்
சூது பொரஇசைந்து சொல்லினோம் - யாதும்
விலக்கலிர்நீர் என்றான் வரால்ஏற மேதி
கலக்(கு)அலைநீர் நாடன் கனன்று.

பதவுரை:

வரால் ஏற மேதி கலக்கு அலைநீர் நாடன் - வரால் மீன்கள் துள்ளிப் பாய்வதால் எருமைகள் நீரைக் கலக்கும் நாடனாகிய நளன், தீது வருக நலம்வருக - (அமைச்சர்களிடம்) சூதாடுவதால் தீமை வந்தாலும் நன்மை வந்தாலும், சிந்தையால் இசைந்து சூது பொர சொல்லினோம் - மனத்தால் இசைந்து சூதாட இசைவு சொன்னோம், நீர் யாதும் விலக்கலிர் என்றான் - (ஆதலால்) நீவிர் இதற்குத் தடை சொல்லாதீர் என்றான்.

பொழிப்புரை:

வரால்மீன்கள் ஏறிக் குதித்தலால் எருமைகள் கலக்கும் நீர்நிலைகளை உடைய நாடனாகிய நளன் அமைச்சர்களிடம், 'சூதாடுவதால் தீமைவந்தாலும் நன்மை வந்தாலும் வரட்டும். சூதாட நான் இசைவு தந்துவிட்டேன். ஆதலால் நீங்கள் தடை சொல்லாதீர்கள்' என்றான். *42*

பந்தயம் என்ன

222. நிறையில் கவ(று)ஆடல் நீநினைந்தை ஆகின்
திறையில் கதிர்முத்தம் சிந்தும் - துறையில்
கரும்(பு)ஒடியா மள்ளர் கடாஅடிக்கும் நாடா
பொரும்படியா(து) என்றான்இப் போது.

பதவுரை:

திறையில் கதிர்முத்தம் சிந்தும் - விலை மதிப்பற்ற ஒளிமுத்துகள் சிந்தியிருக்கிற, துறையில் - நீர்த்துறைகளில், மள்ளர் கரும்பு ஒடியாகடா அடிக்கும் நாடா - (வளர்ந்துள்ள) கரும்புகளை ஒடித்து உழவர்கள் கடாக்களை ஓட்டுகின்ற நிடதநாட்டு மன்னா, நிறையில் கவறு ஆடல் - வரையறை அற்ற சூதாட்டம், நீ நினைந்தை ஆகின் - நீ ஆடநினைத்தால், இப்போது பொரும்படி யாது என்றான் - இவ்வேளை சூதாடலுக்குப் பணயம் யாது என்றான் புட்கரன்.

In Public Domain Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

முத்துகள் சிந்தும் நீர்த்துறைகளில் வளர்ந்துள்ள கரும்புகளை ஒடித்து உழவர்கள் கடாக்களை ஓட்டும் நிடதநாட்டு நளனே, சூதாடலை நீ விரும்பினால், அவ்வாட்டத்தில் பந்தயம் யாது எனப் புட்கரன் வினவினான். *43*

பணையப் பொருள்

223. விட்(டு) ஒளிர்வில் வீசி விளங்குமணிப் பூண்ஆரம்
ஒட்டினேன் உன்பணையம் ஏ(து) என்ன - மட்(டு) அவிழ்தார்
மல்ஏற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்ஏற்றை வைத்தான் குறித்து.

பதவுரை:

விட்டு ஒளிர்வில் வீசி - விட்டு விட்டு ஒளி வீசும், விளங்குமணிப் பூண் ஆரம் ஒட்டினேன் - அழகிய இரத்தினங்களால் ஆன மாலையை யான் பணயம் வைத்தேன், உன் பணையம் ஏது என்ன - உன்னுடைய பந்தயப் பொருள் யாது என நளன் வினவினான், மட்டு அவிழ்தார் மல்ஏற்ற தோளானும் - தேன்வழியும் மாலை அணிந்தவனும் வலிய தோளானுமாகிய புட்கரன், தன் கொல் ஏற்றை - தன்னுடைய பிறரைக் கொல்லும் காளையை, வான்பணைய மாகக் குறித்து வைத்தான் - பந்தயப் பொருளாகக் குறித்துச் சொன்னான்.

பொழிப்புரை:

நளன்புட்கரனிடம், 'நான் இரத்தினக் கல் பதிக்கப் பெற்ற மாலையைப் பந்தயம் வைத்தேன். உன் பணயம் யாது' என வினவினான். 'பிறரைக் கொல்லக்கூடிய காளையே என் பணயப் பொருள்' என்றான் புட்கரனும். *44*

நளனின் தோல்வி

224. கார்ஏயும் கூந்தலார் காரிகைமேல் காதலித்த
தார்ஏயும் தோளான் தனிமனம் போல் - நேரே
தவ(று)ஆய்ப் புரண்ட தமையனொடும் கூடிக்
கவ(று)ஆய்ப் புரண்டான் கலி.

பதவுரை:

கார்ஏயும் கூந்தலார் காரிகைமேல் - மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய தமயந்தியை, காதலித்த தார் ஏயும் தோளான் - காதலித்து மணந்த மாலையணிந்த நளன், தனிமனம்போல் - தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனம்போனபடி, நேரே தவறுஆய்ப் புரண்ட தமையனொடும் - சொக்கட்டான் காய்களைத் தவறாகப் புரட்டும் புட்கரனோடு ஆட, கலி கூடி கவறுஆய்ப் புரண்டான் - கலிமகனும் புட்கரனுடன் சேர்ந்து தவறாகக் காய்களை உருட்டி வென்றான்.

பொழிப்புரை:

கரிய கூந்தலையுடைய தமயந்தியைக் காதலித்து மணந்த நளன் தன் மனம்போனபடி சூதாட, புட்கரன் கலிமகனுடன் சேர்ந்துகொண்டு சொக்கட்டான் காய்களைத் தவறாக உருட்டி வென்றான். 45

தோற்றவை

225. வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்(கு)
ஒத்த பணையம் உரையென்ன - வைத்தநிதி
நூறா யிரத்(து) இரட்டி நூறுநூ(று) ஆயிரமும்
வேறாகத் தோற்றான்அவ் வேந்து.

பதவுரை:

வைத்த மணியாரம் வென்றேன் - நீ பணயமாக வைத்த இரத்தினமாலையை வென்று விட்டேன், மறுபலகைக்கு ஒத்த பணயம் உரையென்ன - அடுத்த ஆட்டத்திற்கு உரிய பந்தயம் சொல் (என புட்கரன் நளனிடம் வினவ), அவ்வேந்து - நளன், வைத்த நூறாயிரத்து இரட்டி நூறு நூறு ஆயிரம் நிதியும் - இரண்டு இலக்கம் பொன்னையும் ஒரு கோடி பொன்னையும், வேறாகத் தோற்றான் - தனித்தனியே வைத்துத் தோற்றான்.

பொழிப்புரை:

புட்கரன் நளனிடம், 'நீ முதலில் பணயமாக வைத்த மணிமாலை வென்றேன். அடுத்த பணயம் யாது' எனக் கேட்டான். அதுகேட்ட நளனும் முதலில் இரண்டு இலக்கம் பொன்னையும் மீண்டும் ஒரு கோடி பொன்னையும் தனித்தனியே வைத்துத் தோற்றான். 46

நால்வகைப் படைகள்

226. பல்லா யிரம்பரியும் பத்துநூ(று) ஆயிரத்துச்
சொல்லார் மணித்தேரும் தோற்றதற்பின் - வில்லாட்கள்
முன்தோற்று வானின் முகில்ஏற்கும் மால்யானை
பின்தோற்றுத் தோற்றான் பிடி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

பல்லாயிரம் பரியும் - (நளன் சூதாட்டத்தில்) பல ஆயிரம் குதிரைகளையும், பத்துநூறு ஆயிரத்துச் சொல்ஆர் மணித் தேரும் - பத்து இலக்கம் பெருமை மிக்க தேர்களையும், தோற்றதற்பின் - தோற்றதற்குப் பிறகு, வில்லாட்கள் முன்தோற்று - வில்படைஞரையும் தோற்று, வானின் முகில்ஏற்கும் மால்யானை பின்தோற்று - மேகம்போல் கரிய ஆண்யானை களையும் தோற்றபின், பிடி தோற்றான் - பெண்யானைகளையும் தோற்றான்.

பொழிப்புரை:

நளன் சூதாட்டத்தில் குதிரைகள், தேர்கள், வில்படைஞர், களிற்றுப் படை, பெண்யானைகள் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் பணயம் வைத்துத் தோற்றான். 47

பணிப்பெண்களை இழுத்தல்

227. சாதுரங்கம் வென்றேன் தரும்பணையம் ஏதுஎன்ன
மாதுரங்கம் பூணும் மணித்தேரான் - சூ(து) அரங்கில்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப் பின்னுகுழல்
பூவையரைத் தோற்றான் பொருது.

பதவுரை:

சாதுரங்கம் வென்றேன் - (புட்கரன் நளனிடம்) நான்குவகைப் படைகளையும் வென்றேன், தரும்பணையம் ஏது என்ன - (அடுத்த ஆட்டத்திற்கு) பணையம் என்ன எனவினவ, மாதுரங்கம் பூணும் மணித்தேரான் - நல்ல குதிரைகள் பூட்டிய மணித்தேரை உடைய நளன், சூது அரங்கில் - சூதாட்டக் களத்தில், பாவையரை - ஓவியம் போன்ற பெண்களையும், செவ்வழியாழ்ப் பண்ணின் மொழிப் பின்னுகுழல் - நெய்தல் பண்ணாகிய யாழில் தோன்றும் இனிய பாடலைப் போன்ற சொற்களையும் குழலையும், உடைய, பூவையரைப் பொருது தோற்றான் - பெண்களைப் பணயமாக வைத்துத் தோற்றான்.

பொழிப்புரை:

நாற்படையும் வென்றேன். அடுத்த பணயம் யாதெனப் புட்கரன் நளனிடம் கேட்டான். நளன் சூதாட்ட அரங்கில் ஓவியம் போன்ற அழகிய பெண்களையும் இனிய மொழிபேசும் பின்னிய குழலை உடைய பெண்களையும் பணயம் வைத்துத் தோற்றான். 48

 In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

ஆட்சியும் இழத்தல்

228. கற்பின் மகளிர்பால் நின்றும் தமைக்கவட்டின்
விற்கும் மகளிர்பால் மீண்டாற்போல் - நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தாள் திரு.

பதவுரை:

கற்பின் மகளிர்பால் நின்றும் - கற்புடைய மனையாளைப் பிரிந்து, தமைக் கவட்டின் விற்கும் மகளிர்பால் மீண்டாற்போல - (ஒருவன்) வஞ்சகமாகத் தம்மையே விற்கும் விலைமகளிடத்துச் சேர்ந்தாற்போல, திரு - செல்வமென்னும் பெண், நிற்கும் நெறியான - நல்ல நெறியில் நின்றவனும், மெய்ம்மை வாய் நின்றானை - உண்மைக்கு உறைவிடம் ஆனவனுமாகிய நளனை, நீங்கி - கைவிட்டு, சிறியானைச் சேர்ந்தாள் - சிறுமைக்குணம் படைத்த புட்கரனைச் சேர்ந்தாள்.

பொழிப்புரை:

ஒருவன் கற்புடைய மனையாளைப் பிரிந்து விலைமகளைச் சேர்ந்ததுபோல, செல்வமெனும் நங்கை நன்னெறி நிற்பவனும் உண்மை பேசுபவனும் ஆகிய நளனைக் கைவிட்டு சின்ன புத்தி படைத்த புட்கரனை அடைந்தாள். 49

தமயந்தியை வைத்து ஆடு

229. மனைக்குரியார் அன்றே வரும்துயரம் தீர்ப்பர்
சினைச்சங்கின் வெண்தலையைத் தேனால் - நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாள் குண்டுநீர்நாடா
இவளைப் பணையம்தா இன்று.

பதவுரை:

சினைச் சங்கின் வெண்தலையை - சூல்கொண்ட சங்கின் வெண்ணிறம் பொருந்திய தலையை, தேனால் நனைக்கும் -தன் மதுவால் நனைக்கின்ற, பைந்தாள் குவளைப் பணை - பசுமையான தண்டுகளையுடைய குவளைப் பூக்கள் நிறைந்த வயல்களும், குண்டுநீர் நாடா - குளங்களும் நிறைந்த நாட்டுக்குத் தலைவனான நளனே, இன்று இவளைப் பணயம் தா - இன்றைய ஆட்டத்தில் தமயந்தியைப் பணயமாக வைத்தாடு, (ஏனெனில்) மனைக்குரியர் அன்றே வரும்துயரம் தீர்ப்பர் - கணவனுக்குரிய துன்பத்தை மனைவியர்தானே தீர்ப்பர் என்றான் புட்கரன்.

In Public domain Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

சங்கின் தலையைத் தேனால் நனைக்கும் குவளைமலர் நிறைந்த கழனிகளும் நீர்நிலைகளும் நிறைந்த நாட்டுத் தலைவனே, நளனே, இன்றைய ஆட்டத்தில் தமயந்தியை வைத்து ஆடு. கணவன் உற்ற துன்பத்தை மனைவி களைவது தானே முறை என்றான் புட்கரன். 50

நளன் நகரை விட்டு வெளியேற நினைத்தல்

230. இனிச்சூ(து) ஒழிந்தோம் இனவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே - பனிச்சூதப்
பூம்போ(து) அவிழ்க்கும் புனல்நாடன் பொன்மகளே
நாம்போதும் என்றான் நளன்.

பதவுரை:

நளன் - (புட்கரன்மொழிக்கு மறுமொழி கூறாத) நளன், கனிசூத வார் பொழிலின் கண்ணே - மாம்பழங்கள் நிறைந்த மாந்தோப்பில், வண்டு இனம் கிண்டி - வண்டுக்கூட்டங்கள் குடைவதால், பனிச் சூதப் பூம்போது அவிழ்க்கும் - குளிர்ந்த மாம்பூக்கள் விரிகின்ற, புனல்நாடன் பொன்மகளே - குளிர்ந்த நாடன் வீமனின் திருமகளே, இனிச்சூது ஒழிந்தோம் - சூதாட்டம் முடிந்தது, நாம்போதும் என்றான் - நாம் புறப்படுவோம் என்றான் மனையாளிடம்.

பொழிப்புரை:

மாம்பழங்கள் நிறைந்த மாந்தோப்பில் வண்டுகள் மாம்பூக்களை விரியச் செய்யும் சோலைகளும் நீர் நிலைகளும் நிறைந்த வளநாடனாகிய வீமனின் திருமகளே, புட்கரனுடன் சூதாட்டம் முடிந்தது. வா நாம் போகலாம் என்றான் நளன் தமயந்தியிடம். 51

நளன் நகரை நீங்கல்

231. மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனால்போல் - தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினான் அன்றே
கொடியானுக்(கு) அப்பார் கொடுத்து.

பதவுரை:

மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென் மலரை - மெல்லிய கால் அன்னப் பறவைகள் தங்கும் நன்மலரில், புன் காகம் கொள்ளத்தான் போனால்போல - புல்லிய காகம் தங்கப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போகுதல்போல, அப்பார் - நிடதநாட்டை, கொடியானுக்குக் கொடுத்து - கொடியவனான புட்கரன் வசம் ஒப்படைத்துவிட்டு, தன்கால் பொடியாட - நளன் தனது கால்களில் புழுதி படிய, அன்றே தேவியொடும் போயினான் - அன்றே தன் மனையாளோடு புறப்பட்டான்.

பொழிப்புரை:

அன்னப் பறவைகள் இருந்த மலரைக் காகம் கைப்பற்றிக் கொண்டதுபோல, தனக்குரிய நிடத நாட்டை நளன் புட்கரனுக்குக் கொடுத்துவிட்டு தமயந்தியோடு தன் கால்களில் புழுதி படியப் புறப்பட்டான். *52*

ஊழ் வலியது

232. கடப்பார் எவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன் - நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தால் சூழ்ந்த(து)
அனைத்தே விதியின் வலி.

பதவுரை:

விதியின் வலி கடுவினையைக் கடப்பார் எவரே - ஊழின் வலியக் கொடுமையைக் கடப்பவர் எவர்?, மன்னன் வீமன் மடப்பாவை தன்னுடனே - நளன் வீமராசன் மகளோடு, நடப்பான் வனத்தே செலப்பணித்து - காட்டில் நடப்பதற்கு ஏவியது, மாயத்தால் சூழ்ந்தது அனைத்தே - கலியின் வஞ்சகத்தால் நடந்ததே ஆகும் போலும்!

பொழிப்புரை:

விதியின் வலிமையைக் கடப்பவர் எவருளர்? எவரும் இலர். வீமராசன் மகளோடு நளன் காட்டில் நடந்து சேர்ந்தமை கலிபுருடன் வஞ்சனையே போலும்! *53*

மக்கள் அழுதனர்

233. ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே - பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்(கு) என்றார் தம்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.

பதவுரை:

தம்கண்ணின் நீர்வார்த்து - (மாவிந்த நகர மக்கள்) தம் கண்களிலிருந்து வழிகின்ற நீரால், கால்கழுவா நின்று - (நளனின்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கால்களைக் கழுவி நின்று, ஆருயிரின் தாயே - அனைத்து உயிர்களுக்கும் தாயானவனே, அறத்தின் பெருந்தவமே - அறநெறிப்பட்ட தவமுடையானே, பேரருளின் கண்ணே - கருணைக்கு இருப்பிடமே, பெருமானே - தலைவனே, பாரிடத்தை யார்காக்கப் போவது - (இனி) நிடத நாட்டைக் காப்பது யார்? நீ யாங்கு என்றார் - நீ எங்கே போகிறாய் எனக் கேட்டுக் கதறினர்.

பொழிப்புரை:

மாவிந்த நகர மக்கள் கண்ணீர் சிந்தி நளனின் கால்களைக் கழுவினர். தாய் போன்றவனே, தவம் நிறைந்தவனே, அருளுக்கு இருப்பிடமானவனே, தலைவனே, இந்நாட்டை இனிக் காப்பது யார்? நீ எங்கே, போகிறாய்? எனக் கேட்டுக் கதறினர். 54

செங்கோலவர் அழியார்

234. வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞாலம் முழுதும் நடுவிழந்தால் - சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

பதவுரை:

செங்கோலவர் - அறநெறிபிறழாமல் ஆட்சி செய்பவர், வேலை கரை இழந்தால் - கடல் தன் எல்லை கடந்து போனாலும், வேதநெறிபிறழ்ந்தால் - மறைநெறிகள் தவறினாலும், ஞாலம் முழுதும் நடுவிழந்தால் - பூமி முழுமையும் நடுவு நிலையில் தவறினாலும், சீலம் ஒழிவரோ - ஒழுக்கத்தில் குறைவார்களா? குறையார். செம்மை உரைதிறம்பாச் செய்கை அழிவரோ - செந்நெறியிலிருந்து விலகி செய்கை அழிவார்களா? மாட்டார்கள் எனச் சொல்லி மக்கள் வருந்தினர்.

பொழிப்புரை:

செங்கோல் பிறழாமல் ஆட்சி செய்பவர் கடலே எல்லை மீறினாலும் வேதநெறி கெட்டாலும் பூமியில் நடுவுநிலை தவறினாலும் ஒழுக்கத்தில் குன்றமாட்டார்; சொல்லில் மாறமாட்டார்; செய்கை பிசகமாட்டார் எனச் சொல்லி மக்கள் வருந்தினர். 55

நாளை செல்க

235. வடிளேறு கூர்இலைவேல் மன்னாவோ உன்தன்
அடியேங்கட்(கு) ஆதரவு தீரக் - கொடிநகரில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்(று) இருந்து நாளை எழுந்தருள்க என்(று) உரைத்தார்
வென்(று)இருந்த தோளான்தாள் வீழ்ந்து.

பதவுரை:

வென்று இருந்த தோளான்தாள் வீழ்ந்து - வெற்றி பொருந்திய தோள்களை உடைய நளனின் தாள்களில் (மக்கள்) விழுந்து வணங்கி, வடிஏறுகூர் இலைவேல் மன்னாவோ - வடித்த உயர்ந்த கூர்மையான வேலைத் தாங்கிய மன்னனே, கொடி நகரில் கொடி பறக்கும் நம் தலைநகரில், அடியேங்கட்கு ஆதரவு தீர - உன் அடிமைகளாகிய எங்களுக்கு ஆதரவாகி, இன்று இருந்து நாளை எழுந்தருள்க - இன்று மட்டும் தங்கி நாளை செல்லுங்கள், என்று உரைத்தார் - என்று கெஞ்சினார்கள்.

பொழிப்புரை:

நிடத நாட்டு மக்கள் நளனது கால்களில் விழுந்து வணங்கி, 'வேலை ஏந்திய மன்னா, உன் அடிமைகளாகிய எங்கட்கு ஆறுதலாக இன்று நம் தலைநகரில் தங்கி நாளை செல்வாயாக' என்று கேட்டுக் கெஞ்சினர். 56

இன்று தங்கலாமா?

236. மன்றல்இளங் கோதை முகம்நோக்கி மாநகர்வாய்
நின்(று)உருகு வார்கண்ணின் நீர்நோக்கி - இன்(று)இங்கு
இருத்துமோ என்றான் இளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனத்தின் வைத்து.

பதவுரை:

இளங்குதலை வாயாள் - குதலை மொழிகள் பேசும் தமயந்தியின், வருத்தமோ தன் மனத்தின் வைத்து - வாட்டத்தை (நளன்) தன் நெஞ்சில் வைத்து, மன்றல் இளங்கோதை முகம் நோக்கி - திருமணமான இளையவள் தமயந்தியின் முகம்பார்த்தும், மாநகர்வாய் நின்று உருகுவார் கண்ணின் நீர்நோக்கி - மாவிந்த நகர மக்கள் கண்ணீர் வடித்தலை நோக்கியும், இருத்துமோ என்றான் - இன்று ஒருநாள் தங்கிச் செல்லுவோமா என நளன் அவளிடம் கேட்டான்.

பொழிப்புரை:

தமயந்தியின் வாட்டத்தைக் கவனித்த நளன் அவளின் முகவாடலுக் காகவும் நகர மக்கள் கண்ணீர் வடித் தலுக்காகவும் இரங்கி, 'இன்று ஒருநாள் தங்கிச் செல்வோமா?' என அவளிடம் கேட்டான் நளன். 57

Public domain. Digitization Muthulakshmi Research Academy

நளனை விரும்புபவர் கொல்லப்படுவர்

237. வண்டாடும் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடி னார்தம்மைக் கொல்என்று - தண்டா
முர(சு)அறைவாய் ஆங்(கு)என்றான் முன்னேமுனிந்(து) ஆங்கு
அர(சு)அறியா வேந்தன் அழன்று.

பதவுரை:

அரசு அறியா வேந்தன் - ஆட்சி முறையின் சிறப்பை அறியாத புட்கரன், ஆங்கு முன்னே முனிந்து அழன்று - அந்நகர மக்களிடத்துச் சினங்கொண்டு, மாநகரில் - மாவிந்த நகரத்தில், வண்டு ஆடும் தார்நளனை - வண்டுகள் மொய்க்கும் மாலையுடைய நளனை, யாரேனும் - எவர் ஆயினும், கொண்டாடினார் தம்மை - பாராட்டுகின்றவர்களை, ஆங்கு - பாராட்டிய இடத்திலேயே, கொல் என்று தண்டா முரசு அறைவாய் என்றான் - கொன்றுவிடவேண்டும் என்று முரசு அறைக என்று புட்கரன் ஏவலர்க்குக் கட்டளையிட்டான்.

பொழிப்புரை:

ஆட்சிநெறிமுறை அறியாத புட்கரன் மாவிந்த நகர மக்கள் மீது சினங்கொண்டு எனக்குரிய நகரத்தில் நளனைப் பாராட்டுபவர்கள் அவ்விடத்திலேயே கொல்லப்படுவார்கள் எனப் பறை கொட்டுக எனக் கட்டளையிட்டான். 58

நானே காரணம்

238. அறையும் பறைஅரவம் கேட்(டு)அழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி - முறுவலியா
இந்நகர்க்(கு)ஈ(து) என்பொருட்டால் வந்த(து) எனஉரைத்தான்
மன்மகற்றும் கூர்இலைவேல் மன்.

பதவுரை:

மன்அகற்றும் கூர்இலைவேல் மன்-பகை மன்னர்களை அழிக்கும் கூரிய வேல்படை தாங்கிய நளவேந்தன், அறையும் பறைஅரவம் கேட்டு - (புட்கரன்) கட்டளையிட்ட பறையோசை கேட்டு, அழிந்து நைந்து - (தன் நெஞ்சம்) அழிந்து வருந்தி, முறுவலியா - மெல்ல நகைத்து, பிறைநுதலாள் பேதையை நோக்கி - பிறை நெற்றியாள் அறியாமையை நினைந்து, ஈது இந்நகர்க்கு என்பொருட்டால் வந்தது - இத்தகைய நிலை இந்நகர்க்கு வர நானே காரணம், என உரைத்தான் - என்று சொன்னான்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

பகைவரைக் கொல்லும் வேற்படை பெற்ற நளன், புட்கரனில் பறை ஓசையைக் கேட்டு மனம் நொந்து வறட்டுச் சிரிப்பு சிரித்துத் தமயந்தியிடம், 'இந்நகர்க்கு இந்த நிலை வந்ததற்கு நான்தானே காரணம்' என வருந்திக் கூறினான். 59

குடும்பத்தோடு போனான்

239. தன்வாயில் மென்மொழியே தாங்கினான் ஓங்குநகர்ப்
பொன்வாயில் பின்னாகப் போயினான் - முன்நாளில்
பூமகளைப் பாரினொடு புல்லினான் தன்மகனைக்
கோமகளைத் தேவியொடும் கொண்டு.

பதவுரை:

முன்நாளில் பூமகளைப் பாரினொடு புல்லினான் - முன்காலத்தில் மலர் மகளாகிய இலக்குமியையும் பூமகளையும் தழுவி இருந்த நளன், தன் மகனைக் கோமகளை - தன் மகனையும் மகளையும், தேவியொடும் கொண்டு - தமயந்தியோடு அழைத்துக் கொண்டு, தன்வாயில் மென்மொழியே தாங்கினான் - நகர் வாயிலில் (வருந்தி அழுத மக்களுக்கு) இன்மொழியால் ஆறுதல்கூறி, ஓங்குநகர்ப் பொன்வாயில் பின்னாகப் போயினான் - பெருநகரின் பொன் இழைத்த கோட்டை வாயில் பின்னே செல்ல, தான் முன்னே சென்றான்.

பொழிப்புரை:

அன்று செல்வச் செழிப் போடு பூமியை ஆண்ட நளன், இன்று தன் மக்களோடும் மனைவியோடும் நகர வாயிலில் நின்று அழுத மக்களுக்கு ஆறுதல் கூறி, நகர் பின்னே போக தான் முன்னே போனான். 60

துக்கத்தில் ஆழ்ந்த வீடு...

240. கொற்றவன்பால் செல்வாரைக் கொல்வான் முர(சு)அறைந்து
வெற்றியொடு புட்கரனும் வீற்றிருப்ப - முற்றும்
இழவு படுமாபோல் இல்லங்கள் தோறும்
குழவிபால் உண்டிலவே கொண்டு

பதவுரை:

கொற்றவன்பால் செல்வாரை - நளனைப் பின்தொடர்ந்து செல்பவர்களை, கொல்வான் முரசு அறைந்து - கொல்வேன் என முரசு அறைந்து, புட்கரனும் வெற்றியொடு வீற்றிருந்தான், இல்லங்கள் தோறும் முற்றும் இழவு படுமாபோல் - அந்நகர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்கள் வீடுகளில் சாவு நிகழ்ந்ததுபோல (மக்கள் நினைக்க) குழவி கொண்டு பால் உண்டிலவே - குழந்தைகளும் தாய்ப் பாலை ஏற்றுக் குடிக்காமல் இருந்தன.

பொழிப்புரை:

நளனைத் தொடர்பவர்களைக் கொல்லுக என முரசு அறைந்து கர்வத் தோடு புட்கரன் வீற்றிருந்தான். நளன் பிரிவைத் தாங்காத மக்கள் எல்லாரும் தத்தம் வீடுகளில் சாவு நிகழ்ந்தது போலத் துக்கத்தில் ஆழ்ந்தனர். குழந்தைகளும் கூடத்தாய்ப் பாலைக் குடிக்க மறுத்தன. *61*

பிள்ளைகள் வினா

241. சந்தக் கழல்தா மரையும் சதங்கைஅணி
பைந்தளிரும் நோவப் பதைத்(து)உருகி - எந்தாய்
உடந்தோய் களிற்றாய் வழியான(து) எல்லாம்
கடந்தோமா என்றார் கலுழ்ந்து.

பதவுரை:

சந்தக் கழல்தாமரையும் - அழகிய கழல் அணிந்த தாமரைபோன்ற பாதங்களை (உடைய நளனது மகனும்), சதங்கை அணி பைந்தளிரும் - கிண்கிணி எனும் அணி அணிந்த தளிர் போன்ற கால்களை (உடைய அவனது மகளும்), நோவ - நடந்ததனால் துன்புற்று, பதைத்து உருகி - உடல்துடித்து உருகி, எம்தாய் - எம் தாயே, வடந்தோய் களிற்றாய் - கயிறு கட்டிய யானையைச் செலுத்தும் தந்தையே, வழியானது எல்லாம் கடந்தோமா என்றார் கலுழ்ந்து - நடக்கவேண்டிய தூரத்தைக் கடந்து விட்டோமா என்று கேட்டு அழுதார்கள்.

பொழிப்புரை:

கழல் அணிந்த நளனது மகனும் கிண்கிணி அணிந்த அவனது மகளும் நடந்ததனால் துன்புற்று, உடல் வருந்தி, மனம் உருகி, 'பெற்றோரே, இன்னும் நாம் கடக்கவேண்டிய தூரத்தைக் கடந்து விட்டோமா?' எனக் கேட்டு அழுதார்கள். *62*

நளனின் சங்கடம்

242. தூயதன் மக்கள் துயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி - யாதும்
தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான் செம்மை
புரிவான் துயரால் புலர்ந்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

செம்மை புரிவான் - செம்மையான செயல்களையே இதுகாறும் செய்த நளன், துயரால் புலர்ந்து - (தனக்கு ஏற்பட்ட) துயரால் வாடி, தூயதன் மக்கள் துயர்நோக்கி - நல்ல தன் பிள்ளைகளின் துயர்கண்டும், சூழ்கின்ற மாயவிதியின் வலிநோக்கி - தன்னை விரட்டுகின்ற ஊழின் வலிமை கண்டும், யாதும் தெரியாது - ஒன்றுமே செய்ய முடியாமல் செயலற்று, சித்திரம்போல் நின்றிட்டான் - அசையாத ஓவியம்போல் நின்றான்.

பொழிப்புரை:

செம்மைக் குணமுடைய நளன் துயரால் வாடித் தன் மக்களின் வாட்டம் கண்டும் ஊரின் வலிமை கண்டும் ஒன்றுமே செய்ய முடியாமல் செயலற்று ஓவியம் போல் அசையாமல் நின்றுவிட்டான். *63*

வீமன் நகர் சேர்

243. காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம்போக்(கு)
ஏதம் உடைத்(து)இவரைக் கொண்டுநீ - மாதராய்
வீமன் திருநகர்க்கே மீள்என்றான் விண்ணவர்முன்
தாமம் புனைந்தாளைத் தான்.

பதவுரை:

விண்ணவர்முன் தாமம் புனைந்தாளைத்தான் - விண்ணவர்க்கு எதிராகத் தனக்கே மாலை சூட்டிய தமயந்தியை நோக்கி (நளன்), மாதராய் - மாதரசியே, காதல் இருவரையும் கொண்டு - நாம் பெற்ற இருபிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு, கடுஞ்சுரம் போக்கு - கடுமையான பாலைவழியில் செல்லுதல், ஏதம் உடைத்து - துன்பம் தருவதாகும், நீ இவரைக் கொண்டு - (ஆதலால்) நீ இவர்களை அழைத்துக் கொண்டு, வீமன் திரு நகர்க்கே மீள் என்றான் - வீமன் நகருக்குச் செல் என்றான்.

பொழிப்புரை:

இந்திரன் முதலிய தேவர்களுக்கு எதிராகத் தனக்கே மாலை சூட்டிய தமயந்தியை நோக்கி நளன், 'பெண்ணே, இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பாலை வழியில் செல்லுதல் கேடு தரும். ஆதலால் நீ இவர்களை உன் தந்தை நகர்க்கு அழத்துப் போ' என்றான். *64*

In Public domain Digitization Muthulakshmi Research Academy

குலமகள் கணவனைப் பிரிபாள்

244. குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ - கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக்(கு) என்(று) உரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து.

பதவுரை:

நோக்கால் மழைபொழியா நொந்து - (தமயந்தி) மனம் நொந்து கண்களில் மழைபோல் கண்ணீர் வடிய, குற்றமில் காட்சி குதலைவாய் மைந்தரையும் - நல்ல தோற்றத்தையும் மழலைமொழி பேசும் வாயையும் உடைய குழந்தைகளை, பெற்றுக் கொளலாம் - (ஒரு பெண்) பெற்றுக்கொள்ள முடியும், (கணவன் இருந்தால்), கொற்றவனே, - நளமன்னனே, குலமகளுக்கு - குலமகள், கோக்காதலனைப் பெறலாமோ - (கணவனை இழந்துவிட்டால்) மீண்டும் பெறமுடியுமா? என்று உரைத்தாள் - என்று கேட்டாள்.

பொழிப்புரை:

தமயந்தி, கண்களில் நீர் பெருக நளனிடம், 'மன்னவனே, ஒரு பெண் கணவன் இருந்தால் எப்போது வேண்டுமானாலும் நல்ல பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடும். ஆனால் கணவனை இழந்து விட்டால் பெற முடியுமா?' என்று கேட்டாள். 65

நளன் மறுமொழி

245. கைதவந்தான் நீக்கிக் கருத்தில் கறைஅகற்றிச்
செய்தவத்தான் எத்தனையும் செய்தாலும் - மைதீர்
மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் ஊர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து.

பதவுரை:

மாதராய் - பெண்மணியே, கைதவந்தான் நீக்கி - வஞ்சகம் நீக்கி, கருத்தில் கறை அகற்றி - எண்ணத்தில் குறை களைந்து, செய்தவத்தான் எத்தனையும் செய்தாலும் - பல தவச்செயல்களைச் செய்தாலும், மைதீர் மகப்பெறா மானிடர்கள் - குற்ற மற்ற பிள்ளைகளைப் பெறாத மனிதர்கள், வானவர்தம் ஊர்க்குப் போந்து புகப்பெறார் - வானவர் உலகத்தைச் சென்று அடையமாட்டார்கள் என்று நளன் உரைத்தான்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

நளன் தமயந்தியிடம், 'வஞ்சம் நீக்கி, எண்ணத்தில் குறை அகற்றித் தவச்செயல்கள் புரிந்தவர் கூட மக்களைப் பெறாவிட்டால் அவர்கள் விண்ணுலகம் புகும் தகுதி அற்றவர் ஆவர் 'எனக் கூறினான். 66

மக்கட்பேறு

246. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்(று)
என்னுடைய ரேனும் உடையரோ - இன்னடிசில்
புக்(கு)அளையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களைஇங்(கு) இல்லா தவர்.

பதவுரை:

பொன்னுடைய ரேனும் - பொன்னை உடையவர் ஆயினும், புகழுடைய ரேனும் - அழியாத புகழைப் பெற்றவர் ஆயினும், மற்று என்னுடைய ரேனும் - இன்னும் பல பேறுகளைப் பெற்றவர் ஆயினும், இன்னடிசில் புக்கு அளையும் தாமரைக் கை - இனிய உணவில் விட்டுத் துழாவுகின்ற தாமரைக் கையும், பூநாறும் செய்யவாய் - பூ மணம் கமழும் சிவந்த வாயும் உடைய, மக்களை இங்கு இல்லாதவர் - குழந்தைகளைப் பெறாதவர், உடையரோ - எதையாவது பெற்றவர் ஆகார்.

பொழிப்புரை:

பொன், புகழ் மற்றும் பிறவற்றைப் பெற்றவர் ஆனாலும் இனிய உணவுக்குள் கையை நுழைத்துத் துழாவும் பூமணம் நாறும் குழந்தைகளைப் பெறாதவர் எதனையும் பெற்றவர் ஆகமாட்டார். 67

குதலைச் சொல்

247. சொன்ன கலையின் துறைஅனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயன்உடைத்தாம் இன்முகத்து - முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி.

பதவுரை:

இன்முகத்து முன்னம் குறுகுதலை - இனிய முகத்தையும் முன்னே குறுகிய, கிண்கிணிகால் - கதங்கை அணிந்த கால்களையும் உடைய, கோமக்கள் - பெருமைமிக்க குழந்தைகளின், பால்வாய்ச் சிறுகுதலைக் கேளாச்செவி - பால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணம் மாறா வாயிலிருந்து கிளம்பும் மழலை மொழிகளைக் கேட்காத காதுகள், சொன்ன கலையின் - சொல்லப்பட்ட கவின் கலைகளின், துறைஅனைத்தும் தோய்ந்தாலும் - பகுதிகளை எல்லாம் அனுபவித்தாலும், என்ன பயன் உடைத்தாம் - என்ன பயன்? ஒன்றுமில்லை.

பொழிப்புரை:

இனிய முகத்தையும் சதங்கை அணிந்த கால்களையும் உடைய சிறப்புப் பெற்ற குழந்தைகளின் குதலை மொழிகளைக் கேளாத காதுகள் ஏனைய கலைகளை எவ்வவுதான் அனுபவித்தாலும் பயன் ஒன்றும் இல்லை. *68*

தமயந்தி மொழி

248. போற்றிய செல்வம் புனல்நாட் டொடும் போகத்
தோற்றமையும் யாவர்க்கும் தோற்றாதே - ஆற்றலாய்
எம்பதிக்கே போந்(து) அருள்க என்றாள் எழில்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன்.

பதவுரை:

எழில்கமலச் செம்பதிக்கே வீற்றிருந்த தேன் - அழகிய தாமரை மலரில் இருக்கும் திருமகளை ஒத்த தமயந்தி, ஆற்றலாய் - பேராற்றல் வாய்ந்த நள அரசனே, போற்றரிய செல்வம் புனல் நாட்டொடும் போக - எல்லையற்ற செல்வங்களும் நிடதநாடும்புட்கரன் அடைய, தோற்றமையும் யாவர்க்கும் தோற்றாதே - நீ தோற்றது அனைவரும் அறியாமல் இருக்க, எம்பதிக்கே போந்து அருள்க என்றாள் - நீ என் தந்தை நாட்டுக்கே வருக என அழைத்தாள்.

பொழிப்புரை:

தமயந்தி நளனிடம் 'ஆற்றல் நிறைந்தவனே, பெருஞ் செல்வமும் நிடதநாடும் புட்கரனிடம் தோற்றமை பிறர் அறியாமல் இருக்க, என் எந்தை நாட்டுக்கே வருக' என அழைத்தாள். *69*

நளன் கூற்று

249. சினக்கதிர்வேல் கண்மடவாய் செல்வர்பால் சென்(று)
எனக்கென்றும் இம்மாற்றம் கண்டாய் - தனக்குரிய
தானம் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானம் துடைப்பதோர் வாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

சினக்கதிர்வேல் கண்மடவாய் - கொடுமை செய்யும் வேலை ஒத்த கண்ணை உடைய தமயந்தியே, செல்வர்பால் சென்று ஈ எனக்கு என்னும் இம்மாற்றம் - பணம் படைத்தோரிடம் சென்று ஈக என இரத்தலானது, தனக்குரிய தானம் துடைத்து - ஒருவனிடமுள்ள கொடைக்குணத்தை அழித்துவிடும், தருமத்தை வேர்பறித்து - அறச் செயலை வேரோடு தகர்த்து விடும், மானம் துடைப்பதோர் வாள் - ஒருவனது மானத்தையே துடைக்கும் வாள் இரத்தலே, கண்டாய் - நீ உணர்க.

பொழிப்புரை:

வேலைப்போன்ற ஒளிபடைத்த கண்ணாளே, செல்வரிடம் சென்று யாசிப்பவனின் கொடைக்குணம் மங்கிப் போகும்; அறச் செயல் செய்யும் குணம் தகர்ந்து போகும்; ஒருவனது மானத்தையே துடைத்தெறியும் வாள்தான் இரத்தல் என்பதே என்பதை நீ உணர்க. அதனால் உன்கருத்துக்கு இசையேன். 70

பித்தர்

250. மன்னராய் மன்னர் தமைஅடைந்து வாழ்(வு) எய்தி
இன்னமுதல் தேக்கி இருப்பாரேல் - சொன்ன
பெரும்பே டிகள்அலரேல் பித்தரே அன்றோ
அரும்பேடை மானே அவர்.

பதவுரை:

அரும்பேடை மானே - அருமையான பெண்மான் போன்ற தமயந்தியே, மன்னராய் மன்னர் தமை அடைந்து - ஓர் அரசன் இன்னொரு அரசனைச் சார்ந்து வாழ்வு எய்தி - வாழ்தலும், இன்னமுதல் தேக்கி இருப்பாரேல் - அறுசுவை உணவை நிரம்ப உண்டு களித்திருத்தலும், சொன்ன பெரும்பேடிகள் - (செய்பவர்களை) பெரியோர் பேடிகள் என்பர், அல்லரேல் அவர் பித்தரே அன்றோ - அல்லது பித்தர்களே அவர்கள் ஆவார்.

பொழிப்புரை:

பெண் மான் போன்றவளே, ஒரு மன்னர் இன்னொரு மன்னரைச் சார்ந்து வாழ்ந்து அறுசுவை உண்டியை உண்டு களித்திருப்பவர் பேடியே ஆவர்; அல்லது அவர்களைப் பித்தர் எனவும் குறிக்கலாம். 71

தமயந்தி வேண்டல்

251. செங்கோலாய் உன்தன் திருவுள்ளம் ஈதாயின்
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே - நம்கோலக்

In Public domain Digitization Muthulakshmi Research Academy

காதலரைப் போக்கி அருள்என்றாள் காதலருக்(கு)
ஏதிலரைப் போல எடுத்து.

பதவுரை:

காதலர்க்கு ஏதிலரைப் போல - (நளனது கூற்றைக் கேட்ட தமயந்தி) தன் பிள்ளைகளுக்கு அயலாரைப் போல நின்று, செங்கோலாய் - செங்கோலில் சிறந்த நளனே, உன்திருவுள்ளம் ஈதாயின் - உன் கருத்து இதுவானால், எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே - எம்தந்தை வீமனின் அழகிய நகர்க்கு, நம்கோலக் காதலரை - நம்முடைய குழந்தைகளை, எடுத்துப் போக்கி அருள் என்றாள் - அனுப்பி அருள்க என்று கூறினாள்.

பொழிப்புரை:

நளன் கூறியதைக் கேட்ட தமயந்தி, செங்கோல் ஆட்சி செய்த மன்னவனே, உன் கருத்து இதுவாயின் நம் பிள்ளைகளை எந்தை வீமன் தலைநகர் குண்டினபுரத்துக்கு அனுப்பி அருள்க' என வேண்டுகோள் விடுத்தாள். 72

குழந்தைகளை வீமனிடம் சேர்

252. பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன் - தாதைக்குக்
காட்டுநீ என்றான் கலங்காத உள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து.

பதவுரை:

கலங்காத உள்ளத்தை வாட்டுநீர் கண்ணிலே வைத்து - கலங்காத உள்ள முடைய நளன் பொங்கும் கண்ணீரைக் கண்ணிலே தேக்கி, பேதை பிரியப் பிரியாத பேரன்பின் - (என் மனையாள் தமயந்தி) பிரிய மனம் ஒப்பினாலும் பிரிய நினைக்காத பேரன்புடைய, காதலரைக் கொண்டு போய் - என் பிள்ளைகளை அழைத்துச் சென்று, காதலிதன் தாதைக்குக் காட்டுநீ என்றான் - தமயந்தியின் தந்தை இடத்தில் சேர்த்து விடு என்றான் நளன் தன்னொடு வந்த அந்தணனிடம்.

பொழிப்புரை:

கலங்காத நெஞ்சுடைய நளன் கண்ணீரைத் தன் கண்ணிலே தேக்கித் தன்னோடு வந்த அந்தணனிடம், 'என் மனையாள் பிள்ளைகளைப் பிரிய மனம் ஒப்பினாலும் அவர்கள் பேரன்பினால் பிரிய விரும்பவில்லை. அவர்களை நீ தமயந்தியின் தந்தை வீமராசனிடம் சேர்த்து விடு' என்றான். 73

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழந்தைகள் கதறல்

253. தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி - எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது.

பதவுரை:

விழிவழியே ஆறாகக் கண்ணீர் - (நளனின் மக்கள்) விழிகளில் ஆறாகக் கண்ணீர் பெருகி வழிய, தந்தை திருமுகத்தை நோக்கி - தம் தந்தையின் முகத்தைப் பார்த்தும், தமைப்பயந்தாள் இந்து முகத்தை எதிர்நோக்கி - பெற்றெடுத்த நிலவை ஒத்ததாயின் முகத்தைப் பார்த்தும், எந்தம்மை வேறாகப் போக்குதிரோ என்றார் அழுது - 'எங்களை மட்டும் பிரித்து அனுப்ப நினைக்கிறீர்களே' என்று கூறி அழுதார்கள்.

பொழிப்புரை:

கண்களில் கண்ணீர் பெருகி ஆறாக வழிந்தோட நளனின் மக்கள் இருவரும் தாயையும் தந்தையையும் நோக்கி, 'எங்களை மட்டும் தனியே பிரித்து அனப்பப் பார்க்கிறீர்களே' எனக்கேட்டு அழுதனர். 74

அணைத்து அழுதாள்

254. அஞ்சனந்தோய் கண்ணில் அருவிநீர் ஆங்(கு) அவர்க்கு
மஞ்சனநீர் ஆக வழிந்தோட - நெஞ்(சு) உருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து.

பதவுரை:

வல்லிவிடா மெல்லிடையாள் - பூங்கொடி போன்ற மெல்லிய இடையை உடைய தமயந்தி, அஞ்சனம் தோய் கண்ணில் அருவிநீர் - மைதீட்டிய தன் கண்களில் அருவியாக வந்த நீர், ஆங்கு அவர்க்கு மஞ்சனநீர் ஆக வழிந்தோட - அவள் பிள்ளைகளுக்குக் குளிப்பாட்டுகின்ற மஞ்சள்நீராக வழிய, நெஞ்சு உருகி - நெஞ்சம் உருகி, மக்களைத் தன் மார்போடு புல்லிவிடா நின்றாள் புலர்ந்து - தன் மக்களை மார்போடு அணைத்து வாட்டத்துடன் நின்றாள்.

பொழிப்புரை:

தமயந்தியின் கண்களிலிருந்து பெருகும் நீர் குழந்தைகளைக் குளிப்பாட்டும் மஞ்சள்நீராக வழிந்தோடியது. அவள் நெஞ்சம்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

நெகிழ, தன் குழந்தைகளை மார்போடு அணைத்துக் கொண்டு வாட்டமுடன் நின்றாள். 75

வீமன் நகர் ஏகல்

255. இருவர் உயிரும் இருகையான் வாங்கி
ஒருவன்கொண்(டு) ஏகுவான் ஒத்து - அருமறையோன்
கோமைந்த னோ(டு)இளைய கோதையைக் கொண்(டு) எகினான்
வீமன் நகர்க்கே விரைந்து.

பதவுரை:

அருமறையோன் - மறைகளை ஓதும் அந்தணன், இருவர் உயிரும் இருகையான் வாங்கி - (நளன், தமயந்தி) ஆகிய இருவர் உயிரையும் இருகைகளால் பிடித்துக் கொண்டு, ஒருவன் கொண்டு ஏகுவான் ஒத்து - ஒருவன் செல்லுதலை ஒத்து, கோமைந்தனோடு இளயை கோதையை - இளவரசனையும் இளவரசியையும், வீமன் நகர்க்கே - குண்டினபுரத்துக்கு, கொண்டு ஏகினான் விரைந்து - விரைந்து அழைத்துச் சென்றான்.

பொழிப்புரை:

தமயந்தி, நளன் ஆகிய இருவரின் உயிரையும் இருகையால் பிடித்துக் கொண்டு ஒருவன் செல்லுதல் போல, அந்தணன் என்பவன் நளன் மக்கள் இருவரையும் குண்டினபுரத்துக்கு விரைவாக அழைத்துச் சென்றான். 76

நளன் வருந்தல்

256. காதல் அவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை எனநின்(று) உயிர்ப்போட - யாதும்
உரையாடா(து) உள்ளம் ஒடுங்கினான் வண்டு
விரையாடும் தாரான் மெலிந்து.

பதவுரை:

வண்டு விரையாடும் தாரான் - வண்டு மணமுள்ள தேனில் விளையாடும் மலர்மாலை அணிந்த நளன், மெலிந்து, (தன்மக்கள் பிரிவால்) உடல் வாடி, காதல் அவர்மேலே கண்ணோட - தன் அன்பு அவர்கள்மேல் படிந்து தொடர, விண்ணோடும் ஊதை எனநின்று - விண்ணிலே செல்லும் ஊதைக் காற்றைப்போல நின்று, உயிர்ப்போட - பெருமூச்சு விட்டு, யாதும் உரையாடாது - எதையும் பேசாமல், உள்ளம் ஒடுங்கினான் - நெஞ்சம் தளர்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வண்டுகள் மொய்க்கும் மாலை அணிந்த நளன் மக்கள் பிரிவால் உடல் வாடினான்; தன் பார்வை பிரிபவர் மேலே செல்ல, விண்ணிலே செல்லும் ஊதைக் காற்றைப்போல நின்றான்; பெருமூச்சு விட்டான்; யாரோடும் பேசாமல் உள்ளம் ஒடுங்கி நின்றான். 77

வேகின்ற பாலை நிலம்

257. சேலுள்ள வாவித் திருநாடு பின்ஒழியக்
காலில்போய்த் தேவியொடும் கண்ணுற்றான் - ஞாலம்சேர்
கள்ளிவே கத்(து)அரவின் கண்மணிகள் தாம் பொடியாத்
துள்ளிவே கின்ற சுரம்.

பதவுரை:

சேல்உற்ற வாவித் திருநாடு பின் ஒழிய - கெண்டை மீன்கள் உள்ள நீர் நிலைகளை உடைய நிடத நாடு பின்னே போக, காலில்போய்த் தேவியொடும் - (நளன்) தன் மனையாளுடன் கால் நடையாக நடந்து சென்று, ஞாலம் சேர் கள்ளிவேகத்து - பூமியில் இருக்கின்ற கள்ளிகளின் வெம்மையால், அரவின் கண்மணிகள் - பாம்புகளிடத்துள்ள நாகரத்தினம், துள்ளி, - வெடித்து, பொடிஆ வேகின்ற சுரம் கண்ணுற்றான் - சாம்பலாக எரிகின்ற பாலை நிலத்தைப் பார்த்தான்.

பொழிப்புரை:

நிடதநாடு தன் பின்னே போக நளன் மனையாளோடு நடந்து சென்றான் பாலை வழியே. ஆங்கு பூமியில் இருக்கிற கள்ளிகளின் நாகரத்தினம் வெடிக்கின்றன; அவ்வெம்மையால் பாலை நிலமே சாம்பலாவதை நளன் பார்த்தான். 78

கலி பறவையாய்த் தோன்றல்

258. கல்நிறத்த சிந்தைக் கலியும்அவன் முன்பாகப்
பொன்நிறத்த புள்வடிவாய்ப் போந்(து) இருந்தான் -
நன்னெறிக்கே
அஞ்சிப்பார் ஈந்த அரசனையும் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து.

பதவுரை:

நன்னெறிக்கே அஞ்சி - நல்ல நெறிகளைக் காக்கவேண்டும் எனும் அச்சத்தால், பார்ஈந்த அரசனையும் தேவியையும் - தம் நாட்டையே இழந்த நளனையும் தமயந்தியையும், வனத்து

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

வஞ்சிப்பான் வேண்டி - காட்டில் வஞ்சிக்க நினைத்த, கல்நிறத்த சிந்தைக் கலியும் - கல்நெஞ்சமுடைய கலிபுருடன், அவன் முன்பாக - நளன் முன்னிலையில், பொன்நிறத்த புள்வடிவாய் - பொன் நிறமுள்ள பறவை வடிவில், போந்து இருந்தான் - காட்டில் வந்து இருந்தான்.

பொழிப்புரை:

நன்னெறி காக்கவேண்டும் எனும் அச்சத்தால் நளனும் தமயந்தியும் தம் நாட்டையே இழந்தனர்; அவன் முன்னே வஞ்சகமும் கல்நெஞ்சமும் உடைய கலி பொன்னிறப் பறவை வடிவில் காட்டில் இருந்தான். 79

பறவையைப் பிடி!

259. தேன்பிடிக்கும் துண்துழாய்ச் செங்கண் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல் - தான்பிடிக்கப்
பொற்றபுள்ளைப் பற்றித்தா என்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது.

பதவுரை:

தேன்பிடிக்கும் தண்துழாய் செங்கண் கருமுகிலை - தேன் நிறைந்த தளசிமாலை அணிந்த செங்கண்ணனாகிய இராமனிடம், மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல் - மானைப் பிடிக்கச் சொன்ன சீதையைப் போல, புதுமழலைச் சொற்கிள்ளை வாயாள் - மழலைச் சொல்லைப் பேசும் கிளிபோன்ற தமயந்தி, தொழுது - நளனை வணங்கி, தான் பிடிக்க - தான் விளையாட, பொற்புள்ளைப் பற்றித்தா என்றாள் - பொன்னிறப் பறவையைப் பிடித்துத் தா' என்றாள்.

பொழிப்புரை:

துள்ளி விளையாடிய மானைப் பிடித்துத்தா எனச் சீதை இராமனிடம் கேட்டதுபோல்க் கிளிபோன்று குதலை மொழிபேசும் தமயந்தி நளனிடம் காட்டில் கண்ட பொன்னிறப் பறவையைப் பிடித்துத் தா' என்றாள். 80

பறவையைப் பிடிக்க முற்படல்

260. பொற்புள் அதனைப் பிடிப்பான் நளன்புகுதக்
கைக்குள்வரு மாபோல் கழன்(று)ஓடி - எய்க்கும்
இளைக்குமா போல இருந்ததுகண்(டு) அன்றே
வளைக்கும் ஆ(று) எண்ணினான் மன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

நளன் பொற்புள் அதனைப் பிடிப்பான் - புகுதக் - நளன் பொன்னிறப் பறவையைப் பிடிக்க எத்தனிக்க, கைக்குள் வருமாபோல் கழன்று ஓடி - கையில் அகப்படுவதுபோல வந்து தப்பி ஓடி, எய்க்கும் இளைக்கும் ஆபோல - களைப் படைந்தது போலவும் இளைத்தது போலவும் இருந்தது கண்டு - இருப்பதைப் பார்த்து, அன்றே மன் வளைக்கும் ஆறு எண்ணினான் - அப்போதே நளன் அதனை வளைத்துப் பிடிக்கும் வழியை ஆராய்ந்தான்.

பொழிப்புரை:

நளன் பொன்னிறப் பறவையைப் பிடிக்க முயன்றான்; அஃது அவன் கைக்குள் அகப்படுவதுபோல வந்து தப்பி ஓடியது; தப்பிய அப்பறவை களைத்தது போலவும் இளைத்தது போலவும் இருந்தது. உடனே நளன் அதனை வளைத்துப் பிடிக்கும் வகையை ஆராய்ந்தான். *81*

பிடிக்கும் வழி

261. கொற்றக் கயல்கண் கொடியே இருவேமும்
ஒற்றைத் துகிலால் உடைபுனைந்து - மற்(று)இந்தப்
பொற்றுகிலால் புள்வளைக்கப் போதுவோம்
என்(று) உரைத்தான்
பற்(று) அகலா உள்ளம் பரிந்து.

பதவுரை:

பற்றுஅகலா உள்ளம் பரிந்து - தமையந்தி மீது அன்பு மாறாத நளன் அவளிடம் விருப்பம் மிகுந்து, கொற்றக் கயல்கண் கொடியே - சேலை ஒத்த கண்களை உடைய கொடி போன்ற தமயந்தியே, இருவேமும் ஒற்றைத் துகிலால் உடைபுனைந்து - நாம் இருவரும் ஓராடையைக் கட்டிக்கொண்டு, மற்று இந்தப் பொன் துகிலால் - இன்னொரு ஆடையால், புள்வளைக்கப் போதுவோம் என்று உரைத்தான் - பறவையைப் பிடிப்போம் என்றான்.

பொழிப்புரை:

தமயந்திமீது மாறா அன்புடை நளன் அவளிடம், 'மீனைஒத்த கண்களும் கொடிஇடையும் உடைய தமயந்தியே, நாம் இருவரும் ஒற்றை ஆடையை உடுத்திக்கொண்டு இன்னொரு ஆடையால் பறவையைப் பிடிப்போம், வா' என்றான். *82*

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடையால் பிடித்தல்

262. எற்றித் திரைபொர நொந்(து) ஏறி இளமணலில்
பற்றிப் பவளம் படநிழல்கீழ் - முத்(து)ஈன்று
வெள்வளைத்தாய் ஓடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தான் ஆடையால் போந்து.

பதவுரை:

திரை எற்றிபொர - அலைகள் வீசி மோதுவதால், நொந்து - வருந்தி, இளமணலில் ஏறி பற்ற - இளமணல்மீது ஏறிப் பற்றுக் கோடாகக் கொண்டு, பவளம் படர்நீழல்கீழ் - பவளக் கொடிகள் படர்ந்த நிழலில், முத்து ஈன்று - முத்துகளை ஈன்று விட்டு, வெள்வளைத்தாய் - வெள்ளியசங்குகள், ஓடுநீர் வேலைத் திருநாடன் - ஓடும் கடலையுடைய நாடன் நளவேந்தன், ஆடையால் போந்து - தன் ஆடையை எடுத்து, புள்வளைத்தான் - பறவையை வளைத்தான்.

பொழிப்புரை:

அலைகள் மோதுவதால் வருந்திய சங்குகள் மணலின்மீது ஏறி முத்துகளை ஈன்றன. பின்னர் அவை நீருடன் சேர்ந்து ஓடும் கடற்கரை நாடன் நளன். அவன் தன் ஆடையால் பறவையை வளைத்துப் பிடிக்க முயன்றான். *83*

பறவை வஞ்சகம்

263. கூந்தல் இளங்குயிலும் கோமானும் கொண்(டு)அணைத்த
பூந்துகில் கொண்(டு) அந்தரத்தே போய்நின்று வேந்தனே
நன்நாடு தோற்பித்தோன் நானேகாண் என்றதே
பொன்நாடு மாநிறத்த புள்.

பதவுரை:

கூந்தல் இளங்குயிலும் கோமானும் - அழகிய கூந்தலையுடைய குயில் குரலாள் தமயந்தியும் நளனும், கொண்டு அணைத்த பூந்துகில் கொண்டு - பிடிக்க நினைத்த ஆடையையும் சேர்த்துக் கொண்டு, அந்தரத்தே போய் நின்று - ஆகாயத்தில் பறந்து சென்ற பொன்நாடு மாநிறத்த புள் - பொன்னிறம் வாய்ந்த அந்தப் பறவையானது, வேந்தனே - நளனே, நன்நாடு தோற்பித்தோன் நானேகாண் - நீ நாடு இழக்கக் காரணமானவன் நான்தான், என்றதே - என்று கூறியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

தமயந்தியும் நளனும் பறவையை வளைக்க நினைத்த ஆடையுடன் பறவை ஆகாயத்தில் பறந்தது. பொன்னிறமான அப்பறவை நளனிடம்,' நளனே, நீ நாடு இழக்க காரணமானவன் நானே' என்றது. 84

ஒற்றை ஆடை

264. காவிபோல் கண்ணிக்கும் கண்ணியந்தோள் காளைக்கும்
ஆவிபோல் ஆடையும் ஒன்(று) ஆனதே - பூவிரியக்
கள்வேட்டு வண்(டு)உழலும் கானத்(து) இடைக்கனகப்
புள்வேட்டை ஆதரித்த போது,

பதவுரை:

பூவிரியக் கள்வேட்டு வண்டு உழலும் கானத்து இடை - பூக்கள் விரிய அவற்றில் மதுஎடுக்க விரும்பிய வண்டுகள் சூழலும் கானகத்திடையே, கனகப் புள்வேட்டை ஆதரித்தபோது - பொன்னிறப் பறவையைப் பிடிக்க நினைத்த, காவிபோல் கண்ணிக்கும் - குவளை மலர் போன்ற தமயந்திக்கும், கண்ணியந்தோள் காளைக்கும் - மாலை தரித்த நளனுக்கும், ஆவிபோல் - (இருவருக்கும்) உயிர் ஒன்றானது போல, ஆடையும் ஒன்று ஆனரே - உடுத்தியிருக்கும் ஆடையும் ஒன்றே ஆனது.

பொழிப்புரை:

கானகத்தில் பூக்கள் விரிகின்றன; அவற்றில் தேன் எடுக்க தேனீக்கள் சுழலுகின்றன; அக்காட்டு இடையில் பொன்னிறப் பறவையைப் பிடித்த தமயந்திக்கும் நளனுக்கும் உயிர் ஒன்றானதுபோல, உடுத்தியிருக்கும் ஆடையும் ஒன்றானது. 85

தமயந்தி நினைப்பு

265. அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்திறம்
பிழைத்தார் தெய்வம் இகழ்ந்தார் - புறங்கடையில்
சென்றார் புகுநரகம் சேர்வாய்கொல் என்(று)அழியா
நின்றாள் விதியை நினைந்து.

பதவுரை:

அறம்பிழைத்தார் - அறத்தைக் கைவிட்டவர், பொய்த்தார் அருள்சிதைத்தார் - பொய் புகலுவோர், அருளைக் கெடுத்தவர், மானத்திறம் பிழைத்தார் தெய்வம் இகழ்ந்தார் - மானத்தை இழந்தவர், தெய்வத்தை நம்பாதோர், புறங்கடையில் சென்றார் -

(செல்வரின்) வாசல் சென்று யாசிப்பவர், புகுநரகம் சேர்வாய்கொல் - ஆகியோர் செல்லும் நரகிடை கலியாகிய நீயும் சேர்க, என்று விதியை நினைந்து அழியாநின்றாள் - என்று விதியை நினைத்து மனம் நொந்து நின்றாள் தமயந்தி.

பொழிப்புரை:

அறநெறி வழுவியோர், பொய் பேசுவோர், கருணை இல்லாதவர், மானத்தை விட்டவர், தெய்வ நம்பிக்கை இல்லாதவர், செல்வரிடம் சென்று யாசிப்பவர் ஆகியோர்புகும் நரகத்தைக் கலியாகிய நீயும் சேர்வாய் 'எனக் கூறி விதியை நினைத்துக் கொண்டு நொந்து நின்றாள் தமயந்தி. *86*

தெய்வமே கைவிட்டால்

266. வையம் துயர்உழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வம் கெடுத்தால் செயல்உண்டோ - மெய்வகையே
சேர்ந்(து)அருளி நின்றதனிச் செங்கோலா இங்(கு)ஒழியப்
போந்(து) அருள்க என்றாள் புலர்ந்து.

பதவுரை:

மெய்வகையே சேர்ந்து அருளி - அறநெறிப்படியே அருள் ஆட்சி, நின்ற தனிச் செங்கோலா - செய்த செங்கோல் வழுவா மன்னனே, வையம் துயர்உழப்ப - (நம்) நாடானது துயரால் வாடவும், மாயம் பலசூழ்ந்து - வஞ்சனைகள் பல உண்டாகவும், தெய்வம் கெடுத்தால் - தெய்வமே துணை நின்றால், செயல் உண்டோ - (நமக்கு) வேறு வழிதான் உண்டாகுமா? இங்குஒழியப் புறப்படுக, என்றாள் புலர்ந்து - என்று மனம் வாடிக் கூறினாள் அரசி.

பொழிப்புரை:

அறநெறி வழுவாமல் செங்கோல் செலுத்திய மன்னவனே, நம் நாடு துயரால் வருந்தவும் வஞ்சனைகள் பெருகவும் தெய்வமே துணை நின்றால் நமக்கு வேறு கதியாது, ஆதலால் இங்கிருந்து உடனே புறப்படுக என்றாள் தமயந்தி மனம் வாடி. *87*

பகலவன் மறைவு

267. அந்த நெடுஞ்சுரத்தின் மீ(து)ஏக ஆங்(கு)அழலும்
வெந்தழலை ஆற்றுவான் மேல்கடற்கே - எந்தை
குளிப்பான்போல் சென்(று)அடைந்தான் கூர்இருளாள் பாரை
ஒளிப்பான்போல் பொன்தேர் உடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

எந்தை - எம் தந்தையாகிய சூரியன், அந்த நெடுஞ்சுரத்தின் மீதுஏக - அக்கொடிய பாலை நிலத்தின் வழியே செல்லுகையில், ஆங்கு அழலும் வெந்தழலை ஆற்றுவான் - அந்நிலத்தில் தனக்கேற்பட்ட வெம்மையைத் தணித்துக் கொள்ள, மேல்கடற்கே குளிப்பான்போல் - மேலைக்கடலில் முழுகிக் குளிப்பவன் போலவும், கூர் இருளால் பாரை ஒளிப்பான்போல் - செறிந்த இருட்டால் இப்பூமியை மூடுவான் போலவும், பொன்தேர் உடன் - தனது பொன்னாலாகிய தேருடன், சென்று அடைந்தான் - சென்று மறைந்தான்.

பொழிப்புரை:

சூரியன் பாலைவழியின் வெம்மையால் தன் உடலுக்கு ஏற்பட்ட சூட்டைத் தணிக்க மேல்கடலில் குளிப்பவன் போலவும் பூமியை இருட்டால் மூடுபவன் போலவும் தன்தேருடன் சென்று மறைந்தான். *88*

பேய்க்கும் தெரியாத இருள்

268. பானு நெடுந்தேர் படுகடலில் பாய்ந்ததற்பின்
கான அடம்பின் கவட்(டு) இலைகள் - மானின்
குளம்(பு)ஏய்க்கும் நல்நாடன் கோதையொடும் சென்றான்
இளம்பேய்க்கும் தோன்றா இருள்.

பதவுரை:

கான அடம்பின் - காட்டிலுள்ள அடப்பம் கொடிகளின், கவட்டு இலைகள் - பிளவு பட்ட இலைகள், மானின் குளம்பு ஏய்க்கும் நல்நாடன் - மானின் குளம்பு களைப் போன்றிருக்கும் நல்ல நாடனாகிய நளன், பானு நெடுந்தேர் படுகடலில் பாய்ந்த தற்பின் - கதிரவன் கடலில் மறைந்தபின்னே, இளம்பேய்க்கும் தோன்றா இருள் - இளம் பேய்களும் கூட வழி தெரியாமல் தடு மாறும் இருளில், கோதையொடும் சென்றான் - தமயந்தியோடு நடந்தான்.

பொழிப்புரை:

அடப்பம் கொடியின் பிளவுபட்ட இலைகள் மான்களின் குளம்புகளை ஒத்திருந்தன; இத்தகைய வளமான நாடன்நளன்; இளம்பேய்களும் வழிதெரியாமல் திகைக்கும் இருளில் அவன் தமயந்தியோடு காட்டில் நடந்தான். *89*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாழ் மண்டபம்

269. எங்காம் புகலிடம் என்(று) எண்ணி இருள்வழி போய்
வெங்கா னகம்திரியும் வேளைதனில் - அங்கேஓர்
பாழ்மண் டபம்கண்டான் பால்வெண் குடைநிழல்கீழ்
வாழ்மண் டபம்கண்டான் வந்து.

பதவுரை:

பால்வெண் குடைநிழல்கீழ் - பால் போன்ற வெள்ளிய வெண்கொற்றக் குடையின்கீழ், வாழ்மண்டபம் கண்டான் - அரண்மனை மண்டபத்தில் இருந்து அரசு செலுத்திய நளன், எங்காம் புகலிடம் என்று எண்ணி - (காட்டில்) நாம் தங்குவதற்கு இடம் எங்குளது என நினைத்து, இருள்வழிபோய் - இருட்டில் நடந்து சென்று, வெங்கானகம் திரியும் வேளைதனில் கொடுங்காட்டில் அலைந்து திரிந்த நேரத்தில் வந்து அங்கே ஓர் பாழ்மண்டபம் கண்டான். (ஓரிடம்) வந்து ஒரு பாழடைந்த மண்டபத்தைக் கண்டான்.

பொழிப்புரை:

வெண்கொற்றக்குடையின் கீழ் ஒரு காலத்தில் அரண்மனை மண்டபத்தில் வாழ்ந்த நளன், இப்போது காட்டில் இரவுப் பொழுதைக் கழிக்க இருளில் இடம் தேடி அலைந்தபோது அங்கே ஒரு பாழடைந்த மண்டபம் இருப்பதைக் கண்டான். 90

தூங்கு தமயந்தி!

270. மூரி இரவும்போய் முற்(று)இருளாய் மூண்டதால்
சாரும் இடம்மற்றுத் தான்இல்லை - சோர்கூந்தல்
மாதராய் நாம்இந்த மண்டபத்தே கண்துயிலப்
போதராய் என்றான் புலர்ந்து.

பதவுரை:

சோர் கூந்தல் மாதராய் - முடிக்கப் படாத கூந்தலை உடைய தமயந்தியே, மூரி இரவும்போய் - முன்னிரவு முடிந்து, முற்று இருளாய் மூண்டதால் - நள்ளிருளாய் ஆகிவிட்டதால், சாரும் இடம் மற்றுத் தான் இல்லை - நாம் (பாதுகாப்பாக) தங்கும் இடம் வேறு இல்லை, இந்த மண்டபத்தே கண்துயிலப் போதராய் என்றான் புலர்ந்து - இந்தப் பாழ் மண்டபத்திலேயே தூங்கு என்று மனம் வாடி நளன் கூறினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

தமயந்தியே, முன்னிரவு முடிந்து நள்ளிரவு ஆகிவிட்டது. நாம் தங்க வேறு காப்பான இடமும் இல்லை. அகவே, இந்தப் பாழடைந்த மண்டபத்திலேயே தூங்கு' என்று மனம் வாடிய நளன் கூறினான். 91

தமயந்தி வருந்தல்

271. வையம் உடையான் மகரயாழ் கேட்(டு) அருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல் - இவ்விரலில்
கேட்டவா என்(று) அழுதாள் கெண்டையங்கண் நீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து.

பதவுரை:

தோட்டவார் கோதையாள் - மலர் முடித்த கூந்தலை உடைய தமயந்தி, வையம் உடையான் - நிடத நாட்டை ஆண்ட நளனின், தெய்வச் செவி - மேன்மையான செவிகள், மகரயாழ் கேட்டு அருளும் - மகர யாழின் இசையை விரும்பிக்கேட்டவை, கொதுகின் சில்பாடல் இவ்விரவில் கேட்ட ஆ என்று சோர்ந்து - (அக்காதுகள் இப்போது) காட்டில் கொசுக்களின் இரைச்சலைக் கேட்கும்படி ஆகிவிட்டதே என்று தளர்ந்து, கெண்டயம்கண் நீர்சோர அழுதாள் - தன் சேல்விழிகளில் நீர் வடிய அழுதாள்.

பொழிப்புரை:

நளன் நாடாண்ட போது அவன் செவிகள் மகரயாழின் இன்னோசையைக் கேட்டு மகிழ்ந்தவை; ஆனால் இன்று இக்காட்டில் அவன்காதுகள் கொசுக்களின் இரைச்சலைக் கேட்கும்படி ஆகிவிட்டதே என மனம் சோர்ந்து கண்களில் நீர் வடிய அழுதாள் தமயந்தி. 92

நளனின் ஆறுதல்மொழி

272. பண்டை வினைப்பயனைப் பாரிடத்தில் ஆர்கடப்பார்
கொண்டல் நிழலில் குழைதடவும் - கெண்டை
வழியல்நீர் என்றான் மனநடுங்கி வெய்(து)உற்(று)
அழியல்நீ என்றான் அரசு.

பதவுரை:

அரசு - அரசனான நளன், பண்டை வினைப் பயனைப் பாரிடத்தில் ஆர்கடப்பார் - தொடர்ந்துவரும் விதியின் வலியை

In Public Domain Digitization Muthulakshmi Research Academy

யாரும் கடக்க முடியாது, கொண்டல் நிழலில் - மேகம் போன்ற கூந்தலின் நிழலைக் குழைதடவும் கெண்டை - காதளவு வரை தடவுகின்ற கெண்டை விழியாளே, வழியல் நீர் என்றான் - கண்ணீர் சிந்தாதே என்றான் நளன், மனம் நடுங்கி வெய்து உற்று - உள்ளம் நடுங்கிப் பெருமூச்சு உற்று, அழியல் நீ என்றான் - வருந்தாதே என்றான் மீண்டும்.

பொழிப்புரை:

விதியை வெல்பவர் யாருளர்? கூந்தலின் நிழல் காதளவு நீண்ட கெண்டை விழியாளே, கண்ணீர் சிந்தாதே என்றும் உள்ளம் நடுங்கிப் பெருமூச்சு விட்டு தளராதே என்றும் நளன் தமயந்தியைத் தேற்றினான். *93*

தமயந்தி மேலும் வருந்தல்

273. விரைமலர்ப்பூ மெல்லணையும் மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி அறையும் - அரைசே நான்
காணேன்இங்(கு) என்னாக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணோர் முலையாள் புலர்ந்து.

பதவுரை:

பூணோர் முலையாள் - அணிகள் அணிந்த மார்பினளாம் தமயந்தி, புலர்ந்து - வருந்தி, அரைசே - அரசனே, விரை மலர்ப் பூ மெல்லணையும் - மணமுள்ள மலர்கள் பரப்பப்பட்ட மெத்தையையும், மெய்காவல் பூண்ட பரிசனமும் - அரசனுக்கு காவல் புரியும் படைவீரர்களும், பள்ளி அறையும் - படுக்கை அறையும், இங்கு நான் காணேன் என்னா - இங்கே நான் காணவில்லையே என, கண்பனிப்ப கலங்கினாள் - கண்ணீர் வடிய அழுதாள்.

பொழிப்புரை:

தமயந்தி வருந்தி, 'நளமன்னனே, மணமலர் பரப்பிய படுக்கையையும் ஏவல் புரியும் காவலர் களையும் தனித்த படுக்கை அறையையும் இங்கே நான் காணவில்லையே எனக் கண்ணீர் சிந்தி அழுதாள். *94*

நீயும் தூங்கு தமயந்தி

274. தீய வனமும் துயின்று திசைதுயின்று
பேயும் துயின்றதால் பேர்யாமம் - நீயும்இனிக்
கண்மேல் துயில்கை கடன்என்றான் கைகொடுத்து
மண்மேல் திருமேனி வைத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

(வருந்துகின்ற தமயந்தியிடம்) மண்மேல் திருமேனி வைத்து - நளன் உடலைப் புழுதியில் வைத்து, கைகொடுத்து - (தனது கைகளைத் தமயந்திக்(கு) தலையணையாக வைத்து, தீய வனமும் துயின்று - காட்டில் உள்ள எல்லா உயிர்களும் உறங்கின, திசை துயின்று - நாலாத் திசையில் உள்ள வைகளும் தூங்கின, பேயும் துயின்றதால் - உறங்காத பேய்களும் உறங்கின, பேர்யாமம் - நடு இரவில், நீயும் இனிக் கண்மேல் துயில்கை கடன் என்றான் - (ஆதலால்) நீயும் இனி கண்ணை மூடு, அது உன் கடன் என்றான் நளன்.

பொழிப்புரை:

நளன் தரையில் படுத்துத் தன் கைகளை மடக்கித் தலையணையாகத் தமயந்திக்குத் தந்து, 'தமயந்தியே இந்நடு இரவில் காட்டிலுள்ள உயிர்களும் உலகிலுள்ள ஏனைய உயிர்களும் பேய்களும்கூட உறங்கிவிட்டன. ஆதலால் நீயும் கண்ணை மூடி உறங்கு' என மொழிந்தான். *95*

நளனின் புலம்பல்

275. புன்கண்கூர் யாமத்துப் பூமிமேல் தான்படுத்துத்
தன்கண் துயிர்வாளைத் தான்கண்டு - மென்கண்
பொடியாதால் உள்ளாவி போகாதால் நெஞ்சம்
வெடியாதால் என்றான் விழுந்து.

பதவுரை:

புன்கண்கூர் யாமத்து - துயரம் மிகுந்த இந்த இரவில், பூமிமேல் தான்படுத்து - பூமியில் படுத்த நளன், தன்கண் துயில் வாளைத் தான்கண்டு - தன்பக்கத்தே துயிலும் தமயந்தியைப் பார்த்து, மென்கண் பொடியாதால் (இந்தக் காட்சியைக் கண்ட என்) கண்கள் சாம்பலாகிப் போகாதால், உள்ளாவி போகாதால், நெஞ்சம் வெடியாதால் - (என்) நெஞ்சு வெடித்து விடாதா, என்றான் விழுந்து - என்று விழுந்து எழுந்து புலம்பினான்.

பொழிப்புரை:

துன்பம் நிறைந்த இரவில் தரையில் படுத்திருந்த நளன் தன்னருகே படுத்துத் துயின்ற தமயந்தியைப் பார்த்து 'இந்த அவலத்தைக் கண்ட என் கண்கள் சாம்பல் ஆகாதா? என் உடலை விட்டு உயிர் பிரியாதா? என் நெஞ்சம் உடைந்து நொறுங்காதா' என்று கூறி விழுந்து எழுந்து புலம்பினான். *96*

Digitization Muthulakshmi Research Academy

தமயந்தி மீண்டும் வருந்தல்

276. முன்றில்தனில் மேற்படுக்க முன்தா னையும்இன்றி
இன்று துயில இறைவனுக்கே - என்தனது
கைபுகுந்த(து) என்னுடைய கால்புகுந்த(து) என்(று) அழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர.

பதவுரை:

முன்றில் தனில் மேல்படுக்க - (பாழ்மண்டபத்தில்) வாசலில் படுக்க, முன்தானையும் இன்றி - ஆடையின் முன்பக்கமும் இல்லாமல், இன்று துயில இறை வனுக்கே - இப்போது அவர் உறங்க, என்தனது கைபுகுந்தது - என் கைகளே தலையணை ஆனது, என்னுடைய கால் புகுந்தது - எனது கால்களே அவருக்குக் காலணை ஆனது, மைபுகுந்த கண்ணீர் - மையிட்ட கண்களில் கண்ணீர் வடிய, என்று அழுதாள் - என்று சொல்லி அழுதாள்.

பொழிப்புரை:

பாழ்மண்டத்தின் முற்றத்தில் படுக்க முன்தானையும் இல்லாமல் என் தலைவர் துயின்றார். அவருக்கு என் கைகளே தலையணை ஆனது; என் கால்களே காலணை ஆனது. இப்படி அவர் துயில நேர்ந்ததே என்று கண்ணீர் சிந்த அழுதாள் தமயந்தி. 97

விதியின் வலிமை

277. வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்(கு) அளித்த தையலாள் - யாமத்துப்
பாரே அணையாய்ப் படைக்கண் துயின்றாள் மற்(று)
ஆரே துயர்அடையார் ஆங்கு.

பதவுரை:

வீமன் திருமடந்தை - வீமராசனின் திருமகள், விண்ணவரும் பெற்றிலாத் தாமம் - விண்ணவர் விரும்பியும் அவர்களுக்குக் கிடைக்காத அவள் மணமாலை, எனக்கு அளித்த தையலாள் - எனக்கே அளித்தவள் அவள், யாமத்துப் பாரே அணையாய் - இந்த நள்ளிரவில் பூமியையே படுக்கையாக நினைத்து, படைக்கண் துயின்றாள் - வேல்விழியாள் உறங்கினாள், ஆங்கு ஆரே துயர் அடையார் - இவ்வுலகில் துன்பம் அடையாதார் யார்தாம் உளர்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வீமனின் திருமகளாம் தமயந்தி தேவர்களுக்கும் கிடைக்காத மணமாலையை எனக்கு அளித்தவள்; நள்ளிரவில் பூமியையே பாயாக நினைத்துத் தூங்கிய வேல்விழியாள் அவள்; இமமண்ணில் துயரம் அடையாதவர் யார்தாம் உளர்? 98

நளன் நெஞ்சத்தைக் கலக்கல்

278. பெய்ம்மலர்பூங் கோதை பிரியப் பிரியாத
செம்மை யுடைமனத்தான் செங்கோலான் - பொய்ம்மை
விலக்கினான் நெஞ்சத்தை வேறாக்கி நின்று
கலக்கினான் வஞ்சக் கலி.

பதவுரை:

பெய்ம்மலர் பூங்கோதை - கட்டிய மலர் மாலை அணிந்த தமயந்தியை, பிரியப் பிரியாத செம்மை யுடைமனத்தான் - பிரிய நினைக்காத செம்மைக்குணம் உடையான், செங்கோலான் - செங்கோல் நெறியினன், பொய்ம்மை விலக்கினான் (ஆகிய) நெஞ்சத்தை வேறாக்கி - நளனது எண்ணத்தை மாற்றி, வஞ்சக் கலி நின்று கலக்கினான் - வஞ்சகனான கலி அவனைக் குழப்பமுறச் செய்தான்.

பொழிப்புரை:

மலர்மாலை அணிந்த தமயந்தியைப் பிரிய நினைக்காத செம்மைக் குணமுடையான் நளன்; அவன் சிறந்த செங்கோல் ஆட்சி நடத்தியவன்; பொய் புகலாதவன்; அவனது நெஞ்சத்தையே வஞ்சகன் கலி கலக்கிக் குழப்பமுறச் செய்தான். 99

கலி வென்றான்

279. வஞ்சக் கலிவலியான் மாகத்(து) அராவளைக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல் - விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்தன் நெஞ்சத்(து)
உதித்ததே வே(று) ஓர் உணர்வு.

பதவுரை:

வஞ்சக் கலிவலியான் - வஞ்சகம் நிறைந்த கலியின் வன்மையால், மாகத்து அராவளைக்கும் செஞ்சுடரில் - வானத்தில் உள்ள இராகு எனும் கோளால் வளைக்கப்பட்ட சூரியனில், வந்த கருஞ்சுடர்போல் - கருமைநிறம் தோன்றியதுபோல், விஞ்ச மதித்த தேர்த் தாளை வயவேந்தன் -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகைவரும் அஞ்சும் படியான தேர்ப்படை உடைய நளமன்னன், நெஞ்சத்து - உள்ளத்தில், வேறு ஓர் உணர்வு உதித்தது - நன்மைக்கு மாறான கெட்ட எண்ணம் அரும்பியது.

பொழிப்புரை:

செஞ்ஞாயிற்றை இராகு எனும் கோள் வளைத்துக் கருஞ்ஞாயிறு ஆக்கியதுபோல் வஞ்சகன் கலியின் வலிமையால் பகைவர் நடுங்கும் தேர்ப்படை உடைய நளனது நெஞ்சத்திலும் கெட்ட எண்ணம் தோன்றியது. 100

அரிய நினைத்தான்

280. காரிகைதன் வெந்துயரம் காணாமல் நீத்(து) அந்தக்
கூர்இருளில் போவான் குறித்(து) எழுந்து - நேரே
இருவர்க்கும் ஓர்உயிர்போல் எய்தியதோர் ஆடை
அரிதற்(கு) அவன்நினைந்தான் ஆங்கு.

பதவுரை:

காரிகைதன் வெந்துயரம் காணாமல் - தமயந்தியின் கொடும்துன்பத்தைப் பொறுக்காமல், நீத்து அந்தக் கூர் இருளில் போவான் - அவளைப் பிரிந்து இருளில் செல்ல, குறித்து எழுந்து நேரே - நினைத்து எழுந்து போய், இருவர்க்கும் ஓர் உயிர்போல் எய்தியதோர் - இருவரையும் ஓர் உயிரைப் போலப் பிணைத்து இருக்கின்ற, ஆடை அரிதற்கு - ஆடையை அறுப்பதற்கு, ஆங்கு அவன் நினைத்தான் - அங்கே நளன் நினைத்தான்.

பொழிப்புரை:

தன் மனையாள்படும் துன்பத்தைப் பொறுக்காத நளன் அவளைப் பிரிந்து செல்ல நினைத்தான்; அதனால் அவர்கள் இருவரையும் ஓர் உயிர்போல் பிணைத்திருந்த ஆடையை இடையில் அரியவும் எண்ணினான். 101

வாள்கிடைத்தது!

281. எண்ணிய எண்ணம் முடிப்ப இகல்வேந்தன்
கண்ணி யதைஅறிந்து காய்கலியும் - பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீங்கக் கிளர்ஒளிசேர்
வாளாய் மருங்(கு)இருந்தான் வந்து.

பதவுரை:

இகல்வேந்தன் - நளன், எண்ணிய எண்ணம் முடிப்ப கண்ணி யதை அறிந்து - நினைத்ததை முடிக்கக் கருதியதை அறிந்த,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காய்கலியும் - சினங்கொண்ட கலிமகனும், பண்ணினுக்குக் கேளான தேமொழியை நீங்க - இன்னோசை போல் பேச்சுடைய தமயந்தியைப் (பிரிவதற்கு உதவியாக) கிளர்ஒளிசேர் வாளாய் - ஒளிமிகுந்த வாளாக மாறி, வந்து மருங்கு இருந்தான் - நளன் அருகே வந்து கிடந்தான்.

பொழிப்புரை:

நளவேந்தன் பிரிய எண்ணியதை அறிந்த கலிமகன் அழகிய இனிய மொழிபேசும் தமயந்தியை விட்டு அவன் நீங்குவதற்கு உதவியாக ஒளிபொருந்திய வாளாக மாறி அவன் அருகே கிடந்தான். *102*

அரிந்தான் நளன்!

282. ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்பை முதலோடும் - பற்றி
அரிந்தான் அரிந்திட்(டு) அவள்நிலை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

பதவுரை:

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக - (இருவரும் கட்டியிருந்த) ஓராடையும் ஓர் உயிரும் இரண்டாகும்படி, முற்றுந்தன் அன்பை முதலோடும் பற்றி - தான் அவளோடு கொண்டிருந்த அன்பையும் சேர்த்து, அரிந்தான் - இரண்டாக அரிந்தான், அரிந்திட்டு அவள் நிலையை - அரிந்த பிறகு தமயந்தி நிலையை, நெஞ்சி தெரிந்தான் திகைத்து இருந்தான் - நெஞ்சில் நினைத்தவன் திகைத்து நின்றான்.

பொழிப்புரை:

நளனும் தமயந்தியும் கட்டியிருந்த ஓராடையும் ஓர் உயிரும் இரண்டாகும்படி அவள்மீது கொண்டிருந்த அன்பையும் சேர்த்து அரிந்துவிட்டான். அரிந்தபின் தமயந்தியின் நிலையை நெஞ்சில் நினைத்துத் திகைத்துச் செயலற்று நின்றான். *103*

பிரிய வருந்தல்!

283. போய்ஒருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின் - தோயல்
கடைவார்தம் கைபோல ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்.

Public domain - Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

காலன் வடிவாய வேலான் மனம் - கூற்றுவனைப் போன்றவனும் வேலைத் தாங்கியவனுமான நளனின் நெஞ்சம், போய் ஒருகால் மீளும் - தமயந்தியிடம் சென்று மீண்டும் திரும்பும், புகுந்தொருகால் மீண்டேகும் - நளனிடம் வந்து மீண்டும் தயந்தியிடம் சேரும், ஆயர் கொணர்ந்த அடுபாலின் தோயல் - ஆயர்கள் கொண்டுவந்த காய்ச்சிய பாலினால் ஆகிய தயிறை, கடைவார்தம் கைபோல ஆயிற்றே - கடைகின்ற ஆய்ச்சியர் தம் கைபோல ஆயிற்று.

பொழிப்புரை:

காலன் வடிவில் இருக்கும் வேலைத் தாங்கிய நளனின் நெஞ்சம் தமயந்தியிடம் சென்று மீளும். மீண்ட அது நளனிடம் வந்து மீண்டும் தமயந்தியிடமே செல்லும். நெஞ்சத்தை இச்செய்கை தயிர்கடையும் ஆச்சியர் கைபோல் இருந்தது. *104*

பிரிய உறுதி எடுத்தல்

284. சிந்துரத்தாள் தெய்வ முனிவன் தெரிந்(து) உரைத்த
மந்திரத்தால் தம்பித்த மாநீர்போல் - முந்த
ஒலித்ததேர்த் தானை உயர்வேந்தன் நெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து.

பதவுரை:

தெய்வமுனிவன் - தெய்வத்தன்மை வாய்ந்த நாரத முனிவர், சிந்துரத்தாள் தெரிந்து உரைத்த - விநாயகப் பெருமானின் திருவடிகட்கு உணர்ந்து கூறிய, மந்திரத்தால் - மந்திர மொழிகளால், தம்பித்த மாநீர்போல் - அசைவற்று நின்ற கங்கை ஆற்றைப்போல, முந்த ஒலித்ததேர்த் தாளை உயர்வேந்தன் - முன்னே நின்று முழங்கும் தேர்ப்படையைப் பெற்ற நளவேந்தன், நெஞ்சம் மனத்தில், தீக்கலியால் வந்து வலித்தது - வஞ்சகன் கலியால் (தமயந்தியைப் பிரிந்து விடவேண்டும் எனும் எண்ணம்) வந்து சேர்ந்தது.

பொழிப்புரை:

நாரத முனிவர் யானைமுகன் அடிகட்குக் கூறிய மந்திர மொழிகளால் பெருகி வந்த கங்கை ஆறும் அசைவற்று நின்றது. அதுபோலத் தேர்ப்படை உடைய நளனின் தமயந்தியைப் பிரியக் கூடாது எனும் உறுதியும் வஞ்சகக் கலியின் வலிமையால் தளர்ந்தது. *105*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வத்தை வேண்டல்

285. தீக்கா னகத்துறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின் - நீக்காத
காதல்அன்பு மிக்காளைக் கார்இருளில் கைவிட்(டு) இன்(று)
ஏதிலன்போல் போகின்றேன் யான்.

பதவுரை:

தீக்கானகத் துறையும் தெய்வங்காள் - கொடுமையான காட்டில் வாழும் தெய்வங்களே! வீமன்தன் கோக்காதலியை - வீமனின் திருமகளை, நீக்காத காதல் அன்பு மிக்காளை - எல்லையற்ற அன்பைச் சொரிந் தவளை, கார்இருளில் கைவிட்டு - நடுஇரவில் தனியே விட்டு விட்டு, இன்று யான் ஏதிலன்போல் போகின்றேன் - இப்போது அயலான்போல நான் செல்கிறேன், குறிக்கொண்மின் - (ஆதலால் தனியாக இருக்கும் அவளை) காப்பாற்றுங்கள்.

பொழிப்புரை:

கொடுங்காட்டில் வாழும் தெய்வங்களே, வீமனின் திருமகளும் என்மீது பேரன்பு கொண்ட வளுமாகிய தமயந்தியைக் கும்மிருட்டில் தனியே விட்டுப் பிரிகிறேன். அவளுக்குத் துணை இருந்து காப்பாற்றுங்கள். *106*

பிரிந்தான்

286. ஏந்தும் இளமுலையாள் இன்உயிரும் தன்அருளும்
பூந்துகிலும் வேறாகப் போயினான் - தீந்தேன்
தொடைவிரவு நாள்மாலை சூட்டினாள் தன்னை
இடையிருளில் கானகத்தே இட்டு.

பதவுரை:

தீந்தேன் தொடைவிரவு நான்மாலை சூட்டினாள் தன்னை - தேன்நிரம்பிய மலர்மாலையைச் சூட்டிய தமயந்தியை, இடைஇருளில் கானகத்தே இட்டு - நள்ளிரவில் காட்டில் விட்டு விட்டு, ஏந்து இளமுலையாள் இன்னுயிரும் - ஏந்திய முலைகளை உடைய அவளது உயிரும், தன் அருளும் - தன்னுடைய இரக்கமும், பூந்துகிலும் - உடுத்தியிருந்த ஆடையும், வேறாகப் போயினான் - வேறு வேறாகப் பிரிய நளன் அங்கிருந்து கிளம்பினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

சுயம்வரத்தில் தனக்கு மலர்மாலை சூட்டிய தமயந்தியைக் காட்டில் விட்டு விட்டு நளன் அவளது உயிரும் தனது இரக்கமும் கட்டியிருந்த ஆடையும் வேறுவேறாகப் பிரித்துக் கொண்டு நடந்தான். 107

தனியாகச் சென்றான்

287. தாருஎனப் பார்மேல் தருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல் - கூர்இருளில்
செங்கால் நகஞ்சிதையத் தேவியைவிட்(டு) ஏகினான்
வெங்கா னகம்தனிலே வேந்து.

பதவுரை:

வேந்து - நளவேந்தன், தாருஎனப் பார்மேல் தருசந்திரன் சுவர்க்கி - கற்பகத் தருவைப் போலக் கேட்டவர்க்குக் கேட்டதை அளிக்கும் சந்திரன் சுவர்க்கி எனும் மன்னன், மேருவரைத் தோளான் - இமயமலையை ஒத்த தோள்களை உடையவன், விரவார்போல் - அவனை எதிர்த்தவர்கள் அஞ்சிச் செல்வது போல, கூர் இருளில் தேவியைவிட்டு - செறிந்த இருட்டில் தமயந்தியைத் தனியே விட்டு, வெங்கானகம் தனிலே அடர்ந்த காட்டில், செங்கால் நகஞ்சிதைய ஏகினான் - தனது கால் நகம் தேய நடந்தான்.

பொழிப்புரை:

கற்பகத் தருவைப்போல வேண்டினார்க்கு வேண்டியதை நல்கும் சந்திரன் சுவர்க்கி வலிய தோளான். அவனை எதிர்த்தவர் நடுங்கிச் செல்வது போல, நளனும் நடுஇரவில் தமயந்தியைப் பிரிந்து காட்டில் கால் நகம் தேய இடறி இடறி நடந்தான். 108

விழித்தாள் தமயந்தி

288. நீலம் அளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடிஇடையாள் - வேல்வேந்தே
எங்(கு)உற்றாய் என்னா இனவளைக்கை நீட்டினாள்
அங்குத்தான் காணா(து) அயர்ந்து.

பதவுரை:

மலரின் கொடிஇடையாள் - மலர் தாங்கிய கொடிபோன்ற இடையாள் தமயந்தி, நிரைமுத்தின் கோலம் நீலம் அளவே நெகிழ - வரிசையாக முத்துப் போல் கண்ணீர்த்துளிகள் குவளை மலர்க் கண்களில் வழிய, அங்கு தான் காணாது அயர்ந்து -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கே நளனைக் காணாமல் நொந்து, வேல் வேந்தே - வேலைத் தாங்கிய மன்னனே, எங்கு உற்றாய் என்னா - என்னை விட்டு யாங்குச் சென்றாய் எனக்கூறி, இனவளைக் கை நீட்டினாள் - வளையல் அணிந்த கையை நீட்டித் தடவினாள்.

பொழிப்புரை:

கொடி இடையாள் தமயந்தி நளனைக் காணாமல் நொந்து முத்து முத்தாகக் கண்ணீர் சிந்தினாள். அரசே, எனைவிட்டு நீ எங்கே சென்றாய் எனக் கதறி கைநீட்டித் தடவினாள். 109

ஆடைகண்டு வருந்தினாள்

289. உடுத்த துகில்அரிந்த(து) ஒண்தொடியாள் கண்டு
மடுத்த துயிலாள் மறுகி - அடுத்(து) அடுத்து
மன்னே எனஅழைப்பாள் மற்(று)அவ னைக்காணா(து)
என்னேஇஃ(து) என்என்(று) எழுந்து.

பதவுரை:

மடுத்ததுயிலாள் - தான் கொண்ட துயிலால், ஒண்தொடியாள் - தமயந்தி, உடுத்த துகில் அரிந்ததுகண்டு - (இருவரும்) உடுத்தியிருந்த ஆடையை நளன் துண்டித்ததைக் கண்டு, மறுகி - வருத்தமடைந்து, மற்று அவனைக் காணாது - அங்கே நளனையும் பார்க்காது, இஃது என்னே என் என்று எழுந்து - இஃது என்ன காரணம் என எழுந்து நின்று, அடுத்து அடுத்து மன்னே என அழைப்பாள் - அடிக்கடி அரசே என அழைப்பாள் ஆயினாள்.

பொழிப்புரை:

தான் கொண்ட உறக்கத்தால் உடுத்தியிருந்த ஆடையை நளன் துண்டித்தான் என உணர்ந்து தமயந்தி வருந்தி அவனைக் காணாது தவித்தாள்; எழுந்து நின்று! அரசே அரசே' என அடிக்கடி அழைத்தாள். 110

அலறுதல்

290. வெய்ய தரைஎன்னும் மெல்அமளி யைத்தடவிக்
கைஅரிக்கொண்(டு) எவ்விடத்தும் காணாமல் - ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தாள் இனமேதி மெனக்கரும்பைத்
தின்னப்போ நாடன் திரு.

பதவுரை:

இனமேதி - எருமைமாடுகள், மென்கரும்பைத் தின்னப் போ நாடன் திரு - இனிய கரும்பைத் தின்னும் வளநாடன் வீமனின்

திருமகள், வெய்ய தரை என்னும் மெல் அமளியை - தரை ஆகிய படுக்கைய, தடவிக் கை அரிக் கொண்டு - கையால் தடவிப் பார்த்து, எவ்விடத்தும் காணாமல் - எங்கும் நளனைக் காணாமையால், ஐயகோ என்னப்போய் வீழ்ந்தாள் - ஐயோ என அலறித் தரையில் விழுந்தாள்.

பொழிப்புரை:

எருமை மாடுகள் மெல்லிய கரும்புகளைத் தின்னும் நாட்டுக்கு உரியவனான வீமனின் திருமகள் தமயந்தி தரையாகிய படுக்கையைக் கைகளால் தடவிப் பார்த்து நளனை எங்கும் காணாமையால் எழுந்து வீழ்ந்து கதறினாள். 111

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீமன் கொடி வீழ்ந்தாள்

291. அழல்வெஞ் சிலைவேடன் அம்(பு) உருவ ஆற்றா(து)
உழலும் களிமயில்மேல் ஓடி - குழல் வண்(டு)
எழுந்தோட வீழ்ந்தாள் இருகுழைமேல் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி.

பதவுரை:

வீமன் கொடி - வீமராசனின் மகள், அழல்வெஞ்சிலை வேடன் - கொடுமையான வில்லையுடைய வேடனின், அம்புஉருவ ஆற்றாது - அம்பு தைத்தலால் பொறுக்காது, உழலும் களிமயல்போல் - துன்புறும் இளமையான மயிலைப் போல, ஓடி - ஓடித் திரிந்து, குழல்வண்டு எழுந்து ஓடி - கூந்தலில் உள்ள வண்டுகள் பறக்கவும், இருகுழைமேல் கண்ணீர்க் கொழுந்து ஓட - குழைகள் மீது கண்ணீர் வடியவும், வீழ்ந்தாள் - கீழே விழுந்தாள்.

பொழிப்புரை:

வீமன் மகளாகிய தமயந்தி வேடனின் அம்பு தைத்து வருந்தும் மயிலைப் போல அங்கும் இங்கும் ஓடினாள்; கூந்தலில் உள்ள வண்டுகள் பறந்தோடவும் குழைகளில் கண்ணீர் வடியவும் கீழே விழுந்தாள். *112*

மேகமும் மின்னலும் விழுந்ததுபோல

292. வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்தது போல்
தானும் குழலும் தனிவீழ்ந்தாள் - ஏனம்
குளம்பான் மணிகிளைக்கும் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைதலைமேல் இட்டு

பதவுரை:

ஏனம் குளம்பான் மணிகிளைக்கும் குண்டுநீர் நாடன் - பன்றிகள் தம் குளம்பால் மணிகளைக் கிண்டி மேல் எழச்செய்கின்ற நீர்நிலைகள் நிரம்பிய வீமராசனின், இளம் பாவை - மகளாகிய தமயந்தி, கைதலைமேல் இட்டு - தன் கைகளைத் தலைமேல் வைத்து, வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்தது போல் - மேகமும் மின்னலும் பூமியில் விழுந்தன போல, தானும் குழலும் தனி வீழ்ந்தாள் அவள் கூந்தலோ:டு கீழே வீழ்ந்தாள்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

பன்றிகள் தம் குளம்பால் மணிகளை மேல்எழச் செய்யும் நீர் நிலைகளை உடைய வீமராசனின் மகள், மேகமும் மின்னலும் கீழே விழுந்தனபோல் தன் கைகளைத் தலைமேல் வைத்துப் பூமியில் வீழ்ந்தாள். 113

கோழிகள் கூவின

293. தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயி(று)அலைத்துக் கார்இருள்வாய் வெய்யோனை
வாவுபரித் தேர்ஏறி வாவென்(று) அழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்.

பதவுரை:

கோழிக்குலம் - சேவற்கோழிகள், தையல் துயர்க்குத் தரியாது - தமயந்தியின் துன்பம்கண்டு பொறுக்காமல், தம்சிறகாம் கையால் வயிறு அலைத்து - தம் இறக்கைகளாகிய கையால் வயிற்றில் அடித்துக்கொண்டு, வெய்யோனை - கதிரவனை, வாவு பரித்தேர்ஏறி - குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி, வாவென்று அழைப்பன போல் வருகவென்று அழைப்பது போல, கார்இருள்வாய்கூவின - இருள் சூழ்ந்துள்ள நேரத்தில் கூவின.

பொழிப்புரை:

சேவற்கோழிகள் தமயந்தியின் துயர்கண்டு பொறுக்காமல் சிறகுகள் ஆகிய கையால் வயிற்றில் அடித்துக் கொண்டு கதிரவனைக் குதிரைகள் பூட்டிய தேரேறி வருக என்பது போல இருள்சூழ்ந்த விடியற் காலை நேரத்தில் கூவின. 114

சூரியன் தோற்றம்

294 வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன் - போனநெறி
காட்டுவான் போல்இருள்போய்க் கைவாங்கக் கான்ஊடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று

பதவுரை:

வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன் - வானவீதியில் செல்லும் தேரோனாகிய சூரியன், தான் நின்று அம்மடந்தைக்கு - தான் மலையில் நின்று தமயந்திக்கு, தார்வேந்தன் போன நெறி காட்டு வான்போல் - நளன் சென்ற வழியைக் காட்டுபவ போல, இருள் போய் கைவாங்க - இருளானது நீங்க, கான் ஊடே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செங்கரத்தை நீட்டுவான் - காட்டின் வழியே தன் செங்கதிராகிய கைகயை நீட்டினான்.

பொழிப்புரை:

வானவீதியில் தேரைச் செலுத்தும் சூரியன் தமயந்திக்கு நளன்சென்ற வழியைக் காட்டுபவன் போல, இருளை விலக்கிக் காட்டின் வழியே தன் செங்கதிராகிய கையை நீட்டினான். 115

தமயந்தி மீண்டும் புலம்பல்

295. செய்தபிழை ஏ(து)என்னும் தேர்வேந்தே என்(று)அழைக்கும்
எய்து துயர்க்கரைகா ணேன்என்னும் - பையவே
என்என்னா(து) என்என்னும் இக்கானின் விட்(டு)ஏகும்
மன்என்னா வாடும் அயர்ந்து.

பதவுரை:

செய்தபிழை ஏது ஏன்னும் - (தமயந்தி தனக்குள்) நான் செய்த பிழைதான் யாது என்பாள், தேர்வேந்தே என்று அழைக்கும் - தேர்ப்படை உடைய அரசனே என்று நளனை அழைப்பாள், எய்து துயர்க்கரை காணேன்என்னும் - நான் அடைந்த துன்பத்திற்குக் கரை தெரியவில்லையே என்பாள், பையவே என் என்னாது என்என்னும் - மெல்லவே உன்வாய் திறந்து என்னவென்று கேட்கமாட்டாயா என்பாள்,இக்கானின் விட்டு ஏகும் மன்என்னா - காட்டில் தனியே விட்டுப் போனவனே என்று, அயர்ந்து வாடும் - நொந்து வாடினாள்.

பொழிப்புரை:

நான் செய்த பிழை யாது? என் துயருக்குக் கரையே தெரிய வில்லையே? மெல்ல உன்வாய் திறந்து ஏன் வருந்துகிறாய் எனக் கேளாயோ? காட்டில் தனியே விட்டு ஏகினாயே, தேர்வேந்தே' எனப் பலவாறு தமயந்தி தனக்குள் புலம்பினாள். 116

வெள்ளத்தில் வீழ்ந்தாள்!

296. அல்லியந்தார் மார்பன் அடித்தா மரையவள்
நல்லுயிரும் ஆசையும்போல் நாறுதலும் - மல்லுறுதோள்
வேந்தனே என்னா விழுந்தாள் விழிவேலை
சார்ந்தநீர் வெள்ளத்தே தான்.

பதவுரை:

அல்லியந்தார் மார்பன் அடித்தாமரை - மலர்மாலை அணிந்த நளனின் தாமரை போன்ற அடிச்சுவடுகள், அவள்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்லுயிரும் ஆசையும்போல் நாறுதலும் - தமயந்தியின் உயிரும் அன்பும் போலத் தோன்றியவுடன், மல்லுறுதோள் வேந்தனே - மற்போரில் வல்ல அரசனே, என்னா - என்று கூறி, விரிவேலை சார்ந்தநீர் - கண்ணாகிய கடலிடத்து வழிந்த, வெள்ளத்தே தான் விழுந்தாள் - கண்ணீர் வெள்ளத்தில் அவள் விழுந்தாள்.

பொழிப்புரை:

மலர்மாலை அணிந்த நளனின் தாமரை அடிகள் தமயந்தியின் உயிரும் அன்பும்போலத் தோன்றின; "மற்போரில் வல்ல மன்னனே' எனக் கூறிக் கண்ணாகிய கடலிலிருந்து வழிந்த கண்ணீர் வெள்ளத்தில் அவள் விழுந்தாள். 117

மான் மயிலிடம் வினாவல்

297. வெறித்த இளமான்காள்! மென்மயில்காள்! இந்த
நெறிக்கண் நெடி(து) ஊழி வாழ்வீர் - பிறித்(து) எம்மைப்
போனாரைக் காட்டுதிரோ என்னாப் புலம்பினாள்
வான்நாடார் பெற்றிலா மான்.

பதவுரை:

வான்நாடர் பெற்றிலா மான் - தேவர்கள் மணக்க விரும்பியும் முடியாதவளாகிய தமயந்தி, வெறித்த இளமான்காள் - அஞ்சி ஓடும் இளம் மான்களே! மென்மயில்காள் - மென்மைத் தன்மை வாய்ந்த மயில்களே! இந்தநெறிக் கண் நெடிது ஊழி வாழ்வீர் - இந்தக் காட்டில் நெடுங்காலம் நீங்கள் வாழுங்கள், பிறித்து எம்மைப் போனாரைக் காட்டுதிரோ - என்னைத் தனியே விட்டப் போன நளனைக் காட்டுங்கள், என்னாப் புலம்பினாள் - என்று புலம்பினாள்.

பொழிப்புரை:

தேவர்களாலும் மணக்க முடியாத தமயந்தி இளமான்களையும் மென்மயில் களையும் நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்தினாள். 'என்னைப் பிரிந்த நளனைக் காட்டுங்கள்' எனக் கேட்டுப் புலம்பினாள். 118

தமயந்தியும் மலைப்பாம்பும்

298. வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியான்
மோட்டு வயிற்(று) அரவு முன்தோன்ற - மீட்(டு) அதனை
ஓரா(து) அரு(கு)அணைந்தாள் உண்தேன் அறல்கூந்தல்
போரார் விழியாள் புலர்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

உண்தேன் அறல் கூந்தல் - வண்டுகள் தேனைக் குடிக்கும் மலர் மாலை அணிந்தவளும் கருமணல் போன்ற கூந்தலை உடையவளும் ஆகிய தமயந்தி, போரார் விழியாள் - போரிடுகின்ற கண்களையுடையவள், புலர்ந்து - அவள் மிகவும் வாட்டமுற்று இருந்தாள், பெரும் பசியான் - அளவுகடந்த பசியால், வேட்ட கரியை விழுங்கி - விரும்பிய யானையை விழுங்கி, மோட்டு வயிற்று அரவு - பெரிய வயிற்றை உடைய மலைப்பாம்பு, முன்தோன்ற - அவள் முன்னே தோன்ற, மீட்டு அதனை ஓராது - அதன் இயல்பை உணராமல், அருகு அணைந்தாள் - அதன் அருகில் சென்றாள்.

பொழிப்புரை:

கருமணல்போன்ற கூந்தல் பெற்ற தமயந்தி வாட்டமுற்று இருந்தாள். பசியால் யானையை விழுங்கிய மலைப்பாம்பு அவள் முன்னேதோன்ற, அதன் இயல்பு அறியாத அவள் அருகே சென்றாள். 119

பாம்பு அவளை விழுங்கியது

299. அங்கண் விசும்பின் அவிர்மதிமேல் சென்(று) அடையும்
வெங்கண் அரவுபோல் மெல்லியலைக் - கொங்கைக்கு
மேல் எல்லாம் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பால்எல்லாம் தீஉமிழும் பாம்பு.

பதவுரை:

அங்கண் விசும்பின் அவிர்மதிமேல் - அழகிய வானத்தில் உள்ள ஒளிவிடும் நிலவின்மேல், சென்று அடையும் வெங்கண் அரவுபோல் - (அதனை விழுங்க) செல்லும் கொடிய கண்ணை உடைய இராகு எனும் பாம்புபோல, வெங்கானின் பால் எல்லாம் - கொடிய அக்காடெல்லாம், தீஉமிழும் பாம்பு - நச்சு நெருப்பைக் கக்கும் மலைப்பாம்பு, கொங்கைக்கு மேல் எல்லாம் தோன்ற - (மயந்தியின்) கொங்கைக்கு கீழுள்ளபகுதியை, விழுங்கியது - விழுங்கிவிட்டது.

பொழிப்புரை:

வானத்தில் உள்ள ஒளி நிலவை இராகு எனும் பாம்பு விழுங்கியது போல, காடெல்லாம் நஞ்சாகிய நெருப்பை உமிழ்ந்த மலைப்பாம்பு தமயந்தி மார்புக்குக் கீழுள்ள பகுதியை விழுங்கியது. 120

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'காப்பாற்று'

300. வாள்அரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாள் அடைந்து வாழும் தமியேனைத் - தோளால்
விலக்காயோ என்(று) அழுதாள் வெவ்வரவின் வாய்க்(கு)இங்கு
இலக்காகி நின்றாள் எடுத்து.

பதவுரை:

இங்கு வெவ்அரவின் வாய்க்கு இலக்காகி நின்றாள் - மலைப்பாம்பால் விழுங்கப்பட்ட தமயந்தி, 'மன்னவநின் தாள் அடைந்து வாழும் தமியேனை - அரசே, உன் தாள் நிழலில் வாழவந்த என்னை, வாள் அரவின் வாய்ப்பட்டு மாயாமுன் - மலைப்பாம்பு வாயில் விழுங்கி மடிவதற்கு முன்னே, தோளால் விலக்காயோ - உன் தோளாற்றலால் தடுக்கமாட்டாயா என்று எடுத்து அழுதாள் - என்று உரத்துச் சொல்லி அழுதாள்.

பொழிப்புரை:

மலைப்பாம்பால் விழுங்கப்பட்ட தமயந்தி, 'மன்னவா, உன் தாளே கதி என்று வந்த நான் பாம்பால் சாவதற்கு முன் உன் தோள் ஆற்றலால் தடுக்கமாட்டாயா?' என்று சொல்லிக் கதறினாள். *121*

முகம் காட்டு

301. வென்றிச் சினஅரவின் வெவ்வாய் இடைப்பட்டு
வன்துயரால் போய்ஆவி மாள்கின்றேன் - இன்(று) உன்
திருமுகம்நான் காண்கிலேன் தேர்வேந்தே என்றாள்
பொருமுகவேல் கண்ணாள் புலர்ந்து.

பதவுரை:

பொருமுகவேல் கண்ணாள் புலர்ந்து - காதளவு நீண்ட வேல் கண்ணளாகிய தமயந்தி வாடி, தேர்வேந்தே - தேர்ப்படை உடைய மன்னனே, வென்றிச் சினஅரவின் வெவ்வாய் இடைப் பட்டு - கோபம் கொண்ட மலைப் பாம்பின் வாயில் அகப்பட்டு, வன்துயரால் போய் ஆவி மாள்கின்றேன் - கொடும் துயரால் உயிர் வருந்திச் சாகின்றேன், இன்று உன் திருமுகம் நான் காண்கிலேன் - இப்போதாவது உன் அழகு முகத்தைக் காணமாட்டேனா, என்றாள் - என்று கூறிப் புலம்பினாள்.

பொழிப்புரை:

வேலை ஒத்த கண்ணை உடைய தமயந்தி நளனிடம், 'மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டுச் சாகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்போதாவது உன் அழகு முகத்தைக் காணமாட்டேனா?' என்று கூறி வாடி வருந்தினாள். 122

என் மக்களே

302. மற்றொடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்(து)ஏகும் - கொற்றவனை
நீரேனும் காண்குதிரோ என்(று)அழுதாள் நீள்குழற்குக்
காரேனும் ஒவ்வாள் கலுழ்ந்து.

பதவுரை:

நீள்குழற்குக் காரேனும் ஒவ்வாள் - நீண்ட கூந்தலுக்கு மேகமும் ஒப்பாகாத தன்மையினைக் கொண்ட தமயந்தி, மற்றொடுத்த தோள்பிரிந்து - மற்போரில் வல்ல நளனைப் பிரிந்து, மாயாத வல்வினையேன் பெற்றெடுத்த மக்காள் - சாகாத தீவினையாட்டி யாகிய நான் பெற்ற மக்களே, பிரிந்து ஏகும் கொள்ளவனை - நம்மை விட்டுப் பிரிந்த உங்கள் தந்தையை, நீரேனும் காண்குதிரோ - நீங்களாவது பார்ப்பீர்களா, என்று கலுழ்ந்து அழுதாள் - என்று சொல்லிக்கலங்கி அழுதாள்.

பொழிப்புரை:

மேகத்தைவிட கருத்த கூந்தலைப் பெற்ற தமயந்திநளனைப் பிரிந்தாள்; தான் பெற்ற மக்களை நினைந்து கசிந்து 'என்மக்களே, நீங்களாவது உங்கள் தந்தையைக் காண்பீர்களா' எனக் கேட்டுக் கலங்கி அழுதாள். 123

விடை கொடு

303. அடையும் கடுங்கானில் ஆ(டு) அரவின் வாய்ப்பட்(டு)
உடையும்உயிர் நாயகனே ஓகோ - விடைஎனக்குத்
தந்தருள்வாய் என்னாத்தன் தாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து.

பதவுரை:

செந்துவர்வாய் மென்மொழியாள் - பவளம்போல் இதழ்களும் மென்மொழி பேசும் வாயும் உடைய தமயந்தி, நாயகனே - நளனே, அடையும் கடுங்கானில் - நாம் அடைந்த இக்காட்டில், ஆடுஅரவின் வாய்ப்பட்டு உயிர் உடையும் - கொல்லும் பாம்பின் வாயில் சிக்கி என் உயிர் சிதைகிறது, ஓகோ - ஐயோ, விடை எனக்குத் தந்தருள்வாய் - எனக்கு விடை தருக, என்னாத் தேர்ந்துதன் தாமரைக்கை கூப் பினாள் - என்று கூறித் தன் தாமரைக் கைகளைக் குவித்து வணங்கினாள்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

பவள இதழ்களும் மென் மொழிகளும் பேசும் தமயந்தி, 'நாயகனே, இக்காட்டில் கொல்லும் பாம்பின் வாயில் சிக்கிச் சாகிறேன். சாகும் எனக்கு விடை தருக' என்று தன் கைகளைக் கூப்பி வணங்கினாள். 124

வேடன் கண்டான்

304. உண்டோர் அழுகுரல்என்(று) ஒற்றி வருகின்ற
வெண்தோடன் செம்பங்கி வில்வேடன் - கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் கார்அரவின் வாயில்
முழுகுவாள் தெய்வ முகம்.

பதவுரை:

உண்டோர் அழுகுரல் என்று - அழும் குரல் கேட்கிறதே என்று, ஒற்றி வருகின்ற - உற்றுக் கேட்டு வரும், வெண்தோடன் செம்பங்கி வில்வேடன் - வெண்மையான தோட்டை அணிந்தவனும் செம்பட்டை முடியும் வில்லும் உடைய வேடன், கழுகுவாழ் கானகத்து - கழுகுகள் வாழும் காட்டில், கார் அரவின் வாயில் முழுகுவாள் - கரிய பாம்பின் வாயில் அகப்பட்டுள்ள, தெய்வமுகம் - தெய்வமுகம் பொருந்திய ஒரு பெண்ணை, கண்டான் - பார்த்தான்.

பொழிப்புரை:

காட்டில் கேட்கும் அழுகுரலை உற்றுக் கேட்டான் ஒருவேடன்; அவன் `வெண்தோட்டையும் செம்பட்டை முடியையும் உடையவன்; வில்லை ஏந்தியவன்; கரிய பாம்பின் வாயில் சிக்கித் தவிக்கும் தெய்வ முகம் பொருந்திய ஒரு பெண்ணைக் கண்டான். 125

வேடனை வேண்டுதல்

305. வெய்ய அரவின் விடவாயின் உட்பட்டேன்
ஐயன்மீர் உட்கட்(கு) அபயம்யான் - உய்ய
அருளீரோ என்னா அரற்றினாள் அஞ்சி
இருள்ஈரும் பூணாள் எடுத்து.

பதவுரை:

இருள் ஈரும் பூணாள் - இருளை ஓட்டுகின்ற அணியை அணிந்த தமயந்தி, ஐயன்மீர் - (அருகில் வந்த வேடனைப் பார்த்து) ஐயனே, வெய்ய அரவின் விடவாயின் உட்பட்டேன் - கொடிய பாம்பில் வாயில் அகப்பட்டேன், உங்கட்கு அபயம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யான் - உங்களிடம் அடைக்கலம் ஆனேன், உய்ய அருளீரோ - நான் பிழைக்க உதவுங்கள், என்னா அஞ்சி எடுத்து அரற்றினாள் - என்று அச்சத்தோடு குரலெழுப்பி அழுதாள்.

பொழிப்புரை:

அருகில் வந்த வேடனிடம், 'ஐயா, கொடுமையான பாம்பின் வாயில் சிக்கிக் கொண்டேன்; உங்கட்கு நான் அடைக்கலம்; என்னைக் காப்பாற்றி அருள்க'. என்று அச்சத்தோடு பெருங்குரலில் அழுதாள் 126

தமயந்தி மீட்பு

306. சங்க நிதிபோல் தருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல் - மங்கையை வெம்
பாம்பின்வாய் நின்றும் பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு.

பதவுரை:

பகை கடிந்த காம்பின்வாய் வில்வேடன் கண்டு - தன் பகையாகிய விலங்குகளைக் கொன்ற மூங்கிலால் செய்யப்பட்ட வில்லையேந்திய வேடன் (தமயந்தியின்) நிலை கண்டு, சங்கநிதிபோல் தருசந்திரன் சுவர்க்கி - சங்கநிதி எனும் குறையாத நிதியைப் போல வழங்கும் சந்திரன் சுவர்க்கி, வெங்கலிவாய் நின்று உலகம் மீட்டாற்போல - வறுமையால் வாடியவர்களின் வறுமையைப் போக்கியது போல, மங்கையை - தமயந்தியை, வெம்பாம் பின்வாய் நின்றும் பறித்தான் - கொடிய பாம்பின் வாயிலிருந்து மீட்டான்.

பொழிப்புரை:

பகையாகிய விலங்குகளைக் கொல்லும் மூங்கில் வில்லை உடைய வேடன் தமயந்தியின் நிலை கண்டான்; சங்கநிதி என்னும் வற்றாத நிதிபோலச் சந்திரன் சுவர்க்கி உலக மக்களை வறுமையிலிருந்து காப்பவன். அதுபோல வேடனும் பாம்பின் வாயிலிருந்து தமயந்தியை மீட்டான். 127

நன்றி!

307. ஆருயிரும் நானும் அழியாமல் ஐயாவிப்
பேர்அரவின் வாயில் பிழைப்பித்தாய் - தேரில்
இதற்குண்டோ கைம்மா(று) என வுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்தான் பெற்ற விளக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

வென்றி விதர்ப்பன்தான் பெற்ற விளக்கு - வெற்றியுடைய வீமராசன் பெற்ற மகளாம் தமயந்தி, ஐயா - ஐயனே, ஆருயிரும் நானும் அழியாமல் - என் உயிரும் உடலும் அழியாமல், இப்பேர் அரவின் வாயில் பிழைப்பித்தாய் - இப்பெரிய பாம்பின் வாயிலிருந்து காப்பாற்றினாய், தேரில் இதற்குண்டோ கைம்மாறு - இத்தகைய (உங்கள் செயலுக்கு) கைம்மாறுசெய்தல் முடியுமோ? என உரைத்தாள் - என்று கூறினாள்.

பொழிப்புரை:

வீமராசன் திருமகளாம் தமயந்தி வேடனிடம், 'ஐயா, என் உயிரையும் உடலையும் பாம்பின் வாயிலிருந்து காத்தீர். தங்கள் உதவிக்கு கைம்மாறு செய்தல் முடியுமா?' என உரைத்தாள். 128

வருவாய் என்னுடன்

308. இந்து நுதலி எழில்நோக்கி ஏதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன் - பைந்தொடிநீ
போதுவாய் என்னுடனே என்றான் புலைநரகுக்(கு)
ஏதுவாய் நின்றான் எடுத்து.

பதவுரை:

புலை நரகுக்கு ஏதுவாய் நின்றான் - கீழ்மையான நரகம் செல்ல நின்ற, இந்து நுதலி எழில் நோக்கி - நிலவை ஒத்த நெற்றியுடையாள் தமயந்தியின் அழகைப் பார்த்து, ஏதோ தன் சிந்தை கருதி -தன் மனதில் காமவுணர்வைப் பெருக்கி, சிலை வேடன் - வேடனாகிய அவன், பைந்தொடி நீ - வளையல் அணிந்த வளே நீ, என்னுடனே போதுவாய் என்றான் எடுத்து - என்னுடன் வருக என உரத்தக் குரலில் கூறினான்.

பொழிப்புரை:

நரகம் செல்லுதற்குரிய வேடனாகிய அவன் தமயந்தியின் அழகைக் கண்டு மயங்கினான்; நெஞ்சத்தில் காமவுணர்வு ஏற்பட்டது; 'பெண்ணே நீ என்னுடன் வருக' என உரத்துக் கூறினான். 129

அஞ்சினாள்; அழுதாள்.

309. வேடன் அழைப்ப விழிபதைத்து வெய்(து) உயிரா
ஆடல மயில்போல் அலமரா - ஓடினாள்
தூ(லு) எலா மாகச் சுரிகுழல்வேல் கண்ணின்நீர்
ஆ(று)எலாம் ஆக அழுது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

வேடன் அழைப்ப - (தமயந்தியை) வேடன் தன்னுடன் வருமாறு அழைக்கவும், விழி பதைத்து வெய்து உயிரா - கண் கலங்கிப் பெருமூச்சு விட்டு, ஆடல் மயில்போல் அலமரா - ஆடும் மயில்போல் சுழன்று ஓடி, வேல் கண்ணின் நீர் ஆறு எலாம் ஆக அழுது - கண்ணிலிருந்து வழியும் நீர் வழியெல்லாம் பெருக அழுது கொண்டு, சுரிகுழல் தூறு எலாமாக - சுரிந்த கூந்தல் புதர்களில் எல்லாம் சிக்கிக் கொள்ள, ஓடினாள் - ஓட்டம் பிடித்தாள்.

பொழிப்புரை:

வேடன் தன்னுடன் வருமாறு தமயந்தியை அழைத்தான்; உடனே தமயந்தி கண் கலங்கினாள்; பெருமூச்சு விட்டாள்; ஆடும் மயில்போலச் சுழன்று தவித்தாள்; கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்து வழியெல்லாம் ஓட அழுதாள்; சுருள் முடி புதர்களில் மாட்டிக் கொள்ள ஓடினாள். *130*

சாம்பல் ஆனான்

310 தீக்கண் புலிதொடரச் செல்லும் சிறுமான்போல்
ஆக்கை தளர அலமந்து - போக்(கு) அற்றுச்
சீறா விழித்தாள் சிலைவேடன் அவ்வளவில்
நீறாய் விழுந்தான் நிலத்து.

பதவுரை:

தீக்கண் புலிதொடரச் செல்லும் சிறு மான்போல் - கொடும் கண்ணை உடைய புலியால் தொடரப்பட்ட மான்போல (தமயந்தி) ஆக்கை தளர அலமந்து - உடல் தளர வருந்தி, போக்கு அற்று - வேறு வழி இல்லாமல், சீறா விழித்தாள் - சினந்து பார்த்தாள், அவ்வளவில் - அதே நேரத்தில், சிலைவேடன் - வில்வேடன், நிலத்து நீறாய் விழுந்தான் - தரையில் சாம்பலாய் மாறினான்.

பொழிப்புரை:

வெம்கண் புலியால் தொடரப் பட்ட மான்போலத் தமயந்தி உடல் அஞ்சி வருந்தினாள்; வேறு வழியின்றிக் கண்ணால் சினந்து வேடனை நோக்கினாள்; உடனே வேடன் மண்ணில் சாம்பலாய் ஆகிப் போனான். *131*

ஊழ்வினையால் நேர்ந்தது

311. வண்தமிழ்வா ணரப் பிழைத்த வான்குடிபோல் தீத்தழல் மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாட்டிருந்து - பண்டையுள

In Public domain :Digitization Muthulakshmi Research Academy

வாழ்வெல்லாம் தான்நினைந்து மற்(று) அழுதாள் மன்இழைத்த
தாழ்வெல்லாம் தன்தலைமேல் தந்து.

பதவுரை:

தீத்தழல்மீமண்டு கொடுஞ்சுரத்து ஓர் மாடு இருந்து - கொடும் வெப்பம் மேல் எழுந்து துன்பம் செய்யும் பாலை நிலத்தில் ஒரு பக்கம் இருந்து, மன் இழைத்த தாழ்வெல்லாம் தன்தலைமேல் தந்து - நளன் செய்த செயல்கள் எல்லாம் தன் தலையில் தாங்கி வண்தமிழ் வாணரப் பிழைத்த வான்குடிபோல் - தமிழ்ச் சான்றோர்களுக்குக் கெடுதல் செய்தவர்கள் வறுமையுற்று வருந்துதல் போல, பண்டை உள வாழ்வெல்லாம் தான்நினைந்து அழுதாள் - பண்டு தாம் வாழ்ந்த வாழ்வெல்லாம் நினைத்து நினைத்து அழுதாள் தமயந்தி.

பொழிப்புரை:

கொடும் வெப்பம் நிறைந்த பாலை நிலத்தில் தமயந்தி ஒருபக்கம் ஒடுங்கி இருந்தாள்; நளன் செய்த செயல்கள் எல்லாம் விதிப்பயன் என நினைத்து தானே ஏற்றாள். தமிழ்ப்புலவர்களை இகழ்ந்தவர்கள் வறுமையுற்றது போலத் தமயந்தியும் தாம் வறுமையுற்றதை எண்ணி எண்ணி அழுதாள். *132*

வணிகன் தமயந்தியைக் காண்டல்

312. அவ்வளவில் ஆதிப் பெருவழியில் ஆய்வணிகன்
இவ்வளவு தீவினையேன் என்பாள்தன் - மெய்வடிவைக்
கண்டான்ஐ யுற்றான் கமலமயி லேஎன்றான்
உண்டாய எல்லாம் உணர்ந்து.

பதவுரை:

அவ்வளவில் ஆதிப்பெருவிழியில் - (தமயந்தி புலம்பிக் கொண்டிருக்கும்) நேரத்தில் பழமையான பெரும் சாலையில், ஆய்வணிகன் - பாதைகளைப் பற்றிய அறிவுமிகுந்த வாணிகன், இவ்வளவு தீவினையேன் என்பாள்தன் மெய்வடிவை - இவ்வளவு தீவினையாட்டி யாகிய நான் என்று புலம்பிய தமயந்தியை, கண்டான் ஐயுற்றான் - கண்டு இவள் யாரோ என ஐயுற்றான், உண்டாய எல்லாம் உணர்ந்து - அவள் உற்ற துயரையெல்லாம் அனுமானித்து, கமல மயிலே என்றான் - ‘இவள் திருமகள் போன்றவளே’ எனத் தனக்குள் நினைத்தான்.

பொழிப்புரை:

தமயந்தி விதியை நினைத்துப் புலம்பிக்கொண்டிருக்கும் போது பெரும வழியில் வந்த வணிகன் தமயந்தியின் புலம்பலைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேட்டான்; அவள் உருவத்தைக் கண்டு யாரோ என ஐயுற்றான்; அவள் படும் துயரம் கண்டு 'திருமகளோ இவள்' எனத் தனக்குள் சொல்லிக்கொண்டான். 133

வணிகனின் வினா

313. எக்குலத்தாய் யார்மடந்தை யா(து)உன்னூர் யா(து)உன்பேர்
நெக்குருகி நீஅழுதல் என்நிமித்தம் - மைக்குழலாய்
கட்டுரைத்துக் காண்என்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்கும் தார்வணிகர் வேந்து.

பதவுரை:

கார் வண்டு - கருநிற வண்டுகள், காந்தாரம் விட்டு உரைக்கும் தார்வணிகர் வேந்து - காந்தாரப் பண்ணை இசைக்கும் மலர்மாலை அணிந்த வணிகர் குலத்தலைவன், மைக்குழலாய் - (தமயந்தியிடம்) கருங்கூந்தலை உடையாளே, எக்குலத்தாய் யார்மடந்தை - (நீ) எக்குலத்தில் யாருக்குப் பிறந்தாய், யாது உன்னூர் யாது உன்பேர் - உன் ஊரும் பேரும் என்ன, நெக்குருதி நீ அழுதல் என்நிமித்தம் - உருகி அழுதல் எதற்காக, கட்டுரைத்துக் காண் என்றான் - விவரமாகச்சொல் என்றான்.

பொழிப்புரை:

வணிகர்குலத் தலைவன் தமயத்தியனைப் பார்த்து, 'பெண்ணே நீ என்ன குலம்? பெற்றோர் யாவர்? உன் பேரும் ஊரும் யாது? ஏன் அழுகிறாய்? எல்லாவற்றையும் விவரமாகச் சொல்' என்றான். 134

தமயந்தியின் விடை

314. முன்னை வினையின் வலியான் முடிமன்னன்
என்னைப் பிரிய இருங்கானில் - அன்னவனைக்
காணா(து) அழுகின்றேன் என்றாள் கதிர்இமைக்கும்
பூண்ஆரம் பூண்டாள் புலர்ந்து.

பதவுரை:

கதிர் இமைக்கும் பூண் ஆரம் பூண்டாள் - ஒளிவிடும் அணிகளை அணிந்த தமயந்தி, முன்னை வினையின் வலியான - முன்பிறவியில் செய்த பாவத்தின் வலிமையால், முடிமன்னன் என்னைப் பிரிய - நள வேந்தன் என்னைப் பிரியவும் இருங்கானில் அன்ன வனைக் காணாது - பிரிந்தவனைக் காட்டில் காணாமையால், அழுகின்றேன் என்றாள் - அழுகிறேன் என அவள் வணிகனிடம் கூறினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

அழகிய அணிகளை அணிந்த தமயந்தி முன்னே செய்த வினையின் வலிமையால் கணவனைக் காட்டில் பிரிந்தேன்; பிரிந்தவனை எங்குத் தேடியும் காணாமையால் அழுகிறேன் என வணிகனிடம் கூறினாள். 135

சேதிநகர் சேர்ந்தாள்

315. சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான் - நீதி
கிடத்துவான் மன்னவர்தம் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து.

பதவுரை:

நீதி கிடத்துவான் - ஒழுக்கத்தை உடையவனும், மன்னவர்தம் கீர்த்தியினைப் பார்மேல் நடத்துவான் - அரசர்களின் பெருமையை நாட்டில் பரப்புபவனுமாகிய, கொடை வணிகன் - கொடைப் பண்புடைய வணிகன், சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டு - சேதி நாட்டிற்குத் தமயந்தியை அனுப்பி விட்டு, பிறகு தன் வாணிகத்தின் பொருட்டுப் பயணப்பட்டான்.

பொழிப்புரை:

ஒழுக்கம் உடையவனும் தன் நாட்டு மன்னரின் பெருமையை மண்ணில் பரப்புபவனும் ஆகிய வணிகன் தமயந்தியைச் சேதி நாட்டிற்கு அனுப்பினான். பின்பு தன் தொழில் நோக்கிப் புறப்பட்டான். 136

அழுகின்றவளைக் கண்டோம்

316. அற்ற துகிலும் அறா(து) ஒழுகும் கண்ணீரும்
உற்ற துயரும் உடையவளாய் - மற்(று) ஒருத்தி
நின்றாளைக் கண்டோம் நிலவேந்தன் பொற்றேவி
என்றார் மடவார் எடுத்து.

பதவுரை:

நிலவேந்தன் பொற்றேவி - சேதிநாடு ஆளும் வேந்தனின் தேவியே, அற்றதுகிலும் அறாது ஒழுகும் கண்ணீரும் - பாதி ஆடை உடுத்தி இடைவிடாது வடியும் கண்ணீரோடு, உற்ற துயரும் உடையவளாய் - பெரும் துயரோடு கூடியவளாய், ஒருத்தி நின்றாளைக் கண்டோம் - நின்ற ஒரு பெண்ணைக் கண்டோம், என்றார் மடவார் எடுத்து - எனப் பணிப்பெண்கள் கூறினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

சேதிநாட்டு அரசனின் தேவியே, நம் நாட்டில் ஒருபெண் பாதி ஆடையோடும் வடியும் கண்ணீரோடும் பெருந்துயரோடும் நின்றாள். நாங்கள் அவளைப் பார்த்தோம்' என்று சேடியர் அரசியிடம் கூறினர். 137

உடன் அழை அவளை!

317. போயகலா முன்னம் புனைஇழையாய் பூங்குயிலை
ஆய மயிலை அறியவே - நீ ஏகிக்
கொண்டுவா என்றாள்தன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தல் மயில்.

பதவுரை:

வண்டுவாழ் கூந்தல் மயில் - வண்டுகள் வாழும் கூந்தலுடைய சேதிநாட்டு அரசி, கொவ்வைக் கனி திறந்து - தன் கொவ்வைப் பழம் போலும் வாய் திறந்து, புனைஇழையாய் - நல்ல அணிகளை அணிந்த சேடியே, பூங்குயிலை ஆய மயிலை - குயில் போலும் குரலும், மயில் போலும் சாயலும் உடைய அவள், போயகலா முன்னம் - இவ்விடம் விட்டுப் போவதற்கு முன்னே, அறியவே - அவளைப் பற்றி அறிந்து கொள்ள, நீ ஏகிக் கொண்டு வா என்றாள் - நீ சென்று உடனே அழைத்துவா என்றாள்.

பொழிப்புரை:

சேதிநாட்டு அரசி தன் சேடிப் பெண்ணிடம், 'குயிலும் மயிலும் போன்ற அப்புதியவள் இவ்விடம் விட்டுப் போவதற்கு முன்னே உடனே அழைத்து வா' என்றாள். 138

சேதியரசி காலடியில்...

318. ஆங்(கு) அவளும் ஏக அரசன் பெருந்தேவி
பூங்கழலின் மீதே புரண்(டு) அழுதாள் - தாங்கும்
இனவளையாய் உற்றதுயர் எல்லாம் எனது
வினைவலிகாண் என்றாள் மெலிந்து.

பதவுரை:

ஆங்கு அவளும் ஏக - தமயந்தி சேதி அரசிபால் சென்று, மெலிந்து வருத்தமுற்று, தாங்கும் இனவளையாய் - வளையலை அணிந்த அரசியே, உற்ற துயர் எல்லாம் - நான் அடைந்த துன்பங்களுக்கு, எனது வினைவலி காண் - எனது விதிப் பயனே காரணம் ஆகும், என்றாள் - என்று கூறி, அரசன் பெருந்தேவி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூங்கழலின் மீதே - அரசியின் கால்களில், புரண்டு அழுதாள் - வீழ்ந்து கதறினாள்.

பொழிப்புரை:

தமயந்தி சேதிநாட்டு அரசிபால் சென்று வருத்தத்தோடு, 'அரசியே, நான் அடைந்த துன்பங்களுக்கு எல்லாம் காரணம் என் தலைவிதியே' என்று கூறி அரசியின் காலடியில் வீழ்ந்து புரண்டு கதறினாள். 139

அரசி தமயந்தியை வினவுதல்

319. அந்தா மரையில் அவளேயென்(று) ஐயுற்றுச்
சிந்தா குலம்எனக்குத் தீராதால் - பைந்தொடியே
உள்ளவா(று) எல்லாம் உரைஎன்றாள் ஒண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு.

பதவுரை:

ஒண்மலரின் கள்ளவார் கூந்தலாள் - அழகிய மலரில் தேனொழுகும் கூந்தலை உடைய சேதி அரசி, கண்டு - தமயந்தியைப் பார்த்து, அந்தாமரையில் அவளே என்று ஐயுற்று - தாமரை மலரில் இருக்கும் திருமகளோ இவள் என ஐயுற்று, பைந்தொடியே - பசிய வளையலை அணிந்தவளே, சிந்தா குலம் எனக்குத் தீராது - (உன்னைப்பற்றிய செய்தி தெரியாவிட்டால்) என் வருத்தம் குறையாது, உள்ளவாறு எல்லாம் உரை என்றாள் - (ஆதலால்) உன் வரலாற்றை உள்ளபடியே கூறு என்றாள்.

பொழிப்புரை:

சேதிநாட்டு அரசி தமயந்தியைப் பார்த்துத் திருமகளோ என ஐயம் கொண்டாள். பின்பு, வளையலை அணிந்தவளே, உன்னைப் பற்றித் தெரியாமல் என் வருத்தம் குறையாது. ஆதலால், உன் வரலாற்றை உள்ளபடியே கூறு' என்றாள் அரசி. 140

அரசிக்குத் தமயந்தியின் விடை

320. என்னைத் தனிவனத்திட்(டு) எங்கோன் பிரிந்(து) ஏக
அன்னவனைக் காணா(து) அலமருவேன் - இந்நகர்க்கே
வந்தேன் இதுஎன் வர(வு) என்றாள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறாச் சேர்ந்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

வாய்புலராச் செந்தேன் மொழி பதறாச் சேர்ந்து - (தமயந்தி) வாய் வாடித்தேன் போலும் இனிய சொற்கள் தடுமாற, என்னைக் காட்டில் தனியே விட்டு விட்டு என் அரசன் நளன், பிரிந்து ஏக - பிரிந்து விட்டார், அன்னவனைக் காணாது அலமரு வேன் - பிரிந்தவரைக் காணாது தவிக்கிறேன், இந்நகர்க்கே வந்தேன் இது என் வரவு - அப்போது இங்கு வந்து சேர்ந்தேன், இதுவே நான் வந்த கதை, என்றாள் - என்று சொன்னாள்.

பொழிப்புரை:

தமயந்தி வாய் உலர்ந்தது; சொற்கள் தடுமாறின; அவள் அரசியிடம், 'என் கணவன் காட்டில் தனியே விட்டுப் பிரிந்தார். பிரிந்தவரைக் காணேன். ஆதலால் இங்கு வந்து சேர்ந்தேன்' என்றாள். *141*

இங்கேயே இரு

321. உன்தலைவன் தன்னை ஒருவகையால் நாடியே
தந்து விடுமளவும் தாழ்குழலாய் - என்றனுடன்
இங்கே இருக்க இனி(து) என்றாள் ஏந்திழையைக்
கொங்(கு) ஏயும் தாராள் குறித்து.

பதவுரை:

கொங்கு ஏயும் தாராள் - தேன் நிறைந்த மாலை அணிந்த அரசி, ஏந்தியையழயைக் குறித்து - தமயந்தி நிலையை நினைத்து, தாழ்குழலாய் - தாழ்ந்த கூந்தலை உடையாளே, உன் தலைவன் தன்னை ஒருவகையால் நாடியே - உன் கணவன் நளனைத் தேடி, தந்து விடுமளவும் - உன்னிடம் தரும்வரை, என்றனுடன் இனிது இங்கே இருக்க - என்னுடன் இனிதாக இங்குத் தங்குக, என்றாள் - என்று கூறினாள்.

பொழிப்புரை:

தேன் நிறைந்த மாலை அணிந்த சேதிநாட்டு அரசி தமயந்தியிடம், 'தமயந்தியே, உன் கணவனைத் தேடிக் கண்டுபிடிக்கும்வரை என்னுடன் இனிதே தங்கி இரு' என்று கூறினாள். *142*

நள, தமயந்தியைத் தேடல்

322. ஈங்(கு) இவள்இவ் வா(று)இருப்ப இன்னல்உழந்தேயேகிப்
பூங்குயிலும் போர்வேல் புரவலனும் - யாங்குற்றார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்(று) உணர்தி என்று செலவிட்டான் வேதியனைக்
குன்(று) உறழ்தோள் வீமன் குறித்து.

பதவுரை:

ஈங்கு இவள் இவ்வாறு இருப்ப - சேதிநாட்டில் தமயந்தி அரசியுடன் தங்கியிருக்கும் காலத்தில், குன்று உறழ்தோள் வீமன் - மலையை ஒத்த தோளுடைய வீமன், பூங்குயிலும் போர்வேல் புரவலனும் - தமயந்தியும் வேற்படைஉடைய நளனும், இன்னல் உழந்து ஏகி - துயர் அடைந்து சென்றவர்கள், யாங்கு உற்றார் - எங்குச் சென்றார்களோ (என அறியேன்), வேதியனை - அந்தணனிடம், சென்று உணர்தி என்று குறித்துச் செலவிட்டான் - அவர்களைத் தேடி வா என்று சொல்லி அனுப்பினான்.

பொழிப்புரை:

தமயந்தி சேதிநாட்டில் இருந்தாள். தமயந்தியும் நளனும் துன்பம் உழன்று எங்குச் சென்றார்கள் என அறியாமல் வருந்தினான் வீமன். அந்தணன் ஒருவனை அனுப்பித் தேடுக எனக் கட்டளையிட்டான். *143*

மறையோன் காணல்

323. ஓடும் புரவித்தேர் வெய்யோன் ஒளிசென்று
நாடும் இடமெல்லாம் நாடிப்போய்க் - கூடினான்
போதில் திருநாடும் பொய்கைத் திருநாடாம்
சேதித் திருநாடு சென்று

பதவுரை:

ஓடும் புரவித் தேர் வெய்யோன் - ஏழுகுதிரைகள் பூட்டப்பட்ட தேரில் செல்லும் சூரியனின், ஒளிசென்று நாடும் இடம் எல்லாம் - வெளிச்சம் செல்லும் இடங்கள் எல்லாம், நாடிப் போய் - தமயந்தியைத் தேடிய பார்ப்பனன், போதுஇல் திருநாடும் பொய்கைத்திரு நாடாம் - தாமரை மலரில் வாழும் திருமகள் இருக்கும் நாடாகிய, சேதித் திருநாடு சென்று கூடினான் - சேதி நாடு சென்று சேர்ந்தான்.

பொழிப்புரை:

குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் செல்லும் சூரியனின் வெளிச்சம் செல்லும் இடமெல்லாம் தமயந்தியைத் தேடிய மறையவன் திருமகள் வாழும் வளநாடாகிய சேதிநாட்டை அடைந்தான். *144*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருவரும் அழுதனர்

324. தாமஞ்சேர் ஓதித் தமயந்தி நின்றாளை
ஆமென்(று) அறியா அருமறையோன் - வீமன்
கொடிமேல் விழுந்(து)அழுவான் கொம்பும்அவன் செம்பொன்
அடிமேல் விழுந்தாள் அழுது.

பதவுரை:

அருமறையோன் - மறையவன், தாமஞ்சேர் ஓதித் தமயந்தி நின்றாளை - மாலையணிந்த கூந்தலையுடைய பெண் தமயந்திதான், ஆமென்று அறியா - என்று அறிந்து, வீமன் கொடிமேல் விழுந்து அழுவான் - வீமன் மகள்மேல் விழுந்து அழுதான், கொம்பும் - தமயந்தியும், அவன் செம்பொன் அடிமேல் அழுது விழுந்தாள் - அவன் பொன்னடிகளில் விழுந்து அழுதாள்.

பொழிப்புரை:

சேதிநாடு சென்ற அந்தணன் அந்நாட்டு நகரில் தான் பார்த்த மங்கை தமயந்திதான் என்று அறிந்து அவள்மேல் விழுந்து அழுதான். தமயந்தியும் அவனைத் தெரிந்துகொண்டு அவன் காலடியில் வீழ்ந்து அழுதாள். 145

உயிர் ஒத்தார்

325 மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
அங்(கு) அவன்தன் கண்ணீர் அவள்உடல்மேல் - பொங்கக்
கடல்போலும் காதலார் கையற்றார் தங்கள்
உடல்போலும் ஒத்தார் உயிர்.

பதவுரை:

மங்கை விழிநீர் மறையோன் கழல் கழுவ - தமயந்தி வடித்த கண்ணீர் அந்தணனின் கால்களைக் கழுவவும், அங்கு அவன்தன் கண்ணீர் - அவ்விடத்து அஃவன் சிந்திய கண்ணீர், அவள் உடல்மேல் பொங்க - அவள் உடலை நனைக்கவும், கடல்போலும் காதலார் கை அற்றார் - கடலளவு பேரன்புகொண்ட அவ்இருவரும் செயலற்று நின்றனர், தங்கள் உடல் போலும் உயிர் ஒத்தார் - அவர்கள் உடல்போலவே உயிரும் செயலற்று நின்றது.

பொழிப்புரை:

தமயந்தியின் கண்ணீர் மறையவள் கால்களைக் கழுவியது. மறையவன் வடித்த கண்ணீர் அவள் உடலில் பொங்கி வழிந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடல்போலும் பேரன்பு கொண்ட அவர்கள் செயலற்றவர் ஆயினர். அவர்கள் உடல்போலவே உயிரும் செயல் அற்று இருந்தது. 146

இவள் பட்ட துயர்

326. மாரி பொருகூந்தல் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ - சோர்குழலும்
வேணியாய் வெண்துகிலும் பாதியாய் வெந்துயருக்(கு)
ஆணியாய் நின்றாள் அயர்ந்து.

பதவுரை:

மாரி பொருகூந்தல் மாதராய் - மழைமேகத்தை ஒத்த கூந்தலையுடைய பெண்ணே, நீபயந்த காரிகைதான் - உன் மகளாகிய இவள், பட்டதுயர் கண்டாயோ - அடைந்த இன்னல்களைப் பார்த்தாயா? சோர்குழலும் வேணியாய் வெண்துகிலும் பாதியாய் - தொங்கும் கூந்தல் சடையாகவும் உடுத்தியிருக்கும் ஆடையும் பாதியாகவும், வெந்துயர்க்கு ஆணியாய் - பெருந்துன்பத்திற்கு ஆளாகி, அயர்ந்து நின்றாள் - வாடி நின்றாள்.

பொழிப்புரை:

கருத்த கூந்தலைப் பெற்ற சேதி நாட்டு அரசியே, நீ பெற்ற பெண் தமயந்தி பட்ட பாட்டைக் கேட்டாயோ? சோர்ந்த கூந்தல் சடையாகவும் கட்டியிருக்கும் எளிய ஆடை பாதியாகவும் துயரத்திற்கு ஆளாகி வாடி இருப்பதைப் பார்' என்றான் மறையோன். 147

அரசியும் அழுதாள்

327. தன்மகள் ஆவ(து) அறியாத் தடுமாறாப்
பொன்வடிவின் மேல்அழுது போய்வீழ்ந்தாள் மென்மலரைக்
கோதிப்போய் மேதி குரு(கு)எழுப்பும் தண்பனைசூழ்
சேதிக்கோன் தேவி திகைத்து.

பதவுரை:

மேதி - எருமைகள், மென்மரைக் கோதிப் போய் குருகு எழுப்பும் - மெல்லிய மலர்களைத் தன் கொம்புகளால் விலக்கி நீர்ப்பறவைகளை விரட்டும், தண்பனைசூழ் சேதிக் கோன் தேவி - குளிர்ந்த வயல்கள் நிறைந்த சேதிநாட்டு அரசி, திகைத்து - (அந்தணன் கூறியதைக் கேட்டு) வியப்படைந்து, தன்மகள் ஆவது அறியாத் தடுமாறா - தமயந்தி தன்மகள் ஆதல் கண்டு தடுமாறி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்வடிவின் மேல் அழுது போய் வீழ்ந்தாள் - திரு மகளைப் போன்ற அவள்மீது அழுது சாய்ந்தாள்.

பொழிப்புரை:

சேதி நாட்டு அரசி அந்தணன் கூற்றால் தமயந்தி தனக்கு உறவே என அறிந்து வியந்தாள்; திருமகளை ஒத்த அவள் மேல் சாய்ந்து அழுதாள். 148

தமயந்தி தந்தை நாடு சேரல்

328. கந்தனையும் கன்னியையும் கண்டா யினுஞ்சிறிது
தன்துயரம் தீர்ந்து தனியாறத் - தந்தை
பதியிலே போக்கினான் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு.

பதவுரை:

சேதியர்கோன் - சேதிநாட்டு அரசன், பண்டை விதியிலே போந்தாளை - பண்டைய விதியின் காரணமாக வந்த தமயந்தி, கந்தனையும் கன்னியையும் கண்டாயினும் - தனது முருகனை ஒத்த மகனையும் மகளையும் கண்ட பிறகாவது, சிறிது தன் துயரம் தீர்ந்து தனியாற் - கொஞ்சம் கவலை மறந்து ஆறுதல் அடைய, தந்தை பதியிலே மீண்டு போக்கினான் - அவளுடைய தந்தை வீமன் நகர்க்குத் திரும்பவும் அனுப்பி வைத்தான்.

பொழிப்புரை:

சேதிநாட்டு அரசன், விதியின் காரணமாகத் துன்பத்தில் உழலும் தமயந்தி தான் பெற்ற மகனையும் மகளையும் பார்த்து ஆறுதல் அடைய - அவளை வீமன் நாட்டுக்கு அனுப்பி வைத்தான். 149

குண்டினபுரம்

329. கோயிலும் அந்தப் புரமும் கொடிநுடங்கும்
வாயிலும் நின்று மயங்கியவே - தீயகொடுங்
கான்ஆள மக்களையும் கைவிட்டுக் காதலன்பின்
போனாள் புகுந்த பொழுது.

பதவுரை:

தீய கொடுங்கான் ஆள மக்களையும் கைவிட்டு - கொடுமையான காட்டில் பெற்ற பிள்ளைகளைத் தனியே போக்கி, காதலன்பின் போனாள் புகுந்த பொழுது - கணவனுடன் இருந்த தமயந்தி தனியே வந்து வீமன்நகர் புகுந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போது, கோயிலும் அந்தப்புரமும் - அரண்மனையில் உள்ளவர்களும் பெண்களும், கொடி நுடங்கும் வாயிலும் - கொடிகள் அசையும் வாயிலில் உள்ள மக்களும், நின்று மயங்கியவே - சேர்ந்து நின்று வருந்தினார்கள்.

பொழிப்புரை:

கொடுங்காட்டில் பெற்ற பிள்ளைகளைக் கைவிட்டுக் கணவனோடு இருந்த தமயந்தி இப்போது வீமன் நகர் சேர்ந்தாள். அவளைக் கண்டு அரண்மனையில் உள்ளவர்களும் பெண்களும் பொது மக்களும் வருந்தினார்கள். 150

உணர்ச்சி வெள்ளம்!

330. அழுவார் விழுவார் அயிர்ப்பார் உயிர்ப்பார்
தொழுவார் தமர்எங்கும் சூழ்வார் - வழுவாக்
காமநீர் ஓதக் கடல்கிளர்ந்தால் ஒத்ததே
நாமவேல் வீமன் நகர்.

பதவுரை:

நாமவேல் வீமன் நகர் - வேலைத் தாங்கிய வீமனது நகரில், தமர் - (தமயந்திக்கு) உற்றாரும் உறவினரும் மக்களும், அழுவார் விழுவார் அயிர்ப்பார் உயிர்ப்பார் தொழுவார் - (தமயந்தியின் நிலை கண்டு) அழுதனர்; அவள் மேலே விழுந்தனர்; ஐயம் கொண்டனர்; பெருமூச்சு விட்டனர்; தெய்வத்தை வணங்கினர், எங்கும் சூழ்வார் - அவளைச் சுற்றித் திரண்டனர், வழுவாக் காமநீர் ஓதக் கடல் - அன்பாகிய இரைச்சலையுடைய கடல், கிளர்ந்ததால் ஒத்ததே - பொங்கி எழுவதைப் போன்றதாயிற்று.

பொழிப்புரை:

வீமன் தலைநகரில் தமயந்தியைக் கண்ட உற்றாரும் உறவினரும் மக்களும் அழுதனர்; பெருமூச்சு விட்டனர்; இறையை வணங்கினர்; அவளைச் சுற்றித் திரண்டனர்; பேரன்பாகிய கடல் பெரும் இரைச்சல் இடுவதைப் போல மக்கள் வெள்ளம் ஆரவாரம் செய்தது. 151

தந்தையிடம் வீழ்ந்தாள்

331. தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சொரியச்
சிந்தை கலங்கித் திகைத்(து)அலமந்(து) - எந்தாய்யான்
பட்டதே என்னைப்போய் வீழ்ந்தாள் படை நெடுங்கண்
விட்டநீர் மேலே விழ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

தந்தையை முன் காண்டலுமே - தமயந்தி தன் தந்தையைக் கண்டு, தாமரைக் கண்நீர் சொரிய - அழகிய கண்களிலிருந்து நீர் வடிய, சிந்தை கலங்கி - மனம் கலக்கமுற்று, திகைத்து அலமந்து - சோர்ந்து வருந்தி, எந்தாய் யான் பட்டதே என்ன தந்தையே, நான் பட்ட பாட்டைப் பார்த்தீரோ என, படைநெடுங்கண் விட்டநீர் மேலே விழ - தன் கண்ணீர் வீமன் மேலே விழ, போய் வீழ்ந்தாள் - சென்று விழுந்தாள்.

பொழிப்புரை:

தமயந்தி தன் தந்தையைக் கண்டாள்; கண்ணீர் விட்டாள்; மனம் கலங்கினாள்; மயங்கினாள்; சோர்ந்தாள். 'எந்தையே, யான் பட்ட பாட்டைப் பார்த்தீரா' எனக் கேட்டுத் தன் கண்ணீர் தந்தைமேல் விழக் கீழே விழுந்தாள். *152*

தாயும் தந்தையும்

332. செவ்வண்ண வாயாளும் தேர்வேந் தனும்மகளை
அவ்வண்ணம் கண்டக்கால் ஆற்றுவரோ - மெய்வண்ணம்
ஒய்ந்துநா நீர்போய் உலர்கின்ற(து) ஒத்ததமர்
நீந்தினார் கண்ணீரின் நின்று.

பதவுரை:

செவ்வண்ண வாயாளும் - சிவந்த இதழையுடைய தமயந்தியின் தாயும், தேர்வேந்தனும் - வீமராசனும், மகளை அவ்வண்ணம் கண்டக்கால் - தம் மகளைத் துயரக் கோலத்தில் கண்ட போது, ஆற்றுவரோ - பொறுப்பார்களோ, மெய்வண்ணம் ஓய்ந்து - அவர்கள் உடல் தளர்ந்து, நாநீர் போய் உலர்கின்றது - நாவிலும் நீர் வறண்டது, ஒத்த தமர் - அவர்களைப் போலவே உறவினர்களும், கண்ணீரின் நின்று நீந்தினர் - கண்ணீர்க் கடலில் தத்தளித்தார்கள்.

பொழிப்புரை:

தமயந்தியின் தாயும் தந்தையும் மகளின் நிலை கண்டு உடல் வாடி நாக்கில் நீர் வறண்டு போயினர். உறவினர்களும் தமயந்தியை நினைத்துக் கண்ணீர்க் கடலில் நீந்தினர். *153*

தாயும் மகளும்

333. பனியிருளில் பாழ்மண்ட பத்திலே உன்னை
நினையாது நீத்தகன்ற போது - தனியேநின்(று)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்நினைத்தாய் என்செய்தாய் என்னாப் புலம்பினாள்
பொன்நினைத்தாய் நோக்கிப் புலர்ந்து.

பதவுரை:

பனியிருளில் - குளிர்ந்த இரவுப் போதில், பாழ்மண்டபத்திலே - பாழான மண்டபத்தில், உன்னை நினையாது நீத்து அகன்றபோது - உன்னைப் பற்றிக் கவலை கொள்ளாது உன்கணவன் பிரிந்தவுடன், தனியே நின்று என் நினைத்தாய் என் செய்தாய் - தனித்திருந்து யாது நினைத்தாய், எப்படி இருந்தாய், என்னா பொன் நினைத்தாய் நோக்கி - என்று தமயந்தியைப் பெற்றவள் அவளைப் பார்த்து, புலர்ந்து புலம்பினாள் - வாடிக் கதறினாள்.

பொழிப்புரை:

தமயந்தியைப் பெற்ற தாய் அவளைப் பார்த்து, 'குளிர்ந்த இரவில் பாழ்மண்டபத்தில் நளன் உன்னைப்பிரிந்தபோது தனித்திருந்த நீ என்ன எண்ணினாய்? என்னென்ன செய்தாய் 'என்று கூறி வதங்கிக் கலங்கினாள். *154*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. கலிநீங்கு காண்டம்

திருமால் காப்பு

334. மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம்
காலிக்குப் பின்னேயும் காணலாம் - மால்யானை
முந்(து) அருளும் வேத முதலே எனஅழைப்பு
வந்(து) அருளும் செந்தா மரை.

பதவுரை:

மால்யானை - கசேந்திரன் எனும் யானை, முந்து அருளும் வேத முதலே என அழைப்ப - அடியவர்கள் வேண்டுவதற்கு முனபே அருள்செய்யும் முதலே' என அழைத்த போது, வந்து அருளும் செம் தாமரை - விரைந்து வந்து அருள்செய்த திருமாலின் திருவடிகளை, மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம் - ஆதிப் பழமறைக்கு முன்னாக இருப்பதையும் பார்க்கலாம், காலிக்குப் பின்னேயும் காணலாம் - கன்று காலிகளுக்குப் பின்னாலும் காணலாம்.

பொழிப்புரை:

ஆதிமூலமே என்று முதலையிடம் சிக்கிய யானை அழைத்தபோது விரைந்து வந்து காத்தன மாலின் திருவடிகள். அத்திருவடிகளை ஆதிமறைக்கு முன்னாலும் பார்க்கலாம், கன்று காலிகளுக்குப் பின்னாலும் பார்க்கலாம். 1

சிவபெருமான்

335. போதுவார் நீ(று) அணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் என உரைப்பார் - நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மான் நின்(று) ஆடும் அரங்கு.

பதவுரை:

நீதியார் பெம்மான் அமரர் பெருமான் - நீதி நெறிகளுக்கு இருப்பிட மானவரும் தேவர்களுக்குத் தலைவர் ஆனவரும், ஒருமான் கை அம்மான் - இடக்கை விரலில் மானைத் தாங்கியவருமான சிவபெருமான், நின்று ஆடும் அரங்கு - வீற்றிருக்கும் இடம், போதுவார் நீறு அணிந்து - எப்போதும் திருநீற்றைப் பூசியும், ஐந்தெழுத்தை ஓதுவார் உள்ளம் - ஐந்து எழுத்தைச் சொலுபவர் நெஞ்சம், என உரைப்பர் - என்று சொல்லுவர்.

In Public domain :Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

நன்னெறிகளுக்கு மூலமானவரும் தேவர்களுக்குத் தலைவரும் மானை விரலில் ஏந்திய வருமான சிவபெருமான் என்றும் திருநீற்றைப் பூசி ஐந்தெழுத்தை ஓதிக் கொள்பவர் நெஞ்சத்தில் நிலையாக இருப்பார். 2

பிரிந்த நளன்

336. மன்னா உனக்(கு)அவயம். என்னா வனத்தீயில்
பன்னாக வேந்தன் பதைத்(து)உருகிச் - சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து.

பதவுரை:

முரண்கலியின் வஞ்சப் பழி வழியே செல்கின்றான் - முரண்பட்ட கலியின் கபடத்தால் தனிவழி செல்லும் நளன், வனத்தீயில் பல்நாக வேந்தன் பதைத்து உருகி - காட்டுத் தீயில் சிக்கி வருந்தும் நாகப்பாம்பு, மன்னா உனக்கு அபயம் என்னா - அரசே, நான் உனக்கு அடைக்கலம் என்று, சொன்ன மொழிவழியே பார்த்து சென்றான் - சொன்ன சொல்லைக் கேட்டு அதுநோக்கிச் சென்றான்.

பொழிப்புரை:

கலியின் வஞ்சகத்தால் காட்டில் நடந்த நளன், காட்டுத் தீயில் சிக்கி வருந்தும் நாகப்பாம்பு 'மன்னா நான் உனக்கு அபயம்' என்று சொன்னதைக் கேட்டு அச்சொல் வந்த வழி நோக்கிச் சென்றான். 3

பாம்பை நளன் காணல்

337. ஆரும் திரியா அரைஇருளின் அங்ஙனே
சோர்குழலை நீத்த துயரோடும் - வீரன்
திரிவான்அத் தீக்கானில் செந்தீயின் வாய்ப் பட்(டு)
எரிவானைக் கண்டான் எதிர்.

பதவுரை:

ஆரும் திரியா அரைஇருளின் - மக்களே நடமாடாத நள்ளிரவில், அங்ஙனே சோர்குழலை நீத்த துயரோடும் - தனது மனைவி தமயந்தியைப் பிரிந்த துயரத்தோடு, வீரன் திரிவான் - நளன் திரிந்து கொண்டிருந்த சமயத்தில், தீக்கானில் செந்தீயின் வாய்ப்பட்டு - கொடிய அக்காட்டில் தீயில் அகப்பட்டு, எரிவானை எதிர் கண்டான் - வருந்தும் பாம்பை எதிரில் பார்த்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

மக்களே நடமாடாத நடுஇரவில் தமயந்தியைப் பிரிந்த நளன் துயரோடு அலைந்து திரிந்தான். அப்போது காட்டுத்தீயில் சிக்கிச் சீரழியும் நாகப்பாம்பை எதிரில் கண்டான். 4

நளன் நெருப்பில் புகுதல்

338. தீக்கடவுள் தந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி அருளால் அரவரசை - நோக்கி
அடைந்தான் அடைதலுமே ஆர்அழலோன் அஞ்சி
உடைந்தான்போய்ப் புக்கான் உவந்து.

பதவுரை:

தீக்கடவுள் தந்த வரத்தை - தீக்கடவுள் நளனுக்குத் தந்த வரத்தை, திருமனத்தில் ஆக்கி - தன் நெஞ்சில் நினைத்துக் கொண்டு, அரவு அரசை அருளால் நோக்கி அடைந்தான் - கார்க்கோடகன் எனும் பாம்பைக் கருணையுடன் நோக்கிச் சென்றான், அடைதலுமே ஆர் அழலோன் - நளன் சென்றதும் தீக்கடவுள், அஞ்சி உடைந்தான் - அச்சமடைந்து தன்வேகம் தணிந்தான், உவந்து போய்ப் புக்கான் - நளனும் மகிழ்ந்து நெருப்பிடையே நுழைந்தான்.

பொழிப்புரை:

தீக்கடவுள் தனக்குத் தந்த வரத்தை நெஞ்சில் நிறுத்தி நளன் தீயில் சிக்கிய பாம்பிடத்துக் கருணையோடு சென்றான். நளனைக் கண்டதும் தீ அஞ்சித் தன்வேகம் தணிந்தது. நளன் மகிழ்வோடு தீக்குள் புகுந்தான். 5

என்னைக் காப்பாற்று

339. வேத முனிஒருவன் சாபத்தால் வெங்கானில்
ஆதபத்தின் வாய்ப்பட்(டு) அழிகின்றேன - காதலால்
வந்(து)எடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்(து)எடுத்த தோளானைத் தான்.

பதவுரை:

மாலை மணிவண்டு சந்துஎடுத்த தோளானைத் தான் - வண்டுகள் பாடும் மாலை அணிந்த தோள்களை உடைய நளனிடம் (பாம்பு அரசன்), வேதமுனி ஒருவன் சாபத்தால் - மறைகள் கற்ற முனிவனின் சாபத்தால், வெங்கானில் ஆதபத்தின் வாய்ப்பட்டு அழிகின்றேன் - கொடுங்காட்டில் நெருப்பில் சிக்கிச்

Public domain - Digitization Muthulakshmi Research Academy

சாகிறேன், காதலால் வந்து எடுத்துக்கா. என்றான் - அன்புடன் வந்து என்னைக் காப்பாற்று என வேண்டினான்.

பொழிப்புரை:

பாம்பு அரசன் கார்க்கோடகன் நளனிடம், 'மறை கற்ற முனிவன் ஒருவனின் சாபத்தால் நெருப்பில் அகப்பட்டுச் சாகிறேன். என்மீது கருணை கொண்டு காப்பாற்று' என வேண்டினான். *6*

என்னைப் பூமியில் விடு!

340. சீரியாய் நீ எடுப்பத் தீமை கெடுகின்றேன்.
கூரும் தழல் அவித்துக் கொண்டுபோய் - பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து.

பதவுரை:

மற்று அந்த வெந்தழலால் வெம்மைப் படுகின்றான் - கொடிய நெருப்பில் மாட்டித் துன்பப்படும் பாம்பரசன், வேல்வேந்தைப் பார்த்து, வேலை ஏந்திய நளனைப் பார்த்து, சீரியாய் - சீர்மை நிறைந்தவனே, நீ எடுப்பத் தீமை கெடுகின்றேன் - நீ என்னை எடுத்துக் காத்தால் என் பவாம் எல்லாம் நீங்கும், கூரும் தழல் அவித்துக் கொண்டு போய் - நிறைந்த நெருப்பைத் தணித்து என்னைக் கொண்டு போய், பாரில் விடுகென்றான் - பூமியில் விடு என்றான்.

பொழிப்புரை:

பெரும் நெருப்பில் சிக்கிக் கொண்டு துயரப்படும் பாம்பரசன் நளனைக் கண்டு, 'சிறந்தவனே, நீ தொட்டால் என் பாவங்கள் நீங்கும். கொடிய இத்தீயிலிருந்து என்னை அகற்றிப் பூமியில் விடு' எனக் கூறினான். *7*

காப்பாற்றினான்

341. என்(று) உரைத்த அவ்வளவில் ஏழுலகும் சூழ்கடலும்
குன்றும் சுமந்த குலப்புயத்தான் - வென்றி
அரவரசைக் கொண்(டு) அகன்றான் ஆரணியம் தன்னின்
இரவரசை வென்றான் எடுத்து.

பதவுரை:

என்று உரைத்த அவ்வளவில் பாம்பரசன் அவ்வாறு உரைத்த உடனேயே, ஏழு உலகும் சூழ் கடலும் குன்றும் சுமந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குலப்புயத்தான் - ஏழு உலகையும் கடலையும் மலைகளையும் ஆட்சி செய்த தோள்வலிய னான நளன், ஆரணியம் தன்னின் இரவரசை வென்றான் - காட்டில் இருளாகிய அரசையும் வென்ற அவன், எடுத்து வென்றி அரவரசைக் கொண்டு அகன்றான் - பாம்பரசனைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு அகன்றான்.

பொழிப்புரை:

ஏழு உலகையும் அதனைச் சார்ந்த கடலையும் மலைகளையும் ஆட்சி செய்யும் நளமன்னன் காட்டில் இருளையும் வென்றவன். அவன் கார்க்கோடகனைக் கையில் எடுத்துக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்றான். 8

பத்துவரை சொல்லி விடுக

342. மண்ணின்மீ(து) என்தனைநின் வன்தாளால் ஒன்று முதல்
எண்ணித் தசவென இடுகென்றான் - நண்ணிப்போர்
மாவலான் செய்த உதவிக்கு மாறாக
ஏவலால் தீங்(கு) இழைப்பேன் என்று

பதவுரை:

போர் மாவலான் செய்த உதவிக்கு - குதிரைப்போரில் வல்லவனான நளன் செய்த உதவிக்கு, நண்ணிமாறாக - அவனை நெருங்கிக் கைமாறாக, ஏவலால் தீங்கு இழைப்பேன் என்று - நளனின் கட்டளைப்படியே அவனுக்குக் கெடுதல் செய்வேன் என்று (கார்க்கோடகன் தனக்குள் நினைத்துக் கொண்டு) இப்பூமியின் மீது என்தனைநின் வன்தாளால் ஒன்று முதல் - என்னை உன்னுடைய வலியகாலால் ஒன்றுமுதல், எண்ணித் தசவென இடுக என்றான் - பத்துவரை எண்ணி என்னை விடு எனப் பாம்பரசன் வேண்டினான்.

பொழிப்புரை:

நளன் உதவிக்குக் கைமாறு செய்ய நினைத்த பாம்பரசன் அவன் கட்டளைப் படியே தீங்குநான் செய்வேன் எனத் தனக்குள் நினைத்தான். பின்பு நளனே, நீ உன் வலிய காலால் ஒன்று முதல் பத்து வரை எண்ணி என்னைப் பூமியில் விடுக்க என வேண்டினான் 9

பாம்பு கடித்தது

343. ஆங்கவன்தான் அவ்வா(று) உரைப்ப அது கேட்டுத்
தீங்கலியால் செற்ற திருமனத்தான் - பூங்கழலை

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மையால்
எண்ணினான் வைத்தான் எயிறு.

பதவுரை:

ஆங்குஅவன்தான் அவ்வாறு உரைப்ப - பாம்பு அரசன் அவ்வாறு உரைக்கவும், அதுகேட்டுத் தீங்கலியால் செற்ற திருமனத்தான் - கலிபுருடனால் துன்புற்ற நளன் அதைக்கேட்டு, பூங்குழலை மண்ணின்மேல் வைத்து - தனது பூப்போன்ற காலைத் தரையில் வைத்து, தசவென்று வாய்மையால் எண்ணினான் - ஒன்று முதல் பத்து வரை எண்ணினான், எயிறு வைத்தான் - (உடனே) பாம்பரசன் நளனைத் தீண்டினான்.

பொழிப்புரை:

பாம்பு அரசன் கூறிய தைக் கேட்ட நளன் தன் பூப்போன்ற காலை நிலத்தில் வைத்து ஒன்று முதல் பத்து வரை எண்ணினான். உடனே கார்க்கோடகன் நளனைத் தன் பல்லால் கடித்தான். 10

நளன் மேனி குறுகுதல்

344. வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக்(கு) - ஏமம்
கொடாதார் அகம்போல் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் திருமேனி வெந்து.

பதவுரை:

மெய்ம்மை விடாதான் திருமேனி வெந்து - (பாம்பு கடித்ததால்) உண்மையே உரைக்கும் நளன் மேனி கருகியது, வீமன் மடந்தை விழி முடியக் கண்டறியா - வீமன் மகள் தமயந்திகூட முழுமையாகப் பார்த்தறியாத, வாம நெடுந்தோள் - அழகான நளனது தோள்கள், வறியோர்க்கு ஏமம் கொடாதார் - இல்லாதர்க்குச் செல்வம் ஈயாதவருடைய, அகம்போல் குறுகிற்றே - வீடு செல்வத்தில் சுருங்குவதுபோலச் சுருங்கிற்று.

பொழிப்புரை:

பாம்பு கடித்ததால் உண்மையே பேசும் நளன்மேனி கருகியது. தமயந்திகூட முழுமையாகப் பார்த்தறியாத நளனது தோள்கள், வறியோர்க்கு ஈயாத வீட்டுச் செல்வம் குறுகுவது போலக் குறுகிற்று. 11

நளன் பாம்பரசனிடம் வினவல்

345. ஆற்றில் அரவரசே ஆங்(கு)என் உருவத்தைச்
சீற்றம் ஒ(று) இன்றிச் சினஎயிற்றால் - மாற்றுதற்(கு) இன்(று)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்கா ரணம் என்றான் ஏற்றமரில் கூற்(று) அழைக்கும்
மின்கால் அயில்முகவேல் வேந்து.

பதவுரை:

ஏற்ற அமரில் கூற்று அழைக்கும் - தான் பங்கேற்கும் போரில் கூற்றுவனுக்கு இரையாக வீரர்களைச் சாய்த்து அவனை அழைக்கும், மின்கால் அயில்முகவேல் வேந்து - ஒளிவிடும் கூரிய வேலுடைய நளன், ஆற்றல் அரவரசே - வலிமை பொருந்திய பாம்பரசனே, ஆங்கு என் உருவத்தைச் சீற்றம் ஒன்று இன்றி - என் உருவை என் மீது கோபம் இல்லாதபோதே, சினஎயிற்றால் மாற்றுதற்கு - பல்லால் கடித்து மாற்ற, இன்று என் காரணம் என்றான் - என்ன காரணம் என வினவினான்.

பொழிப்புரை:

போரில் எதிரிகளைக் கொன்று இயமனை அழைப்பவன் நளன். அவன் பாம்பரசனிடம், 'என்மீது கோபம் இல்லாத நீ என்னைக் கடித்து என் உருவத்தை மாற்றினாயே, அதற்குக் காரணம் என்ன என வினவினான். 12

'உன் உரு மாறவேண்டும்'

346. காயும் கடகளிற்றாய் கார்க்கோ டகன்என்பேர்
நீஇங்கு வந்தமை யான்நினைந்து - காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்(து) உறைதல் காரணமா
வேறாக்கிற்(று) என்றான் விரைந்து.

பதவுரை:

காயும் கடகளிற்றாய் - சினம் கொண்ட யானைகளை உடையவனே, கார்க்கோடகன் என்பேர் - கார்க்கோடகன் எனது பெயர், நீஇங்கு வந்தமை யான் நினைந்து - நீ இங்கே வந்ததை நான் அறிந்தேன், காயத்தை மாறாக்கிக் கொண்டு மறைந்து உறைதல் காரணமா - உன் உடலை வேறுபடுத்தி வாழவேண்டும் எனும் கட்டாயத்தால், வேறாக்கிற்று என்றான் விரைந்து - உன்னைக் கடிக்கவேண்டிய அவசியமாயிற்று என்றான் பாம்பரசன்.

பொழிப்புரை:

'யானைப்படையை உடைய நளனே, என் பெயர் கார்கோடகன்; நீ காட்டிற்கு வந்தமை அறிந்தேன்; நீ சிலகாலம் மறைந்து வாழ்தல் கருதி உன்னைக் கடிக்க நேர்ந்தது' என்றான் பாம்பரசன். 13

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஆடை பெற்றான் நளன்

347. கூன்இறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேன்இறால் பாயும் திருநாடா - கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினாய் இந்த
அணியாடை கொள்கென்றான் ஆங்கு.

பதவுரை:

கூன்இறால் பாய - வளைந்த இறால் மீன்கள் பாய்தலாலே, தவளை வாய் குவளை தேன்இறால் பாயும் திருநாடா - தவளையின் வாய்க்குள் குவளை மலரின் மது கசியும் வளநாடனே, கானில் தணியாத வெங்கனலைத் தாங்கினாய் - காட்டில் நான் சிக்கித் தவித்த நெருப்பிலிருந்து காப்பாற்றினாய், ஆங்கு இந்த அணியாடை கொள்க என்றான் - (அதற்குக் கைம்மாறு ஆக) இந்த ஆடையை எடுத்துக் கொள் என்றான் பாம்பு அரசன்.

பொழிப்புரை:

இறால் மீன்கள் குவளை மலர்களில் பாய்வதால் அவற்றிலுள்ள தேன் தவளையின் வாயில் விழுகிறது. இத்தகைய வளநாடன் நளனாகியநீ கொடிய நெருப்பிலிருந்து என்னைக் காப்பாற்றினாய். அதற்குக் கைம்மாறு ஆக உனக்கு இந்த ஆடையைத் தந்தேன்' என்றான் பாம்பரசன். 14

ஆடையின் பயன்

348. சாதி மணித்துகில்நீ சாத்தினால் தண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால் - தாதின்
துளிக்குநா நீட்டும் துறைநாடர் கோவே
ஒளிக்குநாள் நீங்கும் உரு.

பதவுரை:

தண்கழுநீர்ப் போதின் கீழ் - குளிர்ந்த செங்கழுநீர்ப் பூக்களின் கீழே, மேயும் புதுவரால் - மேய்கின்ற இளைய வரால் மீன்கள், தாதின் துளிக்குநா நீட்டும் - அம்மலர்களி தேன் துளிகளுக்கு நாவை நீட்டும், துறைநாடர் கோவே - துறைகளையுடைய நாட்டுத் தலைவனே, ஒளிக்கு நாள் - நீ மறைந்து வாழும் காலத்தில், சாதி மணித்துகில் நீ சாத்தினால் - மாணிக்கக் கற்கள் பதிக்கப் பெற்ற இவ்வாடையை அணிந்தால், உருநீங்கும் - உன் பழைய உருவம் வந்து விடும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வரால் மீன்கள் செங்கழுநீர்ப்பூக்கள் தேனுக்கு நாவை நீட்டும் நாட்டுக்குத் தலைவனே, நீ மறைந்து வாழும் காலத்தில் இந்த ஆடையை அணிந்தால் பழைய உருவம் மீண்டும் வரும் என்றான் கார்க்கோடகன். 15

வாகுகன் எனப் பெயர் மாற்று

349. வாகு குறைந்தமையான் வாகுகன் என்(று) உன்நாமம்
ஆக அயோத்தி நகர்அடைந்து - மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கான்நீ ஆ(கு) என்றான் செம்மனத்தால்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து.

பதவுரை:

செம்மனத்தால் பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து - நல்ல நெஞ்சோடு நாடாளும் வேந்தனாகிய நளனைப் பார்த்து, வாகு குறைந்தமையான் - உன்தோளழகு குறைந்ததால், வாகுகன் என்று உன்நாமம் ஆக - வாகுகன் என உன் பெயர் ஆகட்டும், அயோத்தி நகர் அடைந்து - நீ அயோத்தி சென்று, மாகனகத்தேர்த் தொழிற்கு - சிறப்புடைய தேரோட்டும் தொழிலில், மிக்கான் நீ ஆகு என்றான் - தேர்ந்தவனாக நீ ஆகுக என்றான் பாம்பரசன்.

பொழிப்புரை:

நல்ல பண்புகளோடு நாடாண்ட நளனைப் பார்த்துக் கார்க்கோடகன், மன்னா, அழகு குறைந்து கூனியதால் உன் பெயர்வாகுகன் ஆகட்டும். அயோத்தி மாநகர் சென்று சிறந்த தேரோட்டியாகத் தொழில் நடத்து என்றான். 16

நளன் நடந்தான்

350. இணையாரும் இல்லான் இழைத்த உதவி
புணையாகச் சூழ்கானில் போனான் - பணையாகத்
திண்ஆகம் ஓர்எட்டும் தாங்கும் திசைஅனைத்தும்
எண்ஆக வேந்தன் எழுந்து.

பதவுரை:

பணை ஆகம் திண் ஆகம் ஓர்எட்டும் - பருத்த உடல் வலிமை உள்ள எட்டு யானைகளும், தாங்கும் திசை அனைத்தும் - தாங்கும் எட்டுத் திசைகளையும், எண் ஆக வேந்தன் எழுந்து - தன் எண்ணம்போலவே ஆண்ட அரசனான நளன் எழுந்து, இணையாரும் இல்லான் - இணையற்ற கார்க்கோடகன் எனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாம்பு, இழைத்த உதவி புணையாக - செய்த உதவியைத் துணையாகக் கொண்டு, சூழ்கானில் போனான் - அடர்ந்த காட்டில் நடந்தான்.

பொழிப்புரை:

பருத்த உடல் வலிமையுள்ள எட்டு யானைகளும் தாங்கும் எட்டுத் திசைகளையும் தன் எண்ணம்போல் ஆண்ட நளன் எழுந்தான். பிறருக்கு இணையில்லாக் கார்க்கோடகன் செய்த உதவியைத் துணையாகக் கொண்டு அடர்ந்த காட்டில் செல்லலானான். 17

கடலைக் காணுதல்

351. நினைப்பென்னும் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டான் - பனிக்குருகு
தண்படாம் நீழல் தனிப்பேடைப் பார்த்திரவு
கண்படா வேலைக் கரை.

பதவுரை:

தண்படாம் நீழல் பனிக்குருகு - குளிர்ந்த கொடிகளின் நிழலில் இருக்கும் ஆண் நாரைகள், தனிப்பேடைப் பார்த்து - தன் பேடையை எதிர்பார்த்து, இரவு கண்படா வேலைக்கரை - இரவு முழுதும் துயிலாமல் இருக்கும் கடற்கரையை, நினைப்பு என்னும் காற்று அசைப்ப - தமயந்தியின் நினைவு எனும் காற்று வீச, மூளும் கனல்புகைய - மூளும் நெருப்பு புகைய, வேகின்றான் கண்டான் - மனம் வேகின்ற நளன் பார்த்தான்.

பொழிப்புரை:

கொடிகள் அடர்ந்து படர்ந்த நிழலில் இருக்கும் ஆண் நாரை தன் பெடையை எதிர் பார்த்துத் தூங்காமல் இருக்கும் கடற்கரை. அக்கடற்கரையைத் தமயந்தியின் நினைவு எனும் காற்று வீசுவதால் மூளும் நெருப்பு புகைய மனம் வேகும் நளன் கண்டான். 18

குருகே ஆறுதல் கூறுவாயா?

352. பொம்பர் இளங்குருகே கூறாது இருத்தியால்
அம்புயத்தின் போதை அறுகாலால் - தும்பி
திறக்கத்தேன் ஊலும் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக்(கு) ஒன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கொம்பர் இளம் குருகே - மரக் கிளையில் இருக்கும் இளம்பறவையே! அம்புயத்தின் போதை - தாமரை மலரின் முகையினை, அறுகாலால் தும்பி திறக்க - வண்டு தனது ஆறுகாலால் திறக்க, தேன் ஊறும் திருநாடன் - அதிலிருந்து தேன் கசியும் வளநாடனாகிய வீமனின், பொன்னை உறக்கத்தே நீத்தேனுக்கு - திருமகளைத் தூக்கத்தில் தனியே விட்டுவந்த எனக்கு, ஒன்று கூறாது இருத்தியால் - ஒன்றும் ஆறுதல் கூறாமல் இருத்தியோ' என்றான் நளன்.

பொழிப்புரை:

இளம் பறவையே, வண்டு தாமரையின் மொட்டுகளைத் தன் காலால் திறந்து தேன்கசிய வைக்கும் நாடு விதர்ப்பநாடு அந்நாட்டு அரசன் மகள் தமயந்தியை நான் காட்டில் தனியே விட்டு வந்தமையால் நீ எனக்கு ஆறுதல் கூறவில்லை போலும்! *19*

அஞ்சினான்! அழிந்தான்!

353. புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் - இன்னருள்கண்(டு)
அஞ்சினான் ஆவி அழிந்தான் அறஉயிர்த்து
நெஞ்சினால் எல்லாம் நினைந்து.

பதவுரை:

புன்னை நறுந்தாது கோதி - புன்னை மலரின் மணமுள்ள மகரந்தப் பொடியைக் கிளறிய, பொறிவண்டு கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் - புள்ளிகளை உடைய வண்டு தன் பெடைவண்டு உண்ணக் காத்துக் கிடக்கும், இன்னருள் கண்டு - அருள்தன்மையைப் பார்த்து, அஞ்சினான் - (நளன்) அஞ்சினான், அற உயிர்த்து நெஞ்சினால் எல்லாம் நினைந்து ஆவி அழிந்தான் - பெரு மூச்சுவிட்டுத் தான் தமயந்திக்குச் செய்ததை எல்லாம் நினைத்து உயிர் சோர்ந்தான்.

பொழிப்புரை:

ஆண் வண்டு புன்னை மலரின் மகரந்தப் பொடியைக் கிண்டித் தன் பெடைக்குக் கொடுக்கக் காத்திருக்கும் அருள் தன்மையைக் கண்ட நளன் தமயந்திக்குத் தான் செய்ததை நினைத்து அஞ்சினான்; பெருமூச்சு விட்டு அனைத்தையும் நெஞ்சில் நினைந்து உயிர் சோர்ந்தான். *20*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளியும் நண்டு

354. காதலியைக் கார்இருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்(கு) அலவ ஓடி
ஒளிக்கின்ற(து) என்னோ உரை.

பதவுரை:

அலவ - (வளைக்குள் ஓடும் நண்டைப் பார்த்த நளன்) நண்டே! நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கு ஓடி - இரைச்சல் இடும் கடற்கரையில் உள்ள வளையில் ஓடி, ஒளிக்கின்றது - மறைதல், காதலியைக் கார்இருளில் கானகத்தே - தன் மனைவியை நடுஇரவில் கானில், கைவிட்ட பாதகனை - பிரிந்த கொடியவனை, பார்க்கப் படாதென்றோ - பார்ககக் கூடாது என்றா, என்னோ உரை - வேறு காரணமா, சொல்லு என்று கேட்டான்.

பொழிப்புரை:

நண்டைப் பார்த்து நளன், 'நண்டே நீ ஓடி வளையுள் மறைகிறாய். மனைவியை நடுக்காட்டில் நடுஇரவில் பிரிந்த பாதகனைப் பார்க்கக் கூடாது என்றுதானே? காரணத்தைச் சொல் எனக்கேட்டான். 21

தமயந்தி நினைவு

355. பானலே சோலைப் பசுந்தென்றல் வந்(து) உலவும்
கானலே வேலைக் கழிக்குருகே - யானுடைய
மின்இடைக்கம் பூனாள்அவ வீங்கிருள்வாய் ஆங்(கு) உணர்ந்தால்
என்நினைக்கும் சொல்வீர் எனக்கு.

பதவுரை:

பானலே - கருங்குவளை மலர்களே, சோலைப் பசுந்தென்றல் வந்து உலவும் கானலே - தென்றல் காற்று உலவும் கடற்கரையே, வேலைக் கழிக்குருகே - கடற்கரையில் வாழும் பறவையே, யானுடைய மின்இமைக்கும் பூணாள் - என்னை மணந்த ஒளிவிடும் அணிகளை அணிந்த தமயந்தி, ஆங்கு அவ்வீங்கிருள் வாய் - காட்டில்' கொடிய இருளில், உணர்ந்தால் என் நினைக்கும் - விழிந்தெழுந்து தனியே என்ன நினைத்திருப்பாள், எனக்குச் சொல்வீர் - எனக்குச் சொல்லுங்கள்.

பொழிப்புரை:

குவளை மலர்களே, கடற்கரையே, கடற்கரையில் வாழும் பறவையே, என் மனையாள் தமயந்தி நடுக்காட்டில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விழித்தெழுந்து என்னைக் காணாமல் என்ன எண்ணியிருப்பாள், சொல்லுங்கள்' என்றான் நளன். 22

கடலே, சொல்

356. போவாய் வருவாய் புரண்டு விழுந்(து)இரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் - தீவாய்
அர(வு) அகற்றும் என்போல ஆர்கலியே! மாதை
இர(வு) அகற்றி வந்தாய்கொல் இன்று.

பதவுரை:

ஆர்கலியே - ஒலிக்கின்ற கடலே, போவாய் வருவாய் - கரையை விட்டு அகன்று மீண்டும் வருகிறாய், புரண்டு விழுந்து - புரண்டும் அடங்கியும், நாவாய் குழற இரங்கி நடுங்குறுவாய் - உன்மேல் செல்லும் கலங்கள் அசைய இரைச்சலோடு நடுங்குகிறாய், தீவாய் அரவு அகற்றும் என்போல - தீயிலிருந்து பாம்பைக் காப்பாற்றிய என்னைப் போல, இன்று மாதைஇரவு அகற்றி வந்தாய்கொல் - இப்போது நீயும் உன் மனையாளைப் பிரிந்து வந்தாயோ என்றான் நளன்.

பொழிப்புரை:

ஒலிக்கின்ற கடலே, கரையை விட்டுப்போகிறாய்; வருகிறாய்; புரள்கிறாய் அடங்குகிறாய்; மேலே செல்லும் படகுகள் அசைய நடுங்குகிறாய்; தீயில் சிக்கிய பாம்பை அகற்றிய என்போல நீயும் உன் மனையாளை அகன்று வந்தாயோ? சொல் என்றான் நளன். 23

அயோத்தி அடைந்தான்

357. முன்னீர் மடவார் முலுவல் திரள்குவிப்ப
நன்னீர் அயோத்தி நகர் அடைந்தான் - பொன்னீர்
முரு(கு) உடைக்கும் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அரு(கு) உடைக்கும் நன்னாட்(டு) அரசு.

பதவுரை:

பொன்னீர் முருகு உடைக்கும் தாமரையின் மொய்ம் மலரை - பொன்னின் தன்மையை ஒத்த அழகையும் மிஞ்சும் தாமரை மலர்களை, தும்பி அருகு உடைக்கும் நன்னாட்டு அரசு - வண்டுகள் சென்று மலரவைக்கும் நாட்டுக்கு வேந்தனான நளன், முன்னீர் மடவார் - (அயோத்திநகரத்து) கடற்கரையில் வாழும் பெண்கள், முறுவல் திரள் குவிப்ப - திரண்டு முறுவலித்து வரவேற்க, நன்னீர் அயோத்தி நகர் அடைந்தான் - நற்பண்புகள் நிறைந்தோர் வாழும் அயோத்தி நகர் சேர்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

பொன்னின் அழகையும் மிஞ்சும் தாமரை மலரை வண்டுகள் சென்று விரிய வைக்கும் வளநாடன் நளன். அவனைக் கடற்கரையில் வாழும் பெண்கள் திரண்டு முறுவலுடன் வரவேற்க அயோத்தி மாநகரை அடைந்தான். 24

இருதுபன்னனிடம் அறிமுகம்

358. மான்தேர்த் தொழிற்கும் மடைத்தொழிற்கும் மிக்கோன் என்(று)
ஊன் தேய்க்கும் வேலான் உயர்நறவத் - தேன் தோய்க்கும்
தார்வேந்தற்(கு) என்வரவு தான்உரைமின் என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனாய்ச் சென்று.

பதவுரை:

தேர்வேந்தன் வாகுகனாய்ச் சென்று - தேரைச் செலுத்தும் வாகுகன் என உருமாறிப்போய், ஊன் தேய்க்கும் வேலான் - பகைவர் உடலைக் கொல்லும் வேலுடையவனும், உயர்நறவத் தேன் தோய்க்கும் தார்வேந்தற்கு - தேன் ஒழுகும் மாலை தாங்கிய வனுமான இருதுபன்னனுக்கு, மான்தேர்த் தொழிற்கும் - தேரைச் செலுத்துவதிலும், மடைத் தொழிறகும் மிக்கோன்என்று - உணவு சமைப்பதிலும் தேர்ந்தவன் என்று, என் வரவு உரைமின் என்றுரைத்தான் - என்னைப் பற்றிச் சொல்லுக என்றான் ஏவலனிடம் நளன்.

பொழிப்புரை:

'தேரைச் செலுத்துவதிலும் உணவு சமைப்பதிலும் நான் வல்லவன். இருதுபன்னனாகிய உன் அரசனிடம் என் வருகையைக் கூறுக' என்று சொன்னான் நளன் ஏவலனிடம்.25

நளன் அரசனைக் காண்டல்

359. அம்மொழியைத் தூதர் அரசற்(கு) அறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்(து)அதனைச் சிந்தித்தே -
இம்மொழிக்குத்
தக்கானை இங்கே தருமின் என உரைப்ப
மிக்கானும் சென்றான் விரைந்து.

பதவுரை:

அம்மொழியைத் தூதர் அரசற்கு அறிவிக்க - வாகுகன் உரைத்தவற்றை ஏவலர்கள் அரசனுக்கு அறிவிக்கவும், செம்மொழியாத் தேர்ந்து - இருதுபன்னன் அவற்றைக் கேட்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனைச் சிந்தித்தே - நிலைமையை ஆராய்ந்து, இம்மொழிக்குத் தக்கானை - இருதொழில்களிலும் வல்லவனை, இங்கே தருமின் என உரைப்ப - இங்கு அழையுங்கள் எனச் சொன்னான், மிக்கானும் விரைந்து சென்றான் - வாகுகனும் விரைவாக அங்கே போனான்.

பொழிப்புரை:

வாகுகன் சொன்னவற்றை ஏவலர்கள் அரசனிடம் கூறினர். அரசனும் ஏவலர் கூறியவற்றைக் கேட்டு ஆராய்ந்து தகுதியுள்ள அவனை அழைமின் எனக்கட்டளையிட்டான். இதனைக் கேட்ட வாகுகனும் விரைந்து சென்றான். 26

இருதுபன்னன் வினவல்

260. பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தான்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன் - ஐயாநீ
எத்தொழிலின் மிக்கனைகொல் யாதுன்பெயர் என்றான்
கைத்தொழிலின் மிக்கானைக் கண்டு

பதவுரை:

தேர்வேந்தன் - இருதுபன்னன், கைத்தொழிலின் மிக்கானைக் கண்டு - செய்தொழில் வல்ல வாகுகனைக் கண்டு, பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கி - பொய்கலவாத எண்ணம் உடைய அவனைக் கூர்ந்து நோக்கி, தான்செய்ய முகமலர்ந்து - தனது முகம் மலர்ந்து, ஐயாநீ எத்தொழிலின் மிக்கனைகொல் - ஐயனே நீ எத்தொழிலில் வல்லவன், யாது உன் பெயர் என்றான் - உன் பெயர் என்ன என வினவினான்.

பொழிப்புரை:

இருதுபன்னன் செய்தொழில் வல்ல நளனைக் கண்டான்; அவன் பொய்ம்மை கலவாத எண்ணத்தை அறிந்தான், அவனைப் பார்த்து முகமலர்ந்து, 'ஐயனே, நீ எத்தொழிலில் வல்லவன்; உன் பெயர் யாது' என்றான். 27

நளனது விடை

361. அன்னம் மிதிப்ப அலர்வழியும் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்கும் திருநாடர் - மன்ன
மடைத்தொழிலும் தேர்த்தொழிலும் வல்லென்யான் என்றான்
கொடைத் தொழிலின் மிக்கான் குறித்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கொடைத்தொழிலின் மிக்கான் - வாரி வழங்கும் தொழிலில் மேம்பட்ட நளன், அன்னம் மிதிப்ப அலர்வழியும் - அன்னப் பறவையால் மிதிபட்டு மலரினின்றும் வழியும், தேறல் போய்ச் செந்நெல் விளைக்கும் திருநாடர் மன்ன - தேன் நெல்வயல்களில் கலக்கும் வளநாட்டு மன்னனே, மடைத்தொழிலும் தேர்த் தொழிலும் வல்லன் யான் என்றான் குறித்து - சமையல் கலையிலும் தேரோட்டுவதிலும் யான் வல்லவன் என்றான் நளன்.

பொழிப்புரை:

வாரி வழங்குவதில் வல்லவனானநளன், 'தாமரை மலரிலிருந்து வழிந்த தேன் நெல்வயலில் கலக்கும் நாட்டை ஆளும் மன்னனே, யான் சமையல் கலையிலும் தேரோட்டும் கலையிலும் வல்லவன்' என்று கூறினான். 28

தமயந்தி நளனைத் தேடல்

362. என்னை இருங்கானில் நீத்த இகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை - மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக்(கு) இந்த
உரைபகர்வ தானாள் உணர்ந்து.

பதவுரை:

தண்கோதை - தமயந்தி, மின்னும் புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக்கு - மின்னலைப் போல் ஒளிவிடும் வீமராசன் புரோகிதனிடம், என்னை இருங்கானில் நீத்த - என்னை அடர் காட்டில் பிரிந்த, இகல்வேந்தன் தன்னை நீ நாடுகென - வெற்றி வேந்தன் நளனை நீதேடுக என, இந்த உரைபகர்வதானானள் உணர்ந்து - இந்தச் செய்தியைச் சொன்னாள் தெளிந்து.

பொழிப்புரை:

வீமராசனின் புரோகிதனிடம் தமயந்தி, ' அடர்ந்த காட்டில் என்னை விட்டுப் பிரிந்த நளமன்னனை நீ தேடிக் காண்க' என்று தெளிவுடன் உரைத்தாள். 29

யோசனை

363. கார்இருளில் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலில் நீத்தல் துணிவன்றோ - தேர்வேந்தற்(கு)
என்(று) அறைந்தால் தேர்நின்(று) எதிர்மாற்றம் தந்தாரைச்
சென்(று) அறிந்து வாஎன்றாள் தேர்ந்து.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கார்இருளில் பாழ்மண்டபத்தே - செறிந்த இருட்டில் பாழான ஒரு மண்டபத்தில், காதலியைச் சோர்துயிலில் நீத்தல் - மனைவியை உறங்கும்போது கைவிடல், துணிவன்றோ தேர்வேந்தற்கு - அரசனுக்கு ஞாயமோ, என்று அறைந்தால் - என்று சொல்லும் போது, நேர்நின்று எதிர்மாற்றம் தந்தாரை - எதிரே வந்து விடை சொன்னவரை, சென்று அறிந்துவா - தேடிக் கண்டுபிடித்து வருக, என்றாள் தேர்ந்து - என்று தெளிவாகச் சொன்னாள் தமயந்தி.

பொழிப்புரை:

'கொடிய இருளில் பாழடைந்த மண்டபத்தில் மனைவி தூங்கும்போது பிரிதல் அரசனுக்கு அழகா என நீ கேட்கும் கேள்விக்கு முன் வந்து பதில் சொல்பவரை அறிந்து வா' எனத் தமயந்தி புரோகிதனுக்கு யோசனை கூறினாள். 30

புரோகிதன் அயோத்தியில்

364. மின்ஆடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்நாடும் கானகமும் நாடினான் - மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர்.

பதவுரை:

மின் ஆடு மால்வரையும் வேலையும் - மின்னலைக் காட்டும் மேகம் சூழ்ந்த மலையும் கடலும், வேலைசூர் நன்நாடும் கானகமும் - கடல்சூழ்ந்த நாட்டிலும் காட்டிலும், நாடினான் - (புரோகிதன் நளனை) தேடினான், மன்னு கடந்தாழ் களியானைக் காவலனை - மதம்கொண்ட யானைப் படையை உடைய அரசனை, அயோத்திநகர் தேடி அடைந்தான் - அயோத்தியில் சென்று கண்டான்.

பொழிப்புரை:

மேகம் சூழ்ந்த மலையும் கடலும் கடல் சூழ்ந்த நாட்டிலும் காட்டிலும் புரோகிதன் நளனைத் தேடிஅலைந்தான். மதங்கொண்ட யானைப் படையை உடைய அயோத்தி மன்னனைச் சென்று கண்டான்கடைசியில். 31

புரோகிதன் வினா

365. கானகத்துக் காதலியைக் கார்இருளில் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ - தான்என்று

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சாற்றினான் அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர்.

பதவுரை:

கானகத்துக் காதலியைக் கார்இருளில் - காட்டில் மனையாளைக் கும்மிருட்டில், கைவிட்டுப் போனதூஉம் வேந்தற்குப் போதுமோ தான் - பிரிந்து சென்றது அரசனுக்குப் பொருத்தமோ, என்று சாற்றினான் - என்று கேட்டான் புரோகிதன், அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில் ஏற்றினான் - புரோகிதன் சொன்னதை நளன் கேட்டான், எதிர் வந்தான் - அவன் எதிரே வந்தான்.

பொழிப்புரை:

காட்டில் நடுஇரவில் மனையாளைக் கைவிட்டது அரசனுக்குப் பொருந்துமா எனப் புரோகிதன் கேட்டான். புரோகிதன் சொன்னதைச் செவிமடுத்த நளன் அவன் எதிரில் வந்தான். *32*

நளன் பதில்

366\. ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண் - தண்தரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தான் என்(று) ஐயுறேல் நீ.

பதவுரை:

ஒன்தொடி தன்னை உறக்கத் தே நீத்த தூஉம் - வளையல் அணிந்த தமயந்தியை உறக்கத்தில் கைவிட்டமை, பண்டை விதியின் பயனே காண் - முன்செய்த ஊழ்வினையின் பயனேகாண், தண்தரளப் பூத்தாம வெண்குடையான் - குளிர்ந்த முத்துமாலை அணிந்த வெண்கொற்றக் குடை தாங்கிய வீமராசனின், பொன்மகளை வெவ்வனத்தே - மகளாம் தமயந்தியைக் காட்டில், நீத்தான் என்று ஐயுறேல் நீ - பிரிந்தான் என நீ ஐயங்கொள்ளாதே.

பொழிப்புரை:

தமயந்தியை உறக்கத்தில் வைவிட்டமைக்குக் காரணம் விதியே ஆகும். வீமராசன் மகளைக் காட்டில் வேண்டுமென்றே கைவிட்டான் என நீ ஐயம் கொள்ளாதே' என்று நளன் உரைத்தான். *33*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமயந்தி கேட்டல்

367 எங்கண் உறைந்தனைகொல் எத்திசைபோய் நாடினைகொல்
கங்கைவள நாட்டார்தம் காவலனை - அங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்(று) என்றாள் கண்ணீர்
அலைப்பட்ட கொங்கையாள் ஆங்கு.

பதவுரை:

ஆங்கு கண்ணீர் அலைப்பட்ட கொங்கையாள் - அவ்விடத்தில் கண்ணீர் மார்பிலே வழிய நின்ற தமயந்தி, எங்கண் உறைந்தனைகொல் - (புரோகிதனிடம்) நீ எங்கெல்லாம் தங்கினாய், எத்திசைபோய் நாடினைகொல் - எந்த எந்தத் திசைகளில் சென்று தேடினாய், கங்கைவள நாட்டார்தம் காவலனை - கங்கை பாயும் வளநாடனாகிய நளன், அங்குத் தலைப்பட்ட வாறுண்டோ - அவ்விடங்களில் காணப்பட்டது உண்டோ, சாற்று என்றாள் - சொல் என்றாள்.

பொழிப்புரை:

மார்பில் கண்ணீர் வழிய நின்ற தமயந்தி புரோகிதனிடம், 'நீ எங்கெல்லாம் தங்கினாய்? எத்திசைகளில் அவனைத் தேடினாய்? தேடிய இடங்களில் கங்கை பாயும் வளநாடன் நளனைக் கண்டதுண்டோ? சொல்லுக' என்றாள். 34

புரோகிதன் கூறல்

368 வாக்கினான் மன்னவனை ஒப்பான் மறித் தொருகால்
ஆக்கையே நோக்கின் அவன் அல்லன் - பூக்கமழும்
கூந்தலாய் மற்றக் குலப்பாகன் என்(று) உரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து.

பதவுரை:

ஏந்துநூல் மார்பன் - பூணூல் அணிந்த புரோகிதன், பூக்கமழும் கூந்தலாய் - மலர் மணம் கமழும் கூந்தலைப் பெற்ற தமயந்தியே, மற்று அக்குலப் பாகன் - (அயோத்தியில்) நான் கண்ட உயர்குடியினன், வாக்கினால் மன்னவனை ஒப்பான் - பேச்சால் நளனைப் போல இருக்கிறான், மறித்து ஒருகால் ஆக்கையே நோக்கின் அவன் அல்லன் - அவன் உடலைப் பார்த்தால் நளனாகத் தெரிய வில்லை, என்று எடுத்து உரைத்தான் - என்று விளக்கமாகச் சொன்னான்.

பொழிப்புரை:

அந்தணன் தமயந்தியிடம், 'அயோத்தியில் நான் கண்ட உயர் குடியினனின் பேச்சைப் பார்த்தால் நளன்தான்; உடலைப் பார்த்தால் நளனாக நம்பமுடியவில்லை' என்றான் 35

In Public domain Digitization Muthulakshmi Research Academy

மீண்டும் சுயம்வரம்

369. மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாள்என்(று) அந்தணநீ போயுரைத்தால் - நீண்ட
கொடைவேந்தற்(கு) இத்தூரம் தேர்க்கோலம் கொள்வான்
படைவேந்தன் என்றாள் பரிந்து.

பதவுரை:

அந்தணநீ - அந்தணனேநீ, மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை - மீண்டும் ஒரு சுயம்வரத்திற்குத் தமயந்தி, பூண் டாள் என்று போயுரைத்தால் - ஏற்பாடு செய்கிறாள் என்று போய் உரைத்தாய் ஆனால், நீண்ட கொடைவேந்தற்கு - கொடைத் தன்மை நிரம்பிய இருதுபன்னனுக்கு, படைவேந்தன் - நளன், தேர்க்கோலம் கொள்வான் - தேரோட்டியாக (நம் நகர்) வரு வான், என்றாள் பரிந்து - என்று பரிவோடு தமயந்தி கூறினாள்.

பொழிப்புரை:

அந்தணனே, நீ சென்று தமயந்தி மீண்டும் ஓர் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்கிறாள் என்று அயோத்தி நகரில் அறிவிப்பாயாக. அப்போது அந்நகர் வேந்தனுக்குத் தேரோட்டியாக நளன்நம் நகர் வருவான் என்று தமயந்தி அந்தணனிடம் அன்போடு கூறினாள். *36*

நாளையே சுயம்வரம்

370. எங்கோன் மகளுக்(கு) இரண்டாம் சுயம்வரமென்(று)
அங்கோர் முரசம் அறைவித்தான் - செங்கோலாய்
அந்நாளும் நாளை அளவென்றான் அந்தணன்போய்த்
தென்ஆளும் தாரானைச் சேர்ந்து.

பதவுரை:

அந்தணன் போய்த்தென் ஆளும் தாரானைச் சேர்ந்து - புரோகிதன் அழகு நிரம்பிய மாலை அணிந்த இருது பன்னனை அடைந்து, செங்கோலாய் - செங்கோலனே, எங்கோன் மகளுக்கு - எம்அரசன் வீமராசன் மகளுக்கு, இரண்டாம் சுயம்வரமென்று - மறுமுறையும் சுயம்வரம் நிகழ்த்துவதாக, அங்கோர் முரசம் அறைவித்தான் - நாடெங்கும் முரசு கொட்டி அறிவித்துள்ளான், அந்நாளும் நாளை அளவு என்றான் - சுயம்வர நாளும் நாளைக்கே என்றான்.

பொழிப்புரை:

புரோகிதன் இருதுபன்னனை அடைந்து, 'செங்கோல் வேந்தே, எம் அரசன் வீமராசன் மகளுக்கு இரண்டாம்

 In Public domain. Digitization Muthamizh Research Academy

சுயம்வரம் நடத்துவதாகப் பறை அறிவித்துள்ளான். அதுவும் நாளைக்கே நடைபெறவுள்ளது' எனக் கூறினான். 37

இருதுபன்னன் கூற்று

371. வேத மொழிவாணன் மீண்டும் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்தன் காதலியென்(று) - ஓதினான்
என்செய்கோ மற்(று) இதனுக்(கு) என்றான் இகல்சீறும்
மின் செய்த வேலான் விரைந்து.

பதவுரை:

இகல்சீறும் மின்செய்த வேலான் - பகைவரைச் சீறும் வேல்படை தாங்கிய இருதுபன்னன், வீமன்தன் காதலி - வீமனின் மகளாகிய தமயந்தி, மீண்டும் சுயம்வரத்தைக் காதலித்தாள் என்று - மறுமுறையும் சுயம்வரத்தை விரும்புகிறாள் என்று, வேதமொழிவாணன் ஓதினான் - வேதம் கற்றவன் உரைத்தான், மற்று இதனுக்கு என் செய்கோ என்றான் - இதற்கு உடனடியாகச் செய்யக்கூடியது என்ன எனக் கேட்டான்.

பொழிப்புரை:

வேல்படை உடைய இருதுபன்னன் 'வீமன் மகள் தமயந்தி இரண்டாம் சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்துள்ளதாகக் கூறினான் மறையவன். இதற்கு என் செய்வது' என அவையோரிடம் வினவினான். 38

வாருகன் கூற்று

372. குறையாத கற்பினாள் கொண்டானுக்(கு) அல்லால்
இறவாத ஏந்திழையாள் இன்று - பறிபீறி
நெல்லில் பருவரால் ஓடும் நெடுநாடா
சொல்லப் படுமோஇச் சொல்.

பதவுரை:

பறிபீறி நெல்லில் பருவரால் ஓடும் நெடுநாடா - (வாகுகன் அரசனைநோக்கி) பறி என்னும் மீன்பிடிக்கும் கருவியிலிருந்து தப்பி வரால் பாயும் வயல்களை உடைய நாட்டு வேந்தே, குறையாத கற்பினாள் - குறையற்ற கற்பினை உடையவளும், கொண்டானுக்கு அல்லால் இறவாத ஏந்திழையாள் - கணவனுக்கே உயிரையும் கொடுக்கும் உயர்பெண்ணாகிய தமயந்தி, இன்று இச்சொல் சொல்லப் படுமோ - இப்போது இத்தகைய பேச்சைப் பேசல் தகுமோ? தகுதியாகாது என்றான்.

பொழிப்புரை:

பறிஎனும் மீன்பிடி கருவியிலிருந்து தப்பியோடும் வரால் மீன்கள் வயலில் பாயும் வளநாட்டிற்குத் தலைவா! தமயந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறையில்லாக் கற்பினை உடையவள்; தன்கொழுநனுக்காக உயிரையே கொடுக்கும் நீர்மையள்; அவள் இத்தகைய பேச்சைப் பேசுதல் தகுமோ? தகாது' என வாகுகனாகிய நளன். அயோத்தி அரசனிடம் கூறினான் 39

இருதுபன்னனின் பேராசை

373. என்மேல் எறிகின்ற மாலை எழில்நளன்தன்
முன்னே விழுந்ததுகாண் முன்னாளின் - அன்னதற்குக்
காரணந்தான் ஈதன்றோ என்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தான் அன்னான் மதித்து.

பதவுரை:

கடாஞ் சொரியும் வாரணந்தான் அன்னான் - மதம் பொழியும் ஆண்யானையை ஒத்த இருதுபன்னன், முன்நாளில் தமயந்தியின் முதல் சுயம்வர நாளில், என் மேல் எறிகின்ற மாலை - அவள் என் கழுத்துக்கு விசிய மாலை, எழில் நளன்தன் முன்னே விழுந்தது காண் - (தவறிப்போய்) அழகுடைய நளனின் கழுத்தில் விழுந்தது, வாகுகனே நீ அறிக, அன்னதற்கு - அப்படித் தவறு நேர்ந்தமையால், ஈதன்றோ காரணம் - இப்போது இரண்டாம் சுயம்வரம் வரக்காரணமாயிற்று, என்றான் - என்று கூறினான்.

பொழிப்புரை:

மதயானையை ஒத்த இருதுபன்னன் வாகுகனிடம், 'தேரோட்டியே, தமயந்தியின் முதல் சுயம்வரத்தின்போது அவள் என் மீது போட்ட மணமாலை தவறிபோய் நளன் கழுத்தில் விழுந்தது. அதன் காரணமாக இப்போது அவளுக்கு இரண்டாம் சுயம்வரம் வரலாயிற்று' என்றான். 40

கலங்கினான் நளன்

374. முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண இசைந்ததோ - தன்மரபுக்(கு)
ஒவ்வாத வார்த்தை உலகத்(து) உரைப்பட்ட(து)
எவ்வாறு கொல்லோ இது.

பதவுரை:

முன்னை வினையான் முடிந்ததோ - ஊழ்வினையின் காரணமாக (இரண்டாம் சுயம்வரம்) ஏற்பாடு ஆயிற்றோ, மொய் குழலாள் என்னைத்தான் காண இசைந்ததோ - தமயந்தி என்னை அடையாளம்காண இம்முயற்சி மேற்கொண்டாளோ, தன் மரபுக்கு ஒவ்வாத வார்த்தை - அவள் குலத்திற்குப் பொருந்தா (இரண்டாம் சுயம்வரம்) வார்த்தையை, உலகத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

உரைப்பட்டது இது எவ்வாறு கொல்லோ? - உலகத்தில் சொல்லப்பட்டு விட்டதே காரணம் அறியேனே? என நளன் தனக்குள் வருந்தினான்.

பொழிப்புரை:

தமயந்தி தன்குலமரபுக்குப் பொருந்தாத வார்த்தை (இரண்டாம் சுயம்வரம்) உலகில் சொல்லப்பட்டு விட்டதே, இது நடந்தது ஊழ்வினையின் காரணத்தாலா? என்னை அவள் அடையாளம் காணவேண்டும் எனும் வேட்கையாலா? அறியேனே' என நளன் வருந்தினான். 41

வாகுகன் கடமை

375. காவலனுக்(கு) ஏவல் கடன்பூண்டேன் மற்றவன்தன்
ஏவல் முடிப்பேன் இனியென்று - மாவைக்
குலத்தேரில் பூட்டினான் கோதையர்தம் கொங்கை
மலர்த்தேன் துளிக்குந்தார் மன்.

பதவுரை:

கோதையர்தம் கொங்கை - மகளிரின் மார்பகங்களில், மலர்த்தேன் துளிக்குந்தார் மன் - தன் மலர்மாலைகளிலிருந்து தேனொழுகச் செய்யும் நளவேந்தன், காவலனுக்கு ஏவல் கடன் பூண்டேன் - இருதுபன்னனுக்கு ஏவல் செய்தல் என் கடமை, மற்றவன் தன் ஏவல் முடிப்பேன் - (அவன் விரும்பியபடி) அவன் சொன்னதை முடிப்பேன், இனிஎன்று மாவைக் குலத்தேரில் பூட்டினான் - இப்போதே எனக் கூறிக் குதிரைகளைத் தேரில் பூட்டினான்.

பொழிப்புரை:

வாகுகனாகிய நளன் 'நான் இருதுபன்னனுக்கு ஏவல் செய்பவன; ஆதலால் அவன் விரும்பிய பணியை உடன் முடிப்பேன்' எனத் தனக்குள் கூறிக் கொண்டு குதிரைகளைத் தேரில் பூட்டிப் புறப்பட ஆயத்தம் ஆனான். 42

தனியாழித் தேர்

376. ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் - மற்(று) இதற்கே
போந்(து)ஏறு என்(று)உரைத்தான் பொம்மென்(று) அளிமுரலும்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய்.

பதவுரை:

பொம் என்று அளி முரலும் - பொம் எனும் ஓசையோடு வண்டு ஒலிக்கின்ற, தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய் - தேன் வடியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலை அணிந்த நளன், ஒற்றைத் தனியாழித் தேரென்ன - ஒற்றைச்சக் கரத்தோடு மிகுவேகமாக ஓடும் சூரியனின் தேரைப்போல, ஓடுவதோர் கொற்ற நெடுந்தேர் - விரைந்து செல்லும் குதிரை பூட்டிய தேரை, கொடுவந்தேன் - கொண்டு வந்துள்ளேன், மற்று இதற்கே போந்து ஏறுக, என்று உரைத்தான் - என்று (இருதுபன்னனிடம்) உரைத்தான்.

பொழிப்புரை:

மாலை அணிந்த வாகுகன் ஆகிய நளன் சூரியனின் விரைந்து செல்லும் ஓராழித் தேரைப் போலவே விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரைத் தயார்நிலையில் வைத்துள்ளேன். நீவிரைந்து தேரில் ஏறுக' என மன்னனிடம் கூறினான். 43

தேரின் விரைவு

377. முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினும்கடுகச் சென்றதே - சந்தவிரைத்
தார்குன்றா மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றான் ஊர்கின்ற தேர்.

பதவுரை:

சந்தவிரைத் தார்குன்றா மேல்லோதி - சந்தன மணம் கமழும் மாலை அணிந்த தமயந்தியின், தன்செயலைத் தன் மனத்தே தேர்கின்றான் - இரண்டாம் சுயம்வரச் செயலைத் தன்மனத்தில் எண்ணி வருந்தும் நளன், ஊர்கின்ற தேர் - செலுத்துகின்ற தேரானது, முந்தை வினைகுறுக - பழைய வினையானது நெருங்க, மயல்கொண்டான் சிந்தையினும் - தமயந்தி மீது மோகம் கொண்ட இருது பன்னன் சிந்தை யைவிடவேகமாக, கடுகச் சென்றதே - விரைந்து சென்றது.

பொழிப்புரை:

தமயந்தியின் இரண்டாம் சுயம்வர எண்ணத்தைக் கேட்டு வாகுகன் வருந்தினான். வினைப் பயனால் இருதுபன்னன் தமயந்தி மீது மோகம் கொண்டான். அவன் சிந்தையை விட வேகமாக நளன் அவன்தேரை ஓட்டினான். 44

மேலாடையும் பத்துக் காதமும்

378. மேலாடை வீழ்ந்த(து) எடுஎன்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே - தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

தோலாமை மேல்கொண்டான் ஏறிவர - தோல்வியே அறியாத அயோத்தி மன்னன் தேரில் வரவும், வெம்மைக் கலிச்சூதின் - கொடியவனான கலியின் சூதாட்டத்தில், மால் கொண்டான் - மயங்கிய நளனால் கோல்கொண்டமா - முட்கோலால் செலுத்தப்படும் குதிரைகள், மேலாடை வீழ்ந்துது எடுஎன்றான் - தோளில் போடும் துண்டு நழுவியது எடு என்று அரசன் சொல்லவும், அவ்வளவில் நாலாறு காதம் நடந்ததே - உடனே பத்துக்காதம் கடந்து விட்டனவே என்றான் வாகுகன்.

பொழிப்புரை:

அயோத்தி மன்னன் தேரில் வர, கலியால் சூதாட்டத்தில் மயங்கிய நளன் தேரைச் செலுத்தினான். அரசன் தோள் துண்டு நழுவியது எடு என்றான் நளனிடம். நளன் உடனே பத்துக் காதம் கடந்துவிட்டோமே' என அவசரமாகக்கூறினான். 45

தான்றிமரக் காய்கள்

379. இத்தாழ் பணையில் இருந்தான்றிக் காய் எண்ணின்
பத்தா யிரங்கோடி பார்என்ன - உய்த்(து) அதன் பால்
தேர்நிறுத்தி எண்ணினான் தேவர் சவைநடுவே
தார்நிறுத்தும் தோள்வேந்தன் தான்.

பதவுரை:

தேவர் சவைநடுவே - தேவர்களும் இருந்த சுயம்வர அவையில், தார் நிறுத்தும் தோள்வேந்தன் தான் - தமயந்தியின் மணமாலையை ஏற்ற நளனிடம், இத்தாழ் பணையில் இருந்தான்றிக்காய் - (இருதுபன்னன்) இத்தாழ்ந்த தான்றிமரக் கிளையில் உள்ள காய்களை, எண்ணின் பத்தாயிரங் கோடி பார் என்ன - எண்ணிப் பார்த்தால் பத்தாயிரம் கோடி இருக்கும் எண்ணிப்பார் எனவும், உய்த்து அதன் பால் தேர் நிறுத்தி - நளனும் மரத்தடியில் தேரைநிறுத்தி, எண்ணினான் - காய்களை எண்ண ஆரம்பித்தான்.

பொழிப்புரை:

தேவர்களும் இருந்த அவையில் தமயந்தியின் மணமாலை ஏற்றவன் நளன். அவனிடம் அயோத்தி மன்னன், 'இத்தான்றி மரக் கிளையில் உள்ள காய்கள் பத்தாயிரம் கோடி இருக்கும். எண்ணிப் பார்' என்றான். 46

ஒருவருக்கொருவர் உதவலாமா?

380. ஏர்அடிப்பார் கோல்எடுப்ப இன்தேன்தொடை பீறிக்
கார்அடுத்த சோலைக் கடல்நாடன் - தேர்அடுத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாத்தொழிலும் இத்தொழிலும் மாற்றுதியோ என்(று)
உரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து.

பதவுரை:

ஏர்அடிப்பார் கோல்எடுப்ப - ஏரோட்டும் உழவர்கள் தம் கையிலுள்ள கோலை உயர்த்துகையில், இன்தேன் தொடைபீறி - தேனடையில் பட்டுத் தேன் வழியும், கார் அடுத்த சோலைக் கடல்நாடன் - மேகம் சேர்ந்த சோலைகள் நிறைந்த நாட்டு அரசன் இருதுபன்னன், தேர்த் தொழிலின் மிக்கானைத் தேர்ந்து - தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து - தேர்த்தொழிலில் வல்ல நளனை மதித்து, தேர் அடுத்த மாத்தொழிலும் - தேரோட்டும் பெரிய தொழிலையும், இத்தொழிலும் - மரக்காய்களை எண்ணும் தொழிலையும், மாற்றுதியோ - மாற்றிக் கொள்ளலாமா, என்று உரைத்தான் - என்று கேட்டான்.

பொழிப்புரை:

வளநாட்டுக்குரிய வனான இருதுபன்னன் நளனிடம், 'நீ தேரோட்டுவதில் வல்லவன். நான் மரக்காய்களை எண்ணுவதில் வல்லவன். நாம் இருவரும் தொழிலை மாற்றிக்கொள்ளலாமா' என்றான். 47

கலி கழிந்தான்!

381. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட்(டு) எங்கோமான்
தண்தார் புனைசந் திரன்சுவர்க்கி - கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.

பதவுரை:

காவலன்பால் நின்ற கலி - (இருது பன்னன் அவன் வித்தையை நளனுக்குக் கற்றுக் கொடுத்துத் தான் அவன் வித்தையைக் கற்றபின்) நளனைப் பிடித்திருந்த கலி எனும் துன்பம், வண்டார் வளவயல் சூழ் மள்ளுவநாட்டு - வண்டுகள் ஒலிக்கும் வயல்களும் உழவர்களும் நிறைந்த நாட்டு, எங்கோமான் - எம் மன்னன், தண்தார் புனை சந்திரன் சுவர்க்கி - குளிர்ந்த மாலை புனைந்த சந்திரன் சுவர்க்கியால், கொண்டாடும் பாவலன் பால் - போற்றப்படும் புலவனிடத்துள்ள, பசிபோல நீங்கிற்றே - பசி ஒழிந்தது போல ஒழிந்தது.

பொழிப்புரை:

வளநாட்டை ஆளும் சந்திரன் சுவர்க்கி என்னும் மன்னனை அடைந்த பாலர்களின் பசி நீங்குவது போல நளனைப் பிடித்திருந்த கலியும் நீங்கிற்று. 48

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீமன் நகர் அடைதல்

382. ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு - வீமன்தன்
பொன்னகரி சென்(று) அடைந்தான் போர்வேட்(டு)
எழுங்கூற்றம்
அன்னகரி ஒன்றுடையான் ஆங்கு.

பதவுரை:

போர்வேட்டு எழுங்கூற்றம் அன்ன - போர் தினவெடுத்து எழும் இயமன் போல, கரிஒன்றுடையான் - யானையை உடைய இருது பன்னன், ஆமைமுதுகில் அலவன் துயில்கொள்ளும் - ஆமையின் முதுகில் நண்டு உறங்கும், காமர் நெடுநாடு கைவிட்டு - அழகிய தன் நாட்டை விட்டு, வீமன்தன் பொன்னகரி சென்று ஆங்கு அடைந்தான் - வீமனின் நகர் குண்டினபுரம் சென்று சேர்ந்தான்.

பொழிப்புரை:

கூற்றுவனை ஒத்த பட்டத்து யானை உடைய இருதுபன்னன், ஆமையின் முதுகில் நண்டு தூங்கும் தன் வளநாட்டிலிருந்து நீங்கி வீமனின் நகராகிய குண்டினபுரத்தை அடைந்தான். 49

இருதுபன்னன் செல்லுதல்

383. வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயில்
முற்றத் திருத்தி முறைசெய்யும் - கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து.

பதவுரை:

மன் விரவுதாரான் - வெற்றிச் சிறப்புடைய மாலை அணிந்த இருது பன்னன், வெற்றித் தனித்தேரை - பெருமை உடைய தனது தேரை, வீமன் பெருங்கோயில் முற்றத்து இருத்தி - வீமனின் அரண்மனை முற்றத்தில் நிறுத்திவிட்டு, முறை செய்யும் கொற்றவற்கு - செங்கோலன் வீமனுக்கு, தன்வரவு கூறப்பணித்து - தனது வருகையைக் கூறுமாறு (ஏவலர்க்குக்) கட்டளையிட்டு, மகிழ்ந்து தனிப்புக்கான் - மகிழ்ச்சி யோடுதனியே புகுந்தான்.

பொழிப்புரை:

இருதுபன்னன் தான் ஏறிவந்த தேரை அரண்மனை வாயிலில் நிறுத்திவிட்டுச் செங்கோல் அரசனுக்குத் தன் வரவைக் கூறச் சொல்லிவிட்டுத் தனியே அரண்மனைக்குள் புகுந்தான். 50

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

வரக் காரணம் என்ன?

384. கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு - பின்னையும்போய்
நெய்தற்(கு) அவாவும் நெடுநாட நீ என்பால்
எய்தற்(கு) அவாவியவா(று) என்?

பதவுரை:

கமலத்தின் கன்னி நறுந்தேறல் மாந்தி - தாமரை மலரில் புதிய தேனைக் குடித்து, மன்னித் துயின்ற வரிவண்டு - அதிலேயே தூங்கிய வண்டு, பின்னையும்போய் நெய்தற்கு அவாவும் நெடுநாட - மறுபடியும் கருங்குவளை மலர்த்தேனை விரும்பும் நாட்டுக்குத் தலைவனே, நீ என்பால் எய்தற்கு அவாவியவாறு என்? - நீ என்னிடம் வந்ததற்குக் காரணம் என்ன என்று வீமன் கேட்டான் இருதுபன்னனிடம்.

பொழிப்புரை:

வீமன் இருதுபன்னனிடம் 'தாமரை மலரில் தேனைக் குடித்துத் துயின்ற வண்டு மீண்டும் குவளை மலரின் தேனுக்கு ஆசைப்படும் நாட்டுக்குத் தலைவா, நீ என்னடம் வரக் காரணம் யாது? என்றான். 51

இருதுபன்னன் மறுமொழி

385. இன்றுன்னைக் காண்பதோர் ஆதரவால் யான்இங்ஙன்
மன்றல் மலர்த்தாராய் வந்தடைந்தேன் - என்றான்
ஒளியார்வேல் கண்ணாள்மேல் உள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்து சேய்.

பதவுரை:

ஒளியார்வேல் கண்ணாள்மேல் - ஒளிபொருந்திய வேல் கண்ணாள் தமயந்திமேல், உள்ளம் துரப்ப - நெஞ்சம் சென்றமையால், தெளியாது முன்போந்த சேய் - ஆராய்ச்சி இல்லால் சென்ற இருதுபன்னன், மன்றல் மலர்த்தாராய் - (வீமனிடம்) மணமுள்ள மாலை சூடியவனே, இன்றுன்னைக் காண்பதோர் ஆதரவால் - இன்று உன்னைக் காணும் ஆவலால், யான் இங்ஙன் வந்தடைந்தேன் - நான் உன்னிடம் வந்தேன் என்றான்.

பொழிப்புரை:

தமயந்திமேல் ஆசை கொண்டு தெளிவு இல்லாமல் வீமன் நகர் அடைந்த இருதுபன்னன் வீமனிடம், 'அரசே, உன்னைக் காணும் அவாவால் உன்னை நாடி வந்தேன்' என்றான். 52

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமையல் அறைக்குள்...

386. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட்(டு) அவைஆற்றிக்
கோதில் அடிசில் குறைமுடிப்பான் - மேதிக்
கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்
மடைவாயில் புக்கான் மதித்து.

பதவுரை:

மேதி கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கும் - எருமைகளின் வாயில் தின்ற குவளை அரும்புகள் மலரும், நாடன் - வளநாடனாகிய நளன், ஆதி நெடுந்தேர்ப் பரிவிட்டு - அரசன் சென்ற தேரிலிருந்து குதிரைகளை அவிழ்த்து, அவை ஆற்றி - இளைப்பாற்றிய பிறகு, கோதில் அடிசில் குறைமுடிப்பான் - குறையற்ற உணவைச் சமைப்பதற்கு, மடைவாயில் மதித்து புக்கான் - சமையல் அறைக்குள் சமைக்கும் நினைவுடன் புகுந்தான்.

பொழிப்புரை:

வளமான நாட்டுக்கு அரசனாகிய நளன் இருதுபன்னன் தேரிலிருந்து இறங்கிய பிறகு குதிரைகளை அவிழ்த்து அவற்றை இளைப்பாற்றினான்; உணவைச் சமைக்கும் பொருட்டுச் சமையல் அறைக்குள் புகுந்தான். 53

நிரப்பாமல் நிரம்பின

387. ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல் - யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வாப்பாகன் புக்க மனை.

பதவுரை:

பொற்றேர் வரப்பாகன் புக்க மனை - தேரோட்டும் தொழில் வல்ல வாகுகன் புகுந்த சமையல் அறை, ஆதி மறைநூல் அனைத்தும் - அறநெறி கூறும் அறநூல்கள் அனைத்தையும், தெரிந்துணர்ந்த நீதி நெறியாளர் நெஞ்சம் போல் - கற்றுத் தெளிந்த சான்றோர் நெஞ்சம் நற்பண்புகளால் நிரம்பியிருப்பது போல, யாதும் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே - சமையலுக்கு வேண்டும் பொருள் யாதும் இல்லாமலேயே சோறு, கறிவகைகள் நிரம்பியிருந்தன.

பொழிப்புரை:

அறநூல்களைக் கற்ற ஆண்றோர்கள் நெஞ்சம் அறப்பண்புகளால் நிரம்பியிருக்கும். அதுபோல வாகுகன்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

நழைந்த சமையல் அறையில் எப்பொருளும் (நீர், விறகு, நெருப்பு) இல்லாமலேயே சோறு, கறிவகைகள் நிரம்பியிருந்தன. 54

தமயந்தீ சேடியை அனுப்பல்

388. இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த
கொடைத்தொழிலான் என்றயிர்த்த கோமான் -
மடைத்தொழில்கள்
செய்கின்ற எல்லாம் தெரிந்துணர்ந்து வாஎன்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து.

பதவுரை:

நைகின்ற நெஞ்சாள் - நோகின்ற நெஞ்சத்தை உடைய தமயந்தி (சேடியிடம்), இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் - பாலைவழியில் நள்ளிரவில் என்னை, நீத்த கொடைத் தொழிலான் - பிரிந்த நளன், என்று அயிர்த்த கோமான் - என்று ஐயப்படக் கூடிய ஒருவன், மடைத்தொழில்கள் செய்கின்ற எல்லாம் தெரிந்து உணர்ந்து - சமையல்வேலை செய்வதை ஆராய்ந்து அறிந்து, வா என்றாள் நயந்து - வருக என்றாள் அன்போடு.

பொழிப்புரை:

நெஞ்சம் நொந்த தமயந்தி சேடி ஒருத்தியிடம், பாலைவழியில் நள்ளிரவில் என் கணவன் பிரிந்தான்; அவன் என்ற ஐயப்படத் தக்க ஒருவன் சமையல் வேலை செய்வதைக் கண்டு ஆராய்ந்து வா' என்றாள். 55

பிள்ளைகளை அனுப்பினாள்!

389. கோதை நெடுவேல் குமரனையும் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப் -போத
விளையாட விட்(டு) அவன் மேற்செயல்நா(டு) என்றாள்
வளையாடும் கையாள் மதித்து.

பதவுரை:

வளையாடும் கையாள் மதித்து - வளையல் அணிந்த தமயந்தி எண்ணித் தெளிந்த பின், கோதை நெடுவேல் குமரனையும் தங்கையையும் - (தனது) மகனையும் மகளையும், ஆதி அரசன் அருகாக - வாகுகனாகிய நளனின் முன்பாக, போத விளையாட விட்டு - போய் விளையாடச் சொல்லிவிட்டு, அவன்மேற் செயல் நாடு என்றாள் - நளனின் செய்கைகளைத் தெரிந்து வா' என்று சேடியிடம் கூறினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வளையயலை அணிந்த தமயந்தி சேடிப் பெண்ணிடம், 'என் மகனையும் மகளையும் வாகுகன் அருகே விளையாட விடு. அப்போது வாகுகன் நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்து என்னிடம் வந்து சொல்' எனக் கட்டளையிட்டாள். 56

யார் மக்கள் நீங்கள் ?

390. மக்களைமுன் காணா மனம்நடுங்கா வெய்துயிராப்
புக்(கு)எடுத்து வீரப் புயத்தணையா - மக்காள் நீர்
என் மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்(று) உரைத்தான்
வன்மக் களியானை மன்.

பதவுரை:

வன்மக் களியானை மன் - மதம் கொண்ட யானைப் படை உடைய நளன், மக்களை முன் காணா - (தன்னருகில் விளையாடிய) பிள்ளைகளைக் கண்டு, மனம் நடுங்கா வெய்து உயிராப் - மனம் நடுங்கிப் பெருமூச்சு விட்டு, புக்கு எடுத்து வீரப் புயத்தணையா - அவர்களை வாரிஎடுத்துத் தோளில் அணைத்துக் கொண்டு, மக்காள்நீர் என் மக்கள் போல்கின்றீர் - பிள்ளைகளே நீங்கள் என் மக்களைப் போல உள்ளீர், யார் மக்கள் என்று உரைத்தான் - நீங்கள் யாருடைய பிள்ளைகள் என வினவினான்.

பொழிப்புரை:

மதங்கொண்ட யானையை உடைய வாகுகனாகிய நளன் தன் எதிரில் விளையாடிய குழந்தைகளைப் பார்த்து மனம் நடுங்கினான்; பெருமூச்சு விட்டான்; வாரி அணைத்தான். 'பிள்ளைகளே, என் பிள்ளைகளைப் போலவே இருக்கும் நீங்கள் யார்? என வினாவினான். 57

பிள்ளைகள் விடை

391. மன்னு நிடதத்தார் வாள்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட்(டு) அவன்ஏக - இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்(று) ஒருவன்
ஆள்கின்றான் என்றார் அழுது.

பதவுரை:

மன்னு நிடதத்தார் வாள்வேந்தன் - சிறப்புடைய நிடதநாட்டு மன்னன் நளனுடைய, மக்கள்யாம் - பிள்ளைகள் நாங்கள், அன்னைதனைக் கான் விட்டு அவன் ஏக - எங்கள் தாய் தமயந்தியைக் காட்டில் விட்டு அவன் பிரியவும், இந்நகர்க்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்கின்றோம் - நாங்கள் இந்நகரில் வாழ்கிறோம், எங்கள் வளநாடு மற்றுஒருவன் ஆள் நின்றான் - எங்கள் நாட்டை இன்னொருவன் (புட்கரன்) ஆள்கிறான், என்றார் அழுது - என்று அழுது கொண்டே நளன் மக்கள் கூறினர்.

பொழிப்புரை:

நளனின் மக்கள் அவனிடம், 'நாங்கள் நளமன்னனின் குழந்தைகள்; எங்கள் தந்தை எங்கள் தாயைக் காட்டில் தனியே விட்டுப் பிரிந்தான்; எங்கள் நாட்டை வேறு ஒருவன் ஆள்கிறான். ஆதலால் நாங்கள் இந்நகரில் வாழ்கிறோம்' என்றனர் அழுது கொண்டே. 58

கண்ணீர் வெள்ளம்

392. ஆங்கவர் சொன்ன உரைகேட்(டு) அழி(வு)எய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான் - பூங்காவில்
வள்ளம்போல் கோங்கு மலரும் திருநாடன்
வெள்ளம்போல் கண்ணீர் உகுத்து.

பதவுரை:

பூங்காவில் வள்ளம்போல் கோங்கு மலரும் திருநாடன் - பூங்காவில் கிண்ணம் போல் பூத்திருக்கும் கோங்க மலர்கள் நிறைந்த நாடனாகிய நளன், ஆங்குஅவர் சொன்ன உரைகேட்டு - பிள்ளைகள் சொன்ன செய்தி கேட்டு, அழிவு எய்தி - உடல் மிகவும் வாடி, வெள்ளம் போல் கண்ணீர் சிந்தி, நீங்கா உயிரோடு நின்றிட்டான் - தன் உடலை விட்டு உயிர் நீங்காதவனாய் நின்றான்.

பொழிப்புரை:

பூங்காவில் கிண்ணம்போல் கோங்கு மலர்கள் பூத்திருந்தன. அத்தகைய பூங்காக்கள் நிறைந்த நாடனாகிய நளன் மக்கள் சொன்னதைக் கேட்டான்; உடல் வாடினான்; வெள்ளம்போல் கண்ணீர் வடித்தான்; உடலை விட்டு நீங்கா உயிரோடு அசைவற்று நின்றான். 59

வாகுகன் வினவல்

393. உங்கள் அர(சு) ஒருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ - செங்கை
வளவரசே என்றுரைத்தான் மாதவத்தால் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

பதவுரை:

மாதவத்தால் பெற்ற இளவரசை நோக்கி - (நளன்) தவஞ்செய்து பெற்று எடுத்த இளவரசைப் பார்த்து, செங்கை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளவரசே, உங்கள் அரசு ஒருவன் ஆள - உங்களுக்குரிய நாட்டை இன்னொருவன் ஆளவும், நீர் ஓடிப் போய் இங்கண் உறைதல் இழுக்கன்றோ - நீங்கள் தப்பி ஓடி இன்னொரு நாட்டில் வாழ்வது இழுக்குத் தானே, என்று எடுத்து உரைத்தான் - என்று பெருங் குரலில் கூறினான்.

பொழிப்புரை:

தவஞ்செய்து பெற்ற தன் மகனைப் பார்த்து வாகுகன், 'இளவரசே உங்கள் நாட்டை ஒருவன் ஆளவும் நீவிர் இன்னொரு நாட்டில் வாழ்வது இழுக்கு இல்லையா?' என்று கேட்டான். 60

சிறுவன் சினந்து கூறல்

394. நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீஅல்லால்
அஞ்சாரோ மன்னர் அடுமடையா - எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

பதவுரை:

அடுமடையா - சமையல் செய்பவனே, எஞ்சாது தீமையே கொண்ட சிறுதொழிலாய் - சிறப்பற்ற சிறு தொழிலைச் செய்பவனே, நெஞ்சால் இம்மாற்றம் நினைந்து உரைக்க - நெஞ்சில் நினைத்து இந்தக் கீழ்மையான பேச்சைப் பேச, நீ அல்லால் மன்னர் அஞ்சாரோ - உன்னைத் தவிர அரசர்களும் அஞ்சுவர், எங்கோ மான் வாய்மையே கண்டாய் வலி - எம் தந்தை நளன் சொன்ன சொல்லைக் காப்பதையே வலிமையாகக் கொண்டவன்' என்றான் இளவரசன்.

பொழிப்புரை:

'சமையல் செய்பவனே, சிறு தொழில்களையே செய்பவனே, கீழ்மையான பேச்சைப்பேச உன்னைத்தவிர அரசரும் அஞ்சுவர்; எம் தந்தை வாய்மை பேசுவதையே வலிமையாக உடையவன்' என்றான் இளவரசன் இந்திரசேனன். 61

இளவரசன் கூற்று

395. எந்தை கழல்இணையின் எம்மருங்கும் காணலாம்
கந்து சுளியும் கடாக்களிற்றின் - வந்து
பணிமுடியில் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியில் தேய்ந்த வடு.

பதவுரை:

கந்து சுளியும் கடாக்களிற்றின் வந்து - கட்டுத்தறியை முறிக்கக்கூடிய ஆண்யானைமேல் வந்த, பணிமுடியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்காக்கும் பார்வேந்தர் - ஆதிசேடன் எனும் பாம்பு தன்தலையால் காக்கும் நாடுகளின் வேந்தர்கள், தங்கள் மணி முடியில் தேய்ந்த வடு - தங்கள் மணிமுடியால் (வணங்குவதால்) உண்டான தழும்பு, எந்தை கழல்இணையின் எம்மருங்கும் காணலாம் - எம் தந்தையின் காலடியெங்கும் காணலாம்' என்றான் இளவரசன்.

பொழிப்புரை:

சினங்கொண்ட யானைகள் மேலேறி ஆதிசேடன் தாங்கும் நாடுகளின் வேந்தர்கள் எம் நாடு வந்து தம்தலை முடியால் எந்தை காலடியில் வணங்குவர். அப்போது உண்டான தழும்பை எந்தை காலடியெங்கும் காணலாம்' என்றான் இளவரசன். *62*

மடையர் அறியார்

396. மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை அறியா(து) உரைசெய்த - என்னை
முனிந்(து)அருளல் என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்(து)உருகி நீர்வாரக் கண்.

பதவுரை:

கனிந்து உருகி நீர்வாரக்கண் - (வாகுகன்) தன் மனம் உருகிக் கண்ணில் நீர் வடிய, மன்னர் பெருமை மடையர் அறிவரோ - அரசர் தம்சிறப்பைச் சமையலர் அறிவாரோ?, உன்னை அறியாது உரைசெய்த - உங்களின் மரபின் பெருமை அறியாமல் பேசிய, என்னை முனிந்து அருளல் - என்னைச் சினவாது கருணை காட்டுக, என்று முடிசாய்த்து நின்றான் - என்று தலை சாய்த்து நின்றான்.

பொழிப்புரை:

வாகுகன் மனம் உருகினான் இளவரசன் கூறியதைக் கேட்டு; கண்ணீர் சோரிந்தான். 'இளவரசே, அரசர்தம் பெருமையைச் சமையல்காரன் அறிய முடியுமோ? உங்கள் பெருமை அறியாமல் பேசிய என்மீது சினம் கொள்ளாமல் அருள் காட்டுக' என்றான். *63*

அழுது விழுந்தாள்

397. கொற்றக் குமரனையும் கோதையையும் தான்கண்டு
மற்றவன்தான் ஆங்குரைத்த வாசகத்தை - முற்றும்
மொழிந்தார்அம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

கொற்றக் குமரனையும் கோதையையும் - (தனது) மகனையும் மகளையும், தான்கண்டு மற்றுஅவன்தான் ஆங்குரைத்த வாசகத்தை - வாகுகன் கண்டதையும் அவன் அவர்களோடு உரையாடியதையும், மொழிந்தார் - (சேடிப்பெண்கள் தமயந்தியிடம்) கூறினார்கள், அவள் அவற்றைக் கேட்ட போதே, அழுது அழிந்தாள் விழுந்தாள் - கதறி அழுது சோர்ந்து கீழே சாய்ந்தாள்.

பொழிப்புரை:

வாகுகன் இளவரசன் இளவரசி ஆகியோரைக் கண்டதையும் உரையாடியதையும் சேடிகள் தமயந்தியிடம் உரைத்தனர்; அவர்கள் உரைத்தவற்றைக் கேட்ட தமயந்தி கதறினாள்; உடல் சோர்ந்தாள்; தரையில் சாய்ந்தாள். *64*

உறுமாற்றம் நினைத்து அழுதாள்

398. கொங்கை அளைந்து குழல்திருத்திக் கோலஞ்செய்
அங்கை இரண்டும் அடுபுகையால் - இங்ஙன்
கருகியவோ என்(று) அழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேல் கண்ணாள் பதைத்து.

பதவுரை:

காதலனை - நளனது அழகை, முன்னாள் பருகியவேல் கண்ணாள் - அந்தநாளில் அனுபவித்த வேல்கண்ணாள் தமயந்தி, கொங்கை அளைந்து குழல் திருத்தி - எனது மார்பகங்களில் துழாவியும் கூந்தலைக் கோதியும், கோலஞ்செய் அங்கை இரண்டும் - அழகும் செய்த (உனது) இரண்டு கைகளும், அடுபுகையால் இங்ஙன் கருகியவோ - அடுப்படிப் புகையால் இப்படிக் கருத்தனவோ, என்று பதைத்து அழுதாள் - என்று சொல்லிப் பதறி அழுதாள்.

பொழிப்புரை:

நளமன்னனின் அழகை முன்நாளில் நுகர்ந்து அனுபவித்த தமயந்தி, எனது மார்பகங்களைத் தடவியும் கூந்தலைக் கோதியும் அழகு பார்த்த உன்கைஇரண்டும் அடுப்புப் புகையால் கருத்து விட்டதே' எனக் கூறி அழுதாள் வாகுகனை நினைத்து. *65*

என் மன்னன் அவனே!

399. மற்(று)இத் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத்தனித் தேரும் கொண்(டு) அணைந்து - மற்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து.

பதவுரை:

(தமயந்தி தன் பெற்றோரிடம்) மற்றுஇத் திருநகர்க்கே வந்து அடைந்த மன்னவற்கு - குண்டினபுரத்தை வந்து அடைந்த இருதுபன்னனுக்கு, கொற்றத் தனித் தேரும் கொண்டு அணைந்து - தோரோட்டியாக வந்துள்ளவனும், மற்றும் மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன் காண் - சமையல் வேலை செய்பவனும் ஆகிய வாகுகன், எங்கள் கொடைத் தொழிலான் - வள்ளன்மை நிறைந்த என் மன்னன் நளனே, என்றாள் குறித்து - என்று குறிப்பிட்டுச் சொன்னாள்.

பொழிப்புரை:

தமயந்தி தன் தாய் தந்தையரிடம், 'இந்நகர்க்கு வந்த இருதுபன்னனுக்குத் தேரோட்டியாக வந்து இப்போது சமையல் வேலை செய்யும் வாகுகனே என் மன்னன் நளன்' எனக் குறிப்பிட்டுக் கூறினாள். *66*

மாமன் மருகனைக் காணல்

400. போ(து) அலரும் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான் - ஓதம்
வரிவளைகொண்(டு) ஏறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து.

பதவுரை:

போது அலரும் கண்ணியான் - அரும்புகள் மலரும் மாலையணிந்த வீமன், போர்வேந்தர் சூழப் போய் - தன்னைச் சுற்றி சிற்றரசர்களுடன் போய், காதலிதன் காதலனைக் கண்ணுற்றான் - தன் மகளின் மணாளனைக் கண்டான், ஓதம் வரிவளைகொண்டு ஏறும் வளநாடன் - கடல் அலைகள் சங்குகளைக் கரையில் சேர்க்கும் வளநாட்டு மன்னன் நளனை, தெரிவரிதா திகைத்து நின்றான் - தெரிந்துகொள்ள முடியாமல் மயங்கி நின்றான்.

பொழிப்புரை:

வீமன் மற்ற அரசர்கள் சூழச் சென்று தன் மகளின் கணவனைக் கண்டான். கண்டவன் நளனை அடையாளம் காண முடியாமல் மயங்கி நின்றான். *67*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடையாளம் காணல்

401. செவ்வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட உருவென்னா - எவ்வாயும்
நோக்கினான் நோக்கித் தெளிந்தான் நுணங்கியதோர்
வாக்கினான் தன்னை மதித்து.

பதவுரை:

கொண்ட உரு - (வாகுகன்) கொண்டுள்ள உருவம், செவ்வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும் - சொல்லுக்கும் செய்யும் தொழிலுக்கம் எண்ணத்திற்கும், ஒவ்வாது என்னா (ஒன்றுக் கொன்று) பொருந்தாமல் இருக்கின்றது என நினைத்து, எவ்வாயும் நோக்கினான் - எல்லாவற்றையும் ஆராய்ந்தான், நோக்கி நுணங்கியதோர் வாக்கினான் தன்னை மதித்துத் தெளிந்தான் - நுட்பமான சொல்வன்மையால் அவன் நளனே எனத் தெளிவு பெற்றான் வீமன்.

பொழிப்புரை:

வாகுகனாகிய உருவம் சொல், செயல் எண்ணம் ஆகியவற்றால் பொருத்தமில்லாமல் இருக்கிறதென வீமன் நினைத்தான்; பின் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து நுட்பமான சொல்லாற்றல் அவனிடம் கண்டு நளனே எனத் தெளிந்தான் *68*

வாகுகனிடம் வேண்டல்

402. பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று - மந்தி
தெளியா(து) இருக்கும் திருநாடா உன்னை
ஒளியாது காட்(டு) உன் உரு.

பதவுரை:

மந்தி பூகத்தின் ஐ தலையின் பாளைதனை - பெண்குரங்கு பாக்கு மரத்தின் மேல் உள்ள அழகிய பாளையை, பை தலைய நாக பணம் என்று ஐயுற்று - நச்சுப் பையை உடைய நாகப் பாம்பின் படமென்று ஐயப்பட்டு, தெளியாது இருக்கும் திருநாடா - தெளிவடையாமல் இருக்கும் நாடனாகிய நளனே, உன்னை ஒளியாது உன் உரு காட்டு - உன் உண்மை உருவை மறைக்காமல் காட்டுக என்றான் வீமன் நளனிடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

வீமன் வாகுகனிடம், 'பாக்கு மரத்தின் பாளையை நாகப் பாம்பின் படமென்று பெண் குரங்கு நினைத்து மருளும் நாடனே நீ மறைக்காமல் உன் உருவைக் காட்டு' என்றான். 69

வாகுகன் ஆடை உடுத்தல்

403. அரவரசன் தான்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி உடுத்தான் - ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையால் பூண்(டு) அளிக்கும்
கோத்தாயம் முன்னிழந்தகோ.

பதவுரை:

பொருகலியின் வஞ்சனையால் - கலியின் வஞ்சகத்தால் (அவனோடு) சூதாடிப் பொருது, பூண்டு அளிக்கும் கோத்தாயம் - வழி வழியாக வந்த தன் அரசாட்சியை, முன் இழந்த கோ - இழந்துவிட்ட நளன், அரவரசன தான் கொடுத்த அம்பூந் துகிலின் - கார்க்கோடகன் தந்த அழகிய துணிகளில், ஒருதுகிலை வாங்கி உடுத்தான் - ஒன்றை எடுத்து (அரையில்) உடுத்தினான், ஒருதுகிலைப் போர்த்தான் - ஒரு துகிலால் உடலைப் போர்த்திக் கொண்டான்.

பொழிப்புரை:

கலியின் வஞ்சகத்தால் அவனோடு சூதாடித் தன் அரசுரிமையை இழந்த நளன், கார்க்கோடகன் தந்த ஆடைகளில் ஒன்றை எடுத்து அரையில் உடுத்தினான்; இன்னொன்றை உடலில் போர்த்திக் கொண்டான். 70

வாகுகன் உரு மறைதல்

404. மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோல் போயிற்றே - அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்(து) உறையும்
மானகத்தோர் பாகன் வடிவு.

பதவுரை:

அக்காலம் கானகத்தே காதலியை நீத்து - அக்காலம் காட்டில் மனைவியைப் பிரிந்து, கரந்து உறையும் - மறைந்து வாழும், மானசத் தேர்ப் பாகன் வடிவு - குதிரைப் பூட்டிய தேரைச் செலுத்தும் வாகுகன் வடிவு, மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாக - உலகளந்த திருமாலின் அடியைச் சார்ந்து, புக்கோர் அருவினைபோல் - நின்றோர் வினைகள் எல்லாம், போயிற்றே - விலகுவதுபோல நீங்கிற்று.

பொழிப்புரை:

காட்டில் தமயந்தியைப் பிரிந்து மறைந்து தேரோட்டியாக வாழ்ந்த வாகுகன் வடிவம் உலகைத் தம் காலடியால் அளந்த திருமாலின் திருவடியைச் சார்ந்தவர்களின் வினைகள் எல்லாம் விலகுவதுபோல விலகிற்று. 71

தனயனும் தந்தையும்

405. தாதையைமுன் காண்டலுமே தாமரைக்கண் நீர் அரும்பப்
போதலரும் குஞ்சியான் புக்கணைந்து - கோதிலாப்
பொன்னடியைக் கண்ணில் புனலால் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து

பதவுரை:

போதலரும் குஞ்சியான் - மலர்கள் சூடிய முடியை உடைய இளவரசன், தாதையைமுன் காண்டலுமே - தனது தந்தையைக் கண்டு, தாமரைக் கண்நீர் அரும்ப - தாமரைப் போன்ற கண்ணில் கண்ணீர் கசிய, மின் இடையாளோடும் - சிற்றிடையை உடைய தனது தங்கையுடன், புக்கு அணைந்து - தங்கள் தந்தையைத் தழுவி, விழுந்து - கீழே விழுந்து, கோதிலாப் பொன்னடியைக் கண்ணில் புனலால் - கழுவினான் - குற்றமற்ற நளனின் காலடிகளைக் கண்ணீர் விட்டுக் கழுவினான்.

பொழிப்புரை:

நளனுடைய மகன் அவனைக் கண்டவுடன் கண்ணீர் சிந்தினான்; அவனும் தங்கையும் தந்தையைத் தழுவினர்; கீழே விழுந்து வணங்கினர்; நளனின் திருவடிகளைக் கண்ணீரால் குளிப்பாட்டினர். 72

தமயந்தியும் நளனும்

406. பாதித் துகிலோடு பாய்ந்(து)இழியும் கண்ணீரும்
சீதக் களபதனம் சேர்மாசும் - போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீர் அவற்கு.

பதவுரை:

பாதித்துகிலோ.டு பாய்ந்து இழியும் கண்ணீரும் - (காட்டில் நளன் அறுத்துவிட்ட) அரை ஆடையை உடுத்தவளாய் வடியும் கண்ணீருடன், சீதக் களபதனம் சேர்மாசும் - குளிர்ந்த சந்தனம் பூசும் மார்பில் படிந்த அழுக்குடன் தமயந்தி, போத மலர்ந்த தார் வேந்தன் - மலர்மாலை சூடிய நளனுடைய, மலரடியில் வீழ்ந்தாள் - மலரையொத்த பாதங்களில் விழுந்தாள், அவற்குக்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கண்ணீர் அலர்ந்ததே - நளனுக்கும் கண்களில் கண்ணீர் பெருகியது.

பொழிப்புரை:

காட்டில் நளன் அறுத்துவிட்ட அரை ஆடை உடுத்திய தமயந்தி கண்ணீர் சிந்தினாள்; சந்தனம் பூசிய மார்பில் அழுக்குப் படிய நளனின் மலரடியில் விழுந்தாள். தமயந்தி நிலை கண்ட நளனும் கண்ணீர் வடித்தான். 73

நீரும் மறைத்தது

407. வெவ்விடத்தோ(டு) ஒக்கும் விழியிரண்டும் வீழ்துயில்கொள்
அவ்விடத்தே நீத்த அவர்என்றே - இவ்விடத்தே
வாரார் முலையாள்அம் மன்னவனைக் காணாமல்
நீரால் மறைத்தனவே நின்று.

பதவுரை:

வெவ்விடத்தோடு ஒக்கும் விழி இரண்டும் - நஞ்சை ஒத்த தமயந்தியின் விழிகள் இரண்டும், வீழ்துயில் கொள் அவ்விடத்தே நீத்த அவர் என்றே - காட்டில் துயிலும் போது விட்டுச் சென்ற அவர் அல்லவோ இவர் என (வெட்கப்பட்டு) இவ்விடத்தே - வீமன் தலைநகரில், வாரார் முலையள் அம் மன்னவனைக் காணாமல் - கச்சணிந்த மார்புடைய அவள் கணவனைப் பாராமல், நீரால் மறைத்தனவே நின்று - கண்ணீர் நிறைந்து கண்ணொளியை மறைத்தது.

பொழிப்புரை:

நஞ்சைஒத்த தமயந்தியின் கண்கள் காட்டில் தனியே விட்டுப் பிரிந்தவர் இவர் என நளனை நினைத்தன; அதனால் கண்கள் வெட்கி அவள் கணவனைப் பார்க்கா வண்ணம் நீர்பெருகி விழிஒளியை மறைத்தன. 74

வானவர் போற்றல்

408. உத்தமரில் மற்றிவனை ஒப்பார் ஒருவர்இலை
இத்தலத்தில் என்(று) இமையோர் எம்மருங்கும் கைத்தலத்தின்
தேமாரி பெய்யும் திருமலர்த்தார் வேந்தன்மேல்
பூமாரி பெய்தார் புகழ்ந்து.

பதவுரை:

உத்தமரின் மற்றுஇவனை ஒப்பார் ஒருவர் இலை இத்தலத்தில் - இப்பூமியில் நளனை ஒத்தஉத்தமர் ஒருவரும் இலர், என்று இமையோர் - என்று நினைத்த தேவர்கள், தேமாரி பெய்யும் திருமலர்த் தார்வேந்தன்மேல் - தேன் நிறைந்த

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

மாலைகள் சூடிய நளன்மீது, கைத்தலத்தின் - தம் கைகளால், பூமாரி பெய்தார் புகழ்ந்து - பூக்களைத் தூவிப் புகழ்ந்தார்கள்.

பொழிப்புரை:

'மலர் மாலை அணிந்தவன் நளன்; அவனுக்கு நிகரான உத்தமக் குணம் உடையோர் உலகில் ஒருவரும் இலர்' என நினைத்த தேவர்கள் அவன்மீது பூக்களைத் தூவிப் போற்றிப் புகழ்ந்தனர். 75

கலிமகன் வேண்டல்

409. தேவியிவள் கற்புக்கும் செங்கோல் முறைமைக்கும்
பூவுலகில் ஒப்பாயார் போதுவார் - காவலனே!
மற்றென்பால் வேண்டும் வரம்கேட்டுக் கொள்ளென்றான்
முற்(று) அன்பால் பார்அளிப்பான் முன்.

பதவுரை:

முற்று அன்பால் பார் அளிப்பான் முன் - முழுமையான அன்பால் தன் நாட்டைக் காக்கும் நளனிடம், காவலனே - அரசனே, தேவிஇவள் கற்புக்கும் செங்கோல் முறைமைக்கும் - தமயந்தியின் கற்புக்கும் உன் செங்கோலுக்கும், பூவுலகில் ஒப்பாகப் போதுவார் யார் - இம்மண்ணுலகில் ஒப்பானவர் ஒருவரும் இலர், மற்று என்பால் வேண்டும் வரம் கேட்டுக் கொள் - (ஆதலால்) என்னிடம் உனக்கு விருப்பமான வரம்கேள், என்றான் - என்று சொன்னான் கலி.

பொழிப்புரை:

அன்பினால் நாட்டைக் காக்கும் நளனிடம், 'அரசே, தமயந்தியின் கற்புக்கும் உன் செங்கோலுக்கும் நிகர் யாரும் இலர். ஆதலால் நீ வேண்டும் வரம் கேள்' என்றான் கலி. 76

நளன் கேட்ட வரம்

410. உன்சரிதம் செல்ல உலகாளும் காலத்தும்
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி - என்சரிதம்
கேட்டாரை நீஅடையேல் என்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து.

பதவுளைர:

கிளர்மணிப்பூண் வாள் தானை மன்னன் மதித்து - ஒளிவிடும் வாள்படை மன்னன் கலியை மதித்து, மின்சொரியும் வேலாய் - மின்னல் போல் ஒளி விடும் வேலை உடைய கலியே, உன் சரிதம் செல்ல உலகு ஆளும் காலத்தும் - உன் ஆட்சி இவ்வுலகில் நடைபெறும் கலிகாலத்திலும், மிகவிரும்பி என்சரிதம் கேட்டாரை -

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகவும் ஆசைபட்டு என்கதையைக் கேட்கும் மக்களை, நீ அடையேல் என்றான் - நீ சென்று அவர்களைப் பற்றக்கூடாது எனவரம் கேட்டான்.

பொழிப்புரை:

படைதாங்கிய நளன் வேல் தாங்கிய கலியிடம், 'கலியே, உன் ஆளுகை நடைபெறும் இக்கலிகாலத்தில் என்கதையைக் கேட்கும் மக்களை நீ துன்புறுத்தாமல் இருப்பாயாக' என வரம் கேட்டான். 77

கலிமகன் தந்த வரம்

411. என்காலத்(து) உன்சரிதம் கேட்டாரை யான்அடையேன்
மின்கால் அயில்வேலாய் மெய்யென்று - நன்காவி
மட்(டு) இறைக்கும் சோலை வளநாடன் முன்னின்று
கட்(டு) உரைத்துப் போனான் கலி.

பதவுரை:

மின்கால் அயில்வேலாய் - மின்னல்போல் ஒளிவிடும் கூர்வேலை உடையவனே, என்காலத்து உன்சரிதம் கேட்டாரை யான் அடையேன் - உன்கதை கேட்டவரை என் காலத்தில் நான் துன்புறுத்தமாட்டேன், மெய்யென்று - இது உண்மை என்று, நன்காவி மட்டு இறைக்கும் சோலை வளநாடன் - குவளை மலர்களில் தேன் சிந்தும் சோலைகளை உடைய நளமன்னன், முன்னின்று கட்டு உரைத்துப் போனான் கலி - முன்னே உறுதிகூறிச் சென்றான் கலி.

பொழிப்புரை:

கூர்வேலைத் தாங்கிய நளனே, என் காலத்தில் உன்கதை கேட்டவரைத் துன்புறுத்த மாட்டேன். இஃது உண்மை என்று கூறிச் சென்றான் கலி. 78

வீமன் விருந்து

412. வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்த் - தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து.

பதவுரை:

தாது புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி விதையக் கோன் - மகரந்தப்பொடி மறைய தேன் கசியும் சோலைகள் நிறைந்த நாட்டு மன்னன் வீமன், வேதநெறிவழுவா வேந்தனையும் - வேதநெறிகள் பிறழாமல் ஆளும் நளனையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூந்தடங்கண் கோதையையும் - பூப்போன்ற பெரிய கண்களைப் பெற்ற தமயந்தியையும், மக்களையும் - பேரப் பிள்ளைகளையும், கொண்டுபோய் - அழைத்துச் சென்று, விருந்து செய்தான் - விருந்து வைத்தான்.

பொழிப்புரை:

வீமராசன் தன் மருமகன் நளனுக்கும் மகள் தமயந்திக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் பெரு விருந்து படைத்தான். 79

இருதுபன்னன் வேண்டல்

413. உன்னையான் ஒன்றும் உணரா(து) உரைத்தஎலாம்
பொன் அமரும் தாராய் பொறுக்கென்று - பின்னைத்தன்
மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீர் அயோத்தியார் மன்.

பதவுரை:

மால்நீர் அயோத்தியார் மன் - பெரும் நீர் வளமுடைய அயோத்தி நாட்டு மன்னன் இருதுபன்னன் (நளனிடம்), பொன் அமரும் தாராய் - அழகிய மாலை அணிந்தவனே, உன்னையான் ஒன்றும் உணராது உரைத்த எலாம்- உன்னை யாரென்று அறியாமல் யான் பேசியவற்றை எல்லாம் பொறுக்க என்று - பொறுத்துக் கொள்க' (மன்னிக்க) எனக் கூறி, பின்னைத்தன் மேல்நீர்மை குன்றா - பின்பு தான் தமயந்திமேல் ஆசைப்பட்டு வந்ததற்காக உள்ளம் ஒடுங்கி, வெறுந்தேர் மிசைக் கொண்டான் - தேரோட்டி இல்லாத் தேரைத் தானே ஓட்டிச் சென்றான்.

பொழிப்புரை:

அயோத்தி அரசன் இருதுபன்னன் நளனிடம், 'நீயாரென்று அறியாமல் நான் உரைத்தவற்றை எல்லாம் பொறுத்தருள்க' என்று கூறித் தமயந்திமேல் ஆசைப்பட்ட தன் ஆசை ஒடுங்கித் தேரில் ஏறிப் புறப்பட்டான். 80

நளன் நாடு ஏகல்

414. விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேல் தேவியொடும் போயினான் - முற்(று)ஆம்பல்
தேனீர் அளித்தருகு செந்நெல் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன்.

பதவுரை:

முற்று ஆம்பல் தேனீர் அளித்தருகு செந்நெல் கதிர் விளைக்கும் - அல்லி மலர்களிலிருந்து வழியும் தேனால் நெல்

 Public Domain Digitization Muthulakshmi Research Academy

விளையும், மாநீர் நிடதத்தார் மன் - பெருநீர்வளம் உடைய நிடதநாடன் நளன், விற்றானை முன்செல்ல - வில்படை முன்னே போகவும், வேல்வேந்தர் பின்செல்ல - வேலை ஏந்திய சிற்றரசர் பின்னே வரவும், பொற்றேர் மேல் - பொன்னாலாகிய தேரில் ஏறி, தேவியோடும் போயினான் - தமயந்தி யோடு புறப்பட்டான்.

பொழிப்புரை:

நிடத நாட்டு மன்னன் நளன் தன் முன்னே விற்படை வீரர் செல்லவும் பின்னே சிற்றரசர்கள் அணிவகுத்து வரவும் பொன்தேரில் ஏறித் தமயந்தியுடன் தன் நாடு ஏகினான். *81*

நம்ஊர் எவ்வளவு தூரம்?

415. தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனைநெறித் தூரம் இனி எத்தனையோ - மானேகேள்
இந்த மலைகடந்(து), ஏழுமலைக்(கு) அப்புறமா
விந்தமெனும் நம்பதிதான் மிக்கு.

பதவுரை:

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய் - அரக்கரை வெல்லும் வேலைத் தாங்கியவனே, ஏனைநெறித் தூரம் இனி எத்தனையோ - (நாம்) செல்லவேண்டிய தொலைவு எவ்வளவு (எனத் தமயந்தி வினவ), மானே, கேள் - மான்போன்றவளே, கேள், இந்த மலைகடந்து - இந்த மலையைக் கடக்கவேண்டும், ஏழு மலைக்கு அப்புறமா - பின்னும் ஏழு மலைகளுக்கு அப்பால், விந்தமெனும் நம்பதிதான் மிக்கு - மாவிந்தம் எனும் நம் நகர்தான்' என்றான் நளன்.

பொழிப்புரை:

தமயந்தி நளனிடம் 'நாம் செல்லவேண்டிய தூரம் எவ்வளவு?' எனக்கேட்டாள். நளன் மறுமொழியாக, 'மான்போன்றவளே, முன்னுள்ள மலை கடந்து பின்னுள்ள ஏழு மலைகளுக்கு அப்பால் நம் மாவிந்த நகரம் உளது' என்றான். *82*

சூரியன் எழுதல்

416. இக்கங்குல் போக இகல்வேல் நளன்எறிநீர்
செய்க்கங்கு பாயும் திருநாடு - புக்(கு) அங்(கு)
இருக்குமா காண்பான்போல் ஏறினான் குன்றில்
செருக்குமான் தேர்வெய்யோன் சென்று.

பதவுரை:

இகல்வேல் நளன் - வேற்படை தாங்கிய நளமன்னன், எறிநீர் செய்க்கங்கு பாயும் திருநாடு - அலைகளோடு கூடிய நீர் வயல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரப்புகளில் ஏறிப் பாயும் நிடதநாட்டில், இக்கங்குல் போகபுக்கு அங்கு இருக்குமா காண்பான்போல் - இரவு கழிய புகுந்து அங்குஇருக்கும் நிலையைக் காண்பவன் போல, செருக்குமான் தேர்வெய்யோன் சென்று குன்றில் ஏறினான் - வேகம் மிக்க குதிரைபூட்டிய தேரில் சூரியன் தான் புறப்படும் மலையாகிய உதயகிரியின் மேலாக ஏறினான்.

பொழிப்புரை:

நளன் அவனுடைய நிடத நாட்டில் வீற்றிருப்பதைக் காண அவாவு இரவு கழிந்தவுடன் விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரை உடைய கதிரவன் தான் புறப்படும் மலையாகிய உதயகிரியின் மேலாக ஏறினான். 83

நளன் பொழில் அடைதல்

417. மன்றல் இளங் கோதையொடு மக்களும் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேல்ஏறிச் - சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்ததொரு
பூவிந்தை வாழும் பொழில்.

பதவுரை:

மாவிந்தம் என்னும் வளநகரம் சூழ்ந்ததொரு பூவிந்தை வாழும் பொழில் - மாவிந்தம் எனும் நகரைச் சுற்றியிருக்கிற திருமகள் வாழும் சோலையை மன்றல் இளங் கோதையொடு - மணம் நிறைந்த மாலை சூடிய தமயந்தியோடு, மக்களும் தானும் ஒரு - பிள்ளைகளுடன் நளன், வென்றி மணிநெடுந்தேர் மேல் ஏறி - வெற்றிதரும் மணித்தேரில் ஏறி, சென்று அடைந்தான் - சென்று சேர்ந்தான்

பொழிப்புரை:

மாவிந்தம் நகரைச் சூழ்ந்துள்ள சோலையை நளன் தன் மனைவி மக்களோடு மணித்தேரில் ஏறிச் சென்று சேர்ந்தான். 84

புட்கரனை அழைத்தல்

418. மற்றவனுக்(கு) என்வரவு சொல்லி மறுசூதுக்(கு)
உற்ற பணையம் உளதென்று - கொற்றவனைக்
கொண்(டு)அணைவீர் என்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்தெரியல் தேர்வேந்தன் தான்.

பதவுரை:

தண்தெரியல் தேர்வேந்தன் தான் - குளிர்ந்த மலர்மாலை அணிந்த தேர் வேந்தன் நளன், மற்று அவனுக்கு என் வரவு சொல்லி - புட்கரனுக்கு என் வருகையைச் சொல்லி, மறு சூதுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உற்ற பணையம் உளதென்று - மறுபடியும சூதாடப் பந்தயப் பொருள் உளது. கொற்றவனைக் கொண்டு அணைவீர் - புட்கரனை அழைத்து வருக, என்று குலத்தூதரை விடுத்தான் - என்று சொல்லித் தன் தூதரை அனுப்பினான்.

பொழிப்புரை:

புட்கரனுக்கு என் வரவைக் கூறி மறுபடியும் சூதாடப் பந்தயப் பொருளும் உளது. எனவே அவனை அழைத்து வருக என்னிடம்' எனக் கூறித் தன் தூதரை அனுப்பினான் நளன். *85*

புட்கரன் நளன் சந்திப்பு

419. மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வல்நெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய் - ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டான் எதிர்.

பதவுரை:

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வல் நெஞ்சம் - மாயம் நிறைந்த சூதாட்டத்தில் வஞ்சித்து வென்ற வன்நெஞ்சன் புட்கரன், தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய் - நல்ல மலர்கள் நிறைந்த சோலையிடத்து, ஆய பெருந்தானை சூழ - படைவீரர்கள் சூழ்ந்திருக்கவும், பெடைநடை யாளோடும் இருந்தானை - தமயந்தியோடு இருந்த நளனை, எதிர்கண்டான் - நேரே சென்று கண்டான்.

பொழிப்புரை:

வஞ்சகமாக ஆடிய சூதாட்டத்தில் வென்ற புட்கரன், படைகள் சூழத் தன் மனைவியோடு இருந்த நளனைச் சோலையில் சென்று கண்டான். *86*

நலந்தானா நளன்?

420. செங்கோல் அரசன் முகம்நோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோல் அரசன் வினாவினான் - அம்கோலக்
காவல்கொடை வேந்தே! காதலற்கும் காதலிக்கும்
யாவர்க்கும் தீ(து) இலவே என்று.

பதவுரை:

தேர்ச்சியிலா வெங்கோல் அரசன் - தெளிவு இல்லாதவனும் கொடுங்கோலனும் ஆகிய புட்கரன், செங்கோல் அரசன் முகம் நோக்கி - செங்கோன்மை குன்றா நளனைப் பார்த்து, அம்கோலக் காவல் கொடை வேந்தே - அழகும் ஆட்சிபுரிதலில் மேன்மையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடையவனே, காதலற்கும் காதலிக்கும் யாவர்க்கும் - (உனது) மகனும் மகளும் மனையாளும், தீது இலவே என்று வினவினான் - நலந்தானா என்று கேட்டான்.

பொழிப்புரை:

கொடுங்கோலனாகிய புட்கரன் செங்கோலனாகிய நளனிடம், 'அழகும் ஆட்சித்திறமும் உடையவனே! உனது மகனும் மகளும் மனையாளும் நலமா?' என வினவினான். 87

பணயப் பொருள்

421. தீது தருகலிமுன் செய்ததனை ஓராதே
யாது பணையம் எனஇயம்பச் - சூதாட
மையாழி யில்துயிலும் மால் அனையான் வண்மையுனை
கையாழி வைத்தான் கழித்து.

பதவுரை:

தீதுதருகலிமுன் செய்ததனை ஓராதே - கெடுதல் தரும் கலிமுன்னே தான் வெல்ல உதவியதை எண்ணிப் பாராத புட்கரன், யாது பணையம் என இயம்ப - (நளனிடம்) சூதாடுவதற்குப் பணயப்பொருள் என்ன எனக்கேட்கவும், மைஆழியில் துயிலும் மால் அனையான் - நீலக்கடலில் பள்ளி கொள்ளும் திருமாலை ஒத்த நளன், சூதாட வண்புனை கைஆழி கழித்து வைத்தான் - சூதாடுவதற்குத் தன் கொடை கொடுக்கும் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி வைத்தான்.

பொழிப்புரை:

முன்னே நடந்த சூதாட்டத்தில் தான் கலியின் உதவியாலே வென்றோம் என உணராத புட்கரன் நளனிடம் 'சூதாட உன் பணயப் பொருள் யாது' என வினவினான். உடனே நளன் தன் கைவிரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி வைத்தான். 88

நளன் வெற்றி

422. அப்பலகை ஒன்றின் அருகிருந்தார் தாம்மதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும் - ஒப்பரிய
வன்தானை யோடு வளநாடும் வஞ்சனையான்
வென்றானை வென்றான்அவ் வேந்து.

பதவுரை:

அப்பலகை ஒன்றின் - சொக்கட்டான் பலகையில் ஆடிய முதல் ஆட்டத்தில், அருகுஇருந்தார் தாம் மதிக்க - (நளனுக்கு) அருகில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்த ஏனைய அரசர்கள் மதிக்கவும், செப்பரிய செல்வத் திருநகரும் - ஒப்பற்ற மாவிந்த நகரையும், ஒப்பரிய வன்தானையோடு வளநாடு - சிறப்புமிக்க நாற்படைகளுடன் கூடிய நிடத நாட்டையும், வஞ்சனையான் வென்றானை - மாயச்சூதாடிக் கவர்ந்த புட்கரனை, அவ்வேந்து வென்றான் - நளன் தோற்கடித்து எல்லாவற்றையும் மீட்டான்.

பொழிப்புரை:

புட்கரனோடு நளன் ஆடிய முதல் ஆட்டத்தில் பக்கத்தில் இருந்தவர்கள் வியக்கவும் செழிப்பான மாவிந்தநகர், நான்குவகைப் படைகள், வளநாடாம் நிடதநாடு ஆகியவற்றை வஞ்சனையால் கவர்ந்த புட்கரனிட மிருந்து மீட்டான். 89

புட்கரன் நாடு கொடுத்தான்

423. அந்த வளநாடும் அவ்வாசும் ஆங்(கு) ஒழிய
வந்த படியே வழிக்கொண்டான் - செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லால் நளன் என்று போற்றிசைக்கும்
கோவேந்தற்(கு) எல்லாம் கொடுத்து

பதவுரை:

செந்தமிழோர் நாவேய்ந்த சொல்லால் - அருந்தமிழ்ப் புலவர்கள் தம் பாடல்களால், நளன் என்று போற்றி இசைக்கும் கோவேந்தற்கு - பலவாறு பாராட்டும் நளமன்னனிடம், அந்த வளநாடும் அவ்வரசும் - நிடத நாட்டையும் ஆட்சி உரிமையையும், ஆங்கு ஒழிய - சூதாட்டத்தினாலேயே தன்னை விட்டு நீங்க, எல்லாம் கொடுத்து - எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு, வந்தபடியே வழிக்கொண்டான் - தான் வெறுமனாக வந்ததுபோலவே தனியேதன் வழியில் சென்றான் புட்கரன்.

பொழிப்புரை:

தமிழ்ப் புலவர்கள் தம் செந்தமிழ்ப் பாக்களால் பாராட்டும் நளனிடம் அவனுக்குரிய நாடு, நகரம், ஆட்சியுரிமை ஆகியவற்றை ஒப்படைத்துவிட்டுப் புட்கரன் தனியனாக வந்ததுபோலவே தனியனாகத் தன் வழியே ஏகினான். 90

நளன் நகர் அடைதல்

424. ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேர்ஏறி - ஆனபுகழ்ப்
பொன்னகரம் எய்தும் புரந்தரனைப் போல் பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதவுரை:

ஏனைமுடிவேந்தர் எத்திசையும் போற்றிஇசைப்ப - மற்ற முடிமன்னர்கள் நாலாத் திசையிலும் நளனைப் போற்றவும், சேனை புடைசூழத் தேர் ஏறி - படைகள் சூழ்ந்துவரத் தேரில் ஏறி, ஆனபுகழ்ப் பொன்னகரம் எய்தும் புரந்தரனைப்போல் பொலிந்து - புகழ்பெற்ற அமராபதி எனும் தன் நகருக்குச் செல்லும் இந்திரனைப் போலப் பொலிவுடன், நளன் நன் நகரம் புக்கான் - நளன் தன் தலைநகராம் மாவிந்தநகர் அடைந்தான்.

பொழிப்புரை:

நாலாத் திசையிலும் இருந்து முடிமன்னர்கள் வாழ்த்தவும் படைகள் சூழ்ந்துவர நளன் தேரில் ஏறி இந்திரன் தன் தலைநகர் அமராபதிக்குச் செல்வதுபோலப் பொலிவுடன் தன் தலைநகர் மாவிந்தநகரை அடைந்தான். *91*

நகர மாந்தர் மகிழ்ச்சி

425. கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாள்முகமோ
நீர்பெற்(று) உயர்ந்த நிறைபுலமோ - பார்பெற்று
மாதோடு மன்னவன் வரக்கண்ட மாநகருக்(கு)
ஏதோ உரைப்பன் எதிர்.

பதவுரை:

பார்பெற்று மாதோடு மன்னவன் வரக்கண்ட மாநகருக்கு - இழந்தநாட்டை மீண்டும் பெற்றுத் தமயந்தியோடு வந்த நளன் மாநகர்க்கு, கார்பெற்ற தோகையோ - மேகத்தைக் கண்ட மயிலையோ - கண்பெற்ற வாள்முகமோ - கண்ணைப் பெற்ற ஒளிமுகத்தையோ, நீர் பெற்று உயர்ந்த நிறைபுலமோ - நீரைப் பெற்றுச் செழித்தவயலையோ, ஏதோ உரைப்பன் எதிர் - எதை ஒப்பாகச் சொல்வேன்?

பொழிப்புரை:

நளன் இழந்த நாட்டை மீண்டும் பெற்றுத் தன் மனைவியோடு தலைநகர் மாவிந்த நகர்க்கு வந்தான். அந்நகர்க்கு ஒப்பாக மேகத்தைக் கண்ட மயிலையோ, கண்பெற்ற ஒளிமுகத்தையோ, நீர் பெற்றுச் செழித்த வயலையோ எதை ஒப்பாகச் சொல்வேன்? *92*

வியாசர் தருமனை வாழ்த்தல்

426. வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதையீ(து)
என்(று) உரைத்து வேத இயல்முனிவன் - நன்றிபுனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னா பருவரலை மாற்றுதியென்(று) ஆசிமொழி
பன்னா நடந்திட்டான் பண்டு.

பதவுரை:

வேத இயல்முனிவன் - வேதங்களைத் தொகுத்த வியாச முனிவன், வென்றி நிடத்ததார் வேந்தன் சரிதைஈது- (தருமனிடம்) வெற்றி பொருந்திய நளனுடைய கதை இது, என்று உரைத்து - என்று சொல்லி, நன்றிபுனை மன்னா - நன்றியுணர்ச்சி மிகுந்த அரசனே, பருவரலை மாற்றுதி என்று - உன் துயரத்தை நீக்குக என, ஆசிமொழி பன்னா நடந்திட்டான் பண்டு - ஆறுதல் மொழிகளும் நவின்று தன் வழியே நடந்தான்.

பொழிப்புரை:

வேதங்களைத் தொகுத்த வியாச முனிவன் தருமனிடம், இதுவே நளனின் கதை. நீ உன் துயரத்தை மற' என்று ஆசியும் கூறித் தன் இருப்பிடம் சென்றான். *93*

நூல் வாழ்த்து

427. வாழி அருமறைகள் வாழிநல் அந்தணர்கள்
வாழிநளன் காதை வழுத்துவோர் - வாழிய
மள்ளுவநாட்(டு) ஆங்கண் வருசந் திரன்சுவர்க்கி
தெள்ளுறமெய்க் கீர்த்தி சிறந்து

பதவுரை:

அருமறைகள் வாழி வாழி - அரிய நான்குமறைகள் வாழ்க, நல்அந்தணர்கள் வாழி - மறையோதும் அந்தணர்கள் வாழ்க, நளன் காதை வழுத்துவோர் வாழி - நளனின் கதை சொல்லுவோர் வாழ்க, ஆங்கண் மள்ளுவநாட்டு வருசந்திரன் சுவர்க்கி - மள்ளுவநாட்டு மன்னன் சந்திரன் சுவர்க்கியின், தெள்ளுற மெய்க்கீர்த்தி - தெளிந்த புகழ், சிறந்து வாழிய - சிறக்க வாழ்க.

பொழிப்புரை:

அருமறைகளும் அவற்றை ஓதும் அந்தணர்களும் வாழ்க. நளன் கதை சொல்லுவோர் வாழ்க. மள்ளுவ நாட்டு மன்னன். சந்திரன் சுவர்க்கியின் தெளிந்த புகழ் சிறந்து வாழ்க. *94*

நளவெண்பா மூலமும் உரையும் முற்றுப்பெற்றன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

(எண் - செய்யுள் எண்)

அங்கண் விசும்பின் 299
அங்கவர்கள் வேண்டும் 100
அங்கி அமுதம் நீர் 99
அங்கை நெடுவேற்கண் 156
அங்கை வரிவளையங் 154
அங்கை வேல் மன்னன் 203
அஞ்சல் மடவனமே 24
அஞ்சனந் தோய் கண்ணில் 255
அஞ்சாயல் மானே 147
அடற்கதிர்வேல் மன்னன் 215
அடையும் கடுங்கானில் 303
அந்த நெடுஞ்சுரத்தின் 267
அந்த வளநாடும் 423
அந்தா மரை 319
அப்பலகை ஒன்றின் 422
அம்பொற் கயிலைக்கே 13
அம்மொழியைத் தூதர் 359
அரவரசன் தான்கொடுத்த 403
அலர்ந்த மலர் சிந்தி 188
அல்லியந்தார் மார்பன் 296
அவ்வளவில் ஆதிப் 312
அழகு சுமந்திளைத்த 79
அழல்வெஞ் சிலைவேடன் 291
அழுவார் விழுவார் 330
அள்ளிக் கொளலாய் 120
அறத்தைவேர் கல்லும் 218
அறம் கிடந்த நெஞ்சும் 54
அறம் பிழைத்தார் பொய் 265
அறையும் பறையரவம் 238
அற்ற துகிலும் 316
அன்றில் ஒருகண் 124
அன்னக் குலத்தின் 69
அன்னங்களாள் 110
அன்னம் உரைத்த 46
அன்னம் தனைப் பிடித்தங் 33
அன்னம் துயில்எழுப்ப 150
அன்னம் மிதிப்ப 361
அன்னம் மொழிந்த 37
அன்னமே நீ உரைத்த 43
ஆங்கவர் சொன்ன 392
ஆங்கவளும் ஏக 318
ஆங்கவன்தான் 343
ஆடி வரிவண் 116
ஆண்டிரண்டா 209
ஆதித் தனிக்கோலம் 3
ஆதி நெடுந்தேர்ப் 386
ஆதி மறைநூல் 387
ஆமை முதுகில் 382
ஆயம் பிடித்தாரும் 220
ஆரும் திரியா 137
ஆருயிரின் தாயே 233
ஆருயிரும் நானும் 307
ஆவ துரைத்தாய் 85
ஆழி வடி யம்லம்ப 144
ஆற்றல் அரவரசே 345
இக்கங்குல் போக 416
இசை முகந்த வாயும் 87
இடைச் சுரத்தில் தன்னை 388
இணையாரும் இல்லான் 350
இத்தாழ் பணையில் 379
இந்து = நுதலி 308
இயமரம் நின்றார்ப்ப 95
இருவர் உயிரும் 255
இவ்வளவில் 47
இற்றது நெஞ்சம் 45
இனிச் சூது ஒழிந்தோம் 230
இன்றுன்னைக் காண்ப 385
இன்னுயிர்க்கு நேரே 171
ஈங்கு இவள் 322
ஈங்கு வர 165

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈர மதியே	117
உங்கள் அரசு	393
உடுத்த துகில்	289
உடைய மிடுக்கெல்லாம்	129
உண்டோர் அழுகுரல்	304
உத்தமரில் மற்றிவனை	408
உய்ஞ்சு கரையேற	40
உருவழிக்கும் உண்மை	219
உள்ளம்போய்	102
உன் சரிதம் செல்ல	410
உன் தலைவன் தன்னை	321
உன்னையான் ஒன்றும்	413
ஊக்கிய சொல்லர்	121
ஊழி பலவோர்	115
ஊன்தின் உவகையால்	123
எக்குலத்தாய்	314
எங்கண் உறைந்தனை	367
எங்காம் புகலிடம்	269
எங்கோன் மக	370
எண்ணிய எண்ணம்	281
எந்தை கழல்	395
எழுந்திருக்கும்	127
எழுவடு தோள்	38
எற்றத் திரை	262
என் காலத்து	411
என்மேல் எரி	373
என்றும் நுடங்கும்	41
என்றுரைத்த	341
என்னுரையை	94
என்னை இருங்கானில்	362
என்னை தனிவன	320
ஏந்தும் இளமுலை	286
ஏரடிப்பார்	380
ஏழுலகும் சூழிருளாய்	125
ஏற்ற முலை	187
ஏனை முடி	424
ஏன்றோம்	216
ஒண்தொடி தன்னை	366
ஒருவர் உடலில்	174
ஒற்றைத் தனியாழி	376
ஒற்றைத் துகிலும்	282
ஓடாத தானை	25
ஓடும் புரவித்தேர்	328
கடப்பார் எவரே	232
கணி மொழிந்த	172
கண் இமைத்தலால்	160
கண் இழந்து மாய	17
கந்தனையும் கன்னி	328
கருங்குழார் செங்கை	60
கருவிக்கு நீங்காத	126
கலாப மயிலிருந்த	4
கற்பின் மகளிர்	288
கன்னி நறுந்தேறல்	384
கன்னியர் தம் வேட்கை	199
கன்னிறத்த சிந்தை	258
காண்டா வனம்	14
காதலவர் மேலே	256
காதலியைக் கார்இருளில்	354
காதல் இருவரையும்	243
காதல் கவறாடல்	217
காமர் கயல்புரள	19
காயும் கடகளிற்றாய்	346
காரிகை தன்	280
கார் இருளில்	363
காரேயும் கூந்தலார்	224
கார்பெற்ற தோகை	425
காவலரைத் தன்சேடி	157
காலனுக்கு ஏவல்	375
காவலன் தன்	73
காவல் கடந்து	92
காவல் குடை	82
காவி பொரு	197
காவிபோல் கண்ணிக்கும்	264
கானகத்துக் காதலி	265
கானும் தடங்காவும்	112
குழைமேலும் கோமான்	175
குறையாத கற்பினாள்	372
குற்றமில் காட்சி	244
கூட்டுமை போற்சிறந்த	109
கூந்தல் இளங்குயில்	298

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூனிறால் பாய	347	செங்கண் மதயானை	83
கூன்சங்கின் பிள்ளை	152	செங்கோலாய் உன்றன்	251
கெட்ட சிறுமருங்குல்	74	செங்கோல் அரசன்	420
கேடில் விழுச்செல்வம்	16	செந்தடையும் வண்டுறை	65
கேட்ட செவி	71	செந்திருவின் கொங்கை	172
கைதவந்தான் நீக்கி	245	செந்தேன் மொழியாள்	41
கொங்கை அளைந்து	398	செப்பிளம் கொங்கை	113
கொங்கை இளநீரால்	51	செம்மனத்தான்	55
கொங்கை முகம்	177	செய்த பிழை எது	295
கொங்கை முகத்தணையக்	189	செய்ய கமலத்	83
கொம்பார் இளங்குருகு	352	செருக் கதிர்வேல்	169
கொய்த குவளை	190	செவ்வண்ண வாயாள்	332
கொய்த மலரை	188	செவ்வாய் மொழிக்கும்	401
கொழுநன் கொழுந்தாரை	191	செழுநீலம்	193
கொள்ளை போகின்ற	113	சேதி நகர்க்கே	315
கொற்றக் குமரனை	397	சேமங் களிறுபுகத்	122
கொற்றவன் தன் ஏவலினால்	70	சேமவேல் மன்ன	18
கொற்றவன் தன் தேவி	66	சேலுற்ற வாவி	257
கொற்றவன் பால்	240	சேவல் குயிற்பெடை	48
கொற்றவேல் தானை	10	சொன்ன கலையின்	247
கோதை சுமந்த	61	சோர் புனலின் மூழ்கி	195
கோதை சுயம்வர	72	தங்கள் புலவி	210
கோதை நெடுவேல்	389	தந்தை திருமுக	253
கோதை மடவார்தம்	20	தந்தையை முன்	331
கோயிலும் அந்த	329	தவளத் தனிக் குடை	181
கோவ நிறம் விளர்ப்ப	208	தன் மகள் ஆவ	327
சங்க நிதிபோல்	306	தன் வாயின் மென்	239
சடைச் செந்நெல்	75	தாங்கு நிலவின்	118
சந்தக் கழல்தா	241	தாதையை முன்	405
சந்தி செயத்	210	தாமம் சேர் ஓதி	324
சாதி மணித்துகில்	348	தாரு என் பார்மேல்	287
சாதுரங்கம் வென்றேன்	227	தானவரை வெல்ல	415
சிந்துரத் தாள் தெய்வ	284	திசை முகந்த	36
சில்லரிக் கிண்கிணி	202	திண்டோன் வயவேந்தர்	162
சிறுக்கின்ற வாள்முகம்	194	தீக்கடவுள் தந்த	338
சினக் கதிர்வேல்	249	தீக்கண் புலிதொட	310
சீத மதிக்குடை	26	தீக்கா கைத்துறையும்	285
சீரியாய் நீயெடுப்ப	340	தீது தருகலிமுன்	421
சூதக் கனியூறல்	205	தீது வருக	274
செக்கர் நெடுவானில்	180	தீய வனமும்	271

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீராத காமத் 93
தூதுவந்த காதலனை 101
தூயவன் மக்கள் 242
தெரியில் இவன் கண்டாய் 146
தெரிவன நூல் 23
தேங்குவளை தன்னில் 88
தேமருதார்க் காளை 145
தேரின் துகளை 29
தேவர் பணிதலைமேல் 84
தேவியிவள் கற்புக்கும் 409
தேன் பிடிக்கும் 259
தையல் தளிர்க்கரம் 178
தையல் துயர்க்கு 293
தொண்டைக் கனிவாய் 200
நறையொழுக 198
நன்னெறியில் சூதால் 212
நாடி மட 32
நாட்டின் கண் 9
நாராய ணாய 211
நாற்குணமும் நாற் 39
நித்திலத்தின் பொற்றோடு 136
நிறையில் கவறாடல் 222
நினைப்பென்னும் 351
நின்று புயல் வானம் 21
நீண்ட கமலத்தை 89
நீல நெடுங்கொண்மூ 5
நீலம் அளவே 288
நீள் நிறத்தால் 30
நெஞ்சால் இம்மாற்றம் 394
நெற்றித் தனிக்கண் 76
நேசரிதங் கூர... ஈசன் 1
நேசரிதங் கூர... பேசரிய 2
பண்டை வினை 272
பல்லாயிரம் பரியும் 226
பனியிருளில் 333
பாண்டவரின் முன் 8
பாதித் துகிலோடு 406
பாரார் நிடத 7
பாவையர் கை 180
பானலே சோலை 355
பானு நெடுந்தேர் 268
புண்டரிகம் தீயெரிய 151
புல்லும் வரிவண்டை 185
புள்ளின் மொழி 55
புள்ளுறையும் சோலை 66
புற்கென்றார் அந்தி 107
புன்கூர் யாமத்து 275
புன்னை நறுந்தாது 353
புன்னை நறுமலரின் 213
பூசுரர் தம் கைம்மலரும் 132
பூணுக் கழகு 158
பூமனை வாய் வாழ்கின்ற 44
பூவின் வாய் வாளி 102
பெய்ம் மலர் 278
பேதை பிரிய 252
பேதை மடமயிலை 137
பேதை மடவன்னம் 31
பேரரசும் எங்கள் 15
பேரழகு சேர்கின்ற 62
பைந்தலை நாக 202
பைந்தெரியல் 81
பைந்தொடியாள் 108
பொய்கையும் வாச 207
பொய்தற் கமலத்தின் 192
பொய்யடையாச் சிந்தை 360
பொற்புள் அதனை 290
பொன்னி அமுதப் 141
பொன்னுடைய ரேனும் 246
பொன்னுடைய வாசப் 193
போதரிக் கண் 60
போதலரும் கண்ணியாள் 400
போதுவார் நீறு 335
போயகலா முன்னம் 317
போய் ஒருகால் மீளும் 283
போர்வாய் வடிவேலால் 142
போவாய் வருவாய் 356
போற்றரிய செல்வம் 248
மக்களை முன் 390
மங்கை ஒருத்தி 184
மங்கை சுயம்வர 63

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்கையர்கள் வாச	182	முரை செறிந்த	134
மங்கை விழிநீர்	325	முன்றில் தனில்	276
மண்ணின் மீது	342	முன்னீர் மடவார்	357
மயங்கும் தெளியும்	130	முன்னை வினையான்	374
மல்லல் மறுகின்	163	மூரி இரவும் போய்	270
மல்லிகையே வெண்சங்கா	106	மூலப் பழமறைக்கு	334
மறை முதல்வ	11	மெய்த்திருவந்	12
மற்றவனுக்கு என்வரவு	418	மென்கால் சிறை	231
மற்றித் திருநகர்க்கே	399	மேலாடை வீழ்ந்த	378
மற்றொடுத்த தோள்	302	மையிட்ட கண்ணருவி	119
மனைக் குரியார் அன்றே	229	மோட்டிளங் கொங்கை	40
மன்றலந்தார் மன்னர்	135	வஞ்சகக் கலிவலியான்	279
மன்றலிளங் கோதையொடு	417	வடங்கொள் வனமுலை	139
மன்றல் இளங்கோதை	236	வடியேறு கூரிலைவேல்	235
மன்னராய் மன்னர்	250	வண்டாடும் தார்நளனை	237
மன்னவரில் வைவேல்	166	வண்டார் வளவயல்	381
மன்னவர் குலமும்	140	வண்ணக் குவளை	148
மன்னர் பெருமை	396	வண்தமிழ் வாணர்	311
மன்னர் விழித்தாமரை	138	வழிமேல்	67
மன்னன் நிடதத்தார்	391	வாகு குறைந்தமையான்	349
மன்னன் புயநின்	58	வாக்கினான் மன்ன	368
மன்னன் மனத்தெழுந்த	56	வாங்குவளைக்	27
மன்னன் விடுத்த	52	வாய்மையும் செங்கோல்	168
மன்னா உனக்கு	336	வாரணியும் கொங்கை	50
மன்னாகத் துள்ளமுந்தி	91	வார்வெஞ் சிலை	86
மாநீர் நெடுங்கயத்து	155	வாவி உறையும்	57
மாமனுநூல் வாழ	24	வாழி அருமறைகள்	427
மாமுத்த வெண்குடை	64	வாளரவின் வாய்	300
மாய நெடுஞ்சூதில்	419	வான நெடுவீதி	294
மாயிரு ஞாலத்	105	வானவர் கோன்	97
மாரி பொருகூந்தல்	326	வான் தோய	206
மால் வரையை	80	வான் முகிலும்	292
மான் தேர்த் தொழில்	358	விடக் கதிர்வேல்	149
மிக்கோன் உலகளந்த	404	விட்டொளிர் வில்	223
மின்னாடு மால்வரை	364	விண்ணரசர் எல்லாரும்	161
மின்னுந்தார் வீமன்	159	விண்ணரசர் நிற்க	167
மிண்டோர் சுயம்	369	விண்ணவர் தம்	98
முகம் பார்த்து அருள்	68	விரிகின்ற மெல்லமளி	128
முந்தை மறைநூல்	179	விரைமலர்ப் பூ	273
முந்தை வினைகுறுக	377	வில்லி கணை	133

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விழுதுபடத் திணிந்த	131
விற்றானை முன்	414
வீமன் திரு... மென்முலை	46
வீமன் திரு... விண்ண	177
வீமன் மடந்தை	78
வீமன் மடந்தை விழி	344
வீரர் விறல்வேந்தர்	77
வீரன் அகலச்	179
வெங்கட் சினவிடை	214
வெங்கதிரோன் தன்னை	114
வெங்கதிரோன் தானும்	170
வெஞ்சிலையே கோடுவன	22
வெந்தறுகண் வேழத்தை	6
வெய்ய அரவின்	305
வெய்ய தரையென்னும்	290
வெவ்விடத்தோடு	407
வெள்வாளை	153
வெறித்த இளமான்	297
வெற்றித் தனித்தேரை	383
வென்றிச் சின அரவின்	301
வென்றி நிடத்தார்	426
வென்றி நிலமடந்தை	143
வென்றி மதவேடன்	282
வேடன் அழைப்ப	309
வேட்ட கரியை	298
வேத நெறி வழுவா	412
வேத முனி ஒருவன்	339
வேத மொழிவாணன்	371
வேரி மழை துளிக்கும்	204
வேலை கரை இழந்தால்	34
வேலை பெறா அமுதம்	164
வைத்த மணி	225
வையம் உடையான்	271
வையம் துயர் உழப்ப	266
வையம் பகல் இழப்ப	104

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரியரின் பிற நூல்கள்

1. பழந்தமிழில் புதிய பார்வை 40
2. புறநானூறு மூலமும் உரையும் 125
3. நளவெண்பா மூலமும் உரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாரதா பதிப்பகத்தின் இலக்கிய நூல்கள்

1.	சிலப்பதிகாரம்	250.00
2.	மணிமேகலை	250.00
3.	யசோதர காவியம்	150.00
4.	இராவண காவியம் மூலமும் உரையும்	300.00
5.	சூளாமணி	40.00
6.	பதிற்றுப்பத்து	250.00
7.	கலித்தொகை	180.00
8.	பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்	600.00
9.	புறநானூறு	125.00
10.	குறுந்தொகை நறுமணம்	150.00
11.	நீதிக்களஞ்சியம்	225.00
12.	திருமந்திரம் உரையுடன்	500.00
13.	பன்னிரு திருமுறை வரலாறு (I & II)	700.00
14.	திருஅருட்பா (4நூல்கள்)	1000.00
15.	திருவாசகம்	100.00
16.	மனோன்மணீயம்	70.00
17.	திருவருட்பயன்	60.00
18.	தமிழ்க் காதல்	100.00
19.	மகாபாரதம்	150.00
20.	சிறுவர் இலக்கியம் (கா. அப்பாதுரை)	575.00

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

நளவெண்பா

மூலமும் உரையும்

அ.ப. பாலையன்

GO 753

நூல் கிடைக்குமிடம் :

நூலங்காடி...
www.thebookstore.in
e-mail : gowra_09@yahoo.in

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

ரூ. 120